ஈதுநோற்பவர் வெம்பகைமனத்துயர் நீர்ந்தாயிரம் பிறவி லியற்றுந், தீதுசேர்வினைநீர்க் தெடுத்தயாக்கையினிற்சிவகதியடைவரிவ்விரத, மோதினோர்கேட் டோர்மனைவியர்மக்க ளொக்கலோடினிது வாழ்க்தும்பர், மேதகுபதிரு லிந்திரன்பதத்தில் வீற்றினிதிருப்ப ரொன்றறவோன். (௩௰)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

சொல்லியநெறியாற்சோமசுந்தரன்விரதநோற்பார்
வில்லிடுமணிப்பூண்வேந்தர்முனிவரைவிடைகொண்டேகி
யல்லியங்கனககஞ்சத்தாடியங்கயற்கண்வல்லி
புல்லியபாகன்றன்னைவழிபடஇப்போற்றிநோற்றூர். (௩௧)

சுந்தரன்றன்னைப்பூசைத்தொழில்செய்துவரம்பெற்றேகி
யந்தரத்தாறுசெல்வாரஃதறிந்தமரர்வேந்தன்
வந்தவரிருக்கவேறுமடங்கன்மான்றவிசமூன்று
தந்திட்டப்பணித்தானிட்டார்தனதரியணையிற்றூழ. (௩௨)

வான்வழிவந்தமூன்றுமன்னரும்பொன்னாடெய்தி
பூன்வழிகுலிசவைவேலும்பர்கோன்மருங்கிற்புக்கார்
தேன்வழிபோந்தின்கண்ணிச்சோழனுமார்த்தார்வேந்தும்
கான்வழிதாருநாடன்காட்டியதவிசின்வைக. (௩௩)

மைக்கடல்வறப்பவென்றவாகைவேற்செழியன்மௌலிச்
செக்கர்மாமணிவிற்காலத்தேவர்கோன்றவிசிலேறி
யொக்கவீற்றிருந்தானாகவும்பர்கோனமுக்காறெய்திப்
பக்கமேயிருந்தவேலைப்பார்த்திபர்முகத்தைப்பாரா. (௩௪)

முகமனன்றியம்பிகீவிர்வந்ததென்மொழியினென்ன
மகபதியெங்களூட்டின்மழைமறுத்தடைந்தேமென்று
ரகமலநந்தனையார்காட்டினளவும்வான்சுரக்கநல்கி
நகைமணிக்கலன்பொன்னுடைகள்கொடுபோமினென்றான். (௩௫)

அன்னவர்கள்றபின்னையமரர்கோன்கன்னிநாடன்
றன்னரியணைமேலெலாக்கத்தருக்கினொடிருக்குமாறும்
பின்னருமாரிவேண்டாப்பெருமிதவிறுநோக்கி
யின்னதுபுலப்படாமைமினையதோர்வினையமுன்னு. (௩௬)

பொற்புறவரிசைசெய்வான்போலவளவிறந்தோர்தாங்கி
வெற்புறழ்திணிதோளாற்றன்மெலிவதோராரத்தன்னை
யற்புறவளித்தான்வாங்கியவர்மதுத்தார்போலீசன்
கற்புடையுமையாண்மைந்தன்கதுமெனக்கழுத்திலிட்டான். (௩௭)

கண்டனன்கடவுளுதன்கழியவுமிறும்பூதுள்ளங்
கொண்டனனின்றுதொட்டுக்குறையவிழ்பூவுகிம்பத்
தண்டலைழமார்பவாரந்தாங்குபாண்டியனென்றன்னை
மண்டலமதிக்கவென்றான்வானகநடையமன்னன். (௩௮)

அன்னதுசிறிதுமெண்ணுதன்குநின்றிழிந்துதென்னன்
றன்னகரடைந்தானிப்பாற்சதமகனானையாலம்
மன்னவரிருவர்நாடுமழைவளம்பெருகப்பெய்த
தென்னவனுடைபன்மைச்செயலதாயிருந்ததன்றே. (௩௯)

ஆயதோர்வைகல்வேட்டையாடுவானவனளவிலனக்
தாயதோர்பொதியக்குன்றிற்சந்தனச்சாரனண்ணி
மேயதோலரிமானேனம்வேங்கைவெல்லிரலையின்ன
தீயதோர்விலங்குவேட்டஞ்செய்துயிர்செருக்குமெல்லை. (௪௰)

பொன்றத்தமருவிக்குன்றிற்புட்களைவருத்தமாதி
மின்றத்துமேகாண்கும்வீழ்ந்தனமேயக்கண்டு
குன்றத்தினெடியதின்போட்கொற்றவனவற்றைப்பற்றிக்
கன்றத்தின்களிறுபோலக்கடுந்தளைசிக்கயாத்தான். (௪௧)

வேட்டத்திற்பட்டசெங்கண்வேழம்போற்கொண்டுபோகிக்
கோட்டத்திலிட்டானுகக்குன்றிறகரித்தவென்றி
காட்டத்துப்படிவத்தண்டாடன்மற்றதனைக்கேட்டுக்
காட்டத்துக்கனல்போற்சீறிக்கடுஞ்சமர்குறித்துச்செல்வான். (௪௨)

வாங்குநீர்வறப்பவேலைவிடுத்ததும்வலியவாரந்
தாங்கியசெருக்குங்காணத்தனையிடுதருக்குநோக்கி
யீங்கொருமனிதயாக்கைக்கித்துணைவலியாதென்று
வீங்கியமான்றூக்கமீனவன்மதுரைசூழ்ந்தான். (௪௩)

கலிவிருத்தம்.

சூடினசொற்றார்போய்ச்செழியனொண்கழல்
சூடினர்கள்ப்புறஞ்சுரர்கள்சேனைகண்
மூடினவென்னனுமுனிவுமானமு
நீடினரியணையிருந்துநீங்குவான். (௪௪)

பண்ணுகதேர்பரிபகடுவீரர்முன்
னண்ணுககடிதெனகட்டியாலொன்
றெண்ணலன்மதமலையெருத்தமேற்கொடு
கண்ணகன்கடிநகர்க்காப்புநீங்குமுன். (௪௫)

அடுத்தனர்வானவரார்த்துப்பல்படை
யெடுத்தனர்வீசினர்சிலையிலெய்கணை
தொடுத்தனரிறுதிநாட்சொரியுமாரிபோல்
விடுத்தனர்மதிக்குலவீரன்சேனைமேல். (௪௬)

ஆர்த்தனர்மலயவெற்பனாயன்சேனையோர்
பார்த்தனர்வேறுபல்படைக்கலக்குவை
தூர்த்தனர்குனிசிலைதொடுத்தவாளியாற்
போர்த்தனரமரர்மெய்புதைத்தவெம்பலே. (௪௭)

தறித்தனதாள்சிரந்தகர்ந்ததோள்கரம்
பறித்தனகுருதிநீர்கடலிற்பாய்ந்தன
செறித்தனபாரிடஞ்சேனக்கூளிகண்
முறித்தனவானவர்முதல்வன்சேனையே. (௪௮)

ஆடினகுறைத்தலைவித்தபோர்க்களம்
பாடினபாரிடம்விச்சைப்பாவைதான்
கூடினகூளிகள்சோரிசோரப்பார்
மூடினபிணக்குவையண்டமூட்டவே. (௪௯)

வெஞ்சினவலாரிதன்வீரச்சேனைக
டுஞ்சினகண்டெரிசொரியுங்கண்ணனாய்ப்
பஞ்சின்முன்னெரியெனப்பதைத்துத்தெய்வத
வஞ்சினப்படைகளான்மலைவதுன்னினான். (௫௰)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

வெங்கதிர்ப்படைவிட்டார்த்தான்விண்ணவனதனைத்திங்கட்
பைங்கதிர்ப்படைதொட்டோச்சியவித்தனன்பாரான்வேந்தன்
சிங்கவெம்படைவிட்டார்த்தான்தேவர்கோனதனைச்செம்புட்
புங்கவன்படைதொட்டோச்சியடக்கினன்புணரிவென்றோன். (ருக)

தானவர்பகைவன்மோகசரந்தொடுத்தெறிந்தானதை
யீனவனதனைஞானவாளியால்விளித்தமாய்ந்து
போனபின்மற்போராற்றிப்புக்கனர்புக்கார்தம்மில்
வானவன்மன்னினன்மேல்வச்சிரம்வீசியார்த்தான். (ருஉ)

காய்சினமடங்கலன்னான்கைவளைசுழற்றிவல்லே
வீசினன்குலிசந்தன்னைவீழ்த்ததுவிடுத்தான்சென்னித்
தேசினன்மகுடந்தள்ளிச்சிதைத்ததுசிதைத்தலோடுங்
கூசினனஞ்சிப்போனான்குன்றிறகரிந்தவீரன். (ருங)

இந்திரன்றலையகூர்ம்பல்லிருள்வளர்நெஞ்சபோழ்ந்த
மைந்தனில்வலியகாளைவலாந்தெறிந்தேகிச்சென்னி
சிந்திடாதாகிச்செம்பொன்மணிமுடிசிதறச்சோம
சுந்தரநாதன்பூசைத்தொழிற்பயனளித்ததென்னா. (ருச)

போரினுக்காற்றாதோடிப்பொன்னகர்புகுந்தவென்றித்
தாரினுக்கிசைந்தசூர்வேந்தமகன்பின்புதன்னாட்
டேரினுக்கெல்லாமாரியுதவுமேனிகளநீக்கிக்
காரினைத்தருகவென்னக்கவுரியற்கோலைவிட்டான். (ருரு)

முடங்கல்கொண்டுணர்ந்ததூதன்முடிகெழுவேந்தன்பாதந்
தொடங்கினின்றோலைநீட்டவுழையுளாரொருவன்வாங்கி
மடங்கலேறனையான்முன்னர்வாசித்துக்காட்டக்கேட்டு
விடங்கலுழ்வேலான்விண்ணோர்வேந்தனைத்தேறானை. (ருசு)

இட்டவன்சிறையைநீக்கியெற்றிலையவிடாதமாறு
பட்டசிந்தையனேயாகப்பாகசாதனனுக்கென்று
கட்டவொருவேளாளனன்பிணையென்றுதாழ்ந்தான்
மட்டவிழ்த்தொழுகுநிம்பமாலிகைமார்பினானும். (ருஎ)

இடுக்கண்வந்துயிர்க்குமுற்றமெய்திலும்வாய்மைகாத்த
வடுக்களைத்தொழுநாலாமரபினனாளையார்த்த
னெடுத்துரைமன்றப்போற்றூழ்த்துசிறைக்களத்திட்டயாப்பு
விடுத்தனன்பகடுபோலமீண்டனமேகமெல்லாம். (ருஅ)

தேவர்கோனேவலாலேதிங்கண்மும்மாரிபெய்து
வாவியுங்குளனும்யாறுமடுக்களுமடுத்துக்கல்வாய்க்
காலிரும்வயலுஞ்செய்யுஞ்செந்நெலுங்கன்னற்காடும்
பூவிரிபொழிலுங்காவும்பொலிந்ததுகன்னிநாடு. (ருகூ)

இந்திரன்முடிமேல்வளையெறிந்தபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் உக-க்கு-திருவிருத்தம்-சகக0.

பதினைந்தாவது

மேருவைச்செண்டாலடித்தபடலம்.

எழுசீரடியாசிரியவிருத்தம்.

அண்டரஞ்சவமருழந்தவமரர்கோனையரசர்கோன்
வண்டலம்புமெனலிசிந்தவளையெறிந்துவென்புறங்
கண்டவண்ணமின்னதன்னகன்னிநாடன்மேருவிற்
செண்டெறிந்தலைப்படுத்தசெயலுமின்குச்செப்புவாம். (க)

மன்னவன்றனக்குமுன்னர்மலயவெற்பின்முனிவர்கோன்
சொன்னதிங்கள்விரதமன்றுதொட்டுநோற்றுவருமன்
கன்னலஞ்செய்பேறுபோலகங்கைகாந்திமதிவயிற்
றன்னருஞ்சயங்கொண்மைந்தனொருவன்வந்துதோன்றினான். (உ)

வயந்தனைப்பயந்ததென்னமைந்தனைப்பயந்தபோ
தியந்துவைத்துநகர்களிப்பவினிதிருந்தயுரவலன்
சயந்தமைக்கவிந்திரன்சயந்தனைப்பயந்தநாள்
வியந்தகத்தடைந்தவின்பம்விளைமகிழ்ச்சியெய்தினான். (ங)

தென்னரேறுசாதகாதிசெய்துவீரபாண்டிய
னென்னநாமவினைவிரப்பியெழுதொணாதகலைமுதற்
பன்னுகேள்விகரிகடேர்கள்பரிபடைக்கலம்பயின்
றன்னகாதலான்விளங்கவகமகிழ்ச்சியடையுநாள். (ச)

மல்குமாறுகோடிநீர்த்தமழைசுருங்கிநேயுநீ
ரொல்குமாறுபருவமாறியுணவுமாறியுயிரெலா
மெல்குமாறுபசியுழந்துவேந்தனுக்குவினையொரு
னல்குமாறிலாமையின்னகலியவந்ததாலெலாம். (ரு)

மழைவறந்ததென்கொலென்றுவழுதிகூறமுழுதுணர்த்
தழிவிலாதபிரமகற்பமளவுமெல்லைகண்டுள
விழவர்கோன்களிரவிதன்னையுந்நோக்கிநிற்றலாந்
நழையுமாரிவருடியாதொர்வருடமென்றுசாற்றினார். (சு)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

மகவுறுகோயைநோக்கிவருந்துறுதாய்போன்மன்னன்
பகவுறுமதியஞ்சூடும்பாஞ்சுடர்முன்போய்த்தாழ்ந்து
மிகவுறுபசியால்வையமெலிவதையையவென்னுந்
தகவுறவிரங்கிக்கண்ணீர்ததும்பிநின்றிரந்துவேண்ட. (எ)

திரைக்கடல்விடஞ்சேர்கண்டர்காலத்தின்செவ்விநோக்கி
யிரக்கமில்லவர்போல்வாளாவிருந்ததுமருந்தார்மார்பன்
கரைக்கரிதாயதுன்பக்கடலின்வீழ்ந்திருக்கைபுக்கா
னரக்கர்போர்க்கடலினீந்தியருக்கனீர்க்கடலில்வீழ்ந்தான். (அ)

வன்னறன்குடைக்கீழ்த்தங்குமுயிர்ப்பசிவருத்தமெல்லாந்
தன்னைகொண்டிருந்தநெஞ்சிற்குளிர்முகச்செவ்விகுன்றத்
தள்ளருந்துயரின்மூழ்கித்தனாயிடைத்துயின்றுளுக
வெள்ளிமன்றுடையார்சித்தவேடராய்க்கனவில்வந்தார். (கூ)

அடற்கதிர்வேலோய்மாரியரிதிப்போததனைவேண்டி
யிடர்ப்படல்வரைக்குவேந்தாயிருக்கின்றவெரிபொன்மேருத்
தடப்பெருவரையின்மாடோர்தனிப்பெருமுழையினீட்டுக்
கிடப்பதோரொல்லையில்லாக்கேடிலாச்சேமவைப்பு. (கo)

கிடைத்துமற்றனையமேருகிரிசெருக்கடங்கச்சென்றாற்
புடைத்துநின்றனைத்தாக்கிப்பொன்னறைபொதிந்தபாறை
துடைத்துநீவேண்டுங்காறுந்தொட்டெடுத்ததனைமீள
வடைத்துநின்குறியிட்டையவருதியென்றடிகள்கூற. (கக)

விழித்தனனெழுமான்றேரோன்விழிக்குமுன்கடன்களெல்லாங்
கழித்தனன்மீனநோக்கிக்கனவினைவலமாய்ப்போந்து
சுழித்தெறிகடலனீக்த்தோகைபுறஞ்சூழக்கொண்டல்
கிழித்தெழுவாயினீங்கிக்கீழ்த்திசைநோக்கிச்செல்வான். (கஉ)

அதிர்ந்தனமுரசஞ்சங்கமதிர்ந்தனவியங்களண்டம்
பிதிர்ந்தனவென்னவார்ப்பப்பெயர்ந்துவெண்கவரிதுன்ன
முதிர்ந்தகான்மறையோராசிமொழியகாவல்லோரேத்தப்
பதிர்ந்துபார்கிழியத்திண்டேர்பாகுமுன்செலுத்தவூர்ந்தான். (கங)

பவளக்காற்பிச்சம்பொற்காற்பன்மணிக்கவிகைமுத்தத்
தவளக்காற்பதாகைக்காடுதானவானருவிதூங்கும்
கவளக்காற்பொருப்பும்பாய்மாக்கடலுமண்மடந்தையாகத்
துவளக்கால்வயவர்மான்றேர்த்தொகுதியுஞ்சூழல்போக. (கச)

கோழிணர்ஞாழலன்னகோட்டுகிர்ப்புலவுப்பேழ்வாய்த்
தாழ்சினவுழுவையொற்றைத்தனிப்பெருங்கொடியுங்கூனற்
காழ்சிலைக்கொடியுஞ்சூழக்கயற்கொடிநிலைந்துழாங்கை
யெழுயர்வரைமேற்றோன்றியிருவிசும்படுகீற. (கரு)

தென்கடல்வடபாலேறுக்கிச்செல்வதுபோலத்தென்னன்
றன்கடலனிகங்கன்னித்தண்டமிழ்நாடுநீந்தி
வன்கடநெறிக்கொண்டேகிவளவர்கோனெதிர்கொண்டாற்று
நன்கடன்முகமனேற்றுநளிர்புனனாடுநீந்தி. (கசு)

தண்டகநாடுதள்ளித்தெலுங்கநாடகன்றுசாய்தாட்
கண்டகக்கைதைவேலிக்கருநடங்கடந்துகாடுந்
தொண்டகந்துவைக்குங்குன்றுநதிகளுந்துறந்துகள்வாய்
வண்டகமலர்க்காவேலிமாளவதேசநண்ணி. (கஎ)

அங்குநின்றெழுந்துநீவாயருஞ்சுரநெறிபட்டேகி
மங்குனின்றதிருஞ்செம்பொன்மாடநீள்விராடநண்ணிக்
கொங்குநின்றவிழுங்கானங்குன்றுநீஇவாரனைபாயத்
தெங்குநின்றிளநீர்சிந்துமத்தியதேயத்தெய்தி. (கஅ)

அங்கெடுகாடுநீங்கியாடலேறுயர்த்ததோன்றல்
பொன்னெடுஞ்சடையிற்றாழ்ந்துபுனிதமார்தீர்த்தக்காசி
கன்னெடுநகரமெய்திகளிர்புனற்கங்கைநீந்திக்
கன்னெடுநெறியநேககாவதங்கடந்தபின்னர். (ககூ)

மடங்கன்மாநாகம்பாளிவழங்கலான்மனிதர்செல்லா
விடங்கடந்தாகவைஞ்ஞூற்றிரட்டியோசனைத்தாமெல்லைக்
கடங்கெழுகுமரிகண்டங்கடந்துமற்றதுபோலெட்டுத்
தடங்கெழுகண்டங்கொண்டபாரதவருடந்தள்ளி. (உo)

யாவையுமீன்றுடன்னையீன்றபொன்னிமயந்தன்னைத்
தாவியப்புறம்போய்ப்போகந்ததும்புகிம்புருடகண்ட
மேவியங்கதுநீத்தேமவெற்படைந்தபின்னுக
வோவியப்புறத்துத்தோன்றுமரிவருடத்தையுற்று. (உக)

உற்றதுகழிந்தப்பாற்போய்நீட்டவெற்பொழிந்துசம்புப்
பொற்றருக்கனிகால்யாறுபோயினாவிரதகண்டத்
திற்றனன்கண்டான்மூன்றாரொருங்குடனான்றுகூனி
வெற்றிவெஞ்சிலையாய்நின்றவெற்பினைமலயவெற்பன். (உஉ)

வெம்படைமறனர்சேனைவெள்ளநீத்தேகித்தென்பாற்
சம்புவின்கனியின்சாறுவலம்படத்தழுவியோடு
மம்பொனீராறுமாற்றின்ருகுபொன்மயமாய்நிற்கும்
பைம்புனக்கானநோக்கிவளைந்துதென்பால்வந்தெய்தா. (உங)

அவ்வுழையரசைநோக்கிவரைகளுக்கரசேயெந்தை
கைவரிசிலையேயாரின்கிளைகளேயளவில்லானந்
தைவருசூட்டருங்கோளுநாள்களுந்தழுவிச்சூழ்ந்
தெய்வதவரையேமேலைத்தேவராலயமேயென்று. (உச)

மாணிக்கமிமைக்கும்பூணன்விளித்தலும்வரைக்குவேந்தன்
பாணித்துவரவுதாழ்ப்பப்பாகசாதனனைவென்றோ
னாணித்தன்சினமுமேருக்கைவரைச்செருக்குமாறச்
சேணுற்றசிகரந்தன்னிற்செண்டினாலடித்துநின்றான். (உரு)

அடித்தலுமசையாமேருவஞ்சந்துபொறப்பந்துபோலத்
துடித்ததுசிகரபந்திசார்பயில்மாடப்பந்தி
வெடித்தனதருண்பாலுமண்டலம்விண்டுதூளாய்ப்
படித்தலைதெறித்தாலென்னப்பன்மணியுதிர்ந்தவன்றே. (உசு)

புடைவரைக்குலங்களெட்டும்புறந்தழீஇக்கிடக்குஞ்செம்பொ
னடைகலோர்நான்குநான்குகிடக்கருமலர்த்தநான்கு
தடமலர்ப்பொழிலுநான்குதருக்களுஞ்சலித்தவம்மா
வுடையவனிடையூறற்றலடுத்தவர்க்குவகையுண்டோ. (உஎ)

புடைத்தபின்மேருத்தெய்வம்புடைக்குலவரையேட்டென்னப்
படைத்தவெண்டோளுநான்குமுடியுமேற்படுவெண்சோதி
யுடைத்தனிக்குடையுங்கொண்டவுருவினோடெழுந்துகாளிக்
கிடைத்ததுகருணைவேந்தன்கிளர்சினந்தணிந்துநோக்கா. (உஅ)

இத்தனைவரவுதாழ்த்ததென்னெனமேருத்தெய்வம்
வித்தகனம்பிகேட்டிமீனெடுங்கண்ணியோடும்
பைத்தலையரவம்பூண்டபரனையிப்படிவங்கொண்டு
நித்தலும்போகிப்போகிவழிபடுநியமம்பூண்டேன். (உகூ)

இன்றுகேட்டிலையோவையாவேந்திழையொருத்திகாமக்
கன்றுமாகடலின்மோகச்சுழித்தலைப்பட்டுவெள்ளி
மன்றுளாடியபொற்பாதம்வழிபடன்மறந்துதாழ்ந்து
நின்றுளேனினையநீங்கிநிமித்தினாலடியும்பட்டேன். (ஙo)

திருவடிபிழைத்ததீங்குதீர்த்தனையிதனிலையன்
றருவதோருறுதிதானுந்தக்கதோர்கைம்மாறென்னால்
வருவதுமுண்டாங்கொல்லோமற்றதுநிற்கமன்றற்
றருவளைமார்பவந்தபரிசென்கொல்பகர்தியென்ன. (ஙக)

மன்னவன்வெறுக்கைவேண்டிவந்தனனென்றுமைய
வுன்னதுபுலத்தோர்க்கேற்பவுரைபடுமாற்றதாய
பொன்னவிர்தேமாநீழற்புடைதடக்கிடக்குஞ்செம்பொ
னென்னவங்கையாற்சுட்டிக்காட்டியதெரிபொற்குன்றம். (ஙஉ)

மின்னகுவேலான்முந்நீர்வேலையைவணக்கக்கண்டோன்
பொன்னறைமருங்கிற்போகிப்பொத்தியபாறைநீக்கித்
தன்னவாவளவிற்றூயதமனியமுகந்துமூடிப்
பின்னதுந்தன்னதாகப்பெயரிலச்சினையுந்திட்டா. (ஙங)

மின்றிகழ்மணிப்பூண்மார்பன்மீண்டுதன்றுணையோடுந்
தென்றிசைநோக்கிப்பாகன்செலுத்தமான்றடந்தேரூர்ந்து
பொன்றிகழ்வரையும்போகபூமியும்பிறவுநீத்து
நன்றிகொண்மனிதர்வைப்பினண்ணுவானண்ணுமெல்லை. (ஙச)

மாத்திமர்விராடமன்னர்மாளவர்தெலுங்கதேயப்
பார்த்திபர்பிறருந்தத்தம்பதிதொறும்வரவுநோக்கித்
தேர்த்திகழணிகத்தோடுஞ்சென்றெதிர்முகமன்செய்யத்
தார்த்திருமார்பன்கன்னித்தண்டமிழ்நாடுசார்ந்தான். (ஙரு)

கன்னிப்பொன்னெயில்சூழ்செம்பொற்கடிநகர்க்கணியனாகிப்
பொன்னிற்செய்திழைத்தநீண்கோபுரத்தினைக்கண்டுதாழ
வுன்னித்தேரிழிந்தெட்டோடைத்துறப்பினாற்பணிந்தெழுந்து
மன்னிச்செஞ்சுடர்க்கணெற்றிமன்னவன்மதுரைசார்ந்தான். (ஙசு)

அறத்துறையந்தணர்துறந்தவரான்றூன்பற்றிப்
புறத்துறையகன்றசைவபூதியர்புனிதன்கோயிற்
றிறத்துறையகத்துத்தொண்டர்திரண்டெதிர்கொள்ளமுத்தி
யிறத்துறைவையைநீத்துநெடுமதில்வாயில்புக்கான். (ஙஎ)

கொங்கலர்கோதைமாதர்குங்குமம்பனிப்பச்சிந்து
மங்கலமறுகினேகிமறைகள்சூழ்கோயிலெய்தித்
தங்கணுயகனைச்சூழ்ந்துதாழ்ந்தெழுந்தேத்திப்போந்து
திங்களூர்குடுமிச்செல்வத்திருமணிக்கோயில்புக்கான். (௩௮)

பொன்மலைக்கடவுளீந்தபுண்ணியநிதியைய்ந்த
கன்மலைமாணக்கூப்பிநல்கியபல்குடியுமோம்பித்
தென்மலைக்கிழவன்றெய்வத்தென்புலவாணரொக்க
நன்மனைவிருந்துகாத்துத்தருக்கினுனிருக்குநாளில். (௩௯)

ஐவினைநடத்துமீசனுணையாணடக்குங்கோளுஞ்
செய்வினைத்திரிவுமாறத்தென்னருடைக்குமாரி
பெய்வினையுடையதாகிப்பெருவளம்பயிர்க்துலக்க
முய்வினையுடையவாகியுயிரெலாந்தழைத்தவன்றே. (௪௰)

எழுசீரடி யாசிரியவிருத்தம்.

புவனியிம்முறையாற்புரந்தளித்தாரம்பூண்டபாண்டியன்றிருமகனுக்
கவனியேழறியவீரபாண்டியனென்றணிமுடிகவித்தரசளித்து
நவசிரதிசயபூரணவின்பஞானநோக்கருளியமதுரைச்
சிவனடிநிழலிற்பிளப்பறப்பழையதேசொடுநிறைந்துவீற்றிருந்தான்.

மேருவைச்செண்டாலடித்தபடலமுற்றிற்று.

ஆகப்படலம் ௨௪ - க்கு - திருவிருத்தம் - ௧௧௫௧.

பதினைறவது

வேதத்துக்குப்பொருளருளிச்செய்தபடலம்.

எழுசீரடி யாசிரியவிருத்தம்.

உலம்பொருதடக்தோளுஞ்சிரச்செழிய னுயரியமேருமால் வரை
யைப், பொலம்புரிசெண்டாற் புடைத்தவைப்பெடுத்தப் போந்தரு
ளடைந்தவா புகன்றாம், வலம்படுதிணிதோள் வீரபாண்டியன்கோல்
வழங்குநான்மதுரை யெம்பெருமான், புலம்பொருமுனிவர் தேற
நால்வேதப் பொருளுணர்த்திய திறம்புகல்வாம். (௧)

ஐம்பெரும்பூத நிலைதிரிந்தோ ழடுக்கியவுலகொடு மயன்மா,
லும்பர்வான்பதமு முதித்தவாறொடுங்க வுருத்ததோர்சூழி வந்தெய்
தச், செம்பொருண்மறையு மொடுங்கியவழிநாட் செஞ்சுடர்க்கடவு
ண் மூன்மலரும், வம்பவிழ்கமல மெனவரன்றிரு மூன்மலர்ந்ததா
லகிலமுமாதோ. (௨)

பண்டுபோற்பின்னுமுத்தொழினடத்தப் பராபரஞ்சுடர்திருவுள்ளங்
கொண்டுபோர்த்திகிரிவலவனைத்தரவிக் குரிசிறன்னுபிமுண்டகத்தில்
வண்டுபோற்பிரமனுதித்துமூவுலகும் வரன்முறைபடைக்குநாணஞ்ச
முண்டுபோற்றியவானவர்க்குயிரளித்தவும்பர்நாயகன்றிருவாக்கில். ()

பிரணவமுதித்ததனிடைவேதம்பிறந்தனமைமிசாரணியத்
தருணிறைமுனிவர்கண்ணுவர்கருக்கராதியோரதிகரித்தவற்றின்
பொருணிலைதெரியாதுள்ளமுமுகமும்புலர்ந்தனரிருப்பவப்போதத்
திருண்மலவலிவென்றவனரபத்தனென்றொருவேதியன்வந்தான். (௪)

வந்தவேதியனை யிருந்தவேதியர்கள் வரவெதிர்ந்திறைஞ்சிவே
றிருக்கை, தந்தவேலையிலம் மறையவன்முனிவர் தமைமுகநோக்கி யீ
துரைப்பான், பந்தவேதனை சாலவாவெறுப் பிகந்தபண்பினராயி
னீர்நீவிர், சிந்தைவேறுகி முகம்புலர்ந்திருக்குஞ் செய்தியாதென
வவர்சொல்வார். (௫)

மருட்டுமாயை கழிந்தவன்மொழிந்த மறைபயின்றுரைசெய்
தேசிகனற், றிருட்டமெனத்தேமிருந்துமாலை யயாதுசூழ்தற் கெனக்
கேட்ட, தெருட்டமெனத்தோன் செப்புவான்வேதஞ் செப்பியசிவ
பராஞ்சுடரோ, யருட்படிவெடுத்துப் பொருளையுமுணர்த்து மல்லது
சூழ்ச்சி யாதறைவீர். (௬)

பண்ணியதவத்தாலன்றியாதாலும்படுபொருள்பிறிதிலைதவமும்
புண்ணியதலத்தினல்லதுபலியாபுண்ணியதலத்தினும்விழுப்ப
நண்ணியசைவதலத்தினியற்றினல்குஞ்சிவதலங்களினு
மெண்ணியவதிகதலத்தினியற்றினிருந்தவமெளிதுடன்பயக்கும். ()

அத்தகுதலமற்றியாதெனினுலகமகிலமுந்தன்னுடம்பான
வித்தகன்சென்னிப்பன்னிருவிரன்மேல்விளங்கியதலமதுசிவன் [௭
முத்தராயெண்ணில்வானவர்முனிவோர்முயன்றுமாதவப்பயனடை
சித்தமாசகன்றுவதிவதென்றறனூல்செப்பியமதுரையக்ககரில். (௮)

தெளிதருவிசும்பி னிழிந்ததோர்விமான சிகாமணியருகு தென்
மருங்கின், முளிதருபராரை வடநிழல்பிரியா முழுமுதல்வழிபடு மற
வோர்க், களிதருகருணை முகமலர்ந்தளவா வருங்கலையனைத்தையுந்
தெளிவித், தொளிதருமனைய மூர்த்தியேறுங்கட் கோதியமறைப்
பொருளுணர்த்தும். (க)

அங்கவன்றிருமுனருந்தவவிரதமாற்றுவான்செல்லுமினெனவப்
புங்கவனருள்போல்வந்தமாதவன்பின்புனிதமாமுனிவருமங்கை
பங்கவன்மதுரைப்பதிபுகுந்தம்பொற்பன்மணிக்கோயில்புக்காழிச்
சங்கவன்கைபோல்வலைசெறிசெழும்பொற்றாமரைத்தடாகநீராடி. ()

கரைகடந்துள்ளங் கடந்தவன்புந்தக் கடிதுபோய் கான்கிருவெ
ள்ளி, வரைகடம்பிடரிற் கிடந்ததோர்மேரு வரைபுரைவிமான மேற்
காணு, வுரைகடம்பொருளைக் கண்களாற்கண்டாங் கும்பர்தம்பிரானை
நேர்கண்டு, திரைகடக்கிடும் பேரின்பவாரியிலுஞ் சேணிலத்திலும்
விழுந்தெழுந்தார். (கக)

கைதலைமுகிழ்த்துக்கரசரணங்கள்கம்பிதஞ்செய்துகண்ணருவி
பெய்தலைவெள்ளத்தாழ்ந்துவாய்குழறிப்பிரமன்மாலின்னமுந்தெரு
மைதழைகண்டவெள்ளிமன்றுடும்வானவர்காயகவானே
ருய்தரவிட்டமுண்டமுதருள்புரிந்தவுத்தமபோற்றியென்றேத்தா. ()

மறைபொருள்காணு துள்ளமாழ்ந்து வாடியவெமக்கு நீயே
யக், நிறைபொருளாகி நின்றனையதற்கு நீயலாற்பொருள் பிறிதியா
தென், நிறைவனையிறைவன் பங்கிலங்கயற்க ணிறைவியையம்முறை
யேத்தி, முறைவலஞ்செய்து வடநிழலமர்ந்த மூர்த்திமுன்னெய்தி
னார் முனிவோர். (கங)

சீதளப்பளிக்கு மேனியும்பளிக்குச் செழுமலைபதித்த துப்புன்
ன, பாதமுஞ்செவ்வாய் மலருமுக்கண்ணும் பங்கயச்செங்கர நான்
கும், வேதப்புத்தகமு மமுதகும்பமுந்தன் விழிமணிவடமு மெய்ஞ்
ஞான, போதமுத்திரையுந் தரித்ததோர்தனிமைப் போதன்முன்றாழ்ந்
தெழுந்தேத்தா. (கச)

வடநிழலமர்ந்த மறைமுதன்மேதா மனுவெழுத்திருபது மிர
ண்டுந், திடமுறவாபத் தன்றனுற்றெளித்து தேனிறைமதி முதலவி
விற், படிமேதியவுந் தருப்பணமோமம் பார்ப்பனவுண்டிமுப்போது,
மடைவுறநுவன்று கோற்குமாதவர் முனருமறைப்பொருள் வெளி
வருமால். (கரு)

கலிவிருத்தம்.

மானமுனிவோரதிசயிப்பவடநீழன்
மோனவடிவாகியமுதற்குரவனென்னுன்
ஞானமிலிலக்கணவுருப்பகவைநாலுன்
கானவொருகாளைமறைபோன்வடிவமாகி. (கசு)

நீண்டதிரிமுண்டமழனெற்றிவிழிபொத்தக்
காண்டகையகண்டிகைவளைக்தொழுகுகாதிற்
பூண்டகுழைகௌவியபொலன்செய்பல்காசு
சேண்டவழிளங்கதிர்சிரித்திருள்சிதைப்ப. (கஎ)

உத்தரியவெண்படம்வலம்படவொதுக்க
முத்தவளநூலினொடுமுத்தமிடையிட்டு
வைத்தணியுமக்கவடமாலையெறிவாளாற்
பத்தரைமறைத்தமலபந்தவிருள்சிந்த. (கஅ)

கண்டிகைதொடுத்திருகரத்தினொடுவாகு
தண்டினிடுமாலைவிடவாளரவுதள்ள
வெண்டுகிலினாலவிரிகோவணமருங்கிற்
றண்டரியபட்டிகைவளைத்தொளிதழைப்ப. (கக)

வண்டுவரிபாடுவனபோலமலர்பாத
புண்டரிகமேலுழல்சிலம்புகன்புலம்பத்
தொண்டரகமாசிருடுணித்துமுடிசூட்டு
முண்டகமலர்ப்புறம்விறற்கழன்முழங்க. (உ0)

வதமில்பவித்திரம்வலக்கரவிமைப்பப்
போதம்வரைபுத்தகமிடக்கையதுபொறப்ப
வோதியுணராதவழியோலமிடும்வேதம்
பாதுகைகளாகியிருபாதமலர்சூட. (உக)

கள்ளமுளரிக்குன்முரல்காளையறுகால
புள்ளொலியினுவுந்தழும்புடைபெயர்த்து
ளெள்ளவெழுவேதவொலிதொண்டர்செவியாற்று
ளுள்ளவயம்புக்குவகைவெள்பயிர்வளர்ப்ப. (உஉ)

சீதமணிமூரறிருவாய்சிறிதரும்ப
மாதவர்கள்காணவெளிவந்துவெளிநின்று
வேதமுடிவாயளவிலுண்மகிமையின்ற
போதவடிவாகிநிறைபூரணபுராணன். (உங)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

வட்டவான்மதிகண்டார்க்குமுவாக்கடன்மானமாண்ட
சிட்டராமுனிவர்காளைத்தேசிகவடிவநோக்கி
யொட்டறுவுவகைவெள்ளமேற்கொளவுருத்தகூற்றை
யட்டதாமரைதஞ்சென்னிக்கணிமலராகத்தாழ்த்தார். (௨௪)

அளவறுகலைகட்கெல்லாமுறைவிடமாகிவேத
விளைபொருளாகின்றவேதியசரணமென்ற
வளைவுறுமனத்தினோத்தேசிகவள்ளனோக்கிப்
பளகறுதவத்தீர்வேட்கையாதெனப்பணிந்துசொல்வார். (௨௫)

அடியரேமுய்யுமாறுமுலகெலாமளிக்குமாறும்
படியிலாவாத்தவேதப்பயனருள்செய்தியென்னக்
கொடியமாபாசத்தீர்ப்பரன்குரவனம்முனிவரோடு
முடிவிலாலிங்கமுன்போய்மறைப்பொருண்மொழிவதானன். ()

அந்தணிர்கேண்மின்சாலவருமறைப்பொருள்களெல்லா
மந்தணமாகுமித்தமறைப்பொருளறிதருனே
கந்தலில்லாதபோகப்பயனுக்குகலியும்பாச
பந்தனைகழிக்கும்வீட்டின்பயனுக்குங்கருவியாகும். (௨௭)

உத்தமசயம்புக்குள்ளுமுத்தமதாமாய்மேலாக்
தத்துவமாகுமிந்தச்சுந்தரசயம்புலிங்க
சித்தமாய்மறைகட்கெல்லாசிதானமாம்பொருளாயுண்மைச்
சுத்தவத்துவிதமானசுயம்பிரகாசமாகும். (௨௮)

நிறைபராபரம்விஞ்ஞானநிராமயமென்றுநூல்க
ளறைபரம்பிரமமாகுமிதனுருவாகுமேக
மறையிதன்பொருளேயிந்தச்சுந்தரவடிவாயிங்ங
னுறைசிவலிங்கமொன்றேயென்பர்நூலுணர்ந்தநல்லோர். (௨௯)

ஆகையான்மறையுமொன்றேயருமறைப்பொருளுமொன்றே
சாகையாலனந்தமாகித்தழைத்ததச்சாகையெல்லா
மோகையாலிவனையேத்துமுலகுதயாதிக்கிந்த
வேகனையினின்மூன்றுமூர்த்தியாயிருந்ததன்றே. (௩௦)

மலர்மகனகிமூன்றுவையமும்படைத்துமாலா
யலைவறநிறுத்திமுக்கணுதியாயழித்தம்மூவர்
தலைவனாய்ப்பரமாகாசசரீரியாய்முதலீறின்றித்
தொலைவருஞ்சோதியாமிச்சுந்தரலிங்கந்தன்னில். (௩௧)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

ஆதியிலான்மதத்துவமானவலர்மகன்பாகமுகடுவி
னீதியில்விச்சாதத்துவமானநெடியவன்பாகமுமுடிவி
லோதியசிவதத்துவமெனலானவுருத்திரபாகமுமுதிக்கும் [யால்.
பேதியிம்மூன்றிலெண்ணிறந்துவங்கள் பிறக்குமிம்மூன்றினு முறை

ஓதருமகார முகாரமேமகார முதித்திடும்பிரணவம் விந்து, நாத
மோடுதிக்கும் வியத்ததாரகத்தி னல்லகாயத்திரி மூன்று, பேதமாம்
பதத்தாற் பிறக்குமிக்காயத்திரி யிருபேதமாம் பேதம், யாதெனிற்ச
மட்டி வியட்டியென் றிரண்டுமேதுவாம் வேட்டவைக்கெல்லாம். ()

இன்னவையிரண்டுமிவனருள்வலியாலின்றசொன்மறையயங்கான்கும்
பின்னிவனருளாலளவிலவானபிரணவமாதிமந்திரமு
மன்னவாறுனதகரகத்தகாரமாதியக்கரங்களுமுதித்த
சொன்னவக்கரத்திற்சிவாகமநூலிச்சுரவரனடுமுகத்துதித்த. (௩௪)

கீட்டிசைமுகத்தொன்றமேத்தநாலைந்திற்கினைத்ததாலிருக்கதுதென்பா
லீட்டியவிரண்டாம்வேதநூறுருவோடெழுந்தது குடதிசைமுகத்தி
னீட்டியசாமமாயிரமுகத்தானியிர்ந்ததுவடதிசைமுகத்தி
னூட்டியவொன்பதுருவொடுகிளைத்துநடந்ததுநான்கதாமறையே. ()

அருமறைநால்வேறுகையால்வருணமாச்சிரமங்களுநான்காந்
தருமம்யாகாதிகருமமுமறையின்றகைமையிற்றோன்றினமறையுந்
கருமநூன்ஞானநூலெனவிரண்டாங்கருமநூலிவனருச்சனைக்கு [ம்.
வருவிளையுணர்த்துஞானநூலிவன்றன்வடிவிலாவடிவிளையுணர்த்து

மூதனுசர்கீராற்சிலைகுழைத்தாங்கிம்முழுமுதற்கருத்துநல்லவியின்
பதமிவன்வடிவப்பண்ணுவர்பிறர்க்குத் திருத்தியாம்பரனிவன்முகத்தி [ன்
விதமுறநித்தமாதிமுவிளைக்கும்வேண்டியங்குலகவர்போகங்
கதிபெறவியற்றுஞ்சிவார்ச்சனைவிளைக்குங்காரணமிச்சிவகோசம். ()

மறைபலமுகங்கொண் டறிவாயினந்து மயங்கவேறகண்டபு
ரணமாய், நிறைபரம்பிரம மாகுமிக்குறியைக் கருமநன்னெறிவழாப்
பூசை, முறையினுஞான நெறியினிப்பொருளை யருளினுன்முயக்கற
முயங்கு, மதிவினுக்தெளிவ துமக்குநாமுணர்த்த வருமறைப்பொரு
ள்பிறர்க்கரிதால். (௩௮)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

கருமத்தான்ஞானமுண்டாக்கருமத்தைச்சித்தசுத்தி
தருமத்தாலிகந்தசித்தசுத்தியைத்தருமகல்கு
மருமைத்தர்க்தருமத்தாலேசாந்தியுண்டாகுமாண்ட
பெருமைத்தாஞ்சாந்தியாலேபிறப்பதட்டாங்கயோகம். (௩௯)

கிரியையான்ஞானந்தன்னாற்கிளர்சிவபத்திபூசை
தரிசனஞ்சைவலிங்கதாபனஞ்செய்தலீசற்
குரியமெய்யன்பர்பூசையுருத்திரசின்னந்தாங்க
லரியதேசிகன்பாற்பத்தியனைத்தையுந்தெரியலாகும். (௪௦)

மறைவழிமதங்கட்கெல்லாமறைபிரமாணம்பின்சென்
றறைதருமிருதியெல்லாமவைக்கனுகுணமாமின்ன
முறையினுன்மார்த்தமென்றுமொழிவதம்மார்த்தஞ்சேர்ந்த
துறைகள்வைதிகமாமேலாச்சொல்வதிச்சுத்தமார்க்கம். (௪௧)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

தெருட்பெறுபோக வீடுகாரணமாய்ச் சிவமயமா மறைப்பொருளை, யிருட்கெடவுரைத்தே யிப்பொருட்கதிக மில்லையிப்பொருளெலா முமக்கு, மருட்கெடத்தெளிவ தாகெனவினைய வழிவழாமாதவர்புறத்தை, யருட்கையாற்றடவி யிலிங்கத்துட்புகுந்தா னருள்பழுத்தன்னதேசிகனே.

வேதத்துக்குப் பொருளருளிச்செய்த படலம் முற்றிற்று.

ஆகப்படலம் ௧௬-க்கு-திருவிருத்தம்-௧௧௧௧.

பதினேழாவது

மாணிக்கம்விற்றபடலம்.

கலிநிலைத்துறை.

சுகந்தவார்பொழின்மதுரையெம்பிரான்றனதுணைத்தா
ளுகந்தவாவறுகண்ணுவமுனிமுதலோர்து
மகந்தவாதபேரன்பருக்கருமறைப்பொருளைப்
பகர்ந்தவாறிதுமாணிக்கம்பகர்ந்தவாபகர்வாம். (௧)

அன்னநாள்வயின்வீரபாண்டியற்கனைக்கனைய
மின்னருளைம்போகமும்விளைநிலமனைய
பொன்னனார்பெறுகாளையாமைக்கணைப்புத்தே
ளென்னவீறினார்வான்பயிர்க்கெழுகளையென்ன. (௨)

பின்னரும்பெறற்குமரனைப்பெறுவதுகருதி
மன்னனுங்குலத்தேவியுங்கயற்கணிமணாளன்
றன்னைநோக்கியட்டமிசதுர்த்தசிமதிவார
மின்னநோன்புநோற்றொழுகுவாரிறைவனின்னருளால். (௩)

சிறிதுநாள்கழிந்தகன்றபின்கங்கையிற்சிறந்த
மறுவிலாவடமீன்புரைகற்பினள்வயிற்றிற்
குறியவாலவித்தங்குரம்போன்றொருகுமர
னிறையுநீருலகருட்குடைநிழற்றவந்துதித்தான். (௪)

அத்தனிச்சிறுகுமாரனுக்ககங்களிசிறப்ப
மெய்த்தநான்முறைசாதகவினைமுதல்வினையும்
வைத்தனன்பொலிவெய்துகாண்மன்னவனூழ்வந்
தொத்தநாள்வரவேட்டைபுக்குழுவைகோட்பட்டான். (௫)

வேங்கைவாய்ப்படுமீனவன்விண்விருந்தாக
வாங்குதான்மருங்கிறக்காமார்பெறிந்தாரத்
தாங்குகொங்கைசாத்தழிந்திடத்தடங்கண்முத்திறைப்ப
வேங்குமாதர்பொன்னகருளார்யாவருமிரங்க. (௬)

மற்றவேலைகாமக்கிழத்தியர்பெறுமைந்த
ரற்றநோக்கியீதமையமென்றுனைமாவாதி
யுற்றபல்பிறபொருணிதியொண்கலனோடுங்
கொற்றமௌலியுங்கவர்ந்தனர்கொண்டுபோய்மறைந்தார். (௭)

மன்னனாணையாற்றொழுகியமந்திரக்கிழவர்
மின்னுவேலினக்குமரனைக்கொண்டுவிண்ணடைந்த
தென்னர்கோமகற்கிறுதியிற்செய்வினைகிரப்பி
யன்னகாதலற்கணிமுடிசூட்டுவானமைந்தார். (௮)

காடிப்பொன்னறைபுகுந்தனர்நவமணிமகுடந்
தேடிக்கண்டிலர்நிதிசில்கண்டிலர்திகைத்து
வாடிச்சிந்தைநோயுழந்துமாற்றவர்கூட்டுண்
டோடிப்போயினதாகுமென்றுணர்ந்திதுகினைவார். (௯)

வேறுமாமுடிசெய்துமாலென்னினிவ்விலையிக்
கேறுமாமணியிலையரசிருக்கையின்றின்றேற்
றேறுநீருலகலையுமென்செய்வதிங்கென்று
வாறுசேர்சடையாரருள்காண்டுமென்றமைச்சர். (௧0)

கரைசெயாப்பெருங்கவலைசூழ்மனத்தராய்க்கறங்கு
முரசுகண்படாக்கடிமனைமுற்றநீத்தருமை
யரசிளந்தனிக்கொழுந்தினைக்கொண்டுபோயம்பொன்
வரைசெய்கோபுரவாயின்முன்வருகுவார்வருமுன். (௧௧)

எற்றதும்புகோவணவுடையிடம்படப்பிறங்கத்
துற்றபல்கதிர்மணிப்பொதிசுவன்மிசைத்தூங்க
மற்றடம்புயவரைமிசைவரம்பிலாவிலைகள்
பெற்றவங்கதம்பரிதியிற்பேர்த்துபேர்த்திமைப்ப. (௧௨)

மந்திரப்புரிநூலதுவலம்படப்பிறழ
விந்திரத்திருவில்லெனவாரமார்பிலங்கச்
சுந்தரக்குழைகுண்டலந்தோள்புரண்டாடத்
தந்திரத்தருமறைகளிதாணிலந்தோய. (௧௩)

கலிவிருத்தம்.

பொன்னவிர்ந்திலங்குகோபுரமுன்போதுவார்
முன்னவர்துனிவுகூர்முன்னநீக்கிய
தென்னவர்குலப்பெருந்தெய்வமாகிய
மன்னவர்வணிகராய்வந்துதோன்றினர். (௧௪)

வந்தவரெதிர்வருவாரைமம்மர்கொள்
சிந்தையராய்வருசெய்தியாதென
முந்தையில்விளைவெலாமுறையிற்கூறினர்க்
கெந்தையாம்வணிகனீரியம்புமாலரோ. (௧௫)

என்படவெய்துகின்றீர்களென்வயி
னென்பதுமணிகளுமுள்ளவாலவை
பொன்பதினாயிரகோடிபோனதென்
றன்புறமணியெலாமடைவிற்காட்டுவார். (௧௬)

இருந்தனர்கீழ்த்திசைநோக்கியிட்டதோர்
கருந்துகினமேலுமிந்திராதிகாவல
ரருந்திசையெட்டினுமடைவிற்செம்மணி
பெருந்தண்முத்தாதியெண்மணியும்பெய்தரோ. (௧௭)

இம்மணிவலனுடற்சின்னமென்னவக்
கைம்மறிகரந்தவர்கூறக்கற்றுறாற்
செம்மதியமைச்சரச்செம்மல்யாரவன்
மெய்ம்மணியாயதென்விளம்புகென்னவே. (௧௮)

மேவரும்வலனெனுமவுணன்மேலைநாண்
மூவரின்விளங்கியமுக்கண்மூர்த்திசெஞ்
சேவடியருச்சனைத்தவத்தின்செய்தியால்
யாவதுவேண்டுமென்றிறைவன்கூறலும். (௧௯)

தாழ்ந்துநின்றியம்பும்யான்சமரில்யாரினும்
போழ்ந்திறவாவரம்புரிதியூழ்வினை
சூழ்ந்திறந்தாலென்மெய்துறந்தமாந்தரும்
வீழ்ந்திடநவமணியாதல்வேண்டுமால். (௨0)

என்றுவேண்டலும்வரமீசனல்கின
னன்றுபோயமர்குறித்தமரர்கோனொடு
சென்றுபோராற்றலுந்தேவர்கோனெதிர்
நின்றுபோராற்றலனீங்கிப்போயினன். (௨௧)

தோற்றவானுடவன்மீண்டுசூழ்ந்தம
ராற்றினும்வெல்லரிதழிவிலாவர
மேற்றவனுதலாலிவனைச்சூழ்ச்சியாற்
கூற்றினாரோற்றுதல்குறிப்பென்றுன்னியே. (௨௨)

விடங்கலுழ்படைக்கலனின்றிவிண்ணவ
ரடங்கலுந்தழீஇக்கொளவடுத்துத்தானவ
மடங்கலைவருகெனநோக்கிவானவக்
கடங்கலுழ்யானைபோற்கலந்துகூறுவான். (௨௩)

விசையநின்றோள்வலிவென்றிவீக்கமெத்
திசையினும்பரந்ததச்சீர்த்திநோக்கியுண்
ணசையறுமகிழ்ச்சியானல்குவேனுனக்
கிசையவேண்டியவரம்யாதுகேளென. (௨௪)

கடிபடுகற்பககாடுகாவலோ
னொடியுரைசெவித்தொளைநுழையத்தானவ
னெடியகைபுடைத்துடனிமிர்ந்துகார்படு
மிடியெனநகைத்திகழ்ந்தினையகூறுவான். (௨௫)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

நன்றிதுமொழிந்தாயாருநகைக்கநீயெனைவென்கண்ட
வென்றியுமதனாற்பெற்றபுகழுநின்வீறுநாடு
மின்றுநின்போரிற்காணப்பட்டவேயிசைபோயெங்கு
நின்றதேயிதுபோனின்கைவன்மையுமிறப்பதன்றோ. (௨௬)

ஈறிலானளித்தநல்லவரமெனக்கிருக்கநின்பால்
வேறுநான்பெறுவதுண்டோவேண்டுவதுனக்கியாதென்பாற்
கூறுநீயதனையின்னேகொடுக்கலேனுநினின்போற்
பாறுவீழ்களத்திற்றோற்றப்பிற்புகழ்பெறுவனென்றான். (௨௭)

மாதண்டவவுணன்மாற்றமகபதிகேட்டுவந்து
கோதண்டமேருக்கோட்டிக்கொடும்புரம்பொடித்தான்வெள்ளி
வேதண்டமெய்தியாங்கோர்வேள்வியான்புரிவனுனைப்
போதண்டர்க்கூட்டவாவாய்ப்போதுவாய்வல்லையென்றான். (௨௮)

அன்றொருதவத்தோனென்புவச்சிரமொன்றேயாக
வொன்றியகொடையாற்பெற்றபுகழுடம்பொன்றேயென்போல்
வென்றியினுடம்பியாமெய்யெலாமணிகளாகப்
பொன்றியகொடையினும்புகழுடம்பிரண்டுண்டாமே. (௨௯)

மேவலனல்லநீயேகட்டவன்மேலைவானோர்
யாவருமருந்துமாற்றலுறம்புகழெனக்கேயாக
வாவுருவாதியென்றாயன்னதேசெய்வேனென்றா
னீவதேபெருமையன்றியிரக்கின்றதிழியேயன்றோ. (௩0)

அதற்கிசைந்தவுணர்வேந்தனமரர்வேந்தனைமுன்போக்கி
மதர்க்கடுங்குருதிச்செங்கண்மைந்தனுக்கிறைமைவீக்கி
முதற்பெருங்கலையாம்வேதமொழிமரபமைத்தவாறும்
புதர்க்கடுவேள்விச்சாலைப்புறத்துவந்திறுத்துநின்றான். (௩௧)

வாய்மையான்மாண்டநின்போல்வன்னல்யாரென்றுதேவர்
கோமகன்வியந்துகூறத்தருக்குமேற்கொண்டுமேரு
நேமியோடிகலும்வித்தவரையெனநிமிர்ந்துவேள்வித்
தாமனையூபத்தோடும்யாமிணென்றடுத்துநின்றான். (௩௨)

யாத்தனர்தருப்பைத்தாம்பால் * யானையாலயாத்தசிங்கப்
போத்தெனநின்றான்வாயைப்புதைத்துயிர்ப்படங்கவீட்டி
மாய்த்தனர்மாய்ந்தவள்ளல்வலனுமந்தாரமாரி
தூர்த்திடவிமானமேறித்தொல்விதியுலகஞ்சேர்ந்தான். (௩௩)

மணித்தலைமலையின்பக்கமாய்த்தவன்வயிரவேலாற்
பிணித்துயிர்செகுத்தவன்னற்பெருந்தகையாவைவேதம்
பணித்திடும்வகையைவாங்கிப்படரெரிசுவைமுன்பார்க்கக்
குணித்தவாறுடர்க்கூட்டிக்கோதிலாவேள்விசெய்தான். (௩௪)

அத்தகையானின்சோரிமாணிக்கமாம்பன்முத்தம்
† பித்தைவயிலேமென்புவச்சிரம்பித்தம்பச்சை
நெய்த்தவெண்ணிணங்கோமேதந்தசைதுகிர்நெடுங்கணீல
மெய்த்த ‡ வைபுருடராகமிவைநவமணியின்றோற்றம். (௩௫)

இவ்வடிவெடுத்துத்தோன்றியிருண்முகம்பினப்பக்காந்தித்
தைவருமணியொன்பானுஞ்சார்விடஙிறங்கள்சாதி
தெய்வதமொளிமாசெள்ளிச்சோதனைசெய்துதேசு
மெய்வரவணிவோரெய்தும்பயனிவைவிதியாற்கேண்மின். (௩௬)

மேற்படி - வேறு.

வானவிருமாணிக்கங்கோதமுதலுகாண்கும்வழியேமக்கள்
காளபுரந்தும்புராஞ்சிங்களமிக்கான்கிடைப்பமேக்கமலராக
மாணுநிறமொன்பதரவிந்தமாதுளம்பூவிந்தழல்கல்லார
கோளரியகச்சோதரந்தரும்பலந்தீபங்கோடமென்ன. (௩௭)

இந்நிறத்தபொதுவாய மாணிக்கமறையவர்முன் வியனுற்சாதி,
தன்னியல்பாற் சாதரங்கங் குருவிந்தஞ் சௌகந்தி கங்காவரங்,
மென்னுமிவற்றூற்சிறந்த நான்காகு மிவ்வடைவே யிந்நான்கிற்குஞ்
சொன்னவொளி பத்திருநான் கிருமூன்று நான்கவையுஞ் சொல்லக்
கேண்மின். (௩௮)

சாதரங்கநிறங்கமலங்கருநெய்தலிரவியொளிதழல்கச்சோத
மாதுளம்போததன்வித்துக்கார்விளக்குக்கோடமெனவருத்தபத்து
மேதகையகுருவிந்தநிறங்குன்றிமுயற்குருதிவெள்ளிலோத்தம், போ
துபலாசலர்திலகஞ்செவ்வரத்தம் § விதாரமெயிபொன்போலெட்டும்

* உரனையாவென்றும் பாடாந்தரம். உரனை - வெந்திறல்.
† பித்தை - மயிர். ‡ ஐ - கபம். § விதாரம் - முள்ளிலவு.

களிதருசௌ கந்திகத்தி னிறமிலவம் போதுகுயிற் கண்ணசோகந், தளிரவிர்பொன் செம்பஞ்சி யையவன்னமெனவாறுந் தகுகாவாங்க, வொளிகுர்வு குசும்பைமலர் செங்கற்கொவ் வைக்கனியென்றொருநான்கந்த, மிளிர்பதுமராகத்தைப் பொதுமையினற் ஞோதிக்கவேண்டுமெல்லே. (௪௰)

தின்னியதாய் மேல்கீழ்ஞ்சூழ் பக்கமுறவொளிவிடுதல் செய்தாற்செவ்வே, யன்னியவுத்தமமுதன் மூன்றுமென்பர் சாதரங்கமணிவோர்விச்சை, புண்ணியவான் கன்னியறு சுவையன்ன முதலானபுனிததானம், பன்னியதும்பரிமேத யாகமுதன்மகம்புரிந்த பயனுஞ்சேர்வர். (௪௧)

ஒருவிந்தந்தரிப்பவர்பார்முழுதுமொருகுடைநிழலிற்குளிப்பவாண்டு
திருவிந்தையுடனிருப்பர்சௌகந்திகந்தரிப்போர்செல்வங்கீர்த்தி
மருவிந்தப்பயனடைவர்காவாய்கந்தரிப்போர்தம்மனையிற்பாலும் [ம்.
பெருவிந்துமெனச்சாலிமுதற்பண்டமுடன்செல்வப்பெருக்குமுண்டா
எள்ளியிடுகுற்றமெலாமிகந்துணைநேற்றெளிவிட்டிருள்கால் மீத்து
தள்ளியவிச்செம்பதுமராகமதுபுனைதக்கோர்தம்பாலேசைத் [த்
தெள்ளியமுத்துள்ளிட்டபன்மணியும்வந்தோங்குஞ்செய்யாளோடு
மொள்ளியசற்செல்வமதற்கொட்டகெடும்பாற்கடலினேங்குமாலேர்.

மேற்படி வேறு.

பிறங்கிறச்சார்புள்ளிபுள்ளடிபிறங்குநீற்று
மறுவறுதராசமென்னவருத்தவைங்குற்றந்தள்ளி
யறுதருபண்புசான்றவரதனமணியும்வேந்தன்
செறுநர்வாளூற்றமின்றிச்செருமகட்கன்பனுவான். (௪௪)

குறுநிலக்கிழவனேனுமவன்பெருங்குடைக்கீழ்த்தங்கி
மறுகுநீர்ஞாலமெல்லாம்வாழுமற்றவனைப்பாம்பு
தெறுவிலங்கலகைபூதஞ்சிறுதெய்வம்வறுமைநோய்தீக்
கறுவுகொள்கூற்றச்சீற்றங்கலங்கிடவாதியாவாம். (௪௫)

முன்னவரொன்பகற்றோர்வச்சிரமுந்நீர்முத்த
மன்னவொன்பதுப்புமாணிக்கம்வணிகரொன்ப
மின்னவிர்புருடராகம்வயிடூயம்வெயிற்கோமேதம்
பின்னவரொன்பநீலமரகதம்பெற்றசாதி. (௪௬)

பார்த்திவர்மதிக்குமுத்தம்பளிங்கன்றிப்பச்சைதானுஞ்
சாத்திகர்துகிர்மாணிக்கங்கோமேதந்தாமேயன்றி
மாத்திகழ்புருடராகம்வயிடூயம்வயிரந்தாமு
மேத்திராசதமாநீலந்தாமதமென்பராய்ந்தோர். (௪௭)

இனையவைவளர்ந்துகண்டுமதிக்குநாளெழுமான்பொற்றேர்
முனைவனுண்முதலாவேழின்முறையினற்பதுமராகந்
தனைகதிர்முத்தந்துப்புக்காருடம்புருடராகம்
புனையொளிவயிரநீலமென்மனர்புலமைசான்றோர். (௪௮)

வெய்யவன்கிழமைதானேமேதகுமணிக்குமாகு
மையறுதிங்கடானேவயிடூயமணிக்குமாகு
மையறவிவையொன்பானுமாய்ப்வரகம்புறம்பு
துய்யராயறவோராய்முன்சொன்னநாளடைவேயாய்வர். (௪௯)

அல்லியம்பதுமஞ்சாதியாத்தவாயாம்பல்கோட்டல்
வல்லிசேர்மௌவற்போதுநாற்றிதழ்மரைகள்வாய
மெல்லிதழ்க்கழுநீர்பேழ்வாய்வெள்ளைமந்தாரமின்ன
சொல்லியமுறையால்வண்டுசூழத்தன்முடிமேற்சூடி. (௫௰)

தலத்தினைச்சுத்திசெய்துதவிசினையிட்டுத்தூய
கலத்துகில்விரித்துத்தெய்வமாணிக்கமுவேவைத்துக்
குலத்தமுத்தாதியெட்டுங்குணதிசைமுதலெண்டிக்கும்
வலப்படமுறையேயானுமண்டலமாகவைத்து. (௫௧)

அன்புறுபதுமராகமாதியாமாதனங்க
ளொன்பதுங்கதிரோனாதியொன்பதுகோளுமேற்றி
முன்புனைகமலப்போதுமுதலொன்பான்மலருஞ்சாத்தி
பின்புறநினைக்குபூசையியன்முறைவழாதுசெய்தல். (௫௨)

தக்கமுத்திரண்டுவேறுநலசமேசலசமென்ன
விக்கதிர்முத்தந்தோன்றுமிடன்பதின்மூன்றுசங்க
மைக்கருமுகில்வெய்பாம்பின்மத்தகம்பன்றிக்கோடு
மிக்கவெண்சாலியிப்பிமீன்றலைவேழக்கன்னல். (௫௩)

கரிமருப்பைவாய்மான்கைகற்புடைமடவார்கண்ட
மிருசிறைக்கொக்கின்கண்டமெனக்கடைகிடந்தமூன்று
மரியனவாதிப்பத்துநிறங்களுமணக்குந்தங்கட்
குரியனநிறுத்தவாறேயெனவுரைப்பக்கேண்மின். (௫௪)

மாடவெண்புறவின்முட்டைவடிவெனத்திரண்டபேழ்வாய்க்
கோடுகொண்முத்தம்வெள்ளைநிறத்ததுபொன்னம்முத்த
நீடுசெம்பரிதியன்னநிறத்ததுஇளைமுத்தாலி
பீடுசாணிறத்தாலின்பெருமுத்தநீலத்தாமால். (௫௫)

ஏனமாவாரஞ்சோரியீர்ஞ்சுவைச்சாலிமுத்த
மானதுபசுமைத்தாகும்பாதிரியனையதாகு
மீனதுதாளம்வேழமிரண்டிலும்விளையுமுத்தந்
தானதுபொன்னின்சோதிதெய்வதஞ்சாற்றக்கேண்மின். (௫௬)

யான்முத்தம்வருணன்முத்தம்பகன்முத்தம்பகலோன்முத்த
மான்முத்தநீலமுத்தமாசறுகுருதிமுத்தங்
கான்முத்தம்பசியமுத்தங்காலன்றன்முத்தந்தேவர்
கோன்முத்தம்பொன்போன்முத்தங்குணங்களும்பயனுஞ்சொல்வாம். (௫௭)

உடுத்திரளனையகாட்சியுருட்சிமாசின்மையைய
லெடுத்திடற்றிண்மையார்வைக்கின்புறல்படிகமென்ன
வடுத்திடுகுணமாதின்னவணியின்மூதணங்கோடின்மை
விடுத்திடுந்திருவந்தெய்தும்வினைக்கிடுஞ்செல்வம்வாழ்நாள். (௫௮)

மாசறுதவத்தோனென்பும்வலாசுரனென்பும்வீழ்ந்த
கோசலமாதிநாட்டிற்பட்டதுகுணத்தான்மாண்ட
தேசதாயிலேசதாகித்தெள்ளிதாயளக்கிலெல்லை
வீசியவிலையதாகுமேம்படுவயிரந்தன்னை. (௫௯)

குறுநிலத்தரசர்தாங்கிற்குறைவுதீர்செல்வமெய்தி
யுறுபகையெறிந்துதங்கோன்முழுதலகோச்சியாக்கும்
வறுமைநோய்விலங்குசாராவரைந்தநாளன்றிச்செல்லுங்
கறுவுகொள்கூற்றம்பூதங்கணங்களுமணங்குசெய்யா. (௬௰)

மாமணிமரபுக்கெல்லாம்வயிரமேமுதன்மைச்சாதி
யாமெனவுரைப்பர்நூலோரதிகம்யாதெனிலேனைக்
காமருமணிகட்கெல்லாந்தமரிடுகருவியாமத்
தாமணிதனக்குத்தானேதொளையிடுகருவியாகும். (௬௧)

மரகதத்தோற்றங்கேண்மின்வலாசுரன்பித்தந்தன்னை
விரைதமக்காகக்கௌவிப்பறந்தபுள்வேந்தன்றில்லித்
தனைதனிற்சிதறவீழ்ந்துதங்கியதோற்றமாகு
மூனைதருதோற்றமின்னும்வேறுவேறுள்ளகேண்மின். (௬௨)

விதிர்த்தவேலனையவாட்கண்வினைதைமாதருணச்செல்வ
ழுதித்தவான்முட்டையோட்டையுவணவேற்றரையில்யாப்பக்
கதிர்த்தவோடாயிற்றப்பிவீழ்ந்தொருகடல்சூழ்வைப்பி
லுதித்தவாறுசுமின்னுமுண்டொருவகையாற்றோற்றம். (௬௩)

முள்ளைமுனரிக்கண்ணன்மோகினியணங்காயோட
வள்ளைமதியஞ்சூடிமந்தரவரைமட்டாகத்
துள்ளரியேறுபோலத்தொடர்ந்தொருவிளையாட்டாலே
யெள்ளரிதாயசெந்தீயிர்தியக்கலனஞ்செய்தான். (௬௪)

அப்பொழுதமலவித்திலரியர்குமரன்கான
வைப்புறைதெய்வத்தோடும்வந்தனனந்தவித்து
துப்புறுகருடன்கௌவிக்கடலினுந்தருக்கக்காட்டும்
பப்புறவிடுத்தவாறேபட்டதுகலுழப்பச்சை. (௬௫)

காடமேசுப்பிரமேகாளமெனக்குணமூன்றுங்கருடப்பச்சைக்
கிடனுஙினிதழ்நிறத்தகாடமதுசாதியினாலிருவேறுகுஞ்
சாடரியசகுணமெனச்சதோடமெனவவையிரண்டிற்சகுணமாரும்
பீடுபெறுகாடமொருமூல்லசிதம்பேசலம்பித்தகமேமுத்தம். (௬௬)

புல்லரியபிதுகமெனவிவையாறிற்காடமதுபுல்லின்வண்ண
மூல்லசிதமெலிதாகும்பேசலமேகுணச்செகெலோண்டரளம்போலு
மல்லடரும்பித்தகமேபசுங்கிளியின்சிறைநிறத்ததாகுமுத்தங்
குல்லைநிறம்பிதுகமாமயிலையினிறஞ்சதோடத்தின்குணங்கடாகும்.

தோடலேசாஞ்சிதமேதுட்டமேதோடமூர்ச்சிதமேவெய்ய
தோடலேசத்தினெறிசூழ்மக்ததோடமெனத்தொகுத்தவைந்திற்
றோடலேசாஞ்சிதஞ்சம்பிரவிலையாமலரியிலைதுட்டநீலத்
தோடதாம்புல்லினிறத்தோடமூர்ச்சிதமுளரிதோடலேசம். (௬௮)

மக்ததோடங்கயமயிலிறகினிறமாமிவ்வகுத்ததோடஞ்
சிந்தவாறுதற்குணமணியணிவோர்தாக்கருவிச்சேனைவாழ்நா
ளுந்தவாழ்வார்வலன்கணிலவிரண்டரன்கண்டத்தொளிவிட்டோங்கு
மிந்திரநீலத்தான்மாநீலமெனுமிரண்டிகலிருண்டிந்தநீலம். (௬௯)

முந்தியவிந்திரநீலம்விச்சுவருடனைமகவான்முடித்தாளி
னந்தியடுபெழிதவிர்ப்பான்புரியுமகப்பரிமகத்தினெறியதாம
முந்தியரும்பரியினையகாட்டறுமைந்தனிசேற்றினெறிழுரம்பினை,
சிந்தியவாறிடைப்படுமொன்றிந்திரவின்னீலமெனத்திகழுநீலம். (௭௰)

* இருண்ட என்னும் பெயரெச்சத் திறுதொகுத்தல்.

சஞ்சையாம்பகற்கடவுண்மனைவியவன்கனலுட்லர்தழுவலாற்
றஞ்சவாடன்னிழலைத்தன்னுருவாகிறுவிவனமடைந்துநோற்க
விஞ்சையாலரிந்திரவியின்றுேடாமாப்பரியாமின்னைத்தானுஞ்
செஞ்செவேவயப்பரியாய்மையல்பொருதித்தியத்தைச்சிந்தினானே.

அவைசிதறும்புலந்தோன்றுநீலமாநீலமிவையணிவோர்வானோர்
நவையறுசீர்மானவரிந்நகைநீலஞ்சாதியினுனல்வேறந்தக்
கவலரியவென்னைசிவப்பெரிபொன்மைகலந்திருக்கிற்கரிதாய்முற்றுந்
தவலரிதாயிருக்கிலிருபிறப்பாளர்முதன்முதலுற்சாதிக்காகும். (எ௨)

இலங்கொளியவிந்நீலமெய்ப்படுப்போர் மங்கலஞ்சேர்திருப்பரோனை
யலங்குகதிர்நீலத்திற்பெருவிலையாயிரப்பத்தினைவைத்தாகித்
துலங்குவதான் பாற்கடத்தி னூறுகுணச் சிறப்படைந்து தோற்றுங்
கலங்குகடலுடைவைப்பிலரிதித்தவிந்திரன்பேர்க்கரியநீலம். [சோதி

மைந்துறுசெம்மணிமுத்துவான்வயிரம்பச்சையொளிவழங்குநீல
மைந்திவைமேற்கோமேதமுதற்பவளநீருகவறைந்தநான்கு
நக்தொளியவேனுமவைசிறுவேட்கையயப்பவழனகுசெங்குஞ்சி
வெந்தறுகன்வலனிணங்கள்சிதறுமிடைப்படுவனகோமேதமென்ப.

உருக்குறு நெய்த்துளிதேன் றுளிநல்லான் புண்ணியநீ ரொத்துச்சேந்து, செருக்குபசும் பொன்னிறமும் பெற்றுமெலி தாய்த்தூய்தாய்த் திண்ணிதாகி, யிருக்குமது தருக்கினிருட் பாவம்போம் பரிசுத்தி யெய்தும்வென்றித், தருக்குவலன் கபம்விழுந்த விடைப்புருடராகமொளி தழையத்தோன்றும். (எ௫)

தாழ்ந்தபிலத் திழிந்தெரிபொற் கண்ணவுண னுயிர்குடிக்குந்தறுகட்பன்றிப், போழ்ந்தமுழைவாய்திறந்து திசைசெவிடு படநகைத்துப் பொன்போற்கக்கி, வீழ்ந்தகபம்படுநிலிற் படுமுச்சிவட்டமாய் மெலிதாய்ப் பொன்போற், சூழ்ந்தொளிவிட் டவிர்தழல்போற் றெளிவெய்திமனங்கவர்ந்து தோற்றஞ்செய்யும். (எ௬)

இந்தமணிபாரியாத்திரகிரியிற்கொடுமுடியாயிலங்குந்தெய்வ
மந்தரமால்வரைப்புறஞ்சூழ்மேகலையாமயலிந்தமணியினுலே
யந்தரகாடவனகுமாசிருப்புமண்டபமுமமைத்தாவித்தச்
சந்தமணிதரிப்பவரேதரியார்வெல்பிடவாதைதரிக்கவல்லார். (எஎ)

வலன்மயிராம்வயிரேயமினாவிரதகண்டத்தில்வந்துதோன்றிப்
பலர்புகழுங்கோரக்கமகதஞ்சிங்களமலயம்பாரசீக
மிலகுதிரிகூடாதிதேயங்கள்பிறதிபமெங்குந்தோற்று
மலைகட்டூலும்படுமிறுதிக்காரிடிக்கும்போதுபிறமதற்கியாதென்னில். ()

கழையிலைகார்மயிலெருத்தம்வெருகின்கண் ணிறத்ததாய்க்கனத்ததா
விழைவுதருதெளிதாகித்திண்ணிதாய்மெலிதாகிவிளங்குமீதி [ஒ
லழகுபெறவலமிடமேல்கீழொளிவிட்டனமுறையேயறவோராதித்
தழைவுறுநாற்சாதிகளாத்தினமிதனைப்பூசித்துத்தரிக்கசான்றோர். ()

வலத்தவுணன் றசைவீழ்ந்த வழிபடுதப்பயன்சத்தி வடிவமாந்தென், புலந்தவளா விதிக்குமிடத் தவருடன்மா சிழிபுலத்துப் புயல்போல்வண்ணன், வலத்தமது கைடவனக் குறைகுருதி வழிநிலத்து மகவான்வெற்பின், குலத்தையிற கரிசோரி சிதறிடத்தும் வந்துகுடிகொண்டுதோன்றும். (அ௦)

அவ்வழியிற்படுபவள முருக்கம்பூப் பசுங்கிளிமூக் கலர்த்தசெவ்விச், செவ்வரத்த மலர்க்கொவ்வைக் கனிபோலுங் குணங்குன்றத்திருக்கோட, வெவ்வமுறப்புழுவரித்தன் முகமொடிதல்பெரும்பாலுமிப்பூணேர்தல், பெய்வலையார் தமக்கேயாந் தரிக்கின்மகப் பேறுமுதற் பேறுண்டாகும். (அக)

இரவியெதி ரொரியிறைக்குங் கல்லுமதி யெதிர்செழுநீ ரிறைக்குங்கல்லு, மூனையிடுமொன் பதினொன்றி லுட்படையாய்க் கிடக்குமென வொன்பான்வேறு, மரபுரைத்தவணிகரே றுகியவானவரோடவயாறேக்கிப், பரவியிருந்தருச்சித்து மணிகைக்கொண் டெதிர்மதுரைப் பரனைநோக்கா. (அ௨)

அஞ்சலிசெய்தநோக்கா லிக்குமாரர்களிறந்த வாயுள்செல்வம், விஞ்சுகவென் றளித்தருள விறைமகனும் விண்ணிழிந்த விமானநோக்கிச், செஞ்சரணம் பணிந்திருகைத் தாமரையும் விரித்தேற்றான் செல்வநாயகர், மஞ்சனையும்புடைநின்ற வமைச்சரையு நோக்கிமுக மலர்ந்துசொல்வார். (அ௩)

இம்மணியா லிழைத்தவ முடிசூட்டிபச்சிந்த வினவேறன்னசெம்மறனையபிடேக பாண்டியனென் றியம்புமெனச் செம்பொன்றூக்கிக், கைம்மறியில் வணிகருக்கு விலைகொடுப்பான் வருவார்முன்கருணைகாட்டு, மம்மகன்மே னிரப்பியின் கைபருஞ்சின்றுனா பக்குகாணுர். (அ௪)

ஓருருவாய்ச்சேர்கின்றவணிகேசர்விடையின்மேலுமையாளோடு
மீருருவாய்முக்கண்ணுகாற்கரமுமஞ்சமாரிறவாவாறு
காருருவாயெழுமிடறுங்காட்டித்தங்கோயில்புகக்கண்டாரின்று
யாருருவாய்நின்றவணிகேசரிவரெனவேபின்பற்றிப்போவார். (௮௫)

தேன்செய்த கொன்றைநெடுஞ் சடையார்முன் றாழ்ந்தெழுந்து செங்கைகூப்பி, யான்செய்யுங் கைம்மாறு மெம்பிரான் கொன்றுண் டோ யாதுமென்ன, தான்செயுட் டும்பொருளு முயிருமெனி னவை யாவு முனவேயையா, வான்செய்யுநன்றிக்கு வையகத்தோர் செய் யுங்கைம் மாறுண்டேயோ. (௮௬)

என்றுமுன்வழுத்தலுறும்விறன்மாறன்கோக்கொழுந்தை யிகல்வேல் மன்றுகுமிவற்குமனவாக்கிறந்தபூரணமாமதுரைநாதன் [விந்தை
பொன்றுமணிமகுடஞ்சூட்டமணிநல்குதலாற்புவியனைகம்
யன்றுமுறைபுரியத்தக்கதெனவாழ்த்தினர்பல்சான்றோரும். (௮௭)

வத்திவலங்கொண்டிருகான் கிபந்தழுவப்பெற்றேங்கி யிருக்கும கூறப், பார்த்திவன்றன் பொலன்மாடமனைபுகுந்தா னிறைமணிப்ப ண்பாயுங்கேள்விச், சாத்திரமந்திர மணிநோக்கி வியப்படைந் தார் சங்கைகூர்ந்தார். (௮௮)

மேற்படி வேறு.

வேளனவந்தகாய்கர்சுந்தரவிடங்கரானு
ளுள்களுங்கோளும்பற்றிநவமணியாக்கினோா
தாள்களுந்தோளுமார்புந்தரித்தநீணுகமீன்ற
வாள்விடுமணியோவீந்தார்யாதெனமதிக்கற்பாலேம். (௮௯)

இந்திரக்கடவுளுட்டுமிம்மணியரியவென்று
மந்திரக்கிழவர்கல்கிமயனினுமாண்டகேள்வித்
தந்திரக்கனகக்கொல்லர்க்குவடயனைதம்பவீசிச்
செந்திருமாறபினற்குத்திருமணிமகுடஞ்செய்தார். (௯௦)

மங்கலமரபான்மாலைமணிமுடிசூட்டிகாமஞ்
செங்கணேறுயர்த்தகாய்கர்செப்பியமுறையால்வேத
புங்கவரிசைப்பவீதிவலஞ்செய்துபுனிதன்பாத
பங்கயமிறைஞ்சிவேந்தன்பன்மணிக்கோயிலெய்தா. (௯௧)

போர்மகட்குறையுளானபுயத்தபிடேகத்தென்னன்
றேர்முதற்கருவித்தானைத்தெவ்வர்நீண்முடியெலாந்தன்
வார்கழற்கமலஞ்சூடமனுமுறைப்பைங்கூழ்காக்குங்
காரெனக்கருணைபெய்துவையகங்காக்குநாளில். (௯௨)

எழுசீரடியாசிரிய விருத்தம்.

தந்தைதன் காமக் கிழத்திய ரீன்ற தநயராய்த் தனக்கு முன் னவராய், முந்தைகா ளரசன் பொன்னறை முரித்து முடிமுதற் பொ ருள்கவர்ந் திட்டுஞ், சிந்தைய ராகி மறுபுலத் தொளித்த தெவ்வ ரைச் சிலர்கொடு விடுப்ப, வந்தவர் கவர்ந்த தவமெலா மீள வாங் கினு னீர்ங்கதிர் மருமான். (௯௩)

மாணிக்கம்விற்றபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் ௨௧-க்கு - திருவிருத்தம் - ௧௨௮௭.

பதினேட்டாவது

வருணன்விட்டகடலை வற்றச்செய்தபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

காழ்கெழுகண்டத்தண்ணல்கௌரியன்மகுடஞ்சூட்
வீழ்கதிர்மணிகளிந்தவியப்பிதுவிடையோன்சென்னி
வாழ்கருமுகிலைப்போக்கிமதுரைமேல்வருணன்விட்ட
வாழ்கடல்வறப்பக்கண்டவாடலைப்பாடல்செய்வாம். (௧)

சித்திரைமதியிற்சேர்ந்தசித்திரைநாளிற்றென்னன்
மைத்திரண்மிடற்றுவெள்ளிமன்றுளாற்களவுமாண்ட
பத்திமைவிதியிற்பண்டம்பற்பலசிறப்பநல்கிப்
புத்தியும்வீடுநல்கும்பூசனைகடத்தலுற்றான். (௨)

கறியகெய்யாதியாரகறுங்குழம்பீருவட்ட
வெறியகர்ப்புரநீராட்டியற்புதவெள்ளம்போக்க
விறைவனைவியந்துநோக்கியேத்துவானெதிர்நீர்வைபைத்
துறைவநீயென்கர்ப்பூரசுந்தரனேயோவென்றான். (௩)

பூசனைபுரியுமெல்லைப்பொன்னகர்க்கிறைமைபூண்ட
வாசவன்வருடந்தோறும்பூசித்துவருவானன்ன
காசறுமனத்தான்பூசைகழிவுறுமளவுந்தாழ்ந்து
தேசமைசிறப்பார்பூசைசெய்துதன்னாடுபுக்கான். (ச)

அன்றுநீர்க்கடவுள்வேள்விநாயகனையைத்தெய்தி
நின்றவன்றன்னேய்நீருஞ்செவ்வியினிகழ்ச்சிதோன்றக்
குன்றவன்சிறகரீர்ந்தகொற்றவன்முகத்தைநோக்கி
யின்றுநீசிறிதுதேம்பியிருத்தியாலிதென்கொலென்றான். (ரு)

சிலைப்படுமுகிலூரண்ணல்செப்புவானிருடீரன்பின்
வலைப்படுபெருமானெம்மான்மதுரையெம்பிரானையன்பு
தலைப்படுபூசைசெய்யத்தாழ்த்ததின்றதனாலிப்போ
தலைப்படச்சிறிதெனுள்ளமாகுலமடைந்ததண்டால். (சு)

என்னவவ்விலிங்கந்தான்மாவிலிங்கமோவென்றுமுந்நீர்
மன்னவன்வினவலோடுமகபதிமொழிவான்முன்னென்
றன்னரும்பழியும்வேழச்சாபமுந்தொலைத்ததன்றோ
வன்னதையறிந்திலாய்கொலென்னநீரண்ணல்கூறும். (எ)

அற்றதுவாகிற்றெய்வமருத்துவராலுந்தீரச்
செற்றிடவரிதாயென்னைத்தெறும்பெருவயிற்றுநோயை
வற்றிடுமாறுநீர்க்குக்கொல்லெனவவரியைய
முற்றுநீவினயதென்னென்றுண்ணகையரும்பிச்சொல்வான். (அ)

அரியயராலுந்தீராப்பிறவிநோயறுக்கவல்ல
பெரியவனித்தயாக்கைப்பெரும்பிணிபிறவுந்தீர்த்தற்
கரியனோவையன்செய்யுந்திருவிளையாட்டையின்னே
தெரியநீசோதியென்னத்தெண்கடற்சேர்ப்பன்சொல்வான். (கூ)

கல்லிறகரிந்தோயிங்குநான்வருங்காலைவேட்டார்க்
கெல்லையில்காமநல்குஞ்சுரபியுமின்பால்சோரப்
புல்லியகன்றுமாற்றப்பட்டவப்போதுகண்ட
நல்லசோபனத்தாலிந்தன்மொழிகேட்டேனென்னா. (கo)

வருணனுமேகிவெள்ளிமன்றுடையடிகள்செய்யுந்
திருவிளையாடல்கண்டுவயிற்றுநோய்தீர்ப்பானெண்ணி
முரசதிர்மதுரைமூதூர்முற்றுநீயழித்தியென்னக்
குரைகடறன்னைவல்லேகூவினனேவினானே. (கக)

கொச்சகக்கலிப்பா.

கொதித்தெழுந்துதருக்களிறக்கொத்தியெடுத்தெத்திசையு
மதிர்த்தெறிந்துவளைகளெல்லாமகழ்ந்துதிசைப்புறஞ்செல்லப்
பிதிர்த்தெறிந்துமாடநிரைபெயர்த்தெறிந்துபிரளயத்தி
லுதித்தெழுந்துவருவதெனவோங்குதிரைக்கடல்வருமால். (கஉ)

கந்தமலர்த்தனிக்கடவுள்கற்பத்துமழியாத
விந்தவளம்பதிக்கிடையூறெய்தியதெம்பதிக்குமினி
வந்ததெனச்சுந்தரனைவந்திறைஞ்சினனவருஞ்
சிந்தைகலங்கினர்வருணன்செய்தசெயறெளியாதார். (கங)

சூலமோடழலேந்துஞ்சொக்கர்திருவிளையாட்டின்
சீலமோநாமிழைத்ததீவினையின்றிறமிதுவோ
வாலமோவுலகமெலாமழியவரும்பேரூழிக்
காலமோவெனக்கலங்கிக்கடிநகரம்பனிப்பெய்த. (கச)

மண்புதைக்கத்திசைபுதைக்கமயக்கிருள்போல்வருநீத்தம்
விண்புதைக்கவெழுமாடவியனகரின்புறத்திரவி
கண்புதைக்கவருமளவிற்கண்டசனங்கலங்கிப்
பெண்புதைக்குமொருபாகப்பிரானடியேசரணென்னா. (கரு)

ஆலமெழுந்திமையவர்மேலடரவரும்பொழுதஞ்சு
மாலெனவுந்தன்னுயிர்மேன்மறலிவரும்பொழுதஞ்சும்
பாலனெனவுங்கலங்கிப்பசுபதிசேவடியில்வீழ்ந்
தோலமெனமுறையிட்டாருலகுபுகழ்முறையிட்டான். (கசு)

முறையிட்டசெழியனெதிர்முறுவலித்தஞ்சலையென்னாக்
கறையிட்டவிண்புரந்தகந்தரசுந்தரக்கடவு
ணிறையிட்டுவருகடலைச்சுவறப்போய்ப்பருகுமெனப்
பிறையிட்டதிருச்சடையிற்பெயனான்கும்வரவிடுத்தான். (கஎ)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

நிலப்புறவெழுந்தநான்குமேகமுமியிர்த்துவாய்விட்
டார்ப்புறுகடலைவாரியுறிஞ்சினவுறிஞ்சலோடுஞ்
சிவப்பெருங்கடவுள்யார்க்குந்தேவெனத்தெளிந்தோரேழு
பவப்பெரும்பௌவம்போலப்பசையறவறந்ததன்றே. (கஅ)

அங்கிலைநகருளாரும்வானவராதியோருந்
தென்னவர்பிரானுமெந்தைதிருவிளையாடனோக்கிப்
பன்னருமகிழ்ச்சிபொங்கப்பன்முறைபுகழ்ந்துபாடி
யின்னதீர்மனத்தராகியீறிலாவின்பத்தாழ்ந்தார். (௧௧)

வருணன்விட்டகடலை வற்றச்செய்தபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் - ௨௰௩ - திருவிருத்தம் - ௧௩௦௧.

மதுரைக்காண்டம் முற்றிற்று.

கூடற்காண்டம்.

பத்தொன்பதாவது
நான்மாடக்கூடலானபடலம்.

எழுசீரடியாசிரிய விருத்தம்.

பூதங்களல்லபொறியல்லவேறுபுலனல்லவுள்ளமதியின்
பேதங்களல்லவிவையன்றிநின்றபிறிதல்லவென்றுபெருநூல்
வேதங்கிடந்துதடுமாறும்வஞ்சவெளியென்பகூடன்மறுகிற்
பாதங்கணோவவளையிந்துநின்றபகர்வாரையாயுமவரே. (௧)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

திருமகள்வலக்கண்வாக்கின்செயிழையிடக்கண்ஞானப்
பெருமகளுதரக்கணாகப்பெற்றுவான்செல்வங்கல்வி
யருமைவீடளிப்பாள்யாவளவளுயிர்த்துணைவன்யாண
வொருமுலைமறைந்தாணியொசிந்தபூங்கொம்பினின்றாள். (௨)

கதிர்மதிமிலைந்தவேணிக்கண்ணுதல்வருணனேய
வதிர்கடல்வறப்பச்செய்தவாடலீதனையானேய
முதிர்மழையேழின்மேலுமுன்னைநான்முகிலும்போக்கி
மதுரைநான்மாடக்கூடலாக்கியவண்ணஞ்சொல்வாம். (௩)

எற்றுதெண்டிரைநீர்ச்சேர்ப்பன்றன்செயலிழுக்கிநாண
முற்றிருகண்ணுஞ்சேப்பவுடன்றெழுகோபச்செந்தீப்
பற்றிடவாகம்வெம்பிப்பரவையும்யாறும்வெந்து
வற்றிடவெகுண்டுநின்றான்மானமும்வலியுங்குன்றான். (௪)

களிர்புனன்மதுரைமூதூர்நாயகனுடற்றன்னைத்
தெளிகிலனாகிப்பின்னுஞ்செழுமுகிலேழுங்கூவிக்
குளிர்கடல்வறந்ததென்னக்குடித்தெழுந்திடித்துப்பெய்யா
வொளிவளர்மதுரைமுற்றுமொல்லெனக்கரைமினென்றான். (௫)

பொள்ளெனமேகமேழும்புகுந்துபார்தெரியமுந்நீர்ப்
பள்ளமும்வறப்பமுற்றப்பருகிமெய்கருகிமின்னித்
தெள்ளருந்திசையும்வானுஞ்செவிடுறப்பிலம்பும்பாரும்
விள்ளமால்வரைகளெட்டும்வெடிபடமேருச்சாய. (௬)

ஊழிநாள்வெடிக்குமண்டகடாகத்தினொலிபோலார்த்துப்
பாழிவானுருமுவீழப்பணாடவிமணிகள்சிந்தி
யாழிநீர்ஞாலந்தாங்குமாரவுடனெளியத்திக்கிற்
சூழிமால்யானைநின்றநிலைகெடத்துணுக்கங்கொள்ள. (௭)

வெள்ளியநீறுபூத்துமுழுவெனவீங்குகாய்போற்
றெள்ளியவாலிசிந்தத்திரண்டதிண்பலிக்குத்தூண்போ
லொள்ளியதாரைசோரவும்பர்மீன்கணங்களோடுந்
துள்ளியதிரையில்வாழுமீன்கணந்துடித்துவீழ. (௮)

ஆர்த்தெழுகொண்மூவேழுஞ்சராசரமனைத்துஞ்சூழ்ந்து
போர்த்ததுஞாலமுண்ணப்புக்கதோர்வடிவங்கொண்ட
தீர்த்தனில்விசும்பும்பாருந்திசைகளுந்தெரியாவாகப்
பார்த்தகண்ணுழையாவர்கப்பரந்திருள்கான்றதன்றே. (௯)

பைஞ்சுடரொழிக்கும்பச்சைகாரொளிபரப்புநீலம்
புஞ்சவானுடுக்களன்னவீர்த்திலம்பொன்னங்குப்பை
செஞ்சுடர்மணிகடுப்புச்சிதறுவகணவரோடும்
விஞ்சையர்மகளிருடிவெறுத்தெறிகலன்கள்போல. (௧௦)

கடியகானுதைப்பப்பெய்யுங்கடுஞ்சலவெழிலிமாடக்
கொடியனீணகரைச்சூழ்ந்துபுதைத்தலுங்கோலொன்றேச்சிப்
படியெல்லாம்புரக்குங்கோனுநகருளார்பலருஞால
முடிபுகாலிதுவேயென்னுமயங்கினாருயங்கினாரே. (௧௧)

கண்ணுதன்மூர்த்திதானேயின்னமுங்காக்குமென்றுப்
புண்ணியநகரரோடும்பொருக்கெனக்கோயிலெய்தி
விண்ணிழிவிமானவாழ்க்கைவிடையவனடிக்கீழ்வீழ்ந்தா
னண்ணலராடன்முன்னுமதித்தவைகண்டவேந்தன். (௧௨)

விடையினையாலமுண்டமிடற்றினைக் கங்கைதாங்குஞ்
சடையினைக்கூற்றைவென்றதாளினைமேருச்சாபப்
படையினையடியேந்தன்பப்பாட்டினைநீக்கியாளு
நடையினையாகியெங்கணல்லுயிர்காத்தல்வேண்டும். (௧௩)

என்னலுந்தென்னர்க்கென்றுமெய்தியவிடைக்கண்டர்க்கு
முன்னவன்முன்போனான்குமுகிலையுநோக்கியின்ன
தொன்னகரெல்லைநான்குஞ்சூழ்ந்துநான்மாடமாகி
மின்னெடுமாரியேழும்விலக்குமினெனவிடுத்தான். (௧௪)

வந்துநான்மாடமாகிவளைந்துநாற்றிசையுஞ்சூழ்ந்து
சந்துவாய்தெரியாதொன்றித்தாமொருகுடிலாய்மாடப்
பந்திகோபுரஞ்செய்குன்றங்கால்கள்போற்பரிப்பப்போர்த்த
விந்துவார்சடையோனையவெழிலிமாநகரமெங்கும். (௧௫)

அன்னநான்மாடத்துள்ளுநகருளாரமைச்சர்வேந்தன்
றன்னநாற்கருவித்தானைசராசரம்பிறவுந்தாழ்ந்து
முன்னைநாட்டினுமின்பமூழ்கிநன்கிருந்தாரூழிற்
பொன்னனாள்பாகன்றளிப்புக்கமர்ந்திருந்தாரொத்தார். (௧௬)

கழைகெழுவரையினுச்சிகவிழ்கின்றபுயல்போற்கார்சூழ்
திழைமணிமாடத்தும்பரொழிதுளியுடைந்துதுள்ளத்
தழைகடல்வறப்பவாங்கித்தன்னுடல்வறப்பப்பெய்து
மழைகளும்வெள்கிநின்றவருணனும்வெள்கினின்றான். (௧௭)

கடுங்கினன்கழிந்தவச்சகானமீதுரமான
மொடுங்கினனுள்ளத்துள்ளோருவகைவந்தெய்தப்பொற்பூத்
தடங்களாகுறுகாமுன்னேய்தணிந்துபின்றோய்ந்துபாச
மடங்கினன்மடங்காவன்பின்வள்ளலைப்பூசைசெய்வான். (௧௮)

புனிதநீறுடிக்கண்டிபூண்டுவான்கங்கையாதி
வனிதையர்பசும்பொற்கும்பவாசநீர்வடித்துநீட்டப்
பணிமலர்ச்சந்தங்கந்தமணிக்கலன்பசும்பொன்னாடை
யினையனபிறவுமீன்றுகற்பகமெடுத்துக்காட்ட. (௧௯)

ஐங்கனியமுதமைந்துவெள்ளியமமுதுபஞ்
செங்கதிர்விளக்கமின்னதேவரான்கொடுப்பச்சேற்க
ணங்கைதன்பதியைப்பூசித்தாயிரநாமங்கூறிப்
பைங்கதிர்முத்தஞ்சாத்தித்தொழுதடிபணிந்துநின்றான். (௨0)

அருச்சனையுவந்தவாதியமலனீயாதுவேண்டிற்
றுரைத்தியென்றேதநீர்க்கோனெல்லைதாழ்ந்தொன்றிறைவ
கரைத்திடவரியவித்தக்கடியவென்வயிற்றுநோய்நின்
றிரைத்தடமாடியின்னேதீர்த்திடப்பெற்றேனென்றாய். (௨௧)

மேற்படி - வேறு.

வேதமுதற்கலைகாட்சி முதலளவை விரிஞ்சன்முதல் விண்ணோர்
செய்யுஞ், சோதனையுளகப்படாச் சோதியுனைச் சோதிக்கத் துணிந்
தேனந்தோ, பேதைமையே யிடத்தென்ன குணங்கண்டென் பிணி
தீர்த்தென் பெற்றாயாசை, கோதமிலாய்குற்றமே குணமாகக் கொண்
டதுநின் குணமோவையா. (௨௨)

பொன்னகரான் காலைத்தாழ்ந் தனையருச்சித் தயர்ச்சியெய்தும்
போனவாறு, மென்னையான் விளையுதும் வலாரியிறைகொடுத்தத
மவ்விறைக்குநேர்யான், பின்னைவினை யதுமவன்சொல் வழியுன்னைச்
சோதித்தபெற்றிதானு, முன்னவனே யுன்னருளாலென்பிணிக்கு மரு
ந்தாகி முடிந்தவாறே. (௨௩)

ஆறுமதிமுடியணிந்தவருட்கடலேவயிற்றுநோயன்றிமேனாண்
மாறுபடுமிருவினையுமலவலியுங்கெடவீட்டின்வழியும்பெற்றேன்
வேறினிமந்திரமென்னைமணியென்னைமருந்தென்னைமெய்மையாகத்
தேறுமவர்க்கிப்புனிததீர்த்தமேபிணியனைத்துந்தீர்ப்பதன்றே. (௨௪)

மேற்படி வேறு.

அடியனேன்முன்னஞ்செய்தவபராதமிரண்டுநீரும்
படிபொறுத்தருள்வாயென்றுபன்முறைபரவித்தாழ்ந்து
மடிவிலாமகிழ்ச்சிபொங்கவரங்களுஞ்சிறிதுவேண்டிக்
கடியதன்னகரம்புக்கான்குடதிசைக்காவல்வேந்தன். (௨௫)

வன்றிறல்வருணன்விட்டவாரியைவிலக்கவீசன்
மின்றிகழ்சடையினின்றுநீங்கியமேகநான்குங்
குன்றுபோனிவந்துநான்குகூடமாக்கூடலாலே
அன்றுநான்மாடக்கூடலானதான்மதுரைமூதூர். (௨௬)

நான்மாடக்கூடலானபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் - ௨௮ - க்கு - திருவிருத்தம் - ௧௧௭௨.

இருபதாவது
எல்லாம்வல்லசித்தர்
திருவிளையாடற்படலம்.

கலிநிலைத்துறை.

சத்தநான்மறைப்பொருள்வரைதள்ளுநீண்முடிமேல்
வைத்தகார்கணுண்மாடமாமதுரைமேல்வருண
னுய்த்தமாரியைத்தடுத்தவாறுரைத்துமேறுயர்த்தோர்
சித்தராய்விளையாடியசெயல்சிறிதுரைப்பாம். (௧)

தேடருங்கதிர்மணிமுடிச்செழியனும்பாண்டி
நாடருந்திருவெய்திமேனல்லவீடெய்தக்
கூடலம்பதிமேவியகுணக்குறிகடந்த
வேடரங்கொருசித்தமெய்வேடராய்வருவார். (௨)

வட்டவார்சடைக்குஞ்சியும்பூணநூன்மார்பு
மிட்டநீறணிதிலகமுமிணைக்குழைதூங்க
விட்டவெள்ளைமுத்திரையுந்தோல்விரித்தபட்டிகையுஞ்
சுட்டவெண்பொடிப்பொக்கணந்தூக்கியதோளும். (௩)

துய்யவெண்பொடியழித்துமெய்சிவந்திடச்சுவடு
செய்யும்வெண்டிரட்படிகநீண்மாலையுஞ்சிவந்த
கையிலங்குகட்டங்கமுங்கண்டவர்மனஞ்சென்
றுய்யவன்புறவீக்கியவுதரபந்தனமும். (௪)

அட்டவேங்கையீருரிவைகீண்டசைத்தகோவணமு
மொட்டவீக்கியபுலியதளுங்கையுமிடத்தோ
ளிட்டயோகபட்டிகையும்பொன்னிடையிடைகட்டப்
பட்டசுஃறெலிவேத்திரப்படைக்கையும்படைத்து. (௫)

வேதகிண்கிணிசிலம்புசூழ்ந்தடிகளின்மிழற்ற
வோதரும்பதமுளரிபூமருண்மதுவொழுகப்
போதவானந்தமதுநுகர்ந்தலர்முகம்பொலியப்
பாதபங்கயமுபனிடப்பாதுகைசூட. (௬)

சிறிதுமூரலும்வெயர்வையுந்திருமுகத்தரும்பக்
குறுகியாவணஞ்சித்திரகூடநாற்சந்தி
மறுகுசூளிகையுபரிகைமாளிகைவாயி
லுறுகுசூழ்கிளைதெற்றியிவ்விடந்தொறுமடைந்து. (௭)

தெற்கிருப்பவர்போல்வடதிசையிற்சென்று
புக்கிருப்பதுங்கிழக்குளார்போலமேற்றிசையி
னக்கிருப்பதும்யாவருநாடினரறியத்
தக்கதன்றியேயிந்திரசாலமாத்தனந்தும். (௮)

சேயவெற்பினையணியதாச்செய்துமற்றணித்தாய்
மேயவெற்பினைச்சேயதாவிடுத்துமெய்முதுமூப்
பூயமக்களையிளையவராக்கியுங்குதலை
வாயமக்களைக்கழிமுதுமக்களாவகுத்தும். (௯)

ஆணைப்பெண்ணுருவாக்கியும்பெண்ணையாணுருவ
மாணக்காட்டியுமலடியைமகப்பெறச்செய்துங்
கோணக்கூன்செவிமைகண்குருடுபங்கெவருங்
காணத்தீர்த்துநாலுலோகமுங்கனகமாச்செய்தும். (௧௦)

செல்வர்தம்மனைப்பொருளெலாம்வறுமையிற்சிறந்தோ
ரில்லமெய்தவுங்கட்டவரிகலின்றித்தம்மின்
மல்லும்வெஞ்சமரிழைப்பவுங்காஞ்சிரமாத்தி
னல்லதீங்கனிபழுப்பவும்விஞ்சைகளயந்தும். (௧௧)

பருவமாறியபருவத்தில்வையைநீர்பரந்து
வருவதாக்கியுமீளவும்வறந்திடச்செய்தும்
பொருவிறீஞ்சுவையோடையும்பொய்கையுமுவர்ப்புத்
தருவவாக்கியுமுவரியின்சுவையவாத்தந்தும். (௧௨)

வீசிமாத்திரைக்கோலினைவிண்ணினட்டதன்மே
லூசிநாட்டியிட்டமேற்பெருவிரலூன்றி
வாசிலாடியுமூசிமேற்றலைகிழக்காக
மாசில்சேவடிப்போதுவான்மலர்ந்திடச்சுழன்றும். (௧௩)

சண்டவெம்பணிப்பகையெனப்பறந்துவிண்டாவிக்
கொண்டலைப்பிடித்திடியொடுங்குடித்தநீர்பிழிந்து
கண்டவர்க்கதிசயம்பெறக்காட்டியுங்காண
விண்டலத்தினிற்பண்டுபோல்விடைகொளவிடுத்தும். (௧௪)

எல்லிடைப்படும்பொருள்களையிராவெழப்பார்த்து
மல்லிடைப்படும்பொருள்களைப்பகல்வரவமைத்தும்
வல்லழற்புனலுளர்வளிவலிகெடப்பார்த்து
கல்லிபோதுகாய்கனியிலாநாள்படக்கண்டும். (கரு)

பீளைகால்விழிக்கிழவனைப்பிரம்பினல்வருடிக்
காளையாடவராக்கியக்கணவருக்கிசைய
விளைவாய்முதுகற்பினார்கருவடைந்திளமை
யாளவேத்திரம்வருடிநீறளித்தருள்செய்தும். (கசு)

அகரமாதிமூன்றுகியவாகருடணமே
புகரிலாவதிரிச்சியமஞ்சனம்பொருவில்
வகரமாதிமூன்றுகியவசியமேவாத
மிகலிலாவயத்தம்பமென்றின்னவைசெய்தும். (கஎ)

வேதனூர்மெனியார்களெக்கலைகளும்விளங்கப்
பூதிகாவினிற்சிதறியும்பூழியன்காதன்
மாதராரொரேம்பயில்புதுமணமலர்க்காவிற்
கார்நீண்டகோட்டெங்கினைக்கரும்பனைசெய்தும். (கஅ)

ஏனைவான்றருக்குலங்களைப்புட்களையிருகோட்
டானையாதிபல்விலங்கினையொன்றையொன்றாக
ஞானநோக்கினுனோக்கியுநாடியவினையோர்
மானினேக்கியராகிலோமெனவெழில்வாய்த்தும். (க௯)

நாகநாடுபொன்னாட்டுளபொருளுமக்கரு
ளாகவாக்கியுமின்னணம்விச்சைகளனந்த
மாகநாயகன்மல்மக்ஞயகன்மதுரை
யேகநாயகன்றிருவிளையாடல்செய்திருந்தான். (உ०)

சித்தயோகிகள்செய்கின்றவாடன்மேற்செலுத்தி
வைத்தகண்களுஞ்சிந்தையும்வாங்கலர்திகைத்துத்
தத்தமாள்வினைத்தொழின்மறந்திருந்தனர்தகைசான்
முத்தவேதியராதியமுதுநகர்மாக்கள். (உக)

இனையசெய்தியையுழையராலிறைமகனறிந்தா
னனையசித்தரையிங்கணந்தருகெனவிடுத்தார்
தனையகற்றினன்சித்தரைச்சார்ந்தவர்தாமும்
வினையைவென்றவராடலைவியந்துகண்டிருந்தார். (உஉ)

அமைச்சர்தங்களைவிடுத்தனனமைச்சருஞ்சித்தர்
தமைச்சரண்பணிந்தரசன்முன்வருகெனத்தவத்தோ
ரெமக்குமன்னனாலென்பயனெனமறுத்திடமண்
சுமக்குமன்னவன்றம்மவர்தொழுதனர்போனார். (உ௩)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

மன்னன்முனமைச்சர்சித்தர்மறுத்துரைமாற்றங்கூற
முன்னவனருள்பெற்றிம்மைமறுமையுமுனிந்தயோக
ரிந்நிலவேந்தர்மட்டோவிந்திரனயன்மாலேனோர்
தன்னையுமதிப்பரோவென்றிருந்தனன்றருமவேந்தன். (உ௪)

எல்லாம்வல்லசித்தர் திருவிளையாட்டுப்படலம் முற்றிற்று.

ஆகப்படலம் உக - க்கு - திருவிருத்தம் - கசுசு.

இருபத்தோராவது
கல்லானைக்குக்கரும்பருத்தியபடலம்.

கலிநிலைத்துறை.

செல்லார்பொழில்சூழ்மதுராபுரிச்சித்தரெல்லாம்
வல்லாரவராடலையாருரைசெய்யவல்லா
ரெல்லாருமியப்புறவித்தனிச்சித்தசாமி
கல்லானைதின்னக்கரும்பீந்தகதையுஞ்சொல்வாம். (க)

பின்னையமச்சம்பெருகப்பெரியோனையென்று
தென்னையெளியானெனயானிகழ்ந்திவ்விதந்த
சொன்னேனவர்க்கென்குறையென்னிற்றுறவினோனே
தன்னேரிலார்தமைக்காணத்தருவதென்று. (உ)

ஆனந்தசித்தர்தமைக்காண்பலென்றன்புகூர்ந்த
மீனந்தரித்தகொடிவேந்தன்குறிப்புநோக்கி
மோனந்தரித்தசிவயோகருமுத்திதம்பொன்
மானந்தனக்குவடமேற்றிசைவந்திருந்தார். (௩)

அருகாதசெல்வத்தவனன்றுதைத்திங்கட்டோற்றம்
வருகாலமாகமதுரேசனைவந்துவந்தித்
தருகாதரத்தாற்கழித்துள்வலமாகமீள
வருவானவன்முன்வருகாஞ்சநிவன்கண்மாக்கள். (௪)

117262

சீறிட்டவேங்கையதட்சேக்கையர்சேறியைக்கும்
பாறிட்டவேடர்யோகபட்டத்தர்கட்டங்கத்தி
லேறிட்டகையரிறும்பர்க்கிருப்பாரைநோக்கி
மாறிட்டுநீக்கியெழப்போகெனவந்துசொன்னார். (௫)

பின்னுவருதென்னர்பிரான்பெரியோரைநோக்கி
யென்காடுநும்மூருமக்கென்வரும்யாதுவேண்டு
நுங்காமமேதுநுவன்மினெனவையமொத்த
நன்றுமெக்குத்தகருள்ளுந்திரிவமப்பா. (௬)

ஆறுமிப்போதணிகான்மிரகாட்டிற்காசி
தானுமிருக்குந்தலமாகுநாதனாகி
யானதபிச்சைப்பெருவாழ்வுடையார்நமரா
காணுளும்விஞ்சைகடாஅய்த்திரிசித்தரோம்யாம். (௭)

ஆனந்தகானந்தொடுத்திங்குளவாளைவத்
தானம்பலவுந்தொழுந்தற்பரமாகிவந்தே
ஞானந்தருமிக்கரிம்மையிற்சீவன்முத்தி
மானந்தமானபரமுத்திமறுமைநல்கும். (௮)

ஈண்டுள்ளவர்க்கெம்விளையாடலைக்காட்டியிச்சை
வேண்டும்பலசித்தியுநல்குவம்வேதமாதி
யாண்டங்குமெண்ணெண்கலைஞானமும்வல்லமல்லாற்
சேண்டங்குமெல்லாப்பொருளும்வலசித்தரோம்யாம். (௯)

உன்னுனமக்குப்பெறல்வேண்டுவதொன்றுமில்லை
தென்னுவெனவுன்னகைசெய்தனர்சித்தயோகர்
மன்னுமிவர்தம்மிறுமாப்புஞ்செருக்கும்வீறு
மென்னலளவிட்டறிவேனெனவெண்ணித்தேர்வான். (௧௦)

தேரும்பொழுதோருழவன்னொருசெல்வக்கன்ன
லாருங்கமுகென்னவயிர்ப்புறக்கொண்டுதாழப்
பாருந்திசையும்புகழ்பங்கயச்செங்கைதாங்கி
நீரும்பிறையுங்கரந்தார்தமைநேர்ந்துசொல்வான். (௧௧)

வல்லாரில்வல்லேமெனவும்மமதித்தநீரிக்
கல்லானைக்கிந்தக்கரும்பையருத்தினெல்லாம்
வல்லாருநீரேமதுரைப்பெருமானுநீரே
யல்லாலெவர்நும்மனம்வேட்டதளிப்பனென்றான். (௧௨)

என்றுமுகிலைத்தளையிட்டவன்கூறக்கேட்டே
தென்னுவருதியெனப்புன்னகைசெய்துசித்தர்
நின்னுல்வருவதெமக்கேதுநினக்குநாமே
யுன்னுசைதீரத்தருகின்றதலாமலுண்டோ. (௧௩)

செல்லாவுலகத்தினுஞ்சென்றொருவிஞ்சைகற்றோர்
பல்லாருநன்குமதிக்கப்பயனெய்துவார்க
ளெல்லாமறிந்தவெமக்கொன்றிலுமாசையில்லை
கல்லானைகன்னற்கறிக்கின்றதுகாண்டியென்றார். (௧௪)

கடைக்கண்சிறிதேகுறித்தார்முன்கடாக்கல்யானை
மடைக்கண்டிறந்துமதமூன்றும்வழியவிண்வா
யிடைக்கும்படிவாய்திறந்தார்த்துப்புழைக்கைநீட்டித்
தொடைக்குன்றனுன்கைச்சுவைத்தண்டைப்பறித்ததன்றே. (௧௫)

பறித்துக்கடைவாய்வழிசாறளிபாய்ந்தொழுகக்
கறித்துக்குதட்டிப்பருகிக்கரமூசலாட
நெறித்துத்தருக்கிமுழல்சீறிக்கிமிர்ந்துநிற்ப
மறித்துக்கடைக்கண்குறித்தார்பினுமாயம்வல்லார். (௧௬)

மட்டுற்றதாரான்கழுத்திற்கண்டமாலைதன்னை
யெட்டிப்பறித்ததிகல்காஞ்சுகிமாக்கள்சீறிக்
கிட்டிக்களிற்றைப்புடைப்பான்கிளர்கோல்கொண்டோச்சச்
சிட்டத்தவர்கண்சிவந்தாலையைச்சீறிநோக்க. (௧௭)

கண்டாவளியக்களிறுண்டதுகண்கள்சேப்புக்
கொண்டானரசன்சிவயோகரிற்கோபமூளத்
தண்டாவரசன்றமருட்டறுகண்ணர்சீறி
வண்டாரிதழிமறைத்தாரையடிக்கவந்தார். (௧௮)

அப்போதிளமூரலரும்பியசித்தசாமி
கைப்போதமைத்துக்கடிந்தோர்தமைநின்மினென்ன
மைப்போதகமன்னவர்வைத்தடிபேர்க்கலாற்று
தொப்போதரியங்கிலையோவியம்போலநின்றார். (௧௯)

மத்தக்களிற்றுன்வெகுளித்தழன்மாறியன்பு
பொத்தப்புதைந்தமனத்தற்புதம்பொங்கிச்சோரச்
சித்தப்பெருமானடிமாமுடிதீண்டப்பாச
பெத்தத்தமியேன்பிழையைப்பொறுமென்றுவீழ்ந்தான். (௨௦)

அன்புக்கிரங்குங்கருணைக்கடலானவைய
கின்புற்றுவேண்டும்வரங்கேளெனத்தாழ்ந்துவேந்த
னன்புத்திரப்பேறருள்வாயெனகல்கிச்செங்கை
வன்புற்றவேழமிசைவைத்தருணட்டம்வைத்தார். (உக)

கலிவிருத்தம்.

தழைக்குநீள்கதிர்த்தன்முத்தமாலையைப்
புழைக்கைநீட்டிக்கொடுத்ததுபோதக
மழைக்கைநீட்டினன்வாங்கினனீதியிற்
பிழைக்கலாதபெருந்தகைவேந்தனே. (உஉ)

முத்தமாலிகைவாங்குமுன்முன்னின்ற
சித்தசாமிதிருவுருக்கண்டிலன்
மத்தயானைவடிவுமமேனைய
வொத்ததாகவுரவேர்ன்வெருவினன். (உங)

இந்தவாடலெமக்குயிராயின்
வந்தமில்லியருள்விளையாட்டென
முந்தைவேதமுதல்வனைமீளவும்
வந்துவந்தனைசெய்தனன்மன்னனே. (உச)

முழுதுணர்ந்தமுதல்வனின்றட்டு
விழுதையேனறியாதளந்தேனென
வழுதிறைஞ்சியுபாதமீக்துகை
தொழுதுநின்றுதுதிக்கத்தொடங்கினன். (உரு)

கொச்சகக்கலிப்பா.

வேதியாய்வேதவிளைபொருளாய்வேதத்தி
னீதியாய்நீதிநெறிகடந்தநீளொளியா
யாதியாயீறுய்கபிவாயவைகழிந்த
சோதியாய்நின்றுயென்சோதனைத்தோகின்னியல்பே. (உசு)

நின்றன்மொழிந்தமறைநின்னடிகள்வக்கித்தும்
பன்றளருசிசித்தும்பாதந்தலைசுமக்து
மூன்றுமம்வாசித்துமுன்னையறியேனென்று
சொன்றுலடியேனென்சோதனைத்தோகின்னியல்பே. (உஎ)

பெரியதினும்பெரியதுமாய்ச்சிறியதினுஞ்சிறியதுமா
யரியதினுமரியதுமாயெளியதினுமெளியதுமாய்க்
கரியதுமாய்க்காண்பானுங்காட்சியுமாயவைகடந்த
துரியமுமாய்நின்றுயென்சோதனைத்தோகின்னியல்பே. (உஅ)

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

என்றுபலமுறைபழிச்சிமனையெய்திவிக்கிரமனையீன்றுபண்டுட்டு மொ
ன்றுமுறைகோலோச்சிவிக்கிரமன்சவுன்பிசைப்பார்சுமத்திப்பாசம்
வென்றுகளைந்தருட்சித்தசுவாமிதிருவருளேக்கால்வினைபேரின்ப
மன்றமதுவீழ்வண்டிற்கலக்திருந்தானபிடேகமாறன்மன்னே. (உகூ)

கல்லானைக்குக் கரும்பருத்தியபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் உ௦-க்கு-திருவிருத்தம்-கஙஅ௯.

இருபத்திரண்டாவது

யானையெய்தபடலம்.

கலிவிருத்தம்.

கட்டவிழ்கடுக்கையர்கலானைகழைதின்ன
விட்டதிதுபஞ்சவனிடத்தமணரேவி
விட்டமதயானைவிழமேவலர்புரத்தைச்
சுட்டகணைவிட்டுயிர்தொலைத்தமுறைசொல்வாம். (க)

விக்கிரமபாண்டியன்வெலற்கரியசெங்கோ
றிக்குநிலனுந்திறைகொள்செல்வநிறைவெய்த
வக்கிரமவெங்கலியரும்பகையொதுங்கச்
சக்கரமுருட்டியிடர்சாய்த்துமுறைசெய்வான். (உ)

புத்தரமணுதியபுறக்கலையகழ்க்து
சித்தமறையாகமநெறிப்பயிர்வளர்த்து
மெய்த்தவிதிபத்தியின்விளைத்தபயன்யாருந்
துய்த்திடமனுத்தொழினடத்திவருநாளோன். (ங)

மருவிதழியாறுறையும்வானிழிவிமானத்
தருகுவடபக்கமுறவாலயமெழுப்பி
யுருவருவிரண்டினையுமொருவிவருசித்தர்
திருவுருவுகண்டுபணிசெய்தொழுகுநாளில். (ச)

செய்யகதிரோன்வழியசெம்பியனொருத்தன்
கையனவன்வென்றிபயில்காஞ்சிககருள்ளான்
பொய்யமணர்கட்டுரைபுறத்துறையினின்றான்
மையின்மதிமாறனெனும்மாறுபடகின்றான். (ரு)

முடக்கன்மதிசெஞ்சடைமுடித்துவிடையேறும்
விடக்கரதுசேவடிவிழுங்கியமனத்து
மடக்கனிகர்தென்னனெதிர்வந்துபொரலாற்றா
தடங்கலனோர்வஞ்சனையினாலடமதிர்த்தான். (சு)

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

அஞ்சனக்கவுஞ்சங்கோவத்தனந்திரிகூடங்காஞ்சி
குஞ்சரசையமேமகூடமேவிந்தமென்று
மஞ்சிவர்வரைகளெட்டுமவைகுழுமமணர்தம்மி
லெஞ்சலில்குரவர்க்கோலேறவேழெழுதிவிட்டான். (எ)

வடிவுபோதுள்ளமெல்லாமாசிருள்புதையநின்ற
வடிகண்மாரவர்வாரொண்ணாயிரவருமார்த்தார்வேய்ந்த
முடிகெழுவேந்தன்விட்டமுடங்கலைவிரித்துவாசித்
திடிகெழுகார்போற்குன்றினிழித்துவேறிடத்திற்செல்வார். (அ)

யாவருமொருங்குகூடியிருள்வழிகொள்வதேய்ப்பக்
காவல்வல்லரணஞ்சூழ்ந்தகாஞ்சிமாநகரத்தெய்திப்
பூவலர்தாரான்கோயிற்புறங்கடைபுகுந்துவேந்த
னேவலர்விடுப்பவுள்போயிறைமகனிருக்கைபுக்கார். (கூ)

மன்னவன்முடிமேற்பீலிவைத்தனராக்ககூற
வன்னவனவரைநோக்கிவசியமூன்றுறும்வல்லீர்
தென்னனையாபிசாரஞ்செய்துயிர்செகுத்தாலுங்கட்
கென்னதுநாடோதிதருவல்போயியற்றுமென்றான். (க0)

தவம்புரிந்தவமேசெய்வார்தாமதற்குடன்பட்டேகி
சிவந்ததெண்டிரைநீர்ப்பாலிகெடுங்கரைக்காதமூன்றிற்
கவர்ந்தகன்சாலைகோலியோசனையகலங்கல்லி
யவம்படுவேள்விக்குண்டங்கோணமெட்டாகக்கண்டார். (கக)

விடம்பொதிகாட்டம்பெய்துரிம்பவெவ்விராயகஞ்சி
னுடம்புடையுயிரின்கோறூன்கறிப்பொடிபூறுமென்னெ
யிடம்படவாயகாந்தவெரிக்குழிபுதையப்பெய்து
கொடும்பழிவேள்விசெய்தார்கொல்லாதவிரதம்பூண்டார். (கஉ)

மாடுளபொதும்பர்க்காவனமனசோலையுள்ள
காடுளகருகிச்சாயக்கயலுளவோடையுள்ள
கோடுளவாவியுள்ளகுளமுளவுமப்பத்தாவிச்
சேடுளமுகிலுந்தீயச்சிகையெழுகுண்டத்தீவாய். (கங)

கூற்றெழுதோற்றம்போலவஞ்சனக்குன்றம்போலக்
காற்றெழுசெவியுகால்வாய்கெளவியமருப்புமாறு
மூற்றெழுமதமுமூசலாடியவொற்றைக்கையு
மேற்றெழுவிடம்போற்சீறியெழுந்ததோர்தறுகண்யானை. (கச)

அந்தமாவேள்வித்தீயும்வியமும்மதமுஞ்சோர
வந்தமாகளிற்றைநீபோய்வழுதியைமதுரையோடுஞ்
சிந்தவேதொலைத்தியென்றுதென்றிசைச்செல்லவேவி
முந்தவேவிடுத்தமாசுமூழ்குடலமணப்பேய்கள். (கரு)

கலிவிருத்தம்.

அருளற்றிருளுடலிற்புதையமணக்கயவர்களுட்
டெருளற்றருமறையிற்படர்செயலற்றிகபரமெய்ப்
பொருளற்றவனகத்தொடுபுறமொய்த்திடமதமா
வெருளற்றிடிகுரலிற்படிவெடிபட்டிடவருமால். (கசு)

அடியின்னளவகல்பாதலமுடியின்னளவண்ட
மிடியின்னளவெழுகார்செவியெறிகாலளவகில
மடியும்மனவுளர்கான்மதமழையின்னளவுலக
முடிவின்னெழுகடல்கண்ணழலளவாமுதுவடவை. (கஎ)

கூற்றஞ்சிடவருமிக்கரிகுரலஞ்செவிமுழைவா
யேற்றஞ்செயமடங்குஞ்செவியெறிகால்வழிவிழித்தீ
யூற்றஞ்செயமடைவாயுடைத்தொழுகுங்கடமதநீர்
காற்றஞ்செயத்திசைவேழமுகம்புக்கஞ்செய்துசலியும். (கஅ)

இடிக்கும்புயல்வயிற்றைக்கிழித்திடியேற்றினையுதிக்கும்
வெடிக்கும்பிளிறொலியாற்றிசைவிழுங்கிச்செவிடாக்குந்
தடிக்கும்புழைக்கையோச்சிவின்டொபிருன்றினைச்சுற்றிப்
பிடிக்குங்கடல்கலக்குந்தவிப்பெருமத்தெனத்திரிக்கும். (ககூ)

உருவிக்குரலொலியுற்றுளசொலிவிட்டெடுபிசெவியிற்
றிருமுட்பிறையெயிறிற்றழலெறிகட்டிருளுடலிற்
றருமுக்கடவருவித்தநவடிவிற்றொனிலமேல்
வருமுக்கிரவடவைக்கனல்வரிஞெப்பதமதமா. (உ0)

தெழிப்பட்டதிக்கயத்தின்செவிதீப்பகையோடும்
வழிபட்டொருகடுங்கூற்றெனவருகுஞ்சரவரவை
விழிபட்டவர்மொழியாலுணர்விளைபட்டலர்வேம்பன்
சுழிபட்டலைபுனல்போன்மனஞ்சுழன்றுநினைந்தழன்றான். (௨௧)

மைப்போதகம்பொறையாற்றியமணிக்கோயின்முன்றுறுகாக்
கைப்போதகமுரித்தான்கழற்காற்போதகமுறத்தாழ்
திப்போதகந்தனையுந்தொலைத்தெனைக்காத்தியென்றிரந்தா
னப்போதகல்வானின்றொருதிருவாக்கெழுந்தன்றே. (௨௨)

விட்டார்வலிகெடாமொருவிற்சேவகனாகி
யொட்டார்விடவருவெங்கரியுயிர்வௌவுதுமுதனின்
மட்டார்பொழிற்கடிமாநகரயற்கீட்டிசைமருங்கோ
ரட்டாலைமண்டபஞ்செய்யெனவதுகேட்டெழுந்தரசன். (௨௩)

அகங்கவ்வியகளிப்பெய்திவந்தட்டாலைமண்டபம்பொன்
னகங்கவ்வியதெனத்தானொருநாளினிலமைத்தே
சகங்கவ்வியபுகழான்செய்ததறுகட்டளைமதமா
முகங்கவ்வியவிற்சேவகன்வருவானதுமொழிவாம். (௨௪)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

நீனிறனித்தநீந்துகிழன்மதியிரண்டுண்டென்ன
வானிறவலயச்சங்கவார்குழைநுழைவித்தம்பூம்
பானிறவெண்ணக்காழுப்பட்டசைமறைத்துத்தோற்றுங்
கானிறைகுஞ்சிச்சூட்டித்தளிமயிற்கலாபஞ்சூடி. (௨௫)

கருங்கடன்முளைத்தசெக்கர்க்கதிரெனக்குருதிக்கச்சை
மருங்குறவீக்கிச்சோரிவாயுடைவாளுங்கட்டி
யிரங்குநான்மறைகளேங்கவிருநிலத்தீண்டுதாளிற்
பொருங்கழல்வளைத்துவாளிப்புட்டிலும்புறத்துவீக்கி. (௨௬)

வீங்கியதடந்தோளிட்டவார்சிலைவில்லினோடும்
பாங்குறையிமையப்பாவைபாதியேயன்றிமுற்றும்
வாங்கியவண்ணம்போன்றுமல்லதுமாதுமோர்பா
லோங்கியவண்ணம்போன்றுமொளிநிறம்பசந்துதோன்றி. (௨௭)

காமனுங்காமுறுஞ்சீர்க்காளையாம்பருவந்தோன்றத்
தாமுலகளந்தவென்றித்தனிவிற்சேவகனாய்த்தோன்றி
மாமறைமகுடமன்னமண்டபத்தேறித்தென்னர்
கோமகனிடுக்கண்டீர்ப்பான்குஞ்சரவரவுநோக்கா. (௨௮)

அஞ்சுகூவிளிச்சேய்த்தென்னவதுவரவறனிலாதான்
வெஞ்சினக்கோலினொன்றுண்மிதித்துமெய்குழையவாங்கிச்
செஞ்சிலைகோணப்பூட்டித்திருவிரன்றெறித்துத்தாக்கிக்
குஞ்சரமெட்டுமஞ்சக்கோளரிமுழக்கங்காட்டி. (௨௯)

இங்கிதநெடுங்கோதண்டமிடக்கையிலெடுத்துக்கூர
சிங்கவெங்கணைதொட்டாகந்திருகமுன்னிடத்தாள்செல்ல
வங்குலியிரண்டாலையன்செவியுறவலித்துவிட்டான்
மங்குலின்முழக்கும்வேழமத்தகங்கிழித்ததன்றே. (௩௦)

கொண்டலினலறிச்சிறிவீழ்ந்ததுகொடியவேழம்
பிண்டதுபாருஞ்சேடன்சென்னியும்பிளந்ததண்டம்
விண்டதுபோலுமென்னத்துங்கெனவெருவிப்போன
பண்டையதருக்கும்வீறும்படைத்தனதிசைமால்யானை. (௩௧)

புதைபடக்கரித்தோல்போர்த்தபுண்ணியமூர்த்திதானா
லுதைபடக்கிடந்தகூற்றமொத்ததுமத்தயானை
சுதைபடமதிக்கோவேந்தன்றொழுகுலச்சிறுவனேத்தான்
பதைபடுமமணர்காலட்டொனப்படரிற்பட்டார். (௩௨)

இருள்கிடந்தனையதாளையிட்டசிந்துரக்கார்மால
விருண்முகத்தொதுங்கிச்செல்லுமிரவிசெங்கிரணம்போன்ற
திருண்முழுதுண்ணக்காலையெழுகதிர்வட்டமன்ன
திருளினைமறைந்தகண்டனெய்தவாப்பெய்யுஞ்செந்நீர். (௩௩)

பொய்யருமனத்தார்தேற்றும்புன்னெறியொழுக்கம்பூண்ட
வெய்யகோன்கொடுங்கோறன்னைவென்மருப்பாகத்தாங்கி
மையன்மாவடிவங்கொண்டுவந்தவெங்கலியைத்தென்னன்
செய்யகோலையன்சிங்கவாளியாய்ச்சிதைத்ததன்றே. (௩௪)

உருமுவீழ்ப்புண்டகுன்றினும்பன்மாவம்புதொட்ட
பெருமுழைவாயும்வாயும்பெருகினவருவிச்சோரி
கருமுகின்மானச்சேனக்கழுகுகள்சூழ்ந்தமொய்த்த
திருமணித்தடந்தோள்வீங்கத்தென்னவனுவகைசூழ்ந்தான். (௩௫)

ஆனையின்புண்ணீருண்ணவடுத்தகாருடற்பேயென்னச்
சேனையின்செல்லப்போந்ததிணியிருளமணர்தம்மை
மீனவன்கண்டுசீறவேந்தவன்குறிப்பினின்று
மானவெஞ்சினவேன்மன்னர்வல்லைபோய்முடுக்கலுற்றார். (௩௬)

எடுத்தனர்கையிற்றண்டமெறிந்தனர்மறிந்தாரும்போய்த்
தடுத்தனர்கரகத்துளார்த்தகர்த்தனர்பீலியோடுந்
தொடுத்தனருடுத்தபாயைத்துணிபடக்கிழித்துக்கால்வாய்
விடுத்தனர்மானம்போக்கிவிட்டனர்சில்லோர்தம்மை. (௩௭)

எறியுண்டுசெய்தமாயமிழப்புண்டுசேனையோடு
முறியுண்டொடுக்கம்பாவமூழ்குண்டுமொழ்கிச்சாம்பிப்
பறியுண்டதலையர்யாரும்பழிப்புண்டுபோயுந்தாமு
முறியுண்டகரகத்தோடுமொதுக்குண்டுபதுங்கிப்போனார். (௩௮)

மாதங்கத்தடித்தட்டாலைமண்டபத்திருந்தவீரன்
பாதங்கள்கையாற்பற்றிப்பாண்டியனிரந்துவேண்டிப்
போதங்கள்கடந்தாயென்றம்பொலியலிங்கிருத்தியென்ன
வேதங்கட்கருத்தஞ்சொன்னவேதியனதற்குநேர்ந்தான். (௩௯)

பின்னுஞ்சில்வரங்கணல்கப்பெற்றுகான்மாடக்கூடன்
மன்னுஞ்சின்மயனைவழுத்தித்துவருகான்காம
னென்னுஞ்சின்மலர்ப்பூந்தண்டாரிராசசேகரனைப்பெற்று
மின்னுஞ்சில்லியந்தேர்வேந்தன்மேதினிபுரக்குமன்றே. (௪0)

வம்புளாய்மலர்த்தவாரான்வரவிடுமத்தக்குன்றிற்
சிம்புளாய்வடிவங்கொண்டசேவகனைவல்செய்த
வம்புளாய்த்தூணம்வின்னவன்றவதரித்தவாபோற்
செம்புளாய்க்கொடியகாரசிங்கமாயிருந்ததன்றே. (௪௧)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

உலகெலாமழித்து மீளவுண்டாக்கு முருத்திரன் வீரசத்தியினிற், சிலதரித்திறவா வவுணன்மார்பிடந்த சிங்கராயகனை யங்கெய்தி, யல கின்மா தவஞ்செய்து ரோமசன் றன்பே ரதியவோர்தீர்த்தமுண்டா க்கி, யிலகுபேறடைந்தான் பிரகலாதனுநோற் றீயிலாப்பெருவர ம டைந்தான். (௪௨)

யானையெய்தபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் - ௧௧ - க்கு - திருவிருத்தம் - ௧௪௨௭.

இருபத்துமூன்றாவது
விருத்தகுமாரபாலரானபடலம்

கலிநிலைத்துறை.

தழையுலாங்கையரேவியதந்திமேல்விடைமே
லழகர்சேவகஞ்செய்தவாறறைந்தனமவரே
கிழவனுமிப்பின்காளையாய்க்கிஞ்சுகச்செவ்வாய்க்
குழவியாய்விளையாடியகொள்கையைப்பகர்வாம். (௧)

தென்னன்விக்கிரமன்புயத்திருநிலச்செல்வி
மன்னிவாழுநாண்மதுரையின்மறையவனொருவ
னன்னவன்விருபாக்கனுமவன்குடிவாழ்க்கை
மின்னனாள்வடமீனனாள்பெயர்சுபவிரதை. (௨)

அனையர்தங்களுக்கரும்பெறன்மகவின்றியனைத்த
புனிதநல்லறஞ்செய்தொழிலொழுக்கமும்பூண்டு
கனையவார்குழலன்னையொருவர்பானன்னி
யினியமாதவஞ்செய்தொருபெண்மகவின்றார். (௩)

பேருங்கௌரியென்றழைத்தனர்பிராயமோரைந்திற்
சாருங்கௌரியும்பிறவிநோய்தணிப்பதற்குறுதி
தேருஞ்சிந்தையாடந்தையைவணங்கியிச்சென்ன
மீருந்தெய்வதமந்திரமியாதெனவினவ. (௪)

அந்தணனுமதிசயித்தரும்பெறன்மகட்குச்
சிந்தையார்வமோடிறைவிதன்மனுவினைச்செப்பத்
தந்தைபாலதுதெளிந்துநாத்தழும்புறப்பயின்றுஞ்
முந்தைநாளருந்தவக்குறைமுடித்திடவந்தாள். (௫)

தற்கத்தன்றவக்கொழுந்திருக்கிசையமானை
மாதவத்தனுபாதியாச்சிரமத்தில்வழங்கும்
வேதவித்துமாய்மாணியுண்மேம்படிவானைப்
போதுபோதுமென்றனத்தொடுபுகன்றுகொண்டிருந்தாள். (௬)

பருவகாலிரண்டாகமெற்கடிமணப்பருவம்
வருவதாகவங்கொருகல்லைவைப்பதுவப்
பிரமசாரியாய்க்கடைதொறும்பிச்சைபுக்குண்பா
னொருவன்வந்தனன்பலிக்கவணயற்புலத்துள்ளான். (௭)

பிச்சைவேண்டி னவற்குத்தன்பெண்ணினைக்கொடுப்பா
னிச்சைகூர்ந்தருந்தவத்தினல்வருத்தியின்றெடுத்த
விச்சைவேதியன் மனையொடுஞற்றமும்வினவா
தச்சமின்றிநீகொடுத்தவனங்கையிற்பெய்தான். (௮)

கலிக்குணபுரச்சிறடிக்கன்னிதன்விதியும்
பலிக்குவந்தவனல்வினைப்பகுதியுந்தரப்ப
வொலிக்குமந்திரச்சிரகநீராழுக்கினன்முந்திச்
சலிக்குமன்னையுந்தமர்களுங்கேட்டனந்தளர்வார். (௯)

குலனுமோர்கிலன்கோத்திரமோர்கிலன்குடிமை
நலனுமோர்கிலனொழுக்கமுங்கல்வியுநண்ணுந்
தலனுமோர்கிலன்கன்னியைத்தத்தஞ்செய்தானெப்
புலனுமோர்ந்தவன்விதிவழிமதியெனப்புலந்தார். (௧௦)

மற்றவன்குடிகோத்திரஞ்சூத்திரமற்று
முற்றறிந்தநம்மரபினுக்கொக்குமான்மாயோன்
சொற்றதக்கிரவயினவத்தொடக்குஞ்டுதிரியுங்
குற்றமொன்றின்மறுப்பதென்கொடுப்பதென்றிசைத்தார். (௧௧)

தாயுமொக்கலுமொத்தபின்றுதையும்வேதத்
தாயுமெண்மணத்தாதியாமறநிலையாற்றுந்
றேயுநுண்ணிடைக்கன்னியைச்செம்பொனாற்புதைத்துக்
காயுமாரழன்முன்னசக்காவைக்கொடுத்தான். (௧௨)

தெய்வமங்கலவரிசைகள்செய்தீரன்பயந்த
மௌவலங்குழற்கன்னியைமணமகனேடுத்
கௌவையம்புனல்வேலிசூழ்கடிநகர்விடுத்தான்
சைவமங்கலவேதியத்தாபதனிப்பால். (௧௩)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

இல்லார்க்குக்கிழியீடுகோட்பட்டாலெனப்பல்லாரில்லந்தோறுஞ்
செல்லாவின்றிரந்துண்டுதிரிந்தமகன்மணமகனுய்ச்செல்வநல்க
வல்லாளைமணந்துவருவான்போற்றம்மனைபுகுதவன்கட்சிலப்
பொல்லாராய்வெணவந்துப்புக்கொழுகுதாய்தந்தைபொறுர்களாகி.

வந்தமணவாட்டிசிவசிந்தனையுஞ்சைவதவவடிவுநோக்கி
வெந்தவுடல்போன்மனமும்வெந்தவளைவேறுதக்கிவேண்டாராகி
நிந்தனைசெய்தொழுகுவாரவளையொருகாணித்துநீக்கிவேற்றூர்த் [ர்.
தந்தமர்மங்கலங்காண்பார்தனியேவைத்தகம்பூட்டிந்தாங்கள்போனு

உண்மாசுகழுவுவதாநீறென்றேயுபசிடதமுரைப்பக்கேட்டு
மண்மாசுபடப்பூசும்வடிவுடையாரகன்றதற்பின்மனையில்வைகும்
பெண்மாசுகழியவொருசிவனடியார்தமைக்காணப்பெருமலின்றென்
கண்மூசுபடிவதெனக்கனிந்தொழுகுதலையன்பாற்கவலைகூர்வாள். ()

சிவனடியார்க் கன்பிலாச் சிந்தையே யிரும்பேவல் செய்தாகா ளு, மவனடியார் திறந்தொழுகா வாக்கையே மாஞ்செவிகண் ணதி யைந்தும், பவனடியா ரிடைச்செலுத்தாப் படிவமே பாவைமறை யரவுஞ்சைவ, தவநெறியல் லாநெறியே பவநெறியென் றனியளா யீத் தளர்வாள்பின்னும். (௧௭)

எனைத்துயிர்க்கு முறுதியிக பரமென்ப வவைகொடுப்பா னெல் லாந்தானு, யனைத்துயிர்க்கு முயிராகு மரனென்ப வவனறிவார்க்கங் கம்வாக்கு, மனத்தாறுமெய்ப் பத்திவழி வருமென்ப வப்பத்தி வழி நிற்பார்க்கு, வினைத்துயர்தீர்த் திடவெடுத்த வடிவென்ப தவனடி யார் வேடமன்றோ. (௧௮)

என்னவிருந் தலம்வருவா ளிருக்குமிடத் தவனுள்ளத் தெண் ணியாங்கே, தென்னவனு யிருந்தரச செய்தபிரா னவட்கருளுஞ் செ வ்விநோக்கிக், கன்னமுரங் கரஞ்சிரந்தோள் கண்டமுங்கண் டிகை பூண்டு கயிற்றம்போற், பன்னெடுகோட் பழுதியதோர் தனிப்பெரிய புத்தகமும் பக்கஞ்சேர்த்தி. (௧௯)

கரிந்தநீள்கயன் முள்ளினரைய் மூதுதிரைகவுளுங் கனக்குங் கு ஞ்சுஞ், சரிந்தகோ வணவுடையுந் தலைப்பனிப்பு முத்தரியந் தாங்கு தோளும், புரிந்தநூல் கிடந்தலையும் புண்ணியநீ றணிமார்பும் பொ லியநீழல், விரிந்ததோர் தனிக்குடையுந் தண்டூன்றிக் கவிழ்ந்தசையு மெய்யுந்தாங்கி. (௨௦)

ஒருத்தராயுண்டிபல பகல்கழிந்த பசியினர்போ லுயங்கிவாடி, விருத்தவே தியராய்வந் தகம்புகுதக் கண்டெழுந்து மீதாசன்பின், கருத்தளாய்த் தவிசிருத்திக் கைதொழுது சிவனையிந்த காணவெ ன்ன, வருத்தமா தவமுடையே னெனமுனிவர் பசித்துன்பால் வந் தேமென்றார். (௨௧)

இற்பூட்டிப்போயினரெமரங்களனக்கெளரியியம்பமேரு
விற்பூட்டிப்புரம்பொடித்தவேதியர்நின்கைதொட்டுவிடுமன்யாத்த
கொற்பூட்டுவிடுத்திறந்துகடிதடிசில்சமைத்தியெனக்குமரிதானி
றற்பூட்டுமடவரலுமவ்வாறேயட்டில்புகுந்தடிசிலாக்கி. (௨௨)

தையன்மாதவக்கொழுந்துபுறம்போந்துசிரகநீர்தளிர்க்கைதாங்கி
யையனேயமுதுசெயவெழுந்தருளுமெனவெழுந்தவடிகள்பாதச்
செய்யதாமரைவிளக்கியந்நீர்தன்சென்னியின்மேற்றெளித்துப்பாச
மையன்மாசிருள்கழுவியகம்புகுவித்தாசனமேல்வைத்துப்பின்னர்.()

நகைமலரிட் டருச்சித்து நல்லபரிகலந்திருத்தி நறுவீமுல்லை,
முகையனைய பாலடிசில் வெள்ளிமலை யெனப்பருப்பு முதலிற்செம்
பொற், சிகரமெனப் பல்வேறு கருனைபுறந் தழீஇக்கிடந்த சிறுகுன்
றிட்ட, வகையெனநெய் யருவியெனப் படைத்தனைய சிற்றுண்டி
வகையும்பெய்து. (௨௪)

செய்யவாயிடையிடையேமுகமலரையின்னமுதுசெவியிலூட்டத்
தையலாள்வளைக்கையறுசுவையமுதுவாயூட்டத்தளர்ந்தயாக்கை
யையர்தாந்திருவமுதுசெய்தமுதுண்டவரொளமூப்பகன்றுபூவிற்
கையதேமலர்வாளிக்காளைவடிவாயிருந்தார்கன்னிகாண. (௨௫)

பூசியவெண் ணீறுபோய்க் கலவையாய்க் கண்டிகைபோய்ப்
பொன்செய்பூணுங், காசணிபொற் குண்டலமுங் கடகமாய் மூப்புப்
போய்க் காளையான, தேசுருவங் கண்டுகடு நடுங்கிவளைக் கரமெரித்
துத் திகைத்து வேர்த்துக், கூசியொரு புறத்தொதுங்கி நின்றாளக்
கற்புமலர்க் கொம்பரன்னாள். (௨௬)

ஆனபொழு தருங்கடிநன் மணங்குறித்து மனையிற்சேர்ந் தயலார்
ர்புக்க, தேனொழுகு துழாயலங்கற் றீர்த்தனுக்கன் புடையார்போற்
றிரியும்வஞ்ச, மானமுடை யார்மீண்டு மனைபுகுதும் பதினாறு வயதி
ன்மேய, பானன்மணி கண்டனுதற் காப்பணிந்தோர் பசுங்குழவிப்
படிவங் கொண்டான். (௨௭)

எழுதரியமறைச்சிலம்பு கிடந்துபுறத் தலம்பவன்ப ரிதயமென்
னுஞ், செழுமலரோ டையின்மலர்ந்து சிவானந்தத் தேன்றதும்பு
தெய்வக்கஞ்சத், தொழுதகுசிற் றடிப்பெரிய விரல்சுவைத்து மைக்
கணீர் துளும்பவாய்விட், டழுதனையா டையிற்கிடந்தா னனைத்து
யிரு மீன்றுகாத் தாளுமப்பன். (௨௮)

தாய்விட்டுப் போனதொரு தனிக்குழவி யெனக்கலங்கித் தாங்
கித்தேடி, யாய்விட்டுப்பிரமனழ மறைகளழ வன்புடையா ளன்பிற்
பட்டு, வாய்விட்டுக் கிடந்தழுத மகவினைக்கண் டனங்கனையாண்
மாமியென்னுங், காய்விட்டு மதக்கொடியா ளிம்மகவே தெனக்கேட்
டாள் கௌரிதன்னை. (௨௯)

சத்தனயன் றனக்கரிய நாயகனுக்கன்புடையா ணவில்வாடேவ,
தத்தனயத் தருமனைவி யொடுபோந்து சிறுபோது தையலாயீண்,
டித்தநயன் றனைப்பார்த்துக் கோடியென வைத்தகன்று னென்று
மூன்னைஞ், சித்தநய னங்கலங்கச் சிறிம்மை வாட்டிதன்மேற் செற்றங்
கொண்டாள். (௩௦)

என்பூண்டிகோட்டிற்பொடியாமேருத்திரனுக்கிடையறுத
வன்பூண்டானமகவுக்கன்புடையாய்நீயுமெமக்காகாயென்று [ன்
துன்பூண்டயர்வாளைமகவையுங்கொண்டகத்தைவிடத்துரந்தினார்க
வன்பூண்டொழுகுவைவைவம்பூண்டுபொறையிரக்கமானநீத்தார்.

தாயிலாப் பிள்ளைமுகந் தனைநோக்கித் தெருவினிடைத் தனர்
வாளுள்ளங், கோயிலாக் கொண்டுறையுங் கூடலுயகனைமனக் குறிப்
பிற்கண்டு, வேயிலாக் கியதடந்தோட் கௌரிதிரு மந்திரத்தை விள
ம்பலோடுஞ், சேயிலாய்க் கிடந்தழுத குழவிவிசும் பிடைவிடைமேற்
றெரியக் கண்டாள். (௩௨)

மழவுருநீத்தடலேற்றின்வருவார்தம்மிடத்தணங்கின் மறுவையோதி
பழகியபார்ப்பனமகளைப்பார்ப்பதியின்வடிவாக்கிப்பலருங்கண்டு [ப்
தொழவிண்டமேலேற்றிவிசும்பாறுகமலர்மாரிசுரர்கடூற்ற
வழகொழுந்தருளினார்களினுங்கியதிசயித்தாரவனிமாக்கள். (௩௩)

விருத்தகுமார பாலரானபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் - ௨௩-க்கு - திருவிருத்தம் - ௯௪௰.

இருபத்துநான்காவது

மாறியாடினபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

திருத்தராய்மதுராபுரிமேவியசித்தராகியசெல்வர்
விருத்தராயிளையவருமாய்மழவுமாய்வேடங்கொண்டடலேற்றி
னொருத்தராய்விளையாடியவாடலையுரைத்தனமினிமன்று
ணிருத்தராயவர்மாறிநின்றாடியநிலைசிறிதுரைசெய்வாம். (௧)

வேந்தன்மீனவன்கொடியவனுகியவிக்கிரமன்றன்ரு
ளேந்துமண்பொறையிராசசேகரன்புயத்திறக்கியைத்தருகாடன்
பூந்தண்மாமலர்வேதியன்மாதவன்புரத்தின்மேற்பொலிந்தோங்குஞ்
சாந்தநீறெனச்சண்ணித்தபுண்ணியத்தனிமுதனகர்சார்ந்தான். (௨)

கண்ணகன்புவியிராசசேகரன்பொதுக்கடிந்துசெங்கோலோச்சி
வண்ணவெண்குடைநிழற்றுவாருறனந்தவடிவமாய்த்தனிமன்று
ளண்ணலாடியதிருநடத்தன்பினுலாடனூலொழித்தேனை
யெண்ணுமொன்பத்துமுக்கலையுங்கற்றிறைமுறைசெய்நாளில். (௩)

சிலம்பிவாயினூலிழைத்திடப்பெற்றிச்செங்கண்மாமொழுவைகு
மலம்புதெண்டிரைப்பொன்னியத்தண்டுறையானைக்காவிறைக்கன்பு
கலந்தசிந்தையான்மூவிருபத்துநாற்கலைகளும்பயின்றுள்ள
மலர்ந்தவன்கரிகாற்பெருவளத்தவன்வையகம்புரக்கின்றான். (௪)

பொன்னிநாடவன்வாயிலுள்ளாரொருபுலவன்வந்தலர்வேம்பின்
கன்னிநாடனைக்கண்டுமுன்பரவுவான்கலைகழற்கரிகாலெம்
மன்னவற்கறுபத்துநாற்கலைகளும்வரும்வராதுனக்கொன்று
தென்னரேறனையாயதுபாதநூனெறிநிலையெனச்சொன்னான். (௫)

கேட்டமீனவன்மறுபுலவிருசையன்கிளத்தசொல்விகன்மான
மூட்டவாகுலமூழ்கியமனத்தனாய்முதுமறைச்சிரமன்று
ளாட்டமூன்றுடைநாயகனாடலைகாணுமாடுதற்குள்ளம்
வேட்டதேகொலாயிதுவுமெம்பிரானருள்விதியெனவதுகற்பான். ()

எழுசீரடியாசிரிய விருத்தம்.

ஆடனூல் வரம்பு கண்டவராகி யவ்வழியாடலும் பயின்ற, நாடகநடைதேர் புலவரைத் தருவி கண்ணியவவர்க்கெலா மகிழ்ச்சி, வீடருஞ் சிறப்பா லறுவையும் பூணும் வெறுக்கையும் வெறுத்திடக் கொடுத்துப், பாடல்வண்டி யந்துக தாரினன் பரதப்பனுவலுங் கசடறப்பயில்வான். (௭)

பாவமோடராகந்தாளமிம்மூன்றும்பகர்த்திடுமுறையினுற்பரத
மாவையினங்கமுபாங்கமேபிரத்தியாங்கமேயலர்முகராக
மோவருசேர்சால்கரப்பிரசாரமுவகைமயில்சிரக்கரகருமக்
தாவறுகரசேத்திரங்கரணந்தானகமேசத்தசாரி. (௮)

விண்டிடாத்தேசிசாரியேகியாயம்விருத்தியேபிரவிசாரம்பூ
மண்டலமுடனுகாசமண்டலமேமாசில்சத்தக்கரணஞ்சேர்
கண்டவுற்புலிதகரணமேயங்ககாரமேயிரேசிதமென்னக்
கொண்டகாலைத்துபேதமுங்கற்றுக்கோதறப்பயின்றபினவற்றுள். ()

வருத்தமின்மனோபாவாதியாமெட்டுவகைசிருத்தங்களிற்சாரி
நிருத்தமாகியதாண்டவமகமார்க்கநிகழ்த்திடுந்தேசியேவடுகே
யருத்தமாகியசிங்களமெனமூன்றுமதனிலையாறுமூவிரண்டு
திருத்தமாம்பதமுந்திகழிரேகாதிசெப்பியவங்கமீரெட்டும். (௧0)

நால்வகைத்தாகுங்கரணமுமேலோர்காட்டியவிருவகைக்கரமுந்
நால்வகைபுரிகைமுதற்பதிறுறுங்கானமினையாதியாமிரண்டு
பாலதுமடிப்புவகைமெழுநான்கும்பழிப்பறுசத்தசாரிபெறு
மேலுறுபூசாரிகள்பதினறுமித்துணைக்ககனசாரிகளும். (௧௧)

எற்றநிக்கிராந்தமாதியாமுப்பத்திருவகைத்தேசிசாரிகளுங்
காற்றினுக்கடுந்தேர்ச்சக்கரமுதலாங்ககனசாரிகைகளேழுந்துஞ்
சாற்றுவித்துவற்பிராந்தமாதியவாஞ்சாரிபத்தொன்பதுமாகப் [ன்.
போற்றிவையனைத்துமுட்டபட்டபுடத்திலக்கணமுதற்பொருள்க
ளாசவாத்தியமுன்பொருண்முதற்களாசமாதியாம்பாடபேதங்கள்
பேசியபதினறென்பதும்படகபேதமொன்றொழிந்தகாலைந்து
மாசறுமனகமாதியாம்பாடவகைகளுமேழுமற்றதனிற் [ம்.
பூசல்வார்த்திகத்தொட்டவகைச்சசபுடாதியாந்தாளமாத்திரையு
ளக்கமாத்திரையின்கதிகளுஞ்சொல்லுங்கிதமும்பாடுமெழுத்
வளர்தருமவிபதாதிதேத்தின்வருத்தகட்டளையெழுநான்கு [ம்
மனந்திசேர்வியாதிகட்டளையேழைந்துகன்கமைந்துபாவாதி
விளம்பியமூன்றுகலப்புமீறுகவினைத்திக்கூத்தகமார்க்கம். (௧௪)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

உரைத்தவிக்கூத்துக்கற்கும்போதுதன்னுடம்பிற்சால
வருத்தமேசெய்திபித்தவருத்தநான்மறையுந்தேறு
வருத்தமாயவிவாய்வெள்ளியம்பலத்தாடுகின்ற
திருத்தனர்தமக்குமன்றேயென்பதுநினைவிற்கொண்டான். (௧௫)

கரியதாமரைக்கண்ணனுங்கமலநான்முகனுங்காண்டற்
கரியதாளொன்றேசோவாற்றநாணிற்பதற்கோ
வரியதாயிதனைக்கற்றுவருத்தமுற்றோர்ந்துமீது
தெரியநானிருப்பதேயோவறனெனச்சிந்தைநோவான். (௧௬)

வடிப்படுபிறவிப்பௌவவரம்புகாண்கின்றகாள்வந்
தடிப்பவர்யாவரேனுமவர்க்கெலாம்போகம்வீடு
கொடுப்பவர்செய்யுமிக்கூத்தையெப்படிகாஞ்சென்று
தடிப்பதுதகாதென்றேனும்வருத்துமேசரணமென்று. (கஎ)

இதற்கிதுதுணிவென்றுன்னியெழுந்துபோய்ச்சிவனிராவிற்
கதக்களிற்றெருத்தவேந்துங்கதிர்மணிக்குடுமிக்கோயின்
மதக்கரியுரியினாற்குவரம்பறச்சிறந்தபூசை
விதப்படயர்மகான்கும்விதிவழியியற்றல்செய்யா. (கஅ)

விண்டகமலர்த்தாளைத்திவெள்ளியம்பலத்துளன்பர்
தொண்டகமலரகின்றசோதிமெய்ஞ்ஞானக்கூத்தைக்
கண்டகமகிழ்ந்துதாழ்ந்துகட்புனல்சோரச்செங்கை
முண்டகமுடிமேலேற்றிமுகிழ்த்துநின்றிதனைவேண்டும். (கக)

நின்றதாளெடுத்துவீசியெடுத்ததாணிலமீதூன்றி
யின்றுநான்காணமாறியாடியென்வருத்தமெல்லாம்
மொன்றுமாசெய்தியன்றேற்பொன்றுவலென்றுவன்பின்
குன்றனுன்சுரிகைவாள்மேற்குப்புறவீழ்வேனென்று. (உo)

காட்டினன்குறித்தப்பாயகண்ணுமுன்விடத்தானூன்றி
நீட்டினன்வலத்தாள்வீசிநிருமலன்மாறியாடிக்
காட்டினன்கன்னிநாடன்கவலையும்பாசமூன்றும்
வீட்டினன்பரமானந்தவெள்ளையுள்வீட்டினானே. (உக)

விளைகள்வாய்வீழ்ந்தவண்டின்மெய்யறிவின்பமென்னு
மளவிலாமுந்நீர்வெள்ளத்தாழ்ந்தவனெழுந்துபின்னு
முளமும்வாசகமுமெய்யுமுடையவனதுவேயாகப்
பளகிலாவன்புதானேபடிவமாய்ப்பழிச்சலுற்றான். (உஉ)

கலிவிருத்தம்.

பெரியாய்சரணஞ்சிறியாய்சரணங்
கரியாகியவங்கணனேசரண
மரியாவெளியாயடிமாறிடடம்
புரிவாய்சரணம்புனிதாசரணம். (உங)

நதியாடியசெஞ்சடையாய்கைவெண்
மதியாய்மதியாதவர்தம்மதியிற்
பதியாய்பதினெண்கணமும்பரவுந்
துதியாய்சரணஞ்சுடரேசரணம். (உச)

பழையாய்புதியாய்சரணம்பணிலக்
குழையாய்சரணங்கொடுவெண்மழுவா
ளுழையாய்சரணம்முருகாதவர்பால்
விழையாய்சரணம்விகிர்தாசரணம். (உரு)

இருளாய்வெளியாய்சரணம்மெனையும்
பொருளாகநினைந்துபுரந்தரன்மா
றெருளாதடங்கெரிவித்தெனையா
ளருளாய்சரணம்மழகாசரணம். (உசு)

அயனத்தனெனப்படுமாடரவச்
சயனத்தவனைத்தருநத்துவகால்
வயனத்தவவானவர்வானவசே
னயனத்தவனாயகனேசரணம். (உஎ)

கதவெங்கரியின்னுரியாய்சரண
முதலந்தமிலாமுதலேசரணென்
றதிர்பைங்கழனூபுரவண்டலறும்
பதபங்கயமுன்புபணிந்தரசன். (உஅ)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

என்றுமிப்படியேயிந்தத்திருக்கயம்யாருங்காண
நின்றருள்செய்யவேண்டுகிருமலமானவெள்ளி
மன்றவவடிவேன்வேண்டும்வரமிதுவென்றுதாழ்ந்தா
னன்றுதொட்டின்றுமெங்கோனக்கடிநிலையாய்நின்றான். (உகூ)

மாறியாடினபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் - கக - க்கு - திருவிருத்தம் - சசஅக.

இருபத்தைந்தாவது

பழியஞ்சினபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

ஈறிலான்செழியன்புக்கெளியவனுமின்றன்
மாறியாடியகூத்தென்சொல்வரம்பிலதாமெக்கலை
யாறுசேர்சடையான்றனேரறும்பழியஞ்சித்தென்னன்
றேறலாமனத்தைத்தேற்றுந்திருவிளையாடல்சொல்வாம். (க)

இனையநாட்சிறிதுசெல்லவிராசசேகரன்றன்காதற்
றனையனுங்குலோத்துங்கற்குத்தன்னரசிருக்கைநல்கி
வினையெலாம்வென்றஞானவெள்ளியம்பலத்துளாடுங்
கனைகழனிழலிற்பின்னிக்கலந்துபேரின்பமுற்றான். (௨)

குரவன்செங்கோல்கைக்கொண்டகுலோத்துங்கவழுதிசெங்க
ணரவங்கம்பூண்டகூடலாதிநாயகனைநித்தம்
பரவன்பின்வழிபாடாற்றப்பத்திமைநியமம்பூண்டா
னிரவஞ்சுங்கதுப்பினல்லாரீராயிரவருள்ளான். (௩)

கொச்சகக்கலிப்பா.

அப்பதினாயிரவர்க்குமொவ்வொருத்திக்கவ்வாறு
யொப்பரியவறுபதினாயிரங்குமரருளரவருட்
செப்பரியவல்லாண்மைச்சிங்கவிளவேறனையான்
வைப்பனையான்முதற்பிறந்தமைந்தன்பேரனந்தகுணன். (௪)

கலைபயின்றபரிநெடுந்தேர்கரிபயின்றபலகைவாள்
சிலைபயின்றவருகுமரர்திறநோக்கிமகிழ்வேந்த
னலைபயின்றகடலாடைநிலமகளையடலணிதோண்
மலைபயின்றருளிற்றாங்கமகிழ்வித்துவாழுநாள். (௫)

செய்யேந்துதிருப்புத்தூர்நின்றுமொருசெழுமறையோன்
பையேந்துமரவல்குன்மனைவியொடும்பானல்வாய்க்
கையேந்துகுழவியொடுங்கடம்புகுந்துமாதுலன்பான்
மையேந்துபொழின்மதுரைநகர்நோக்கிவருகின்றான். (௬)

வருவானுண்ணீர்வேட்டுவருவாளைவழிநிற்கும்
பெருவானந்தடவுமொருபேராலினீழலின்கீ
ழொருவாதயசுங்குழவியுடனிருத்திநீர்தேடித்
தருவான்போய்மீண்டுமனையிருக்குமிடந்தலைப்படுமுன். (௭)

இலைத்தலையபழுமரத்தின்மிசைமுன்னாளெய்ததொரு
கொலைத்தலையகூர்வாளிகோப்புண்டிடந்தநகர்
லலைத்தலையவீழ்ந்தும்மைவினையுலப்பவாங்கிருந்த
வலைத்தலையமானேக்கிவயிறுருவத்தைத்தன்றால். (௮)

அவ்வாறவ்வணங்கனையாளுயிரிழந்தாளவ்வேலைச்
செவ்வாளியேறிட்டசிலையுடையரொருவேடன்
வெவ்வாளியேறனையான்வெயிற்கொதுங்குநிழறேடி
யவ்வாலநிழலெய்தியயனின்றானிளைப்பாற. (௯)

தண்ணீர்க்குப்போயாவிதலைப்பட்டமறையவனு
முண்ணீர்கைக்கொண்டுமீண்டொருங்கிருந்தகுழவியொடும்
புண்ணீர்வெள்ளத்துக்காறாழ்ந்துயிரைப்புறங்கொடுத்த
பண்ணீரமழலைமொழிப்பார்ப்பனியைக்கண்ணுற்றான். (௧௦)

அயில்போதுங்கணையேறுண்டவ்வழிபுண்ணீர்சோர
மயில்போலவுயிர்போகிக்கிடக்கின்றாண்மருங்கணைத்தென்
னுயிர்போல்வாய்புளக்கிதுவென்னுற்றதெனமத்தெறிதன்
றுயிர்போலக்கலங்கியறிவழிந்துமனஞ்சாம்பினான். (௧௧)

இனையதோர்பெண்பழியையாரோற்றானெனத்தேர்வா
னனையதோர்பழுமரத்தின்புறத்தொருசாரழல்காலு
முனையதோர்கணையோடுமுடக்கியகைச்சிலையேந்தி
வினையதோர்த்தெதிர்நின்றவிறல்வேடன்றனைக்கண்டான். (௧௨)

கலிநிலைத்துறை.

காப்பணிதானன்வாளொடுவீக்கியகச்சானன்
கூர்ப்பகழிக்கோலேறிடுவில்லன்கொலைசெய்வா
னேற்பனைக்கொண்டிவ்விடைநின்றானிவனேயென்
பார்ப்பனியைக்கொன்றின்னுயிருண்டுபழிபூண்டான். (௧௩)

என்னமதித்தேயேடாவேடாவென்னேழை
தன்னைவதைத்தாய்நீயேயென்னாத்தழல்கால்கண்
மின்னலெயிற்றுக்கூற்றெனவல்வாய்விட்டார்த்து
மன்னவனுணைப்பாசமெறிந்தலித்தேகும். (௧௪)

மாண்டவளைத்தன்வெக்கிடையிட்டான்மகவொக்கற்
றூண்டவனைத்தான்றாய்முலைவேட்டழுதன்சேயைக்
காண்டொறுமிம்மாக்கண்புனல்சோரக்கடிதேகா
வாண்டகைமாறன்கூடலணைந்தானளியன்றான். (௧௫)

மட்டவிழ்தாரான்வாயின்மருங்கேவந்தெய்தா
வுட்டுகளில்லாவேடனைமுன்விட்டுயிரன்னான்
சட்டகமேரோவிட்டெதிர்மாறன்றமர்கேட்பக்
கட்டழல்சிந்தாமுறையிடுகின்றான்கையோச்சா. (௧௬)

கோமுறைகோடாக்கொற்றவனேமுறையேயோ
தாமனையாள்வாழ்தண்கடிமார்பாமுறையேயோ
மாமதிவானோன்வழிவருமைந்தாமுறையேயோ
தீமைசெய்தாய்போற்செங்கைகுறைத்தாய்முறையேயோ. (௧௭)

பிறக்குங்கோலான்மாறடுகொற்றம்பெறுவேந்த
னுறக்கும்போதுந்தன்னருளாணையுலகெங்கு
மறக்குன்றாவாக்காப்பதையென்பவஃதியாதிம்
மறக்குன்றாதான்செய்கொலைகாவாவழியென்றான். (கஅ)

வாயிலுளார்தமன்னவன்முன்போய்மன்னாகேள்
கோயிலின்மாடோர்வேதியன்மாதைக்கொலைசெய்தா
னாயினனென்றோர்வேடனைமுன்விட்டவிர்தாளைத்
தாயினன்வந்திங்கிட்டயர்கின்றான்றமியென்றார். (க௯)

இறைமகனஞ்சாவென்குடைகன்றிலென்காவ
லறமலிசெங்கோலஞ்சுபயந்தீர்த்தரசாளு
முறைமையுமன்றான்மண்கலிமூழ்கமுயன்றேற்றும்
பொறைமையுமன்றாலென்றுபுலர்ந்துபுறம்போந்தான். (உ0)

வேதியனிற்குந்தன்மைதெரிந்தான்மெலிவுற்றான்
சாதியின்மிக்காய்வந்ததுனக்கென்றனரின்று
யோதுதியென்னக்காவலனைப்பார்த்துரைசான்ற
நீதியுனாய்கேளென்றுரைசெய்வானிகழ்செய்தி. (உக)

இன்றிவளைக்கொண்டார்வடநீழலிடையிட்டுச்
சென்றுதணீர்கொண்டியான்வருமுன்னிச்சிலைவேடன்
கொன்றயனின்றுனென்றலையுட்டுக்கொலைவேல்போல்
வன்றிறன்மாறன்செவிநுழைவித்தான்மறையோனல். (உஉ)

அந்தணன்மாற்றந்தன்னையுமுட்கொண்டறகோக்குஞ்
சந்தனவெற்பன்மறவனைநோக்கத்தாழ்ந்தன்னு
னெந்தைபிரானேயாயடியேனின்றெய்ப்பாற
வந்துபுகுந்தேனந்தமரத்தின்மருங்கோர்சார். (உ௩)

ஐயேயானுங்கொன்றவனல்லேன்கொன்றானைக்
கையேன்வேறுங்கண்டிலனென்றானிவனாகத்
தெய்யேறுண்டவாறெவனென்றாதிர்கின்றார்
மெய்யேயையாயானறியேனிவ்விளைவென்றான். (உச)

இக்கொலைசெய்தான்யானலனென்னுந்தனவென்னத்
தக்கவனேயோதறுகண்மறவனுரைமெய்யோ
சிக்கவொறுத்தாலல்லதையுண்மைசெப்பானென்
றொக்கவுரைத்தார்மந்திரருள்ளார்பிறரெல்லாம். (உரு)

மன்னன்றானுமற்றதுசெய்மின்னெனமள்ளர்
பின்னந்தண்டஞ்செய்தனர்கேட்கப்பிழையில்லான்
முன்னஞ்சொன்னசொற்பெயரானுமொழியாகின்
றின்னந்தீரத்தேருமினென்றானென்செய்வான். (உ௬)

ஆற்றவொறுக்குந்தண்டமுமஞ்சானறைகின்ற
கூற்றமுமொன்றேகொன்றகுறிப்புமுகந்தோற்றான்
மாற்றவரோயோமாவோபுள்ளோவழிவந்த
கோற்றொடியைக்கொன்றென்பெறவல்லான்கொலைசெய்வான். (உஎ)

கைதவனுமிக்கானவனேயோபிறரேயோ
செய்தவர்யாரோவிக்கொலைவேட்டஞ்செய்தோர்மா
வெய்தவிலக்கிற்றப்பியகோறானேறுண்டிம்
மைதவழ்கண்ணாண்மாய்ந்தனளேயோவறியேனால். (உஅ)

என்னுமுன்னித்தென்னவனின்னமிதுமுன்னூ
றன்னாலாயத்தக்கதையென்றான்றகவின்ற
னன்னூர்நூலாய்ந்திதுநூலாலமையாதான்
மன்னுதெய்வத்தாலேதேறும்வழியென்றார். (உ௯)

வேந்தர்கள்சிங்கம்வேதியனைப்பார்த்திதநீர
வாய்ந்துணதுள்ளக்கவலையொழிப்பேனஞ்சேனின்
னேந்திழையீமக்கடனீறுவிப்போதென்றேவித்
தேந்துணர்வேங்கைத்தார்மறவோனைச்சிறைசெய்தான். (௩0)

பின்னையடன்செய்கடன்முற்றுவீண்டோனைத்
தன்னமர்கோயிற்கடைவயின்வைத்துத்தானேகிக்
கொன்னவில்வேலான்றங்கள்குடிக்கோர்குலதெய்வ
மென்னவிருந்தாரடிகள்பணிந்தானிதுகூறும். (௩க)

கொச்சகக்கலிப்பா.

மன்றுமேமணியேயிம்மறவன்றான்பார்ப்பனியைக்
கொன்றானோபிறர்பிறிதாற்கொன்றதோவிதுவறநூ
லொன்றுநுமனப்பரிதாக்கிடக்கதாலுன்னருளா (௩உ)
லென்றுழ்வுகெடத்தேற்றுயென்றிரந்தானவ்வேலை.

திருநகரின்புறம்பொருசார்குலவணிகத்தெருவின்க
ணொருமனையின்மணமுனதக்கந்தணனேடொருக்கு
வருதியுனதுளத்தேறுமாற்றமெனாத்தேற்றுதுமென்
றிருவிசும்பினகடுகிழித்தெழுந்ததொருவாக்கு. (௩௩)

திருவாக்குச்செவிமடுத்துச்செழியன்றன்புறங்கடையிற்
பெருவாக்குமறையவனேடொருக்கெய்திப்பெரும்பகல்போய்க்
கருவாக்குமருண்மாலைக்கங்குல்வாய்த்தன்னைவேற்
றுருவாக்கிக்கடிமனைபோயொருசிறைபுக்கிருந்தான். (கச)

அன்றிறைவனருளாலங்கவர்கேட்கவம்மனையின்
மன்றன்மகன்றனக்களந்தகாளையைமறலியிருட்
குன்றமிரண்டெனவிடுத்தகொடும்பாசக்கையினர்வாய்
மென்றுவருஞ்சினத்தவரிலொருவனிதுவினவுமால். (கரு)

இன்றேயிங்கிவனுயிரைத்தருதியெனவிரும்பகட்டுக்
குன்றேறுங்கோனுரையாற்கொள்வதெவன்பிணிபுடம்பி
னென்றேனுமிலனொருகாரணமின்றியுயிர்கொள்வ
தன்றேயென்செய்துமெனமற்றவனீதறைகிற்பான். (கசு)

ஆற்றலேறுண்டகனையருகொதுங்கும்பார்ப்பனியைக்
காற்றலவீழ்த்தெவ்வாறுகவர்த்தேமப்படியித்தச்
சாற்றரவாரத்திற்றும்பறுத்துப்புறநின்ற
வீற்றலைவெருளவிடுத்திவனுயிகவர்கென்றான். (கஎ)

அந்தமொழிகேட்டரசனருமறையோய்கேட்டனையோ
விந்தமொழியெனப்பனவனிவனிவ்வாறிறந்தாலென்
பைந்தொடியாளிறந்தமைப்படியேயென்மனக்கவலை
சிந்தவிதுகாண்பேனென்றொருங்கிருந்தான்றன்னனொடும். (கஅ)

ஒட்டியபல்லினைதவன்றியொல்லொலிமங்கலந்தொடங்கக்
கொட்டியபல்லியமுழங்கக்குழுமியவோசையின்வெருண்டு
கட்டியதாம்பிறப்புளிற்றுக்கன்றொன்றெதிர்தோடி
முட்டியதான்மணமகனைமுடித்ததாலவனாவி. (ககூ)

மணமகனேபிணமகனுமணப்பறையேபிணப்பறையா
யணியிழையார்வாழ்த்தொலிபோயழுகையொலியாய்க்கழியக்
கணமதனிற்பிறந்திறுமிக்காயத்தின்வரும்பயனை
யுணர்வுடையார்பெறுவருணர்வொன்றுமிலார்க்கொன்றுமிலை. (உ0)

கண்டானத்தனையெல்லாங்காரியஞ்செய்தேனைத்தன்
வண்டார்பூங்குழன்மனைவிமாட்சியினுக்கழிதன்பண்
கொண்டான்மற்றவனொடுந்தன்கோயில்புகுந்தலர்வேப்பந்
தண்டாரானமைச்சர்க்கும்பிறர்க்குமிதுசாற்றினான். (உக)

மறையவனையின்னுமொருமணமுடித்துக்கோடியென
நிறையவரும்பொருளீந்துநீபோதியெனவிடுத்துச்
சிறையழுவத்திடைக்கிடந்தசெழித்தலைவிடிக்குரல
கறையுடல்வேட்டனைத்தொடுத்தகால்யாப்புக்கழல்வித்து. (உஉ)

தெளியாதேயாமிழைத்ததீத்தண்டம்பொறுத்தியென
விளியாவின்னருள்சுரந்துவேண்டுவனகனிநல்கி
யளியானுமனத்தரசனவனையவனிடைச்செலுத்திக்
களியானைவிழவெய்தகௌரியனைப்போய்ப்பணிவான். (உங)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

ஆதரம்பெருகப்பாவியேன்பொருட்டெம்மடிகணீரும்பழியஞ்ச [க்
நாதராயிருக்கிறொக்கையார்க்குண்டேநான்செயத்தக்கதொன்றென்று
காதலிற்புகழ்ந்துடன்முறைபழிச்சிக்காயின்மாபூசனைசிறப்பித்
தேதமதகற்றியுலகினுக்குயிராயிருந்தனனிறைகுலோத்துங்கன். (உச)

பழியஞ்சினபடலம் முற்றிற்று.

ஆகப்படலம்-கச-க்கு - திருவிருத்தம் - சு௱கக.

இருபத்தாறவது
மாபாதகந்தீர்த்தபடலம்.

கலிவிருத்தம்.

வேதநாயகன்வெம்பழியஞ்சிய
நாதனாகவனிதுநல்கிய
தாதையைக்கொலைசெய்ததனயன்மா
பாதகந்தனைத்தீர்த்தமைபாடுவாம். (க)

விரைசெய்மாலைக்குலோத்துங்கனீனவன்
திரைசெய்நீர்நிலஞ்செங்கோல்செலுத்தனி
யரசுசெய்யுமக்காலிலவந்தியென்
றுரைசெய்மாநகரத்தொருபூசுரன். (உ)

வெருவுங்காய்சினமாறியவேதியன்
மருவுங்காதன்மனைவியெனும்பெரு
டுருவுங்காமனுக்தேவியுமன்புனை
யுருவுங்காமுறுமொட்பில்வனப்பினாள். (ங)

படியிலோவியப்பாவையொப்பாகிய
வடிவினளவள்பான்மகனென்றொரு
கொடியபாவிபிறந்துகொலைமுதற்
கடியபாவக் *கலன்போல்வளருநாள். (ச)

கோடிகோடியடுஞ்சிலைகோட்டியே
கோடிகோடிகொடுங்கணைபூட்டியே
கோடிகோடிவிகாரமுங்கூட்டியே
கோடிகோடியனங்கனெய்தார்கொலோ. (ரு)

இளமைச்செவ்வியயாக்கையன்மையல்கூர்
வளமைக்காமமும்வல்வினையுந்நிறைத்
தனைவிட்டிடர்த்தலிற்றன்னைவயிற்றிடை
விளைவித்தீன்றவடன்னைவிரும்பினான். (சு)

அன்னையென்னுமழிதகையாளகத்
தின்னுயிர்த்துணையும்மனக்காவலாம்
மன்னுகாணமடமுதனல்வருந்
தன்னைநீங்கலிற்றுனுமொத்தாளரோ. (எ)

இன்பமோசிறிதாருமிதில்வருந்
துன்பமோகரையில்லாத்தொடுகட
லென்பதாருமிவனுலறியவிவ்
வன்பிதாவவினையால்வருந்துவான். (அ)

மையனுகமதியைவிழுங்கவக்
கையனையைக்கலந்தொழுகுஞ்செய
லையன்றன்குறிப்பாற்கண்டயற்செவிக்
குய்யலாவண்ணமுள்ளத்தடக்கினான். (கூ)

வேற்றொர்வைகல்வெளிப்படக்கண்டறஞ்
சாற்றுநாவினன்வேறொன்றுஞ்சாற்றிலன்
சீற்றமேல்கொடுசெல்வன்கொல்வேனென
வேற்றெழுந்தனனீன்றாள்விலக்குவாள். (க0)

தாயிலின்பநுகர்ந்தனைதந்தையைக்
காயிலென்பெறுவாயெனக்காமுகர்க்
காயிலன்னையிலப்பனியென்பய
னேயிலின்னருளொன்னறமென்னென்றான். (கக)

* கனலென்றும் பாடாந்தரம்.

மண்டொடுங்கருவிப்படைவன்கையிற்
கொண்டுதாதைகுரவனென்றோர்கிலான்
றுண்டமாகத்துணித்தானுய்வாய்முகத்
*துண்டகாமமறவாதுணர்விலான். (கஉ)

மைக்கருங்கருங்குல்வாய்க்கொன்றதாதைக்குத்
தக்கதீத்தவிசெட்டன்னைதன்னொடுங்
கைக்கடங்குபொருளொடுங்கன்னெறி
புக்கனன்புடைசூழ்க்தார்புளினரே. (கங)

எய்யுக்கோறெடுவில்லரிடிக்குரேர்
செய்யுஞ்சொல்லினர்செல்லலுநிக்லெனக்
கையிலுள்ளவுங்கைக்கொண்டுகோரிகைத்
தையறன்னையுந்தாங்கொடுபோயினார். (கச)

சென்றுசேணிடைச்சிக்கறவாழுலா
மென்றவெண்ணமொன்றெய்தியவண்ணமொன்
றொன்றுநாமெண்ணத்தெய்வமொன்றெண்ணிய
தென்றவார்த்தையவணிடைப்பட்டதால். (கரு)

தாதைதன்றயற்கினியார்தனை
மாதர்யாவையமறவர்கைக்கொள்ளவிப்
போதுதான்றனையென்பவன்போன்றுமா
பாதகத்துருவாய்வந்துபற்றினான். (கசு)

ஆவவென்னுமழுஞ்சிவதாவெனும்
பாவம்பாவம்பழிபிதுவோவைய
கோவெனுங்கைகுலைத்தெறியுங்கிழற்
பாவைபோலவிடாதுபின்பற்றுமால். (கஎ)

மேற்படி - வேறு.

கல்லதீர்த்தஞ்சிவதலமோர்பக்கமுஞ்
செல்லவொட்டாதான்சீர்த்திராமஞ்செபிப்
புல்லவொட்டாதுனம்புகுதவொட்டாதுநாச்
சொல்லவொட்டாதுகண்டுயிலவொட்டாதரோ. (கஅ)

சுற்றுமுன்பின்புறச்சூழ்ந்ததன்கொடுங்கிறப்
பற்றிநின்றீர்க்குமாபாதகத்தாலவன்
றெற்றினிச்செய்வதென்றுற்றவாதிடருழந்
திற்றுவேறுலகெலாமச்சுழன்றுழலுமால். (ககூ)

உறுகணேயாற்றாளுற்றுழன்றலகெலா
மறுகவேதிரியுமாபாதகன்வலியெலாஞ்
சிறுகுவான்சிவனருட்செயலினிப்பாதகன்
குறுகுநாள்குறுகுநாள்கூடலைக்குறுகினான். (௨௰)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அழிதகன்குறுகுவான்முன்னங்கயற்கணளிதக்தக்
குழையிருகாதுங்கோதுக்கொலைகெழுபுலிப்பற்றலி
னுழைமயிர்வெடோண்பின்னனேன்பிடாலைப்பபூண்டோர்
பழிதகையாதவேடப்பாவையாய்ப்படிவங்கொள்ள. (௨௧)

கொலையிரும்பழிக்கன்றஞ்சுங்கூடலெம்பெருமான்கொன்றை
மிலையிருங்குஞ்சிவேங்கைமெல்லிணர்க்கண்ணிவேய்ந்து
கலையிருமருப்பிற்கோடிக்காதளவோடேந்தாடிக்
சிலையிருந்தடக்கைவேடத்திருவுருக்கொண்டுதோன்றி. (௨௨)

கொண்டல்கண்படுக்குமாடக்கோபுரமருங்கிற்போந்தின்
கண்டகக்கருக்குவாயருவாக்குகாக்கதவிக்காப்பப்
புண்டலைவாளிவில்லோர்புறங்கிடத்திமைப்பத்திங்கட்
பெண்டவாணுதலாளோடிஞ்ஞதப்போராடல்செய்வான். (௨௩)

வெருவருவேழமுண்டவெள்ளில்போல்வழியனுகிப்
பருவரத்துடனுங்கெய்தும்பாதகன்வரவுகோக்கி
யொருவருமுள்ளந்தாவுமுன்னருங்கொடியபாவி
வருவதுகாண்டியென்னுமாதகைநோக்கிக்கூறும். (௨௪)

அனைங்குகோவெவர்க்குஞ்செய்புமனைக்கறுவலைப்புண்டாவி
புனைங்கிறுருள்ளஞ்செல்லுமிடனதிக்கோடிச்செல்லா
குணங்குலவொழுக்கங்குன்றன்கொலைப்பழிபாவம்பாதா
விணங்குமின்னுயிர்க்குமாங்கேயிறுதிவக்குறுவதென்று. (௨௫)

கள்ளுண்டல்காமமென்பகருத்தறைபோக்குச்செய்வ
தெள்ளுண்டகாமம்போலவெவ்வளிளிதகாணிற்கேட்டிற்
றள்ளுண்டவிடத்தினஞ்சற்தலைக்கொல்லுமென்னவாங்கே
யுள்ளுண்டவுணர்வுபோக்காதண்டபோதழிக்குங்கள்ளுண். (௨௬)

காமமேகொலைகட்கெல்லாங்காரணங்கண்ணோடாத
காமமேகளவுக்கெல்லாங்காரணங்கூற்றமஞ்சுங்
காமமேகள்ளுண்டற்குங்காரணமாதலாலே
காமமேநரகபூமிகாணியாக்கொடுப்பதென்றான். (௨௭)

கொலைப்பழிகோட்பட்டாங்கேகுறுகியான்முகக்கண்டேட
லலைப்படருழந்துசாம்பியழிவதென்பார்ப்பானென்னக்
கலைப்படுதிங்கள்வேணிக்காளவனருட்கணேக்கத்
தலைப்படச்சிறிதுபாவந்தணிந்துதன்னறிவுதோன்ற. (௨௮)

முற்பகலிழைத்தபாவமுதிர்ச்சியாற்பிறந்துதந்தை
* தற்பகையானவாறுந்தாதையைவதைத்தவாறும்
பிற்பகலதப்பாவம்பிடித்தலைத்தெய்துந்தீரா
திப்பதிபுகுந்தவாறுமெடுத்துரைத்திரங்கினான். (௨௯)

மறப்பெரும்படிவங்கொள்மேனத்தருள்சுரக்கின்ற
வறப்பெருங்கருணைமூர்த்தியழிதகையவனைப்பார்த்தித
திறப்பழியாங்குச்சென்றுமீங்கனிற்திராதென்றக்
கறைப்பழிதீரும்வண்ணங்கருதியோருறுதிகூறும். (௩௰)

வருதினின்றமஞ்சொன்னோர்வருக்கமுகரனில்வீழக்
கருதிநீசெய்தபாவங்கழிப்பவொளியாகோக்கத்
தருதலாலெளிதிற்றீரச்சாற்றுதுமைங்கைவேழ்
மொருபொழுதண்டியீசனுறுதவசேவல்செய்தி. (௩௧)

செங்கதிர்க்கடவுள்வானந்தீண்டுமுன்னெழுந்துதீந்தண்
பைங்கதிரறுகொய்துபசுக்களையருத்தியார்வம்
பொங்கமுப்போதுங்கோயிற்புறத்தொட்டித்தீர்த்தமாடிச்
சங்கரன்றனைநூற்றெட்டுமெய்வலஞ்சாரச்செய்தி. (௩௨)

இத்தவநெறியினின்றலிப்பழிகழியுமென்னச்
சித்தவன்புடையவேடத்திருவுருக்கொண்டகொன்றைக்
கொத்தவனுரைத்தான்கேட்டுக்கொடிச்சியாயிருந்தவம்மை
மத்தவன்கரித்தோல்போர்த்தமறவனைவினவுகின்றாள். (௩௩)

ஐயவிக்கொடியோன்செய்தபாவத்துக்களவில்காலம்
வெய்யகாலெழுகோடிநரகிடைவீழ்ந்தானேனு
முய்வகையிலாதபாவியிவனுக்கென்னுய்யுந்தேற்றஞ்
செய்வகையென்றுகேட்பச்செங்கண்மாலிடையோன்செப்பும். ( )

* தற்பகனெனவென்றம்பாடாந்தரம்.
தற்பகன் - சயந்தனைப்படைத்தவன்.

அடுபழியஞ்சாகீசராயினுநினைக்கினச்சம்
படுபழியஞ்சான்செய்தபாதகத்தொடக்குண்டெங்கும்
விடுவதையின்றிவேறுகளைகணுமின்றியீயக்
கடவனைக்காப்பதன்றோகாப்பென்றான்கருணைமூர்த்தி. (௩௫)

செய்தற்போதனையவுங்கணேரிழைநீயாதொன்று
செய்தற்குஞ்செய்யாமைக்கும்வேறொன்றுசெயற்குமாற்றன்
மெய்தக்ககருணைவள்ளல்வேண்டிவெவ்வினைஞரோனு
மய்தக்கோராதல்செய்கையன்னருள்விளையாட்டன்றோ. (௩௬)

என்றகமகிழ்ச்சிபொங்கவியம்பினனியம்பலோடுங்
குன்றகநாடவேடக்குழகனுமறைந்துவெள்ளி
மன்றகநிறைந்தான்மேகமறைந்திடமறைந்துசெல்லு
மின்றகவிடாதுபின்போம்விளங்கிழைமடந்தையோடும். (௩௭)

ஆதனுங்கதுகண்டானுவற்புதமடைந்துகூட
னாதனார்நவின்றவாற்றானன்னெறிவிரதச்செய்கை
மாதவவொழுக்கந்தாங்கிவருமுறைமதியமூன்றிற்
பாதகங்கழிந்துதெய்வப்பார்ப்பனவடிவமானான். (௩௮)

சொற்பதங்கடந்தவெந்தைச்சுந்தரநாதன்றாளிற்
பற்பலவடசொன்மாலைபத்தியிற்றொடுத்துச்சாத்தித்
தற்பரவறிவானந்தத்தனியுருவுடையசோதி
பொற்பதமருங்கிற்புக்கான்புண்ணியமறையோனம்ம. (௩௯)

அன்னையைப்புணர்ந்துதாதைகுரவனுமந்தணாளன்
றன்னையுங்கொன்றபாலகந்தணித்துவீடளித்ததென்றாற்
பின்னைநீரிழிநோய்குட்டம்பெருவயிற்றலைவெப்பெண்
ணின்னநோய்தீர்க்குந்தீர்த்தமென்பதோவிதற்குமேன்மை. (௪௰)

எழுசீரடியாசிரிய விருத்தம்.

அழிந்த வேதியன்மா பாதகந்தீர்ந்த தறிந்துவேந்தமைச்சரு ளுள்ளா, ரொழிந்தபாருள்ளார் வானுளார்வியப்ப முற்றுநல்லுரையுணர் வெல்லாங், கழிந்தபேரருளிக் கயவன்மேல் வைத்த காரணம்யாதெ னக்கண்ணீர், வழிந்துநான் மாடக்கூட னாயகனை வழுத்தினார் மகிழ்ச்சியுட்டிளைத்தார். (௪௧)

மாபாதகந்தீர்த்தபடலம் முற்றிற்று.

ஆகப்படலம்-௨௬-க்கு-திருவிருத்தம்-௧௨௦௪.

இருபத்தேழாவது
அங்கம்வெட்டினபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

வேதகந்தரித்தமுக்கண்வேதியன்மறையோன்செய்த
பாதகந்தவிர்த்தவாறுபகர்ந்தனம்விஞ்சையீந்த
போதகன்மனைக்குத்தீங்குபுக்கிமுன்னுசசெய்த
சாதகன்றனைப்போராற்றித்தண்டித்ததனைச்சொல்வாம். (௧)

கூர்த்தவெண்கோட்டியானைக்குலோத்துங்கவழுதிஞாலங்
காத்தரசளிக்குநாளிற்கடிமதிலுடுத்தகூடன்
மூத்தவிகாருள்வந்துமறுபுலத்தவனுமாக்கை
மூத்தவனொருவன்வைகிமுனையவாள்பயிற்றிவாழ்வான். (௨)

வாள்வினைக்குரவனன்னான்வல்லடிவிடுத்தவேழத்
தோள்வினைவலியாலட்டசுந்தரவிடங்கன்றன்னை
யாள்வினையன்புந்தானும்வைகலுமடைந்துதாழ்ந்து
மூள்வினைவலியைவெல்லுமூதறிவுடையனம்ம. (௩)

கைவினைமறவாள்விஞ்சைக்காவலனவனைத்தாழ்ந்து
தெவ்வினைவெல்வான்கற்குஞ்சிங்கவேறனையார்தம்மு
ளுய்வினையுணரப்பாவிசித்தனென்றொருவனுள்ளா
னவ்வினைநிரம்பக்கற்றானாகலூழ்வலியாலன்னான். (௪)

மானவாள்விஞ்சையாலேதனைநிகர்க்குமதிக்கத்தக்க
தானதோர்செருக்கினாற்றன்னாசிரியற்குமாறாய்த்
தானுமோர்விஞ்சைக்கூடஞ்சமைத்துவாள்பலருங்கற்க
வானலாம்படைவல்லானிலாநியமிதப்பக்கொள்வான். (௫)

ஒருத்தனையிருவர்வாளின்விருத்தியுமொருங்குகொள்ளுங்
கருத்தனாய்விருத்தனாரிற்கழிவதுகருதியன்னான்
வருத்துவாளிளையர்தன்பால்வரமலைந்திரித்துநாளும்
விருத்தமேசெய்வான்றனைவிரும்பிநேற்றிளையோனன்னான். (௬)

தொடத்தொடப்பொறுக்குந்திண்மைத்தோன்னிலமனையாளில்லா
விடத்தவன்றேவிபாற்போயிடலுண்டேயிடலுண்டேயென்
றடுத்தடுத்தஞ்சாதென்றுங்கேட்டுக்கேட்டகல்வானாக
கடைத்தொழிற்பாவையன்னகைவையானாதிருந்தாள். (௭)

பின்னொருபகல்போய்ச்செங்கைபிடித்தனன்வலிப்பத்தள்ளி
வன்னிலைக்கதவனுக்கித்தாழக்கோல்வலித்துமாண்ட
தன்னிலைக்காப்புச்செய்தாடவிமனைக்காவல்பூண்டா
னக்கிலையிழைத்தநீயோவெனக்கத்திலெதுப்பப்போனான். (அ)

அறங்கடைநின்றாருள்ளுமாற்றவுங்கடையனுகிப்
புறங்கடைநின்றான்செய்தபுலைமைதன்பதிக்குத்தேற்றான்
மறந்தவிர்கற்பினோடன்மனம்பொதிக்துயிர்கடோறு
நிறைந்தகான்மாடக்கூடனிமலனைநினைந்துநொந்தான். (௯)

தாதகநிறைந்தகொன்றைச்சடையவன்புறம்புசெய்த
பாதகமறுக்குக்கூடற்பகவனெவ்வுயிர்க்குந்தானே
போதகனுகித்தேற்றும்புண்ணியன்புலைஞன்செய்த
தீதகமுணர்ந்துதண்டஞ்செய்வதற்குள்ளங்கொண்டான். (௧௦)

கோளுடைக்குரவனேபோற்சித்தனைக்குறவிச்சித்தா
காளையாநீயுஞ்சாலக்கழியருப்படைத்தயாரும்
வாளமராடிக்கதம்வலிகளுமளந்துகாண்டு
நாளைவாவருதுநாமுநகர்ப்புறத்தொருசாரென்றான். (௧௧)

காதனுக்குரவன்கூறநன்றெனவுவந்துநாளாம்
பாதகனதற்குநேர்ந்தான்படைக்கலக்குரவன்மீண்டு
போதருமளவில்லையம்புதையிருள்வெள்ளத்தாழ
வாதவன்வையமுந்நீர்வெள்ளத்துளாழ்ந்ததம்ம. (௧௨)

ஆசினன்குரவர்க்கின்னுவாற்றினேன்பாவம்போல
மாசிருடணிந்தகங்குல்வலிகெடவடிவாள்விஞ்சைத்
தேசிகனொருவனன்றானிணியுடல்சிதைப்பத்தீட்டுங்
காய்சினவாள்போற்கிழக்கல்லிடைமுளைத்தான்வெய்யோன். (௧௩)

நன்றியைக்கொன்றுதின்றேனுயக்கனைக்கஞ்சும்
வன்றிறலரிமானூர்தித்தெய்வதம்வழிபட்டேத்தி
வென்றிவாளபரிக்கச்சுவீக்கிவாள்பலகையேந்திச்
சென்றுவாளூழ்வன்சொன்னசெருக்களங்குறுகினானே. (௧௪)

மதுரைவாளமர்க்குசென்னல்வர்தறைகூவிப்போன
முதுகடும்புலியேறன்னமுட்குடற்குரவன்றானு
மதிர்கழல்வீக்கிக்கச்சுமசைத்துவெண்ணீறஞ்சாத்திக்
கதிர்கொள்வாள்பலகைதாங்கிக்கயவனுக்கெதிரேவந்தான். (௧௫)

மடக்கலேறொன்றும்பைங்கணரியொன்றுமலைந்தாலென்ன
முடக்கல்வான்றிங்களொன்றுமுக்கணுநான்குதோளும்
விடக்கறுழ்மிடறுந்தோற்றுவென்றிவாள்விஞ்சைவேந்து
மடங்கலன்றனுநேரிட்டமராடல்செய்வார். (௧௬)

எதிர்ப்பர்பின்பறிவர்நேர்போயெழுந்துவானேறுபோல
வதிர்ப்பர்கேடகத்துட்டாழ்வுற்றடங்குவர்முனைப்பர்வாளை
விதிர்ப்பர்சாரிகைபோய்வீசிவெட்டுவர்விலக்கிமீள்வர்
கொதிப்பர்போய்க்கைப்பராண்மைகூறுவர்மாறிநேர்வர். (௧௭)

வெங்கிடுவார்போற்போர்வர்வட்டித்துவிளித்துமீள்வர்
கொன்னிடுவான்மார்பேற்பர்குறிவழிபிழைத்துநிற்ப
ரீங்கிலைகாலந்தன்னையெல்லைநின்றாடல்செய்தா
ரங்கிலையுடுபோர்காண்பாரனைவருங்கேட்கவையன். (௧௮)

குரத்தியைநினைத்தநெஞ்சைக்குறித்துவாளைத்தொட்ட
கரத்தினைப்பார்த்தகண்ணைக்காத்தனைக்கோடியென்றென்
றுரைத்துரைத்தவற்றுக்கெல்லாமுறைமுறைதண்டஞ்செய்து
சிரத்தினைத்தடிந்துவீட்டித்திருவுருமறைந்துநின்றான். (௧௯)

போர்க்கெழுகளங்கண்டாருட்பொருபடைக்கேள்விச்செல்வர்
வார்க்கெழுகழற்காலானைக்கண்டிலர்மனையிற்றேடி
யேர்க்கெழுகற்பினாளையெங்குற்றான்குரவனென்னக்
கூர்க்கெழுவடிவேற்கண்ணாள்போயினார்கோயிற்கென்றாள். (௨௦)

என்றவப்போதேகோயிற்கேகினார்மீண்டார்தேடிச்
சென்றவர்சித்தன்றன்னைச்செருக்களத்திடுபோர்செய்து
வென்றனையேபின்னந்தவெங்களத்தெங்குந்தேடி
நின்றனைக்காணாதிங்குநேர்ந்தனம்யாங்களென்றார். (௨௧)

விரைசெய்தாரவன்பாலங்கம்வெட்டினானென்கேளீங்க
ணுரைசெய்வதெவன்பாலென்போற்சித்தனையுடன்றுமாய்த்த
வரைசெய்தோள்வித்தைக்கேர்த்தார்மற்றிதூஉறற்றும்மையைத்
திரைசெய்நீர்க்கூடலெங்கைத்திருவுளச்செயல்கொலென்றான். (௨௨)

மட்டித்தகலவைக்கொங்கைமனைவியுஞ்சித்தன்றன்னைக்
கிட்டிப்பல்காலும்வந்துகேட்டதுகெருகல்வாய்வர்
தொட்டித்தன்கையைப்பற்றியீர்த்ததுமுன்னம்வந்து
தட்டிப்போய்க்கதவந்தாழிட்டிருந்ததுஞ்சாற்றினானே. (௨௩)

அம்மனையருளிச்சொன்னபடியெலாமருளிச்செய்து
தெம்முனையடுவாள்வீரசித்தனைமாய்த்தாரிது
மெய்ம்மையசமென்றுகண்டமைந்தரும்வினம்பக்கேட்டா
னெம்மையாளுடையசுடலிறைவிளையாட்டேயென்றான். (உச)

கொடியையேரிடையாளோடுக்கொற்றவாவிளையரோடுக்
கடியநான்மாடக்கூடற்கண்ணுதலடிக்கிழ்த்தாழ்ந்து
கெடியநான்முகனுக்தேனுசெறியதுசிறியவேழை
யடியனேனளவிற்றேகின்னருள்விளையாட்டலென்றான். (உரு)

தண்மதிவழிவந்தோனுங்கருணைார்தாமும்பாதி
விண்மதியிலைக்தவேணிவிடையவனுடனேக்கிக்
கண்மலர்வெள்ளத்தாழ்ந்துகனைகழலடியிற்றாழ்ந்து
பண்மலர்கீதம்பாடியாடினார்பழிச்சிகின்றார். (உசா)

மேற்படி வேறு.

அடியவருக்கெளியரிவர் பரதேசிகாவலனென் றடிவீழ்ந்தேத்தி, வ
டியயில்வேற் குலோத்துங்கன்மாணிக்கமாலையெனு மனையாளோடுக்,
தொடியணிதோண் முதுமகனைக்களிறேற்றி நகரைவலஞ்சூழ்வித் தி
ட்யான், முடியணிவித் தனந்தகுண பாண்டியற்குத் தன்னிறைமை
முழுதுமீந்தான். (உஎ)

விலைவிலையாப் பொருளுணர்ந்து பற்றிகந்துகரணமொரு நெறி
யேசெல்லப், புலநெறிநீத் தருள்வழிபோய்ப் போதமகந்தன்வலி
யைப் பொத்திநின்று மலவலிவிட்டகலவாக வுமிழ்ந்தமதிபோல்வின
க்கிமாறியாகே, தலைவனடிநிழல்பிரியாப் பேரின்பக்கதியடைந்தான்
றமிழர்கோமான். (உஅ)

அங்கம்வெட்டினபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் - உஎ - க்கு - திருவிருத்தம் - கஎ0உ.

இருபத்தெட்டாவது

நாகமெய்தபடலம்.

எழுசீரடி யாசிரியவிருத்தம்.

செங்கண்மால்விடைமேல்விடங்கர்செருக்களத்திடைவாளெடுத்
தங்கம்வெட்டியசேவகத்தையறைந்தனந்தமிழ்மாறன்மேற்
சங்கையிட்டமணிசராற்றியதறுகண்வேள்விமுனைத்ததோர்
வெங்கல்வாளரவைத்துணித்துவிளித்தவாறும்விளம்புவாம். (க)

சோதிலாதகுணத்தனந்தகுணப்பெருந்தகைமீனவ
னாதிசாயகனுருவமாகியவைத்தெழுத்தொடுகண்டிவெண்
பூதிசாதனமாவதேபொருளென்றுபத்திமைபூண்டுதன்
றாதையேமுதலாயமன்னவர்தம்மினுந்தலையாயினான். (உ)

இத்தகைச்சிவசாதனந்தவிலன்புமிக்கவனேழுகா
லத்தன்மெய்த்திருவைத்தெழுத்தொலியாதுகீற்றொளியாதுமுட்
டைத்தவல்லிருளும்புறத்திருளுஞ்சிதைக்குபராபரன்
வித்தகத்திருவேடமானதுமீனவன்றிருநாட்டெலாம். (ங)

சாயினுங்கடையானமாசடைனன்னிருட்புரைநெஞ்சரொன்
றாயிரஞ்சமண்வேடரன்னதறிந்துகொண்டுவெருண்டழற்
றோயிரும்பெனமானவெங்கனல்சுட்டிடத்தரியார்களாய்
மாயிருந்தமிழ்மாறனைத்தெறவஞ்சவேள்வியியற்றுவார். (ச)

கல்லைகாதமனத்துசாலையெடுத்தழற்படுகுண்டமுங்
கல்லியாரழலிட்டெழும்புகைசெனிவெண்டிசைகளுமறச்
செல்லவானவுடுக்களும்பொரியிற்பொரிந்தனசிதறநீண்
டொல்லைதாவிவிசும்புதைவரவோட்டிவெங்கனன்மூட்டினார். (ரு)

அந்தழன்றெரிகுண்டமின்றுமகன்பிலத்தெழுவானெனப்
பைத்தநஞ்சிருள்வாயும்வாயிருபாலும்வாலியபிர்மதிக்
கொத்தடுஞ்சினமொருகுபற்களுமூழியாரழல்விழிகளும்
வைத்தசைத்தொருவெற்புவந்தெனவக்தனார்ளொருநாகமே. (சா)

உதித்தசெங்கணரக்கவஞ்சனுருத்தெழுக்கெரிவடவையிற்
கொதித்தவெம்பசிதாகமுங்கொடிதாலெனக்கொடியோரைகீர்
விதித்திடும்பணியாதெனக்கெனமீனவன்றனைமதுரைபோ
யெதிர்த்தெடுத்துவிழுங்கிவாவெனவேவினுற்றடனேகினான். (எ)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

பாயுடையவர்விட விடநாகப் பயடிவுகொ ணிசிசரவிலனண்டத்,
தோயுட்லினனுடல் விடமூறிச் சொரிதொளை யெயிறினன் வடவைச்
செந், தீயுடை யனவென வெரிகண்ணன் றிணி யிருள் வரைமுழை
யெனவிண்ட, வாயுடை யவனெடு நெறிமுன்னி மழைநுழை வரை
யென வருகின்றான். (அ)

அரவிறையுறைபிலம் வெளிகாணவரையுடல் புதைபடவிலம்வி
ள்ளா, வருவழியழலெழ வுயிர்கான்முன்வளியுளர் கிளர்வலிவிளிவெ
ய்தப், பொருசினவிழியெதிர் படுமைங்கூழ்புகை யெழவனமரை
பொரிபொங்காக், கருகிடமுதுகிளை யிறைகொள்ளுங் ககினாசிறை
சருள்படவீழ. (கூ)

அகனிலம்வெருவுறசிலனேந்துமரவிறைவெருவுறவெயில்காலும்
பகன்மதிவெருவுறவிவையெனவும்பணிகளும்வெருவுறவிக்கின்
புகர்மலைவெருவுறவடுதண்டப்புரவலன்வெருவுறவருசெங்கண்
ணகைமதிபுனையெயிறவன்மாட்சகொதிர்குடவயின்வருமெல்லை. (க0)

கண்டவர்கடிநகர்கடிதோடிக்கௌரியனடிதொழுதடிகேணக்
கொண்டல்கண்வளர்மதில்வலைகூடற்குடவயிநெருபெருவிடநாக
மண்டமுமகிலமுமொருவாயிட்டயிறவருவதையெனநீள்வாய்
விண்டுகொண்டணைவதையெனவோடும்வெருவலன்மதிகுலமறவீரன். [ன்.

மற்றிதுமுனமதகரிவிட்டோர்வரவிடவருவதையெனவெண்ண
முற்றிதுதனையும்விளித்தற்கெம்முடையவர்விடையவர்விடாகஞ்
சுற்றியசடையினருளென்னுச்சாருலகிழிசுடரெனநீற்குங்
கற்றளியிடையுறையிறைமுன்போய்க்கழலடிதொழுதறைகிற்பா

வழிவழியடிமைசெய்தொருபோதுமறவலன்வழிபடுமடியேனின்
மொழிவழிமுறைசெய்துவருவேனிம்முதுகரடையவுமணிச
ரழிவதுகருதினர்விடநாகமடைவதனருள்வழியரளுவி
கழிவதுகருதியவடியேனைக்கருணைசெய்தருளிதுகடனென்றான். ()

அனுமதிகொடுதொழுதிறைபாதமகமதிகொடுபுறனடைகின்ற
பனிமதிவழிவருதமிழ்மாறன்பகழிபொடுசிலையினைவேகிக்
குனிமதிதகழ்தருமதினீடுக்கொடியணிகுடக்கடைகுறுகான்முன்
றனிவரைபெனகிர்தருகோபத்தழல்விழியரவினைபெதிர்கண்டான்.

எழுசீரடியாசிரியவிருத்தம்.

பல்பொறிப் பகுவாய்ப் படம்புடை பரப்பிப் பக்கமெண் டிசை
யொடு விசும்பிற், செல்கதிர் புதைத்துத் திணியிருள் பரப்பித் திங்
களின்புகிர்புரை நஞ்சம், பில்கெயி றதுக்கிப் பெரிதுயிர்த் தகல்வாய்
பிளந்துமா நகரெலா மொருங்கே, யொல்லெனக்கௌவி விழுங்கு
வான்சீறி யுருத்தன னூரக வாள் வுணன். (கரு)

அடுத்தன னரச சிங்கவேறிடியே றஞ்சவார்த் தங்கையிற்சாப,
மெடுத்தன னெடுகா ணிருதலைவணக்கி யெரிமுகக் கூர்ங்கணை தொ
டுத்து, விடுத்தனன் விடுத்த சரமெலா முரகன் வெறுந்துகள் படக்
கறித் துமிழ்ந்து, படுத்தனன் பொறுது பஞ்சவன் புராரி பங்கயச்
சேவடி நினையா. (கசு)

கொடியதோர்பிறைவா யம்பினைவிடுத்துக் கோளராவனையுடற
ணித்தா, னிடியதோவென வார்த் தெரிநிறக்குருதி யிரங்கிவீழருவி
யிற்கவிழ, கெடியதோருடலம் புரள்படக்கூர்வா னெவிதரவிளிபவ
ன்மேலக், கடியதோராலா கலவெள்ளம்போலக் கக்கினன் கறை
யிருணஞ்சம். (கஎ)

நிவிடமுருத்துத்திணியிருள்கப்பத்திருநகரெங்கணுஞ்செறிந்த
காவிடக்கூவல்கயத்தலைசதுக்கங்கழகமாவணமகழிஞ்சி
கோவிடமாடமுபரிகைமேடைகோபுரமரங்கெலாம்பரந்து
தாவிடமயங்கியுறங்கினர்போலச்சாம்பினர்தனிநகர்மாக்கள். (கஅ)

நிலைதளர்ந்துடலர்த்தியிர்த்துவேர்வரும்பிநிறைபுலன்பொறிகரணங்க
டலைதடுமாறியுரைமொழிகுழறித்தழுதழுப்பட்டுத்துயர்வுணங்கி
மலைதருகட்மேனியிர்த்துணர்வழிந்தமயங்கிமூச்சொடுங்கியுளராவி
யலைதராவூசலாடினர்கிடந்தாரன்னதோன்னகருளாரெல்லாம். (ககூ)

தென்னவன்விடங்கண் டஞ்சமால்போலச் சினகரமடைந்துதா
ழ்ந்தெந்தாய், முன்னவாதிமுதல்வவித்தின்றிமுளைத்தவ முடிவிலா
முனிவ, வென்னவவன்பார்க் கெளியவயார்க்கு மிறையவ விந்நகர்க்
கென்ற, மன்னவவறுதி மறையவமுக்கண் வானவநினைச்சர ணடை
ந்தேன். (உ0)

அடுத்தவர்தலைக்கு மாநிலைத்தரந்து மாழியுன் டேழுமொன்
றாகத், தொடுத்தவர்தலைக்கும் பெருமழைதடுத்துத் தொலைக்கைவி
ன் மொரவவென் பிறைக்கோ, டெடுத்தவர்தலைக்குங் களிற்றினைவி

ளித்து மிக்கார்புரந்தனையின்று, மடுத்துவந்தலைக்கும் விடத்தினுன்ம யங்கும் வருத்தமுங்களைதியென் றிரந்தான். (௨௧)

அருட்கடலனையவா திராயகன்றனவிர்சடையலரிமதிக்கொழுந்தின் பெருக்கடையமுதத்தண்டுளிசிதறிதுபிலிற்றினன்பிலிற்றிடலோடும் பொருக்கெனவெங்கும்பாவினிற்பிணாபோதம் புனையறக்கலந்துபண்டு ள்ள, திருக்கிளர்மதுராககரமாப்புனிதஞ்செய்ததச்சிறுதுளியம்ம()

இரவிமுன்னிருள தெனவிறையருண்முன்னிருண்மலவலிகெட வெங்கும், பரவியவமுதால் விடமகன்றவசப் படிவொழிந் தியாவரு மின்பம், விரவியகளிப்பின் மேவினரிருந்தார் மீனவர்பெருந்தகை வேந்து, ளரவணிசடையார்க் கன்புருந்தானே யாமென்காவல்செய் திருந்தான். (௨௨)

நாகமெய்தபடலம் முற்றிற்று.

ஆகப்படலம்-௩௭-க்கு-திருவிருத்தம்-௧௧௨௭.

இருபத்தொன்பதாவது
மாயப்பசுவை வதைத்தபடலம்.

கலிநிலைத்துறை.

சுருதியின்புறத்தவர்விடுமாவினைச்சுருதி
கருதரும்பரனருளுடைக்கௌரியன்றணித்த
பரிசிதக்கதுபொருதமன்படிறர்பின்விடுப்ப
வருபெரும்பசுவிடையினுன்மாய்த்ததும்பகர்வாம். (௧)

பணைப்பெரும்பருவாயுடைப்பார்தனையனந்த
குணப்பெருந்தகைதணித்தபின்பின்வருகுன்டர்
தனைப்பருங்குழாங்காலினுற்றன்னுண்டுசெல்லுங்
கணைப்பெரும்புயல்போலுடைத்தோடினகலங்கி. (௨)

உடைந்துபோனவரனைவருமோரிடத்திருன்போ
லடைந்தராமுன்புவிடுத்தமால்யானைபோலின்று
தொடர்ந்தபாம்பையுந்தொலைத்தனர்மேலினிச்சூழ்ச்சி
மிடைந்துசெய்வதையாதெனவினயமொன்றோர்வார். (௩)

ஆவையூறுசெய்யார்பழியஞ்சவாரதனை
யேவுவாமிதுவேபுணர்ப்பென்றுசூழ்ந்திசைந்து
பாவகாரிகள்பண்டுபோற்பழித்தழல்வளர்த்தார்
தாவிலாவுருவாகியோர்தானவன்மூண்டான். (௪)

குண்டழற்கணின்றெழுந்தவக்கொடியவெம்பசுவைப்
பண்டுபோலவர்விடுத்தனர்கூடலம்பதிமே
லுண்டுமில்லையுமெனத்தமோற்றனுதுரைத்த
பிண்டியானுனைகொண்டுழல்பேயமண்குண்டர். (௫)

கலிவிருத்தம்.

மாடமலிமாளிகையிலாடுகொடிமானக்
கோடுகளினூடுமுகில்குத்திமிசைகோத்துச்
சேடன்முடியுங்கதிர்கொள்சென்னிவரையுந்து
ளாடவடியிட்டலைவயஞ்சிடவுயிர்த்தே. (௬)

விடுத்திடுமுயிர்ப்பினெதிர்புனைகறைவீபோ
லடுத்திடுசராசரமனைத்துயிர்வெய்தக்
கடுத்திடுசினக்கனலினுக்குலகமெல்லா
மடுத்திடுதழற்கடவுள்வார்புனலமான. (௭)

உடன்றிறைகொள்புன்னொடுவிலங்கலறியோட
மிடைந்தபழுவந்தொடுவிலங்கலைமருப்பா
லிடந்தெறிமருந்தெனவெறிந்தளவிலோரைத்
தொடர்ந்துடல்சிதைத்துயிர்தொலைத்திடியினார்த்தே. (௮)

மறலிவருமாறெனமறப்பசுவழிக்கொண்
டறலிவர்தடம்பொருனையாறுடையமாறன்
றிறலியுலர்மக்கள்புரைதென்மதுரைமுன்னு
விறலிவருகின்றதுமீனவனறிந்தான். (௯)

மீனவனுமாககருண்மிக்கவருமுக்கண்
வானவனைமாமதுரைமன்னவனைமுன்னோர்
தானவனையாழிகொடுசாய்த்தவனையேத்தா
வானதுரைசெய்துமெனவாலயமடைந்தார். (௧௦)

நாதமுறையேயெபோதவின்மதிகடாமும்
பாதமுறையோபலவுயிர்க்குமதிவிக்கும்
போதமுறையோபுனிதபூரணபுராண
வேதமுறையோவெனவிளித்துமுறையிட்டார். (௧௧)

நின்றமுறையிட்டவரைநித்தனருளேக்கா
னன்றருள்சுரந்திடபக்தியைவிளித்துச்
சென்றமணரேவவருதிப்பசுவைநீபோய்
வென்றுவருவாயெனவிளம்பினன்விடுத்தான். (௧௨)

கலிநிலைத்துறை.

தண்டங்கெழுகூற்றுமஞ்சத்தறுகட்செக்கட்
குண்டத்தழன்றுகொதிப்பக்கொடுகொக்கெரிந்
துண்டத்துழாவக்கடைவாய்நுரைசோர்ந்துசென்னி
யண்டத்துழாவவெழுந்தன்றடலேறுமாதோ. (௧௩)

நெற்றித்தனியோடையியிர்த்துமதித்தகோட்டிற்
பற்றிச்சுடர்செம்மணிப்பூண்பிறையையநாகஞ்
சுற்றிக்கிடந்தாலெனத்தோன்றவெள்ளாழியீன்றக்
கற்றைக்கதிர்போற்பருமம்புறங்கௌவியின்ன. (௧௪)

கோட்டுப்பிறைகால்குளிர்வெண்கதிர்க்கற்றைபோலச்
சூட்டுக்கவரித்தொடைத்தொங்கனெற்றிமுன்னுப்
பூட்டுத்தாளமுகவட்டம்பொலியப்பின்னன்
மாட்டுச்சதங்கைத்தொடைகல்லெனவாய்விட்டார்ப்ப. (௧௫)

பணிநாவசைக்கும்படியென்னக்கழுத்தில்வீர
மணிநாவசைப்பக்கைமுத்தின்வகுத்ததண்டைப்
பிணிநாண்சிறுகிண்கிணிப்பிப்பலமாலைத்தொங்க
லணிநாணலம்பச்சிலம்பார்ப்பவடிகளென்கும். (௧௬)

அடியிட்டுகிலங்கினைத்தண்டமெண்டிக்கும்போர்ப்பப்
பொடியிட்டுயிர்த்துப்பொருகோட்டினிற்குத்திக்கொத்திட்
டடியிட்டதிர்காரொதிரேற்றெழுந்தாங்குநோக்கிச்
செடியிட்டிருகண்ணழல்சிந்தநடந்ததன்றே. (௧௭)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

பால்கொண்டநிழல்வெண்டிக்கட்பகிர்கொண்டமருப்பிற்கொண்மூ
குல்கொண்டவயிற்றைக்கீண்டுதுள்ளியோர்வெள்ளிக்குன்றன் [ச
கால்கொண்டுநடந்தாலென்னக்கடித்துடன்றுவைச்சிற்ற
மேல்கொண்டுசீற்றம்பற்றிவிக்குயிர்ப்பெறிந்துவிட்டர. (௧௮)

குடக்கதுகுணக்கதென்னக்குணக்கதுகுடக்கதென்ன
வடக்கதுதெற்கதென்னத்தெற்கதுவடக்கதென்ன
முடுக்குறுமருப்பிற்கோத்துமுதுகுகிழகத்தன்று
மெடுக்குறுமலையைக்கால்பேர்த்தெனத்திசைப்புறத்துவீசும். (௧௯)

கொழுமணிச்சிகரகோடிசிதைபடக்குவட்டில்வீசும்
பழுமரச்செறிவில்வான்றோய்படலையிறவெறியும்வானின்
விழுமறப்பசுப்போல்வீழவேலைவாய்வீசமிக்கன
செழுமதிக்கோட்டேந்தித்தேவிளையாடல்செய்து. (௨0)

சூரியவெண்ணியாங்கேபொருதுயிருற்றஞ்செய்யா
தாரியவிடைதன்மாண்டல்முகிலைக்காட்டக்காமுற்
றீரியகறும்பூவாளியேறுபட்டாவியோடும்
வீரியம்விந்தித்துவீழ்ந்துவெற்புருவாயிற்றன்றே. (௨௧)

வாங்கினபுரிசைமாடமாநகராளுவிஸ்பக்
தூங்கினவரவாய்வேம்பின்றொடைவிழ்தாரான்றிண்டோள்
வீங்கினவிரவிதோன்றவீங்கிருளுடைத்தென்ன
நீங்கினகாணமோடுகிளையமண்குழாங்களெல்லாம். (௨௨)

உலகறிகரியாத்தன்பேருருவிளையிடபக்குன்றாக்
குலவுறநிறுவிச்சுக்கவடிவினுற்குறிக்கூடற்
றலைவனைவணக்கவீசன்றன்னருள்சுரந்துபண்டை
யிலகுருவாகியிக்ஙனிருக்கெனவிருத்தினானே. (௨௩)

அங்கிலைகருணைகுமாசனுமகிழ்ச்சிதூங்கிச்
சக்கிதியிருந்தகந்திதானடைந்திறைஞ்சிப்போக
மின்னவிர்சடையானந்திவெண்டிசால்வீறுநோக்கி
யின்னமுதனையாளோடுங்களிசிறந்திருக்குநாளில். (௨௪)

அவ்விடைவரைமேன்மூக்கீரர்கலியிலங்கைக்கேகுந்
தெவ்வடுசிலையிராமன்வானரசேனைசூழ
மைவ்வரையனையதம்பிமாருதிசுக்கிரீவ
னிவ்வடல்வீரரோடுமெய்தியங்கிறுத்தான்மன்னோ. (௨௫)

அன்னதுதெரிந்துவிந்தமடக்கியமுனிவனெய்தி
மன்னவர்மாக்கக்கூடிமழவிடைக்கொடியோன்கூடற்
பன்னரும்புகழ்மையோதுபணுவலையருளிச்செய்ய
முன்னவன்பெருமைகேட்டுமகிழ்ந்தகைமுடியோனுக. (௨௬)

முனியொடுகுறுகிச்செம்பொன்முளரியுண்மூழ்கியாதித்
தனிமுதலடியைவேணிமுடிபுறத்தாழ்த்துவேத
மனுமுறைசிவாகமத்தின்வழிவழாதருச்சித்தேத்திக்
கனிவுறுமன்பிலாழ்ந்துமுடிமிசைக்கரங்கள்கூப்பி. (௨௭)

புங்கவசீவன்முத்திபுராதிபபுனிதபோக
மங்கலமெவற்றிநுக்குங்காரணவடிவமான
சங்கரனதுதெய்வத்தானங்களனந்தமிந்த
வங்கண்மாஞாலவட்டத்துள்ளனவவைகடம்மில். (௨௮)

கலிநிலைத்துறை.

அற்புதப்பெரும்பதியிந்தமதுரையீதாற்றப்
பொற்புடைத்தென்பதெவன்பலபுவனமுங்கின்பாற்
கற்புவைத்துயகிசெய்தகருமத்தின்விருத்தம்
வெற்புருக்களாயப்புடைநின்றுவிளங்கலான்மன்றே. (௨௯)

கண்டவெல்லையிற்றுன்பங்கள்களைதற்குமனவைக்
கண்டரும்பெருஞ்செல்வங்களளித்தற்குங்கருணை
கொண்டுநீயுறைசிறப்பினாற்குளிர்மதிக்கண்ணி
யண்டவாணவிவ்விலிங்கத்துக்கொப்புவேறுமோ. (௩௰)

தோய்ந்திடும்பொழுதீட்டியதொல்வினைப்படல
மாய்ந்திடும்படிமாய்த்துநின்மங்கலபோக
மீந்திடும்படிக்கிருந்தமாதீர்த்தத்தினியல்பை
யாய்ந்திடும்பொழுதற்கொருதீர்த்தமொப்பாமோ. (௩௧)

எத்தலத்தினுமோவ்வொன்றுவிழுமிதாயித்த
மெய்த்தலத்திலிம்மூவகைவிழுப்பமும்விளங்கு
மத்தவாதலாலித்தலமடைந்தவொவர்க்குஞ்
சித்தசுத்தியும்பல்வகைச்சித்தியும்பயக்கும். (௩௨)

அடியனேனெண்ணுங்கருமமுஞ்சாதமேயாக
முடியுமாவரிதச்செயன்முடியுமெப்படியப்
படிபுரிந்தருள்கடிதெனப்பணிந்தன்பானு
நெடியவான்படிமமுதெனவெதிர்மொழிகேட்டனம். (௩௩)

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

இரவிதன்மரபின்வந்தவிராமகேளமக்குத்தென்கீழ்
விரவியதிசையிற்போகிவிரிகடல்சேதுக்கட்டிக்
கரவிழுவுள்ளக்கள்வன்றிர்முடிப்பத்துஞ்சிந்தி
யரவமேகலையிளுளையருஞ்சிறையழுவ்நீக்கி. (௩௪)

மீண்டுபின்னையோத்தியெய்திவிரிகடலுலகம்பன்னா
ளாண்டினிதிருந்துமேனாள்வைகுந்தமடைவாயாக
வீண்டுநீகவலைகொள்ளேலெனவசரிரிகேட்டு
நீண்டவன்மகிழ்ந்துதாழ்ந்துதிருத்தனைவிடைகொண்டேகி. (௩௫)

மறைப்பொருளுணர்ந்தோன்சொன்னவண்ணமேயிலங்கையெய்தி
யறத்தினைத்தின்றபாவியாவிதின்றனையான்செல்வத்
திறத்தினையிளவற்கீந்துதிருவிராமீசங்கண்டு
கறைப்படுமிடற்றினானையருச்சித்துக்கருணைவாங்கி. (௩௬)

பற்றியபழியினீங்கியிந்திரன்பழியைத்தீர்த்த
வெற்றிகொள்விடையினானைமீளவும்வந்துபோற்றி
யற்றிரளனையகோதைகற்பினுக்கரசியோடுஞ்
சுற்றியசடையிராமன்றன்னகரடைந்தானிப்பால். (௩௭)

கலிநிலைத்துறை.

செங்கோலனந்தகுணபூஷணனன்றேயங்காப்பக்
கொங்கோடவிழ்தார்க்குலபூடணன்றன்னையீன்று
பொங்கோதைஞாலப்பொறைமற்றவன்பாலிறக்கி
யெங்கோனருளாற்சிவமாககதேகினனே. (௩௮)

மாயப்பசுவை வதைத்தபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் - ௨௯ - க்கு - திருவிருத்தம் - [illegible].

முப்பதாவது

மெய்க்காட்டிட்ட படலம்.

கொச்சகக்கலிப்பா.

பாவமெனவடிவெடுத்தபடிற்றமனைப்பழித்தழல்செய்
தேவருமறப்பசுவையேறுயர்த்தோன்விடைகத்திக்
காவலனைவிடுத்தழித்தகதையுணர்த்தும்மட்டாலைச்
சேவகன்மெய்க்காட்டிட்டவிளையாடற்றிறமுரைப்பாம். (௧)

வெவ்வியமும்மதயானைவிறற்குலபூடணன்சமணை
ரவ்வியவஞ்சனைகடந்தவனந்தகுணச்செழியன்பாற்
செவ்வியசெங்கோல்வாங்கித்திகிரிதிசைசெலவுருட்டி
வவ்வியவெங்கலிதுரந்துமண்காத்துவருகின்றான். (௨)

சவுந்தரசாமந்தனெனத்தானைகாவலனொருவன்
சிவந்தசடைமுடியண்ணலடியவரேசிவமாகக்
கவர்ந்தொழுகியருச்சிக்குங்கடப்பாட்டினெறிநின்றே
னுவந்தரசற்கிருமைக்குந்துணையாகியொழுகுநாள். (௩)

வல்வேடர்க்கதிபதியாய்வருசேதிராயனெனும்
வில்வேடனொருவனவன்விறல்வலியான்மேலிட்டுப்
பல்வேறுபரிமான்றேர்ப்பஞ்சவன்மேற்படையெடுத்துச்
செல்வேனென்றுறவலித்தான்றென்னர்பிரானஃதறிந்தான். (௪)

தன்னதுதாணிழனின்றசாமந்தன்றனைப்பார்த்தெம்
பொன்னறைதாழ்திறந்துநிதிமுகந்தளித்துப்புதிதாக
வின்னமுநீசிலசேனையெடுத்தெழுதிக்கொள்கென்று
னன்னதுகேட்டசனடிக்கன்புளானென்செய்வான். (௫)

தென்னவர்கோன்பணித்தபணியின்றள்ளச்சிந்தையிலன்
புன்னவரனருள்வந்துமுன்னீர்ப்பவொல்லைபோய்ப்
பொன்னறைதாழ்திறந்தறத்தாறீட்டியிடும்பொற்குவையுட்
டன்னதுளத்தவாவமையத்தக்கநிதிகைக்கவரா. (௬)

எண்ணிறந்தகளிப்பினொடுந்திருக்கோயிலிடத்தணைந்து
கண்ணிறைந்தபொன்முளரிக்கயந்தலைசீர்படிந்ததன
துண்ணிறைந்தமெய்யன்பினொளியுருவாய்முளைத்தெழுந்த
பண்ணிறைந்தமறைப்பொருளைப்பணிந்திறைஞ்சியிதுவேண்டும். (௭)

பண்ணியனுன்மறைவிரித்தபரமேட்டியெங்கோமா
னெண்ணியகாரியமுடிப்பாயிவையுனக்குமுன்னடிக்கீ
ழண்ணியமெய்யடியவர்க்குமாதக்கவெனவிரந்தப்
புண்ணியமாநிதிமுழுதுமவ்வழியேபுலப்படுப்பான். (௮)

அண்டமுகடுரிஞ்சிநிமிர்கோபுரமுமாயிரக்கான்
மண்டபமுங்கண்டிகையும்வயிரமணிகோளகையுங்
குண்டலமுந்தண்டரளக்குடைநிரையுங்கொடிநிரையுங்
கண்டனன்முன்னவனருளாற்பிறட்பெழுங்களைகண்டோன். (௯)

வானாடர்க்கவியுணவின்வகைமுந்நூன்மன்றன்முத
னனவாஞ்சிறுவேள்விநான்மறையோர்க்கறுசுவையி
னனதபேருண்டிதுறவடைந்தோர்க்கருத்துபலி
தானாதிபலவேறுதருமநனிதழைவித்தான். (௧0)

எவரேனுமுருத்திரசாதனங்கண்டாலெதிர்வணங்கி
யவரேசம்பிறப்பறுக்கவடிவெடுத்தவரனென்று
கவராதவன்புள்ளங்கசிந்தொழுகவருச்சித்துச்
சுவையாறினமுதருத்தியெஞ்சியவின்சுவைதெரிவான். (௧௧)

இன்றைக்காயிரநாளைக்கிருமடங்குவருநாட்கு
மன்றைக்கன்றிருமடங்காவரசனதுபொருளெல்லாங்
கொன்றைச்செஞ்சடையார்க்குமடியார்க்குங்கொடுப்பதனைத்
தென்றற்கோன்செவிமடுத்தார்சேனைக்கோனிதுசெய்வான். (௧௨)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

காவலனவைத்தெய்திக்காரியஞ்செய்வாரோடு
மேவினன்பிறநாட்டுள்ளவீரர்க்குவெறுக்கைபோக்கிச்
சேவகம்பதியவோலைசெலவிடுத்தழைப்பான்போலப்
பாவகஞ்செய்துநீட்டிப்பட்டிமையோலையுய்ப்பான். (௧௩)

எழுதுகதெலுங்கர்க்கோலையெழுதுககலிங்கர்க்கோலை
யெழுதுகவிராடர்க்கோலையெழுதுகமராடர்க்கோலை
யெழுதுககொங்கர்க்கோலையெழுதுகவங்கர்க்கோலை
யெழுதுகதுருக்கர்க்கோலையென்றுபொய்யோலைவிட்டான். (௧௪)

எங்குமிப்படியேயோலைசெலவிடுத்திருப்பவாறு
திங்களினளவுமந்தச்சேவகர்வரவுகாணு
தங்கதிர்வேலான்சேனைக்கரசனையழைத்துநாளை
வெங்கதிர்படுமுன்சேனையாவையும்விளித்தியென்றான். (௧௫)

என்றமன்னவனுக்கேற்கச்சாமந்தனிசைந்துவெள்ளி
மன்றவனடிக்கீழ்வீழ்ந்துவள்ளலேயரசனீந்த
குன்றறழ்நிதியமெல்லாங்கொண்டெனைப்பணிகொண்டாயே
வன்றிறற்சேனையீட்டும்வண்ணம்யாதென்னநின்றான். (௧௬)

அடியவர்குறைவுதீர்த்தாண்டருள்வதேவிரதம்பூண்ட
கொடியணிமாடக்கூடற்கோமகன்காமற்காய்ந்த
பொடியணிபுராணப்புத்தேட்புண்ணியனருளினாலே
யிடியதிர்விசும்புநீடியெழுந்ததோர்தெய்வவாக்கு. (௧௭)

சூழ்ந்தெழுசேனையோடுந்தோற்றுதானைநீயும்
வீழ்ந்தரசவையத்தெய்திமேவுதியென்னவின்னம்
போழ்ந்தெழுமாற்றங்கேட்டுப்பொருசோறுவகைவெள்ளந்
தாழ்ந்தனன்முந்நீர்வெள்ளத்தலர்கதிரவனுமாழ்ந்தான். (௧௮)

மீனவன்கானமேருவில்லிதன்றமனாவன்கண்
மானவேன்மறவராக்கிவாம்பரிவீரனாகத்
தானுமோர்கூத்துக்கோலஞ்சமைந்துவந்தாடவிட்ட
நீனிறவெழினிபோலக்காரிருணிவந்ததெங்கும். (௧௯)

புண்ணியமனையிற்போகிப்புலர்வதெப்போழ்தென்றெண்ணி
யண்ணல்சாமத்தன்றுஞ்சானடிக்கடியெழுந்துவானத்
தெண்ணிறைமீனநோக்கிநாழிகையெண்ணியெண்ணிக்
கண்ணுதலெழுச்சிகாண்பானனந்தனன்கங்குலெல்லாம். (௨௦)

தெருட்டருமறைகடேருச்சிவபரஞ்சுடரோனன்பன்
பொருட்டொருவடிவங்கொண்டுபரவிமேற்கொண்டுபோது
மருட்டடையெழுச்சிகாண்பான்போலவார்கலியின்மூழ்கி
யிருட்டுகள்கழுவித்தூயவிரவிவந்துதயஞ்செய்தான். (௨௧)

பொருசோறனையானோர்ந்துபோந்துகான்மாடக்கூடற்
கருணைநாயகனைத்தாழ்ந்துகைதொழுதிரந்துவேண்டிப்
பரவிநீள்கொடியொள்வெண்டிங்கட்பன்மணிக்குடைக்கீழேகிக்
குருமதிமருமான்கோயில்குறுகுவான்குறுகுமெல்லை. (௨௨)

கரைமதியெயிற்றுச்சங்குகன்னன்முன்னுணவென்றி
பிரமதகணமுங்குண்டப்பெருவயிற்றொருவனாதி
வரைபுரைகுறுந்தாட்பூதமறவருங்குழுமிவீக்கு
குரைகழல்வலியநோன்றாட்கோனுடையவராகி. (௨௩)

கெட்டிலவடிவாள்குந்தந்தோமரநேமிகைத்தோ
ரொட்டியகணிச்சிசாபமுடம்பிடிமுதலாவெண்ணப்
பட்டவெம்படைமூவாறும்பரித்தசெங்கையர்காலிற்
கட்டியகழலர்காலிற்கடியராய்ப்புறம்புகாப்ப. (௨௪)

வார்கெழுகழற்கானக்கிமாகாளன்பிருங்கிவென்றித்
தார்செழுநீகும்பன்கும்போதரன்முதற்றலைவர்யாரும்
போர்கெழுவசந்தொட்டுப்புண்டரநுதலிற்றீட்டிக்
கூர்கெழுவடிவாளேந்திக்குதிரைச்சேவகராய்ச்சூழ. (௨௫)

கற்றைச்சாமரைகள்பிச்சங்கவிகைபூங்கொடிக்காடெங்கு
முற்றக்காரொலியுகாணத்தூரியமுழுதுமேங்கக்
கொற்றப்போர்விடையைத்தானேகுரக்குளைப்பரியாமேற்கொண்
டொற்றைச்சேவகராய்மாதியாடியவொருவர்வந்தார். (௨௬)

பல்லியமொலிக்குமார்ப்பும்பாய்பரிகலிக்குமார்ப்புஞ்
செல்லொலிமுழக்கமன்னர்தெழித்திடுமார்ப்புமொன்றிக்
கல்லெனுஞ்சும்மைத்தாகிக்கலந்தெழுசேனைமேனுண்
மல்லன்மாநகர்மேற்சீறிவருகடல்போன்றதன்றே. (௨௭)

சேனையின்வரவுநோக்கித்திருமகன்றிருமுன்னேகுந்
தானையர்தலைவன்றென்னன்றுணிபுல்லருகிக்கூற
மீனவனுவகைபூத்துவெயின்மணிக்கடையிற்போந்தவ்
கானமண்டபத்திற்செம்பொனரியணைமீதுவைகி. (௨௮)

தெவ்வடுமகிழ்ச்சிபொங்கச்சேனையின்செல்வநோக்கி
யெவ்வெத்தேயத்திலுள்ளாரிவரென்னவெதிரேகின்ற
கௌவையின்மனச்சாமந்தன்கையிற்பொற்பிரம்புநீட்டி
யவ்வவர்தொகுதியெல்லாமணியணிசிறவிக்கூறும். (௨௯)

கலிவிருத்தம்.

கொங்கரிவரையகுருநாடரிவரைய
சங்கரிவரையகருநாடரிவரைய
வங்கரிவரையவிவராரியர்களைய
வங்கரிவரையவிவர்மானவர்களைய. (௩௦)

குலிந்தரிவரையவிவர்கொங்கணர்களைய
தெலுங்கரிவரையவிவர்சிங்களர்களைய
கலிங்கரிவரையகௌடத்தரிவரைய
வுலங்கெழுபுயத்திவர்களொட்டியர்களைய. (௩௧)

கொல்லரிவரையவிவர்கூர்ச்சரர்களைய
பல்லரிவரையவிவர்பப்பரர்களைய
வில்லரிவரையவிவர்விதேகரிவரைய
கல்லொலிகழற்புனைகடாரரிவரைய. (௩௨)

கேகயர்களாவிவர்கள்கேழ்கிளர்மணிப்பூண்
மாகதர்களாவிவர்மராடரிவர்காஞ்சி
நாகரிகராவிவர்களம்முடையநாட்டோ
ராகுமிவர்தாமெனமெய்காட்டியறிவித்தான். (௩௩)

இத்தகையசேட்புலனுளாரையிவனுய்த்த
வித்தகமையென்னென்வினவியருள்செய்யே
லத்தகின்றும்பொருளினைத்தும்வரையாதே
யுய்த்தவினடைந்தனர்களாலெனவுரைத்தான். (௩௪)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அங்கெடுஞ்சேனைதன்னுட்சேனிடையடன்மாவூர்ந்து
பின்னுறநிற்குமொற்றைச்சேவகப்பிரானைநோக்கி
மன்னவனிவர்யாரொன்னசசாமந்தன்வணங்கியைய
வின்னவர்சேனைவெள்ளத்தியாசையென்றறிவதென்றான். (௩௫)

அவனையிங்கழைத்தியென்றனரசன்றன்வழிச்செல்வார்போற்
கவையமிட்டவரும்போர்த்தார்காவலன்களிகூர்ந்தம்பொன்
னவமணிக்கலன்பொன்றூடைகஸ்திறுனுள்ளன்றன்பு
தவறிலான்பொருட்டேவாங்கித்தரித்துத்தந்தமர்க்குமீந்தார். (௩௬)

ஆய்ந்தவெம்பரிமாத்தாண்டியைங்கதிரடத்திக்காட்டி
யேய்ந்தஞ்சேனைவெள்ளத்தெய்திறுரெய்துமெல்லை
வேய்ந்ததார்ச்சேதிராயன்வேட்டைபோய்ப்புலிகோட்பட்டு
மாய்ந்தனனென்றோரொற்றன்வேந்தன்முன்வந்துசொன்றான். (௩௭)

முரசதிரனிகநோக்கிமுகமலர்ந்துவகைபூத்த
வரசனுமனிகவேந்தற்கள்ளிற்சேர்த்தலைமையோடும்
வரிசைகண்மிதப்பநல்கிவந்துமெய்க்காட்டுத்தந்து
பரசியபதாதித்தம்பதிபுகச்செலுத்துகென்றான். (௩௮)

அறைந்தவார்கழற்காற்சேனைகாவலனிகந்தத்தஞ்
சிறந்தசேணுட்டிற்செல்லச்செலுத்தவான்போன்றபிற்ப
நிறைந்தரான்மாடக்கூடனிருந்தனந்நிலைநின்றங்கே
மறைந்தனன்மனிதவேடங்காட்டியமறவரோடும். (௩௯)

கண்டனன்பொருநைாடன்வியந்தனன்கருத்தாசங்கை
கொண்டனன்குறித்துநோக்கியீதங்கூடன்மேய
வண்டர்தம்பெருமான்செய்தவாடலென்றெண்ணிக்கண்ணீர்
விண்டனன்புளகம்போர்ப்பமெய்யன்புவடிவமானான். (௪௦)

தனக்குயிர்த்துணையாகின்றசாமந்தன்றன்னைநோக்கி
யுனக்கெளிவந்தார்கூடலுடையநாயகரேயென்று
னெனக்கவராவார்நீயேயென்றவற்கியாவுநல்கி
மனக்கவல்பின்றிவாழ்ந்தான்மதிவழிவந்தமைந்தன். (௪௧)

மெய்க்காட்டிட்டபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் - ௩௰ - க்கு - திருவிருத்தம் - ௧௭௦௪.

முப்பத்தோன்றாவது

உலவாக்கிழியருளியபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அடியார்பொருட்டேப்பரிவயவராகிச்செழியன்காணவிடைக்
கொடியார்வந்துமெய்க்காட்டுக்கொடுத்தவண்ணமெடுத்துரைத்தங்
கடியார்கொன்றைமுடியாரக்கன்னிநாடன்றனக்கிசைந்த
படியாலுலவாக்கிழிகொடுத்தபடியையறிந்தபடிபகர்வாம். (௧)

வள்ளல்குலபூடணன்றிங்கள்வாரந்தொடுத்துச்சிவதரும
முள்ளவெல்லாம்வழாதுநோற்றொழுகும்வலியாற்றன்னாட்டி
லெள்ளவில்லாவேதியனாயிகழ்ந்தானதனான்மழைமறுத்து
வெள்ளமருகவளங்குன்றிவிளைவஃகியதுநாடெல்லாம். (௨)

அறவோரெல்லாஞ்சிரப்பெய்தியாகங்கிடந்தநூலன்றி
மறைநூலிழந்துமுனிவேள்விவானோர்வேள்விதென்புலத்தி [பான்
றுறைவோர்வேள்வியிழந்திழிந்ததொழில்செய்தாற்றுதபிர்வளர்ப
புறநாட்டணைந்தார்பசியாலேபுழுங்கியொழிந்தகுடியெல்லாம். (௩)

எந்நாட்டினைவேமெனவிரங்கவிரங்கிமதிக்கோன்மதிநாளிற்
பொன்னாண்முனரித்தடங்குடைந்துசித்திக்களிற்றைப்பூசித்துத்
தன்னாதரவாற்கயற்கண்ணிதலைவன்றன்னையருச்சித்து
முன்னாவீழ்ந்துகரமுகிழ்த்துப்பழிச்சிமகிழ்ந்துமொழிகின்றான். (௪)

அத்தவுலகிலுயிர்க்குயிர்நீயல்லையோவவ்வுயிர்பசியா
லெய்த்தவருத்தமடியேனைவருத்துமாறென்யானீட்டி
வைத்தபொருளுந்தருமத்தின்வழியேசென்றதினியடிகள்
சித்தமலர்ந்தென்விடும்பைவினைதீரவருட்கண்செய்கவென. (௫)

கோளாடரவமரைக்கசைத்தகூடற்பெருமான்குதிரைக்கு
மாளாவரசன்றவறுசிறிதகங்கொண்டதனைத்திருச்செவியிற்
கேளார்போல்வாளாதேயிருப்பமன்னியிற்கிடைத்தமலன்
றாளாதரவுபெறவினைந்துதனையிற்கிடந்துயில்கின்றான். (௬)

அங்கண்வெள்ளியம்பலத்துள்ளாடுமொருகளவன்கனவிற்
சங்கக்குழையும்வெண்ணீறுஞ்சரிகோவணமுந்தயங்கவுரன்
சிங்காதங்கிடந்தசையச்சித்தவடிவாயெழுந்தருளி
வெங்கண்யானைத்தென்னவர்கோன்முன்னின்றிதனைவிளம்புவார். ()

ஏடாரலங்கல்வரைமார்பவெம்பாலன்பாமண்புடைமை
வாடாவிரதவிழுச்செல்வருடையாய்வையமறங்கடிந்து
கோடாதளிக்குஞ்செங்கோன்மையுடையாயுனக்கோர்குறையுள தன்
வீடாவளஞ்சேர்நாட்டிங்காவ்வேள்விச்செல்வமருகியதால். (௮)

மறையேகமதுயிரிடையாமறையோர்மதுயாதகையா
மறையேகமதுவாகனாமறையேகமதுபுரமா
மறையேகமதுகோவண்யாமறையேகமதுவிழியாகு
மறையேகமதுமொழியாகுமறையேகமதுவடிவாகும். (௯)

வேதந்தானேகமதாணைச்சத்திவடிவாய்விதிவிலக்காய்ப்
போதங்கொளுத்திநிலைநிறுத்திப்போகங்கொடுத்துப்பல்லுயிர்க்கும்
பேதஞ்செய்யும்பிணியவிழ்த்தெம்பிரியாவீடுதருவதுதே
னூதஞ்செய்யுந்தார்வேந்தேநமதுசெங்கோலதுவாகும். (௧௦)

அந்தமறைகடயக்குறவியாவாரந்நூல்வழிகலிகோய்
சிந்தமகத்தீவளர்த்தெம்பாற்சிந்தைசெலுத்துமந்தணர
விந்தமறையோர்வேள்விக்கிமைக்கேதுவாகுமிவர்தம்மை
மைந்தவிகழ்ந்துகைவிட்டாயதனுன்மாரிமறுத்தன்றால். (௧௧)

மும்மைப்புவனங்களுமுய்யமுத்தீவேட்குமிவர்தம்மை
நம்மைப்போலக்கண்டொழுகிநாளுநாளுவறம்பெருக்கிச்
செம்மைத்தருமக்கோலோச்சித்திகிரியுருட்டிவாழ்தியென
வும்மைப்பயன்போலளிவந்தாருலவாக்கிழியென்றதுவுவார். (௧௨)

இந்தக்கிழியிலெத்துணைப்பொன்னெடுத்துவழங்குத்தொறுமாங்க
டந்தவளவிற்குறையாததன்மைத்தாகுமிதுகொண்டு
வந்தவிலம்பாடகற்றென்றுகொடுத்துவேந்தன்மனக்கவலை
சிந்தத்திருநீறதுசாத்திமறைந்தாரையர்திருவுருவம். (௧௩)

கண்டகனவுநனவாகத்தொழுதானெழுந்துகௌரியர்கோ
னண்டர்பெருமான்றிருவடிபோலம்பொற்கிழியைமுடித்தலைமேற்
கொண்டுமகிழ்ச்சிதலைசிறப்பவின்றோர்முகூர்த்தங்கூத்தாடித்
தண்டாவமைச்சர்படைத்தலைவர்தமக்குக்காட்டியறிவித்தான். (௧௪)

செங்கணரிமான்பிடர்சுமந்ததெய்வமணிப்பூந்தவிசேற்றிச்
சங்கமுழங்கமறைமுழங்கச்சாந்தந்திமிர்ந்துநாதொழுகத்
தொங்கலணிந்துதசாங்கவிளைத்துபசாரஞ்செய்ச்சுடர்வலஞ்செய்து
கங்கைமிலைந்தகடவுளெனக்கருதிப்பூசைவினைமுடித்தான். (௧௫)

அடுத்துவணங்கிவலஞ்செய்திட்டம்பொற்கிழியைப்பொதிநீக்கி
யெடுத்துமுத்தீவினைஞர்க்குமியாகங்களுக்குமியாவர்க்கு
மடுத்தாளும்வரையாதுவழங்கவழங்கவடியார்க்குக்
கொடுக்கக்குறையாவீட்டின்பமாயிற்றையர்கொடுத்தகிழி. (௧௬)

ஆயபொதியில்வளைபொன்னலைசம்புசெய்துவிசும்பிழிந்த
கோயிலதனையகம்புறமுங்குயின்றுஞானக்கொழுந்தனைய
தாயிற்றுகாற்பீடிகைவான்றடவுகொடியநெடியபெரு
வாயில்பிறவுமழகெறியவேய்ந்தான்மறையின்வரம்பறிந்தான். (௧௭)

முத்திக்குறையாகிடுக்கட்கலைமுகந்துமுகந்துநாடோறுஞ்
சித்திக்குலப்பூடணக்கொண்டறெய்வதருமப்பயிர்வளர்ப்பப்
பத்தித்திரைமுந்நீர்மேகம்பருகிச்சொரியப்பலவளனு
நத்திக்கன்னிநாடனைகையர்போற்செல்வந்தழைத்தன்றே. (௧௮)

எழுசீரடியாசிரிய விருத்தம்.

வையாகரணர்களையா யிகர்மறை வல்லோர்மறைமுடி சொல்
லாய்வோர், மெய்யாமிருதிகள் பொய்யாவிரதிகள் வேள்வித்தழல்
களை வளர்ப்போர், பையாடரவணி யையனையனுனை பகர்வோரு
லகிய லகல்வோர்கள், ளெய்யாதுறைதலி லையாதளகைய தென்னப்
பொலிவதுதென்னாடு. (௧௯)

உலவாக்கிழியருளியபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் ௪௦-க்கு - திருவிருத்தம் ௧௭௨௯.

முப்பத்திரண்டாவது

வளையல்விற்றபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

வேதத்தலைதவழ்வென்றவின்னின்றிழிந்தவிமானமறைக்
கீதன்செழியன்றனக்குலவாக்கிழிதந்தளித்தவழியிதுவப்
போதங்கடந்தபொருள்வணிகப்புத்தேண்மாடமணிமறுகு
பாதந்தடவடக்கவளைபகர்ந்தபரிசுபகர்கிற்பாம். (க)

இறைவன்குலபூடணன்றிகிரியிவ்வாறருட்கோன்முன்னாட்
சிறைவண்டறையுந்தாருவனதெய்வமுனிவர்பன்னியர்தக்
நிறைவன்றளக்குகாட்டுகெனநெடியோன்மகளைப்பொடியாக்கு
மறவன்றானோர்காபாலியாகிப்பலிக்குவருகின்றான். (உ)

வேதமசைக்குங்கோவணமுமெய்யிணீறுமுள்ளாளக்
கீதமிசைக்குங்கனிவாயுமுள்ளேநகையுங்கிண்கிணிசூழ்
பாதமலரும்பாதுகையும்பலிகொள்கல்லுங்கொண்டிராதி
மாதர்கணவன்றவவேடமெடுத்தாரொத்துவருமெல்லை. (ங)

விண்ணுங்கமலச்சேவடிசூழ்சிலம்பிநொலியுமிடறதிரத்
தண்ணுங்கீதவொலியுங்கைத்துடியினொலியுந்தொளைச்செவிகேண்
டுள்ளம்பிளந்துகிறைகளைந்தீர்த்தொல்லைவருமுன்வல்லியர்கண்
பள்ளங்கண்டவருபுனல்போற்பலிகொண்டில்லின்புறம்போந்தார். ([illegible])

மேற்படி - வேறு.

ஐயங்கொண்டுவரவாயர்பரிகலத்தையமன்றிக்
கையம்பொன்வளையும்பெய்வார்கருத்தானன்றிக்காசு
செய்யும்பொன்மருங்குறனுமிழப்பர்வேள்சிலையம்பன்றிக்
கொய்யுந்தண்மலர்க்கணம்புங்கொங்கையிற்சொரியச்சோர்வார். (ரு)

மடமயிலனையாரொங்கள்வளையினைத்தருதியொன்றார்
கடல்விடமயின்றானுங்கள்கைத்தர்த்துள்ளதென்றான்
மடமதிக்கொம்பனாரொங்கலையினைத்தருதியொன்றார்
முடமதிமிலைந்தானுங்கண்முகமதியிடத்ததென்றான். (சு)

இடையறிந்தெம்மைச்சேர்தியென்றனரினையவொங்கோன்
கடலமுதனையீர்நுங்கட்கிடையினிக்காணுதென்றான்
மடகலாரஃதேற்பண்டைவண்ணமீந்தில்லிற்செல்ல
விடையளித்தருண்மியென்றார்வேலைபுக்குறங்குமென்றான். (எ)

கங்கையர்கபாலிக்கென்றுகடுவிலைபோலுமென்றா
ரங்கணனடுவிலாமைநம்மனோர்க்கடுத்ததென்றான்
மங்கையரடிகணெஞ்சம்வலியகற்போலுமென்றார்
கொங்கலர்கொன்றையானுங்கொங்கையேவன்கலென்றான். (அ)

காதுவேலன்னகண்ணார்கங்கைநீர்சுமந்ததேதுக்
கோதுமியென்றார்நும்பாலுண்பலியேற்கவென்றா
னேதுபோலிருந்ததையனிசைத்தசெப்பென்றாரீசன்
கோதறுவமுதன்னீர்நுங்கொங்கைபோலிருந்ததென்றான். (கூ)

கறுத்ததைபெவன்கொலையகந்தரமென்றார்வேளை
வெறுத்தவன்மாரிபெய்தற்கென்றனன்விழியால்வேலை
யொறுத்தவர்யாவதென்னீருத்தரமென்றார்கூற்றைச்
செறுத்தவன்றென்பானின்றுநோக்கினுற்றெரிவதென்றான். (க0)

செக்கரஞ்சடையான்கண்ணிற்றம்முருத்தெரியநோக்கி
யிக்கொடியார்போற்கண்ணுளெம்மையுமிருத்தியொன்றார்
நக்கனுந்தனையன்னார்கண்ணிடைக்கண்டுநகைத்துநம்மின்
மிக்கவர்நுங்கணுள்ளார்விழித்தவர்க்காண்மியென்றான். (கக)

அஞ்சலிப்போதுபெய்வார்சரணமென்றடியில்வீழ்வார்
தஞ்சென்தளிர்க்கைநீட்டித்தழுவியகிடைக்குந்தோறு
மெஞ்சுவானெஞ்சாதேத்தியெதிர்மறையெட்டுந்தோறும்
வஞ்சனுமகல்வான்மையல்வஞ்சியர்க்கணியனுமோ. (கஉ)

அடுத்தெமைத்தழாதிரேனீரவிழ்ந்தபூங்கலையைமீள
வுடுத்துமினும்பால்யாங்கண்மையனுயுழப்பநோக்கிக்
கடுத்தெமர்முனியாமுன்னங்கழற்றியவளையுங்கைபி
லெடுத்திடுமென்றார்காளையிடுதுமென்றேகினானே. (கங)

பிள்ளைவெண்டிங்கள்வேய்ந்தபிரான்கொண்டுபோனகாணு
முள்ளமுமீட்கலாற்றாதயங்கினார்கலையுஞ்சங்குந்
தள்ளவைக்கனையான்வாளிதொளைப்பவெம்பசலையாகக்
கொள்ளைகொண்டுண்ணநின்றாரக்கிலைகொழுநர்கண்டார். (கச)

பொய்தவவடிவாய்வந்தம்மனைப்பொன்னினன்னுர்
மெய்தழைகற்பைகானைவேரொடுங்களைந்துபோன
கைதவன்மாட்டுக்கூடற்கடவுளென்றெண்ணித்தேர்ந்தார்
செய்தவவலியாற்காலமூன்றையுந்தெரியவல்லார். (கரு)

மேற்படி - வேறு.

கற்புத்திரிந்தார்தமைநோக்கிக்கருத்துத்திரிந்தீர்நீராழி
வெற்புத்திரிக்குமதிற்கூடன்மேயவணிகர்கன்னியராய்ப்
பொற்புத்திரியாதவதரிப்பீர்போமென்றிட்டசாபங்கேட்
டற்புத்திரிந்தாரெங்களுக்கிதகல்வதெப்போதெனமுனிவர். (கசு)

அந்தமாடமதுரைக்கர்க்கரசாகியசுந்தரக்கடவுள்
வந்துநும்மைக்கைதீண்டும்வழியிச்சாபங்கழியுமெனச்
சிந்தைதளர்ந்தபன்னியருந்தென்னர்மதுரைத்தொன்னகரிற்
கந்தமுல்லைத்தார்வணிகர்காதன்மகளிராய்ப்பிறந்தார். (கஎ)

வளர்ந்துபேதையிளம்பருவமாறியல்குற்புடையகன்று
தளர்ந்துகாஞ்சிமருங்கொசியத்ததும்பியன்னுந்தரும்புமுலை
கிளர்ந்துசெல்லும்பருவத்திற்கிடைத்தாராகவிப்பான்மண்
ணளந்தவிடையான்வந்துவளைகருவண்ணமறைகிற்பாம். (கஅ)

கங்கைகரந்துமணிகண்டங்கரந்துநுதற்கண்கரந்தொருபான்
மங்கைவடிவுங்கரந்துழைபுமழுவுங்கரந்துமழவிடையூ
ரங்கணழகர்வளைவணிகராகியேனமளந்தயிதாக்
செங்கமலச்சேவடியிரண்டுந்திரைநீர்ஞாலமகள்சூட. (க௯)

பண்டுமுனிவர் பன்னியர்பாற் கவர்ந்தவளையே பட்டுவடங், கொ ண்டுதொடுத்து மீண்டவர்க்கே யிடுவேமெனமுட் கோளினார்போற், றெண்டர்தொடுத் தவைவன்னத் துணர்த்தார்போலத் தோள்சும ந்து, மண்டுவளையை விலைபகர்ந்து வணிகமறுகில் வருகின்றார். (உ0)

மன்னுமறையின்பொருளுரைத்தமணிவாய்திறந்துவளைகொண்மி
னென்னுமளவிற்பருவமுகிலிமிழின்னிசைகேட்டெழுமயில்போற்
றுன்னும்மணிமேகலையிழற்றத்தூயவணிகர்குலமகளிர்
மின்னுமணிமாளிகைநின்றும்வீதிவாயிற்புறப்பட்டார். (உக)

வளைகளிடுவாரெனத்தங்கண்மனமெல்லாந்தம்புடையொதுங்கத்
தலைகளிடுவார்வருகின்றார்தம்மைக்கொம்மைவெம்முலையார்
தொளைகளிடுதீங்குழலிசைபோற்சுரும்புபாடக்கருங்குழன்மேல்
விளைகளொழுகநுடங்கிவருமின்போலடைந்துகண்டார்கள். (உஉ)

கண்டவடிவாற்றினைப்பதற்குக்கழிபேரன்புகாதல்வழிக்
கொண்டுசெல்லவொருசார்தங்குணநாணமுதனான்கு
மண்டியொருசார்மறுதலைப்பமனமுழன்றுதடுமாற
வண்டர்பெருமான்விளையாடற்கமையச்சூழ்ந்தாரமுதனையார். (உங)

கலிவிருத்தம்.

இரங்குமேகலைசிலம்பன்றியேனைய
விரும்பியகுழைதொடிமின்செய்கண்டிகை
மருங்கிறச்சுமப்பினும்வளைக்கில்லெனி
னரும்பியமுலையினர்க்கழகுண்டாகுமோ. (உச)

செல்வநல்வணிகிரொஞ்செங்கைக்கேற்பன
நல்வளைதெரிந்திடுமென்றுகாய்கர்முன்
வல்வளரிளமுலைமகளிர்மின்னுமிழ்
கல்வளர்கடகமென்காந்தணீட்டினர். (உரு)

பண்டருகிளவியங்கயற்கட்பாவைகைத்
தண்டளிர்பற்றியதடக்கைமாதர்கைம்
முண்டகம்பற்றியேமுகிழ்த்துப்பல்வரி
வண்டுகளேற்றுவார்மையலேற்றுவார். (உசு)

புங்கவனிடுவளைபுடைத்தமீளவர்
தெங்களுக்கிடவிலையிடுதிரெனக்
கொங்கவிழ்பைங்குழலெருந்தங்கோட்டின்
றங்கர்நீட்டுவாராசைநீட்டுவார். (உஎ)

எமக்கிடுமெமக்கிடுமெனப்பின்பற்றிய
வமைத்தடத்தோளினாரணங்கன்பூங்கணை
தமைத்தொளைபடுத்தவோர்சார்பிலாமையாற்
கமைப்புறுநாணமுதற்காப்புநீக்கினர். (உஅ)

முன்னிடுவளையெலாங்கழலமுன்புகுந்
தின்னவைபெரியவேறிடுமென்றிட்டபி
னன்னவுமனையவேயாகமீளவு
மின்னமுஞ்சிறியவாவிடுமென்றேந்துவார். (உ௯)

பின்னிடும்வளைகளுஞ்சரியப்பேதுற
முன்னெதிர்குறுகிநீர்செறித்தமொய்வளை
தன்னொடுகையகளுஞ்சரிவதேயென
மின்னெனநுடங்கினார்வேனெடுங்கணார். (௩0)

இவ்வளைபோல்வனயாமுன்கண்டிலே
மெய்வ்வளைவணிகரிவ்வரியவெள்வளை
யெவ்வயினுள்ளவின்றினியவாகியெம்
மெய்வ்வளர்பொடிப்பெழவீக்கஞ்செய்தவே. (௩௧)

காளையும்வளையிடாவென்னுமிங்கென்பார்
கோள்வளைவிலையிதுகொண்டுபோமென்பார்
வாள்விழியீர்பின்னுள்வாங்கிக்கோடுமென்
றுளரியேறனாராடிப்போயினர். (௩௨)

போயினவணிகர்தம்புடையின்மின்னெனப்
பாயினமகளிரும்பலருங்காணமுன்
மேயினவிண்ணிழிவிமானத்துள்ளொளி
யாயினதிருவுருவாகித்தோன்றினர். (௩௩)

எழுசீரடி யாசிரியவிருத்தம்.

மட்டலம்புகோதையார்முன்வளையகர்ந்தவணிகர்தாம்
பட்டிசைந்தவல்குனங்கைபாகராகுமெனவியந்
திட்டதும்புமுவகைவெள்ளமுற்றெழுந்தகுழியோத்
கட்டதும்புனலிலாழ்ந்துகளியடைந்தகவொலாம். (௩௪)

உருவிலாளியுடல்பொடித்தவொருவர்கூடலிருவரான்
மருவிலார்திருக்கைதொட்டுவளைசெறித்தசீர்மையாற்
கருவின்மாதராகிநாய்கர்கன்னிமார்கண்மின்னுவேற்
பொருவில்காளையெனவரம்பில்புதல்வரைப்பயந்தனர். (௩௫)

பிறந்தமைந்தராளவிறந்தபெருமைகொண்டபெருமிதஞ்
சிறந்தவீரமாற்றலேற்றதிறல்புனைந்துவைகினார்
மறந்தும்புவேனெடுங்கண்வணிகமாதர்சிறிதுகா
டுடந்தான்றனருளடைந்துதுணையடிக்கண்வைகினார். (௩௬)

வளையல்விற்றபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் - ௩௨ - க்கு - திருவிருத்தம் - ௧௭௫௯.

முப்பத்துமூன்றாவது

அட்டமாசித்தியுபதேசித்தபடலம்.

எழுசீரடியாசிரியவிருத்தம்.

தொத்திலங்குகொன்றைவேந்தகூடலாதிமாடநீள்
பத்தியம்பொன்மறுகணைந்துவனைபகர்ந்தபரிசுமுன்
வைத்தியம்பினுமியக்கமாதர்வேண்டவட்டமா
சித்திதந்ததிறமினித்தெரிந்தவாறுசெப்புவாம். (௧)

மின்னலங்கல்வாகைவேல்விழுப்பெருங்குலத்தினிற்
றென்னவன்றனாணைநேமிதிசையெலாமுருட்டுநாள்
முன்னைவைகதூழிதோறுமோங்குமொய்வலாக்கனே
மின்னுதன்பராரைபாலவிழன்மருங்குமறைமுதல். (௨)

அடிப்பமாசில்வெள்ளிவெற்பருகிருக்குமாகதங்
கடிப்பவாமமிசையிருந்துகனகவெற்பன்மகளொடும்
வடிப்படாதகற்பினுண்மடித்துவெள்ளிலைச்சுருள்
கொடுப்பநேசமுறுபோகருரவனாகிவைகினான். (௩)

பிருங்கிநந்திவேமுதற்பெருந்தகைக்கணத்தரு
மருங்கிருந்தசனகனாதிமாதவத்தர்நால்வரு
மொருங்கிறைஞ்சியுண்ணவண்ணவமுதமூறுசிவகதைக்
கரும்பருந்தவாய்மலர்ந்துகருணைசெய்யுமெல்லைவாய். (௪)

பெணவமூழ்குசூர்தடிந்தபாலனுக்குமுலைகொடுத்
தெவ்வமாயவினைகடிரியக்கமாதராறுவருந்
தெய்வநீறுமுழுதணிந்துசெய்யவேணிகண்டிகைச்
சைவவேடமாதவந்தரித்துவந்துதோன்றினார். (௫)

மந்திரச்சிலம்பலம்புமலரடிக்கண்வந்திசெய்
தெந்தைபட்டசித்திவேண்டுமெங்களுக்கெனத்தொழா
வந்தளிர்க்கைவரிசைப்பவண்ணறன்மடித்தலந்
தந்திருக்குமாதையங்கைசுட்டியீதுசாற்றுமால். (௬)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அலர்பசும்பொலங்கொம்பன்னவணங்கிவணிறைவாலெங்கு
மலர்பராசத்தியாகிமகேசையாயணிமாவாதிப்
பலர்புகழ்சித்தியெட்டும்பணிந்தருந்தேவல்செய்யுஞ்
சிலதியராகிச்சூழ்ந்துசேவகஞ்செய்யவைகும். (௭)

இலகீர்சித்தித்தான்முன்னீட்டியவினையைநீக்கித்
தவலருஞ்சித்தியெட்டுந்தருமெனக்கருணைபூத்துச்
சிவபரஞ்சோதியெட்டுச்சித்தியுந்தெளித்தல்செய்தா
னவரதுமறந்தாருமையாழ்வினைவலத்தான்முன்னே. (௮)

செழுமதிப்பிளவுவேய்ந்ததேவுமக்குற்றநோக்கி
முழுமதிமுகத்தினாமுனிந்துநீர்பட்டமங்கைப்
பழுமரமுதலஞ்ஞானப்பாறையாய்க்கிடப்பீரென்னக்
கழுமலுற்றவர்தாழ்ந்தென்றுகழிவதிச்சாபமென்றார். (௯)

இப்படிகருங்கலாகிக்கிடத்திராயிரம்யாண்டெல்லைக்
கப்புறமதுரைநின்றுமடுத்துமைத்தொடுத்தசாயத்
தப்புறநோக்கிதுங்கவொல்லுருகல்கிச்சித்தி
கைப்படுகனிபோற்காணக்காட்டுதும்போதிரென்றான். (௧௦)

வஞ்சிவிருத்தம்.

கொடியனார்களறுவரு, நெடியவாணிமிர்த்துகார்
படியும்பட்டமங்கையா, லடியிற்பாறையாயினார். (௧௧)

கதிர்கலம்பெய்காட்சிபோ, லதிர்பழுத்திருடலெலாம்
புதைபடக்கிடந்தனர், மதரரித்தடங்கணார். (௧௨)

பருவமாயிரங்கழிந், தொருவமாடமதுரையெய்
குரவனெண்குணத்தினன், பிருவனர்திரும்பினன். (௧௩)

தன்னதிச்சைகொண்டதோ, பின்னருட்குரவனா
யக்கெங்கலாயினார், முன்னர்வந்துதோன்றினான். (௧௪)

இருட்டதும்புகோதையார், மருட்டதும்புவினைகெட
வருட்டதும்புகண்ணினாற், றெருட்டதும்பநோக்கினான். (௧௫)

அடிகணைக்கவம்புயங், கடிகொணெய்தல்காத்தளைப்
கொடிகொள்முல்லைகுமுதமேற், படியப்பூத்தபாறையே. (௧௬)

நாக்கவேதகத்திரும், பாக்கமுற்றபொன்னென
நீக்கமற்றவிருண்மல, வீக்கமற்றுவிட்டதே. (௧௭)

நிறையுமன்பெனுக்கறி, பொறையெனுங்கனாகடத்
திறைவனின்னருட்கடற், றுறையின்வாய்மடுப்பவே. (௧௮)

எழுந்திறையடிக்கணே, யழுந்துநேசமொடுதவக்
கொழுந்தனார்களறுவரும், விழுந்திறைஞ்சினாரரோ. (௧௯)

குமரற்கூட்டுமினமுலை, யுமையொப்பார்கள்சென்னிமே
லமலச்சோதியங்கையாங், கமலப்போதுசூட்டினான். (௨௦)

சித்தியெட்டுமெங்கலார், புத்தியிற்கொளுத்தவே
கைத்தலத்தில்வைத்ததோர், முத்தெனத்தெருட்டுவான். (௨௧)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அணிமாமகிமாவிலகிமாவரியகரிமாப்பிராத்திமலப்
பிணிமாசுடையோர்க்கடைவரியபிராகாமியமீசத்துவமெய்
யணிமாயோகர்க்கெளியவசித்துவமென்றெட்டாமிவையுளக்கண்
மணிமாசறுத்தோர்விளையாட்டின்வகையாவற்றின்மரபுரைப்பாம்.

அறவுஞ்சிறியவுயிர்தோறுந்தான்பரமகாட்டையணுவாய்ச்சென்
றுறைதலுஞ்சிறுமைமணிமாவாமுவரிஞாலமுதன்மேலென்
றறையுஞ்சிவாந்தமாறுநூன்முன்னும்புறனுமகவாதே
நிறையும்பெருமைதனையன்றேமகிமாவென்னுநிரம்பியநூல். (௨௨)

இலகுமேருபாரம்போலிருக்கும்யோகிதனையெடுத்தா
லிலகுவானதூலமெனவிருப்பதிலகிமாவாகு
மிலகுவானபரவணுப்போலிருக்கும்யோகிதனையெடுத்தா (௨௩)
லிலகுமேருபாரமெனவிருப்பதன்றோகரிமாவாம்.

பிலத்திலிருந்தோனயனுலகிற்புகுதன்மீண்டும்பிலமடைதல்
பலத்தின்மிக்கபிராத்தியதாம்பராகாயத்திலெண்ணுதல்வான்
புலத்தினியங்கலிச்சித்தபோகமனைத்துந்தானிருக்குந் (௨௪)
தலத்திலினைந்தபடிவருதல்பிராகாமியமாந்தவக்கொடியீர்.

விண்ணிலிரவிதன்னுடம்பின்வெயிலாலனைத்தும்விளக்குதல்போன்
மண்ணிலுளவாம்பொருள்பலவுங்காலமூன்றும்வானத்தின்
கண்ணிலுளவாம்பொருளுந்தன்காயத்தொளியாலிருந்தறித ()
லெண்ணிலிதுவுமறையொருசார்பிராகாமியமென்றியம்புமால்,

ஈசனென முத்தொழிலுந் தன்னிச்சைவழிசெய்தெழுபுரவித்
தேசன்முதற்கோள்பணிகேட்பத்திகழ்வதீசத்துவமாகும்
பூசலவுணர்புள்விலங்குபூதமனிதர்முதலுலகும்
வாசவாதியெண்மருந்தன்வசமாக்கொள்கைவசித்துவமாம். (௨௭)

எம்மையுணர்ந்தயோகியர்களிவற்றைவிரும்பாரெனினுமவர்
தம்மைநிழல்போலடைந்தலர்க்கணையார்பெருமைதனையுணர்த்துஞ்
செம்மையுடையவிவையென்னச்சித்தியெட்டுத்தெளிவெய்தக்
கொம்மைமுலையாறுவருக்குங்கொளுத்தினனெண்குணச்செல்வன்

மேற்படி வேறு.

தேவதேவுபதேசித்தசித்தியைச்சிலம்பன்செல்வி
பாவனைவலத்தாலன்புபயின்றுவான்வழிக்கொண்டேகிப்
பூவலர்கதுப்பினல்லாரறுவரும்புராமுன்றட்ட
காவலனிரம்பிவைகுங்கைலைமால்வரையிற்புக்கார். (௨௯)

அட்டமாசித்தியுபதேசித்தபடலம் முற்றிற்று.

ஆகப்படலம்-௩௰௩க்கு-திருவிருத்தம்-௧௭௮௯.

முப்பத்துநான்காவது
விடையிலச்சினையிட்டபடலம்.

எழுசீரடியாசிரிய விருத்தம்.

சந்தனுஞ்சுழ்மலயச்சிலம்பர்தவம்புரிந்தவிப்பர்மார்க்
கந்தாலிருசித்திதந்ததறைந்தனந்தனதடிதொழச்
வந்துமீள்வளவன்பொருட்டுவடாதுவாயிற்றடைத்
திந்துசேகரன்விடையிலச்சினையிட்டவாறுவிளம்புவாம். (௧)

தோடுவெட்டிமலைத்துவாள்விதிர்த்துவிழிக்குயிலனமுலைக்
கோடுவெட்டியகுறிகொள்மேனியர்குடிகொண்மாநகர்கடிகொள்பைங்
காடுவெட்டியகாரணக்குறிகாடுவெட்டியசோழனென்
றேடுவெட்டியமண்டுசூழ்பொழிலெயில்கொள்கச்சியுளானவன். (௨)

உத்தமச்சிவபத்தரிற்பெரிதுத்தமன்புதுவிரைகலன்
மித்தையென்றுவெணீறுகண்டிகையாரமென்றணிமெய்யின
னித்தவேதபுராணமாதிநிகழ்த்திடும்பொருள்கண்ணுத
லத்தனைபரதத்துவப்பொருளென்றளந்தறிகேள்வியான். (௩)

அங்கமாறொடுவேதநான்குமறிந்துமெய்ப்பொருளாய்த்துளஞ்
சங்கைகொண்டனுதினமரன்புகழ்சாற்றுசைவபுராணநூல்
பொங்குமின்சுவையமுதுதன்செவிவாய்நிறந்துபுகட்டியுண்
டெங்கணாயகனடியிணைக்கணிருத்துமன்புகருத்தினான். (௪)

முக்கணாயகன்முப்புரத்தைமுனிந்தநாயகன்மங்கைபோர்
பக்கநாயகன்மிக்கவானவர்பரவுநாயகனரவணிச்
சொக்கநாயகனுடலுஞ்செவியான்முகந்துசுவைத்தருந்
தக்கபாலொடுதேன்கலந்துதருக்கியுண்பவனாயினன். (௫)

அங்கயற்கண்மடந்தைபாகனடித்தலந்தொழுமாசைமேற்
பொங்கிமிக்கெழுமன்பனும்மதரேசன்மின்னுபொலங்கழற்
பங்கயப்பதமென்றுகாண்பணிவேனெனப்பரிவெய்தியே
கங்குலிற்றுயில்வான்கயற்புரைகண்ணிபங்கனையுன்னியே. (௬)

அன்றுசெம்பியர்கோமகன்கனவின்கணேயருள்வெள்ளிமா
மன்றுணின்றவர்சித்தராயெதிர்வந்துமன்னவகின்னுளத்
தொன்றுமஞ்சலொருத்தனுமியுருத்திரிந்துதனித்துவந்
தின்றுவந்தனைசெய்துபோதியெனப்புகன்றனரோகினர். (௭)

கேட்டுவேந்தன்விழித்துணர்ந்துளர்ந்தவற்புதனாகியே
யீட்டுசேனையமைச்சளார்பிறர்யாருமின்றிவழிக்கொளீஇ
காட்டுமுன்றனுமவான்கொடுநெல்லருட்டுணையாய்வழி
காட்டவன்விட்டுமிவுளிமேல்கொடுகங்குல்வாய்வருவானரோ. (௮)

கல்லுமாரழலத்தழும்பலகனுழியுங்குணகனைகடற்
செல்லுமாநதிபலவும்வானிமிர்கன்னலுஞ்செறிசெந்நெலும்
புல்லுமாநிலனுங்கழிந்துபுறங்கிடக்கநடந்துபோய்
வல்லுமாமுலையார்கணம்பயில்வையையந்துறையெய்தினன். (௯)

குறுகுமுன்னரதிர்ந்துவையைகொதித்தகன்கரைகுத்திவேர்
பறியவன்சினைமுறியவிண்டொடுமைத்தருக்கனையுந்தியே
மறுகிவெள்ளமெடுத்ததைத்தாமன்னவன்கரைதன்னினின்
றிறுதியில்லவனைத்தொழற்கிடையூறிதென்றறுநொய்துவான். (௧௰)

இழுதொடுஞ்சுவையமுதுபொற்கலனிட்டுண்டிருகண்களிர்
வழியவந்துவிலக்குவாரின்விளைந்ததாறுபகற்செயும்
பொழுதெழும்பொழுதோமறுக்கம்விளைக்குமேயிகல்பூழியன்
வழுதியன்றியும்வையையும்பகையானதென்றுவருந்தினான். (கக)

வெள்ளநோக்கியழுங்குசெம்பியன்மெலிவுநோக்கிவிரைந்தெழீஇக்
கள்ளநோக்கிலைப்படாதவர்கனவுபோலவனைவில்லவக்
துள்ளநோக்குடையன்பருக்கருளுருவமாகியசித்தர்தாம்
பள்ளநோக்கிவரும்பெரும்புனல்வற்றநோக்கினர்பார்த்தரோ. (கஉ)

வறந்தவாறுகண்டுவந்துவடக்குவாயிறந்துபோய்
நிறைந்தகாவல்கடந்துவீதிகணீந்திசேரியர்வேந்தனைச்
சிறந்தவாடகபுனிதபங்கயதிப்பியப்புனலாடுவித்
தறந்தவாதறைசாமகண்டர்தமாலயம்புகுவித்தரோ. (கங)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

வெம்மைசெய்கதிர்கால்செம்பொன்விமானசேகரத்தின்மேய
தம்மையும்பணிவித்தென்னில்சராசரமனைத்துமீன்ற
வம்மையங்கயற்கண்ணாளாமங்கையும்பணிவித்தன்னஞ்
செம்மைசெய்திவ்யவெள்ளத்தழுந்தினார்சித்தசாமி. (கச)

எண்ணியவெண்ணியாங்கேயான்பெறமுடித்தாய்போற்றி
பண்ணியன்மறைகடேறும்பான்மொழிமணாளபோற்றி
புண்ணியர்தமக்குவேதப்பொருளானபொருளேபோற்றி
விண்ணிழிவிமானமேயசுந்தரவிடங்கபோற்றி. (கரு)

எவ்வுடலெடுத்தேன்மேனுளெண்ணிலாப்பிறவிதோறு
மவ்வுடலெல்லாம்பாவமறம்பொருட்டாகவன்றே
தெவ்வுடல்பொடித்தாயுன்றன்சேவடிக்கடிமைபூண்ட
விவ்வுடலொன்றேயன்றேவெனக்குடலானதையா. (கசு)

இன்னனபலவுமேத்தியிறைஞ்சிப்பல்வரமும்வேண்டு
மின்னகுவேலினானைவேந்தநீபோந்தவண்ணக்
தென்னவனறிந்தாலேதஞ்செய்யுமென்றுரைத்தார்க்கண்ணி
மன்னனைச்சித்தசாமியுத்தரவழிக்கொண்டேகா. (கஎ)

மண்ணினைவனர்க்கும்வையைவடகரையளவுநண்ணிப்
புண்ணியநீற்றுக்காப்புப்புண்டாநுதலிற்சாத்தி
யுண்ணிறைகருத்துக்கேற்பவுறுதுணையுனக்குண்டாகி
கன்றுகவென்றுபொன்னிநாடனைவிடுத்துமீண்டு. (கஅ)

கலிவிருத்தம்.

காப்புச்செய்துகதவில்விடைக்குறி
யாப்புச்செய்தமைத்திருஞ்சடைச்சித்தர்போய்த்
தோப்புக்கைவரைசூழ்வடமேருவிற்
கோப்புச்செய்தபொற்கோயிலின்மேயினார். (ககூ)

கங்குலின்கருங்கைகுறைப்பானெனச்
செங்கைநீட்டித்தினகரன்றோன்றலு
மெங்கணாயகனிட்டகுறியதிற்
தங்கள்வாயிறிறப்பவரையுறா. (உ0)

மற்றைவாயில்கண்மூன்றினும்வல்லைபோ
யுற்றுநோக்கினர்தாகென்னலொற்றிய
கொற்றமீனக்குறிபிழையாமைகண்
டெற்றிதாங்கொலென்றேந்தன்முனெய்தினார். (உக)

போற்றிமன்னகம்பொன்னங்கயற்குறி
மாற்றியுத்தரவாயிற்கதவதி
லேற்றிலச்சினையிட்டனர்யாரையென்
றாற்றல்வேந்தவறிகிலம்யாமென்றார். (உஉ)

வையைநாடனும்வந்தநோக்குறீஇ
யையவின்னதோரற்புதமாயையைச்
செய்யவல்லவர்யாரெனத்தேர்கிலா
னையமெய்தியகன்மனைகண்ணினான். (உங)

மறுத்தவுண்டியன்மாமலர்ப்பாயலை
வெறுத்தகன்றரைமேற்பள்ளிகொள்ளவும்
பொறுத்தனன்றுயின்றானிருட்போழ்தினிற்
கறுத்தகண்டர்கனவினிற்கூறுவார். (உச)

மட்டலம்பியதாதகிமாலையா
யிட்டதம்பியொழுகியவன்பினாற்
கட்டிலங்கெயிற்கச்சியிற்காடெலாம்
வெட்டிநம்புடைவித்தியபத்தியான். (உரு)

வந்துநம்மைவழிபடவேண்டினு
னிந்தவாயிறிறந்தமைத்தின்னரு
டந்தமீனவிடுத்துப்பின்றாட்கொளீஇ
கந்தமால்விடைகாம்பொறித்தேமென. (உசு)

அருளினானையர்தேற்றியகன்றபின்
மருளினீங்கிமலர்க்கண்விழித்தெழீஇ
வெருளினான்வெயர்த்தான்விம்மினான்பல
பொருளினாற்றுதித்தான்குலபூடணன். (௨௭)

வள்ளலன்புக்கெளிவந்தமான்புகண்
டுள்ளவுள்ளநின்றூற்றெழுமற்புத
வெள்ளமும்பரமானந்தவெள்ளமுங்
கொள்ளைகொண்டுதன்கோமனைநீங்கினான். (௨௮)

அளியனுமனத்தன்புடையன்பருக்
கெளியராடலையார்க்கும்வெளிப்படத்
தெளியுமாறுதெளிவித்துத்தன்னைப்போல்
விளிவிலாவின்பவெள்ளத்தழுத்தினான். (௨௯)

கொச்சகக்கலிப்பா.

கோடாதசெங்கோலும்வெண்குடையுங்கோமுடியு
மேடாரலங்கலிராசேந்திரற்களித்துத்
தோடாரிதழியான்றாட்கமலஞ்சூடிவா
னாடாளரசுரிமைபெற்றானரபதியே. (௩௰)

விடையிலச்சினையிட்டபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் - ௪௧ - க்கு - திருவிருத்தம் - ௧௮௧௮.

முப்பத்தைந்தாவது
தண்ணீர்ப்பந்தல்வைத்தபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

சம்புமதுரைப்பரனிரவுதனியேவந்ததனைப்பணிந்த
வெம்புகதிரோன்மருமானைவிடுத்துமீண்டுதொழிறக்கி
யம்பொற்கதவின்விடைபொறித்ததறைந்துத்தென்னனபேடைக்கு
வம்புமலர்தோய்புனற்பந்தர்வைத்துக்காத்தவகைசொல்வாம். (௧)

தென்னனரசபுரந்தரன்கோல்செலுத்துநாளிற்காடெறிந்த
மன்னன்பின்னர்வெளிப்படையாப்போந்துபோந்துமதுரேசன்[னைக்
பொன்னங்கமலத்தாள்வணங்கிப்போவான்முன்னிப்பொரும்பொரு
கன்னிநாடன்கேண்மைபெறவிடுத்தான்வரிசைக்கையுறையே. (௨)

பொன்னிநாடன்வரவிடுத்தபொலம்பூணுடைமுதற்பிறவுங்
கன்னிநாடன்கைக்கவர்ந்துதானுங்கலக்குந்தொடர்பினு
னுன்னிவேறுசையுறையுய்த்துறவுசெய்யவுவப்பெய்திச்
செல்லிகாதன்மகட்கொடுப்பானிசைந்தானந்தச்செழியற்கு. (௩)

செழியன்றனக்குவரையறுத்தசெய்திகேட்டுச்செம்பியர்கோன்
கழியன்புடையகுலமகனைத்தான்போய்க்கொள்வான்கருதிமதி
வழிவந்தவற்குத்தம்பியெனவந்தவரசசிங்கமெனும்
பழியஞ்சாதான்வஞ்சித்துப்பழனக்காஞ்சிப்பதிபுகுவான். (௪)

காஞ்சிப்பதிமன்குறுகுமிளங்காவலோனைக்கடற்சேனை
தாஞ்சுற்றியவந்தெதிர்கொடுபோய்த்தம்முன்றனக்கென்றிருந்தமக
ளாஞ்சிற்றிடையைமணம்புணர்த்தியந்தமருகற்கரசுநிலை
வாஞ்சித்தரசபுரந்தரனைப்பிடிக்கமதித்தான்வனமெறிந்தான். (௫)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

மருமகன்றனுடனெழுந்துமாமனுனவளவர்கோன்
பொருமகன்றசேனையானைபுடைநெருங்கமதிவழித்
திருமகன்றன்மேலமர்த்திறங்குறித்துமுரசறைந்
தருமகன்றபல்லியமுமொலிப்பவந்துளானரோ. (௬)

திரண்டதிர்ந்தெழுந்துவந்தசென்னிசேனைதன்னகர்க்
கிரண்டுயோசனைப்புறத்திருக்குமுன்னரொற்றராற்
றெருண்டுதென்னன்மாடக்கூடன்மேயசிவனைதான்
சரண்புகுந்துவேண்டுகென்றுசார்ந்துதாழ்ந்துகூறுவான். (௭)

அன்றுமாறியாடல்வந்துனடிபணிந்ததமியனுய்ச்
சென்றசென்னியென்னுநின்னதிருவடிக்கணன்பினு
னின்றுமந்தகையனுமெனக்குவேண்டுவனவிடுத்
தொன்றுகேண்மைபுரிகுவானுளத்திலொன்றைப்புன்னினான். (௮)

அறத்திறுக்குநாயகன்றநின்றநீயவன்செயு
மறத்திறுக்குளாகியின்றுவன்மைசெய்வதேயறப்
புறத்திருர்புரம்பொடித்தபுண்ணியாவெனக்கனைக்
துறைத்துவேண்டினானவேலையும்பர்நாதனருளினால். (௯)

மெய்த்துறந்தவாய்மையோன்றனின்னனின்றுமன்னனே
வைதுநுங்கள்சேனையோடுபோகவந்துநாளைநீ
யெய்திவந்ததெவ்வரோடெதிர்ந்துருத்துநின்றுபோர் (௰)
செய்திவென்றிசின்னதாதல்செய்துமென்றெழுந்ததால்.

காயவாளிசெவிநுழைந்தகாலைவேந்தரிந்திர
னையனாடிக்கணையயந்தவன்புருவவையு
மாயவேலைவீழ்ந்துதாழ்ந்தகன்றுதன்னிருக்கைபோய்
மேயினனிமிர்ந்துகுலவிடியுமெல்லைநோக்குவான். (௧௧)

கழித்தகங்குலிறவிசும்புகண்விழிக்குமுன்னரே
விழித்தெழுந்துசந்தியாதிவினைமுடித்துவானநீர்
சுழித்தலம்புவேணியண்ணலாயபூசைசெய்தெழீஇத்
தெழித்தெழுந்தசேனையோடுசெருநிலத்தைநண்ணினன். (௧௨)

அலைசிறந்தசலதிநீதோராறுசெல்லுமாறுபோன்
மலைசிறந்தநேரிவெற்பன்மன்னர்சேனைவெள்ளமேற்
கலைசிறந்தமதிநிறைந்தகன்னிநாடுகாவலான்
சிலைசிறந்தசிறியசேனைசென்றலைத்துநின்றதே. (௧௩)

உருமுவன்னகுரலினாருலவையன்னசெலவினார்
வெருவுதீயின்வெகுளியார்வெடித்தவீரகையினார்
செருவின்மானவணியினார்சிலைஇமடித்தவாயினா
ரிருவர்சேனைமன்னரும்மெதிர்ந்துகைகலந்தனர். (௧௪)

மன்றலந்தெரியனேரிமலையவன்றமர்க்கெலாந்
தென்றலம்பொருப்பினான்றிரண்டநான்குகருவியு
மின்றயங்குசெய்யவேணிவிடையவன்றனருளினா
லொன்றனந்தமாகவந்தருத்தெதிர்ந்துதோன்றுமால். (௧௫)

தேரினோதைகக்குஞ்சிரிக்குமோதைசொரிமதக்
காரினோதையேரியக்கறங்குமோதைமறவர்தம்
போரினோதைவீரர்தோள்புடைக்குமோதையோடுமுந்
நீரினோதையொன்றெனக்கலந்தொடுங்கின்றதே. (௧௬)

சிலையின்றவீரரோடுசிலையின்றவீரரே
கலையின்றவாளரோடுகலையின்றவாளரே
கொலையின்றவேலரோடுகொலையின்றவேலரே
மலையின்றமல்லரோடுமலையின்றமல்லரே. (௧௭)

கரியுகைத்தடாகரோடுகரியுகைத்தடாகரே
பரியுகைத்தமறவரோடுபரியுகைத்தமறவர்தேர்க்
கிரியுகைத்தவலவரோடுகிரியுகைத்தவலவரே
பெரியுகைத்தெதிர்ந்தகாலெனக்கலந்தமலைவரால். (௧௮)

விடுக்கும்வாளியெதிர்பிழைப்பர்வெய்யவாளியெய்துபின்
றொடுக்கும்வாளிவில்லொடேந்துணிப்பர்பின்கணிப்பற
மடுக்கும்வாளிமார்புதைப்பவாங்கிமற்றைவாளிகொண்
டடுக்குமேவலாளர்வெய்தடர்ப்பர்கிள்ளிமன்னரே. (௧௯)

சோனைமாரியிற்சரஞ்சொரிந்துநின்றுதன்னுவா
ரானவாளியெதிர்பிழைத்தொதுங்கிநின்றழற்சரங்
கூனல்வாளிசிலையிறத்தொடுத்தெறிந்துகூவுவார்
மீனகேதனத்துவேந்தன்வீரர்சென்னிவீரர்மேல். (௨௦)

தறிந்ததாடகர்ந்தசென்னிதரையுருண்டவரையெனச்
செறிந்ததோள்சரிந்ததேர்சிதைந்தபல்படைக்கல
முறிந்தயானைகையிருமுழங்கிவீழ்ந்தசெம்புனற்
படிந்தபாறுபாரிடங்கள்வைத்தகூளிமொய்த்தவே. (௨௧)

மடலினீடுதாரலங்கன்மன்னர்சேனையின்னவா
றடலினீழலடியகத்தொடுங்கவும்பருச்சிமிற்
கடலினீடுகதிர்பரப்புகடவுளெய்துமளவுநின்
றடலினீடியிடைவிடாமலமருழந்தனரலரோ. (௨௨)

அந்தகாளனைத்தையும்மழிக்கநின்றவாறுதற்
சிந்தநீயெனக்கனன்றுருத்துநின்றுதெறுதலா
லெந்தயாறுமறவறப்பவிம்பரன்றியும்பரும்
வெந்துவானயாறும்வற்றவேனில்வந்திறுத்ததால். (௨௩)

மண்பிளந்துபிலநுழைந்துவரைபிளந்தனையவா
யெண்பிளந்துநின்றபொங்கரிலைபுகப்பிளந்துமேல்
விண்பிளந்துபரிதிநீடுவெங்கரங்கள்யாவையுங்
கண்பிளந்தழன்றுவீசகானமெங்குமானதே. (௨௪)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

ஆயிடையலகைத்தேருமடைந்தவர்வெயர்வுமன்றித்
தூயநீர்வறந்தவந்தச்சுடுபுலந்தேய்ந்தகாலு
மீயுயர்மதிநிலாவும்வெய்யவாய்ச்சுடுகல்லோருந்
தீயவர்தம்மைச்சேர்ந்தாற்றீயவராவரன்றே. (௨௫)

வினைமதஞற்றுமாதிவெகுளியுஞ்செருக்குமாறித்
தொளையுடைக்கைம்மான்றங்குநடையவாய்ச்சாம்பிச்சோர்ந்த
வுளர்தருமூழிக்காலினோவோம்புரவியெய்த்துத்
தளர்நடையுடையவாகித்தைவருந்தென்றல்போன்ற. (௨௬)

கானலந்தேர்மேற்றுறைக்காலெனும்பாகன்றூண்ட
வேனில்வேந்தேறிச்சீறிவெப்பமாம்படைகள்வீச
மானிலங்காவல்பூண்டமானவரிருவர்தங்க
டானையுமுடைந்துதண்ணீர்நசைசுடிச்சாம்பிற்றன்றே. (உஎ)

இரக்கமில்கொடியசெல்வர்மருங்குபேரிரப்பார்போல
வுருப்புமொண்டிறைக்குங்கள்ளிநீழல்புக்கொதுங்குவாருந்
தருக்கறகிரப்பாலெய்த்தோர்தம்மினும்வறியர்பாற்சென்
றிரப்பர்போலிலைநீந்துக்கமரநீழலெய்துவாரும். (உஅ)

கோல்விபம்பரிமான்றேரின்குறுநிழலொதுங்குவாரு
மல்லிருள்வட்டத்தோல்வெண்கவிகையுளடங்குவாருஞ்
செல்லிடம்பிறிதுகாணார்வீரவான்சென்றோர்நின்ற
கல்லுடனிழல்சேர்வாருமாயினார்களமெல்லாம். (உகூ)

ஆயதோராமையர்தன்னிலளவிலாவுயிர்க்குமீன்ற
தாயனார்தலைபோல்யார்க்குஞ்சமநிலையாயகூட
லாயனார்செழியன்றானைதன்தலைவேதளாற்கார்
பாயதோர்தண்ணீர்ப்பந்தர்ப்பரப்பியப்பந்தர்காப்பண். (கூ0)

புண்டரநுதலுங்காதின்புறத்தணிமலரும்பாத
முண்டகமலர்மேலொற்றைக்கிண்கிணிமுழக்குங்கச்சியாப்
புண்டதோலுடையுங்கண்டோருள்ளமுங்கண்ணுங்கொள்ளை
கொண்டபுன்னகையுமுள்ளக்கருணையின்குறிப்புந்தோன்ற. (கூக)

அருமறையகத்துணின்றுங்கருந்தவராகிவேணிப்
பொருபுனல்பூரித்தாங்கோர்புண்ணியச்சிரகந்தாங்கி
யொருவருக்கொன்றேயாகியிலக்கருக்கிலக்கமாகித்
தருகுறும்புழையால்வாக்கித்தணித்தனர்த்தண்ணீர்தாகம். (கூஉ)

சுந்தரப்புத்தேள்வைத்ததுறுமலர்வாசத்தெண்ணீர்ப்
பந்தர்புக்கடைந்துகன்னீர்பருகியெய்ப்பகலவாற்றல்
வந்தபின்செழியன்றன்னோர்வளவன்மேலேறிச்சீறி
யந்தமிலனிகஞ்சிந்தித்தம்பைவேய்ந்தடுபோர்செய்தார். (கூகூ)

கடலுடைத்தென்னப்பொன்னிகாவலன்றானைசாய
மடலுடைவாகைவேய்ந்தவளவனைமருகனோடு
மிடலுடைத்தறுகட்சேனைவீரர்வெங்கையாற்பற்றி
யடலுடைக்கன்னிநாடர்க்கரசன்முன்கொண்டுபோந்தார். (கூச)

கொடுவேந்தவளவன்றன்னைக்கோப்பெருஞ்செழியர்கோமான்
வடுவேந்ததம்பியோடுமொடநின்கூடன்மேய
கடுவேந்தமிடற்றார்முன்போய்விடுத்தெக்ததைகருத்தியாதென்ன
கடுவேந்தநிலையான்கேட்பவாயசனிகழ்ந்துமன்னோ. (கூரு)

அறவனியல்லையோவுன்னகத்தினுக்கிசைந்தசெய்கென்
றிறைவனதருளால்வானின்றெழுமொழிகேட்டுவைகைத்
துறைவனுமறத்தினூற்றுற்சோழனைச்சிலமால்யானை
மறவயப்பரிபூண்மற்றும்வழங்கினன்விடுத்தான்பின்னர். (கூசா)

வள்ளறன்றம்பியென்னுமன்னவர்சிங்கந்தன்னைத்
தள்ளருந்தறுகணண்மைத்தருக்கறத்தானுள்செவ்வ
முள்ளனசிறிதுமாற்றியொதுக்கியெவ்வுயிர்க்குந்தாயாய்ப்
பன்னகீரகலங்காத்துட்பல்வளம்பழுக்கவாழ்ந்தான். (கூஎ)

தண்ணீர்ப்பந்தல்வைத்தபடலம் முற்றிற்று.

ஆகப்படலம். கூச. க்கு - திருவிருத்தம் - கஅகூ.

முப்பத்தாறவது

இரசவாதஞ்செய்தபடலம்.

கலித்தலைத்துறை.

வாதன்மீனவன்படையிடைவந்துநீர்ப்பந்தர்
விரதனுகிநீருத்தியவிளையாசெய்தும்
பாதநூலியனுடகப்பாவையாளொருத்திக்
கிரதவாதஞ்செய்தருளியவாடலையிசைப்பாம். (க)

பருங்கைமால்வரைப்பூழியன்பைந்தமிழ்நாட்டி
னிரங்குதெண்டிரைக்கரங்களாலீர்ம்புனல்வையை
மருங்கினந்தனமலர்த்தபஞ்மலர்கடேய்ப்பணியப்
புரங்கடந்தவனிருப்பதுபூவணநகரம். (உ)

எண்ணிலங்குறைசராசரமிலிங்கமென்றெண்ணி
விண்ணினுன்களுங்கோள்களும்விலங்குவதியாக்கைக்
கண்ணினுன்கதிர்முதற்பலகடவுளர்பூசை
பண்ணிவேண்டியகல்வரமடைந்ததப்பதியில். (கூ)

ஒளியுளார்பொழிற்பூவணக்கிழவர்தங்கோயி
றளியுளார்தவப்பேறனடார்தகுபூந்தா
ரளியுளார்குழலணங்கனாளந்தரத்தவர்க்குங்
களியுளார்தரமயக்குறூஉங்கடலமுதனையாள். (ச)

காம்பினேழிசையாழிசைப்பாட்டுடனா
விரம்புமாடலும்பெண்ணலநீர்மையும்பிறவு
மரம்பைமாதரையொத்தனளறனெறியொழுகும்
வரம்பினலவர்தமக்குமேலாயினள்மன்னோ. (ரு)

ஆயமாதர்போர்பொன்னனையாளென்பவட
னேயவாயமோடிரவிருணீங்குமுனெழுந்து
தூயநீர்குடைந்துயிர்புரைசுடர்மதிக்கண்ணி
நாயனாரடியருச்சனைவியமமுநடத்தி. (சு)

திருத்தர்பூவணவாணரைச்சேவித்துச்சந்த
திருத்தமாடிவந்தடியரைப்பொருளெனநினையுங்
கருத்தளாயருச்சித்தவர்களிப்பவின்சுவையூ
ணருத்திஎஞ்சியதருந்துவாளஃதவணியமம். (எ)

மாதரிந்நெறிவழங்குநாண்மற்றவணன்மைப்
பூதலத்திடைத்தெருட்டுவான்போன்மலைவல்லி
காதலனயகன்றிருவுருக்காணியவுள்ளத்
தாதரங்கொடுத்தருளினர்பூவணத்தையர். (அ)

ஐயர்தந்தபேரன்புருவாயினண்மழுமான்
கையர்தந்திருவுருவினைக்கருவினாற்கண்டு
மையகண்ணினள்வைகலும்வருபொருளெல்லாம்
பெய்யிலன்புகொண்டன்பர்தம்பூசையினேர்வாள். (கூ)

அடியார்பூசனைக்கன்றியெஞ்சாமையாலடிகள்
வடிவுகாண்பதெப்படியென்றமடியிலைச்செழியத்
கொடிவில்பொற்கிழிகலியவள்ளலையுன்னிப்
பிடியனாளிருந்தாளஃதறிந்தனன்பெருமான். (க0)

தூயநீறணிமெய்யினர்கட்டங்கந்தொட்ட
கையர்யோகபட்டத்திடைக்கட்டினர்பூதிப்
பையர்கோவணமிசையசையுடையினர்பவளச்
செய்யவேணியர்க்கொருசித்தராய்வருவார். (கக)

வந்துபொன்னனையாண்மணிமாளிகைகுறுகி
யந்தமின்றிவர்த்தமுதுசெய்வாரொடுமேனுகிச்
சிந்தைவேறுகொண்டடைந்தவர்திருவமுதருந்தா
துந்திமாளிகைப்புறங்கடையொருசிறையிருந்தார். (கஉ)

அமுதுசெய்தருந்தவரெலாமகலவேறிருந்த
வமுதவாரியையடிபணிந்தடிச்சியராய
வமுதுசெய்வதற்குள்ளெழுந்தருள்கெனவுங்க
ளமுதனையிங்கழையினென்றருளதுமனையார். (கங)

முத்தராமுகிழ்வாணகையல்குலாய்முக்க
ணத்தராளவர்தமரெலாமமுதுசெய்தகன்றார்
சித்தராயொருதம்பிரான்சிறுநகையினரா
யித்தராதலத்தரியராயிருக்கின்றரென்றார். (கச)

நவமணிக்கலன்பூத்தபூங்கொம்பரினடந்து
துவரிதழ்க்கனிவாயினள்*சுவாகதங்கிலவென்
றுவமையற்றவர்க்கருக்கியமாசனமுதவிப்
பவமகற்றியவடிமலர்முடியுறப்பணிந்தாள். (கரு)

எத்தவஞ்செய்தேனிங்கெழுந்தருளுதற்கென்னச்
சித்தர்மேனியும்படிவெழிற்செல்வமுநோக்கி
முத்தவாணகையரும்பநின்றஞ்சலிமுகிழ்ப்ப
வத்தர்நோக்கினாருட்கணளருள்வலைப்பட்டாள். (கசு)

ஐயருள்ளெழுந்தருளுகவடிகணீரடியே
னுய்யவேண்டியபணிதிருவுளத்தினுக்கிசையச்
செய்யவல்லனென்றஞ்சலிசெய்யவுன்னகையா
மையனோக்கினைநோக்கிமீனோக்கிதன்மனனாள். (கஎ)

வடிவைநோர்விழியாட்பெருவளப்பினைசிறிதன்
கொடியைநேரிடையெனவினைத்தனைவெனக்கொன்றை
முடியினானடியாரமென்முகிழ்முலைக்கொடிதாழ்ந்
தடியனேற்குவேறுபொருண்மேலவிலையையா. (கஅ)

எங்கணாயகர்திருவுருக்காண்பதற்கிதயம்
தங்குமாசையாற்கருவுருச்சமைத்தனன்முடிப்பேம்
இங்குநாடொறுமென்கையில்வரும்பொருளெல்லா
முங்கள்பூசைக்கேயல்லதையொழிந்திலவென்றாள். (ககூ)

* சுவாகதங்கிலி, நல்வரவல்லவா.

அருந்தவல்லமுதனையவளன்புதித்திக்கத்
திருந்ததேனெனவிரங்குசொற்செவிமடுத்தையர்
முருந்துமூரலாய்செல்வமெய்வினைமைநீர்மொக்கு
ளிருந்தவெல்லையுநிலையிலவென்பதுதுணிந்தாய். (உ0)

அதிகநல்லறநிற்பதென்றறிந்தனையறத்து
ளதிகமாஞ்சிவபுண்ணியஞ்சிவார்ச்சனையவற்று
ளதிகமாஞ்சிவபூசையுளடியவர்பூசை
யதிகமென்றறிந்தன்புளாயருச்சனைசெய்வாய். (உக)

உறுதியெய்தினையிருமையுமுன்பெயர்க்கேற்ப
விறுதியில்லவன்றிருவுருவிகையாற்காணப்
பெறுதியாகநின்மனைக்கிடைப்பித்தனையீய
மறுதியானபல்கலன்களுங்கொணர்தியென்றறைந்தார். (உஉ)

ஈயஞ்செம்பிரும்பிரசிதமென்பவும்புணர்ப்பாற்
றோயும்பித்தளைவெண்கலந்தராமுதற்றொடக்கத்
தாயும்பல்வகையுலோகமுங்கல்லெனவலம்பத்
தேயுஞ்சிற்றிடைகொண்டுபோய்ச்சித்தர்முன்வைத்தாள். (உங)

வைத்தவேறுவேறுலோகமுமழுவுழைகரந்த
சித்தசாமிகணீற்றினைச்சிதறினர்பாவித்
தித்தைநீயிராவெரியிலிட்டெடுக்கினன்பொன்னா
மத்தைநாயகன்றிருவுருக்கொள்கெனவறைந்தார். (உச)

மங்கைபாகராமடந்தையுமிங்குநீர்வதிந்து
கங்குல்வாயமுதருந்தியிக்காரியமுடித்துப்
பொங்குகாரிருள்புலருமுன்போமெனப்புகன்று
றங்கயற்கணுடனைப்பிரியாரதற்கிசையார். (உரு)

சிறந்தமாடநீண்மதுரையிற்சித்தர்யாமென்று
மறைந்துபோயினர்மறைந்தபின்சித்தராய்வந்தா
ரறைந்தவார்கழலலம்பிடவெள்ளிமன்றாடி
நிறைந்தபேரொளியாயுறைநிருத்தரென்றறிந்தாள். (உசு)

மறைந்துபோயினரெனச்சிறிதயர்ச்சியுமனத்தி
னிறைந்ததோர்பெருங்கவற்சியைநீக்கினாளென்னுஞ்
சிறந்ததோர்பெருமகிழ்ச்சியுமுடையளாய்ச்சித்த
ரறைந்தவாறுதீப்பெய்தனளுலோகங்களனைத்தும். (உஎ)

அழலடைந்தபினிருண்மலவலிதிரிந்தான்ம
னிழலடைந்தவர்காட்சிபோனீப்பருங்களங்கக்
கழலவாடகமானதாலதுகொண்டுகனிந்த
மழலையீர்ஞ்சொலாள்கண்டனள்வடிவிலான்வடிவம். (உஅ)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

மழவிடையுடையான்மேனிவனப்பினைநோக்கிச்சோ
வழகியபிரானேயென்னாவள்ளிமுத்தங்கொண்டன்பிற்
பழகியபரனையானாப்பரிவினாற்பதிட்டைசெய்து
விழவுதேர்நடத்திச்சின்னாள்கழிந்தபின்வீடுபெற்றாள். (உகூ)

கையுறாண்ணிடையினாணாயகன்கபோலத்திட்ட
கையுகிர்க்குறியுஞ்சொன்னகாரணக்குறியுங்கொண்டு
வெய்யவெங்கதிர்கால்செம்பொன்மேனிவேறாகிநாலாம்
பொய்யுகந்தவர்க்குத்தக்கபொருட்டுருவாகிமன்னும். (கூ0)

இரசவாதஞ்செய்தபடல முற்றிற்று.

ஆகப்படலம் - சு - க்கு - திருவிருத்தம் - கஅஅரு.

முப்பத்தேழாவது

சோழனை மடுவில்வீட்டியபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

பின்னையார்பூங்கொன்றைவேணியரிதவாதம்
பொன்னனையாண்முன்செய்துபோந்தபுகன்றேமார்த்தார்
மன்னனைமடுவில்வீட்டிமலரடிக்கன்பனான
தென்னனையளித்தாத்ததிருவிளையாடல்சொல்வாம். (க)

பொன்னெடுந்தேரிராசபுரந்தரன்புரந்தராதி
பன்னெடுந்தேவரோத்தப்பாரனுலகடைந்தானிப்பா
லங்கெடுத்தகையோன்மைந்தனடலிராசேசனென்போ
னிங்கெடுத்தகையோன்மைந்தனிராசகம்பீரனென்போன். (உ)

மற்றிவன்குமரன்பாண்டிவங்கியதீபனன்னான்
பொற்றினிதடக்தோண்மைந்தன்புரந்தரசித்தாமன்னான்
வெற்றிகொள்குமரன்பாண்டிவங்கியபதாகன்வீரம்
பற்றியசுந்தரேசபாதசேகரனவன்சேய். (ங)

பலர்புகழ்சுந்தரேசபாதசேகரனுக்கென்ன
னலைபுனலுடுத்தகூடலடிகளுக்கன்பனாகிக்
கொலைபுணர்வேலால்வெங்கோற்குறும்பெனுங்களைகளைந்து
மலர்தலையுலகமென்னும்வான்பயிர்வளர்க்குநாளில். (௪)

பத்துமான்றடந்தேர்நூறுயானைக்குமாயிரம்பத்தத்
தத்துமானயுதமள்ளர்தானையிவ்வளவேயீட்டி
யித்துணைக்கேற்பகல்கியெஞ்சியபொருள்களெல்லாஞ்
சித்துருவானகூடற்சிவனுக்கேசெலுத்துமன்னோ. (௫)

கண்டிகைமகுடமாதிக்கலனிரைகுயின்றுதிங்கண்
மண்டலமிடறுஞ்சென்னிக்கோபுரமாடமாதி
யெண்டிசையிருள்கால்சீப்பவெரிமணியிழைத்துவேய்ந்துத்
திண்டிறலுடையானின்னதிருப்பணிபிறவுஞ்செய்தான். (௬)

கல்லுமாறகன்றமார்பன்கருவியின்சிறுமைநோக்கி
மல்லுமாறுதிண்டோள்வளவர்கோனொருவன்காலிற்
செல்லுமாயிரம்பரிக்கோர்சேவகனென்போன்றனை
வெல்லுமாறெண்ணிவஞ்சிவேய்ந்துகொண்டெழுந்துபோந்தான். ()

பல்வகைக்கருவியீட்டப்படையொடும்பரவைசீறிச்
செல்வதுபோலக்கன்னித்தீம்புனனாடுநோக்கி
மல்வரையாததோளான்வரவறிந்தெழுந்துமேருக்
கல்வரிசிலையான்முன்போய்க்கைதவன்றாழ்ந்துகூறும். (௮)

பொன்னதுவளையவேணிப்புனிதவிப்பூமிசேமி
யுன்னதுவலத்தினாலேயுருட்டுமென்வலத்தைநோக்கான்
றன்னதுவலத்தினாலென்றனையின்சிறுமைநோக்கி
யென்னதுதேயங்கொள்வானெண்ணினன்போலுமன்னோ. (௯)

காவிரிநாடன்சேனைக்கடலிடையெரிபோன்மூண்டு
மேவினனென்றுகூறிமீனவன்வேண்டவாலிற்
பூவிரிவாகைநீயேபுனையநாம்பொருதுமென்று
நாவிரியாதமாற்றநாயகன்கூறக்கேட்டான். (௧௦)

எல்லியங்கமலச்செவ்வியெனமுகமலர்ந்துகாத
னல்லியங்கமலச்செந்தாளகத்துநீஇப்புறம்புபோந்து
பல்லியந்துவைப்பத்தானைப்பரவையுட்பரிமாவூர்ந்து
சொல்லியம்பொருப்பன்சேனைக்கடலெதிர்குறுகினானே. (௧௧)

பண்ணுதலிசைவண்டார்க்கும்பசுந்தொடைச்செழியன்றானை
யெண்ணுதலில்லாஞ்சென்னியிரும்படைக்கடனேராய்
நண்ணுதலெனப்போய்ப்பொன்னிநாடவன்றமர்கட்கெல்லாங்
கண்ணுதலருளாலங்கோர்கடலெனத்தோன்றிற்றம்ம. (௧௨)

கடலெனவருமாவூர்ந்துகைதவன்சேனைமுன்போ
யடலணிமேருக்கோட்டியாலவாய்க்கெடுகோண்பூட்டி
மடலவிழ்துழாய்க்கோனட்டிவாயெரிபுரத்திலூட்டி
யிடலணிகூடற்கோமான்வேறுருவாகின்றான். (௧௩)

கங்குல்வாய்த்திங்கள்போலக்காதணிதந்தத்தோடுங்
கங்குல்வாய்முளைத்தமீன்போற்கதிர்முத்தவடமுங்குஞ்சிக்
கங்குல்வாய்ச்சிலைபோல்வெட்சிக்கண்ணிசூழ்கலாபச்சூட்டுங்
கங்குல்வாய்விழிக்குந்தக்கடகமுமின்னுக்கால. (௧௪)

அண்டத்தாரமரர்காமமன்றுதொட்டடையத்தோற்று
கண்டத்தாரிருளேயெங்குங்கலந்தெனக்கறுத்தமேனி
கொண்டத்தாராரினூற்கோர்கூற்றெனக்கொல்வேலேந்திச்
சண்டத்தியென்னநின்றான்காவிரித்தலைவன்காணா. (௧௫)

ஈதியாயிரம்பரிக்கோர்சேவகன்வந்தேனென்னக்
கூறினனெதிர்த்தான்வெள்ளிக்குன்றவன்பத்துநூறு
மாறிலாப்பரிக்குமட்டோர்வயவனீயன்றேவெண்ணி
லீறிலாப்பரிக்குமொற்றைச்சேவகன்யானேயென்றான். (௧௬)

என்றசொல்லிடியேறென்னவிருசெவிதொளைப்பக்கேட்டு
நின்றவனெதிரோமின்னுநீட்டிச்சென்மேகம்போலச்
சென்றுவேல்வலந்திரித்துச்செ[illegible]ர்த்தனனெதிர்த்துச்சீற
வன்றிறனூற்றுப்பத்துவயப்பரிக்கொருவனஞ்சா. (௧௭)

யாமினியிந்தவேலாலிறப்பதற்கையமில்லை
யாமெனவகன்றான்மாவோடாயிரம்பரிக்கோர்மன்னன்
காமனைவெகுண்டவேடன்மறைந்தனன்கங்குற்சோதி
மாமகனதுகண்டோடும்வளவனைத்தூர்ந்துசென்றான். (௧௮)

டிடங்கடோறுமிரப்பாயென்றேசுவார்க்கென்பேசுவனே. (௩௪)

தேனார்மொழியார்விழிவழியேசெல்லாதவர்க்கேவீடென்று
கானேவேதப்பொருளுரைத்தாய்நீயேமதுரைநம்பரனே
கானேவேதப்பொருளுரைத்தாய்நீயேபர்திநாரியுரு
வானேயென்றுயிர்பழித்தாண்டியேன்விடையேதறைவேனே. (௩௫)

வாதனுகியெவ்வுயிர்க்குமாயாவிருத்திவலியடக்கிச்
சாதமானவீட்டின்பந்தருவாய்மதுரைத்தனிமுதலே
சாதமானவீட்டின்பந்தருவாய்வீடுபெறுவார்போல்
விரதயோகநிலையடைந்தாயென்பார்க்கென்றன்விளம்புவனே (௩௬)

எழுசீரடியாசிரிய விருத்தம்.

கண்ணுதன்மதுரைப் பிரானையிவ்வாறு கருதியபாணியாற் கனிந்து, பண்ணுதல்பரிவட் டணைமுதலிசைநூல் பகர்முதற்றொழிலிரு நான்கு, மெண்ணுறுவார்தல் வடித்திடன்முதலா மெட்டிசைக்கரணமும்பயப்ப, மன்னவர்செவிக்கோ வானவர்செவிக்கும் வாக்கினுணவிளையமுதம். (௩௭)

இடையிலேனுடேனைப் பிங்கலையியக்க மிகந்துமூலந் தொடுத்தியக்கி, நடுவுறுதொழிலாற் பிரமரந்திராந்த நடைபெறவிசைக்கு மூள்ளான, மிடறுவீங் கான்கண் ணிமைத்திடா ளெயிறு வெளிப்படாள் புருவமேனிபிரான், நொடிறதுதுடியாள் பாடலுமதுகேட் டனைவருங் குதுகுலமடைந்தார். (௩௮)

கன்னிநாடுடையான் கைதவனெனும்பேர்க் காரணந்தேற்றுவானனைத்தா, னின்னிசையறிஞ னாகியுமன்போ லியம்புவானொருப்படுகின்றான், முன்னவனருளாற் றன்மனக்கோட்ட மூரன்கெடப் பொதுமையானோக்கி, யின்னவடானே வென்றனளென்று னினையவாறனைவரு மொழிந்தார். (௩௯)

கரியுரைமொழிந்த கைதவ னிலங்கைக் கைதவப்பாடினிகழுந்திற், புரிகுழன்மாவதை யிருந்தெனவிருத்தும் போதுமை யிடங்கரந்திருந்த, வரியணு வலரீ தற்புதமீதற் புதமென வறைந்தனவகாண, விரிகதிர்மின்போன் மறைந்தனர்யாரும் வியந்தனர் பயந்தனன் வேந்தன். (௪௦)

செங்கணேறழகராடலீதென்றேயாவருந்தெளிந்தனரேத்தி
யங்கணுயகர்தங்கருணையின்றிறனுமடியவரன்பையுந்தூக்கித்
தங்கணாருவிபெருகவானந்தத்துனிப்பெருஞ்சலதியிலாழ்ந்தார்
வங்கமேல்வந்தான்பிடர்மிசையிருந்தமாணிழைவிறலியைமன்னன்.

இறந்துவித்தவட்கு மூந்தமுத்தார மெரிமணிக் கலன்றுகில்வரிசை, பெறக்கொடுத்தேனை யவட்குமுன்மகிழ்ச்சி பெறச்சிலவரிசைதந்தவையிற், சிறக்கவர்தொருங்கு வைகிவானிழிந்த தெய்வதக்கோயில்புக்கிருந்த, வறக்கொடியிடஞ்சேர் பெரும்புலவோர்க்கு மருங்கலருகிகனல்கா. (௪௨)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

மன்னவர்வலிகளெல்லாந்தெய்வத்தின்வலிமுன்னில்லா
வன்னமாதெய்வஞ்செய்யும்வலியெலாமரன்மூன்றட்ட
முன்னவன்வலிமுன்னில்லாவெனப்பலர்மொழிவதெல்லா
மின்னபாண்மகளிற்காணப்பட்டதென்றிறும்பூதெய்தா. (௪௩)

மின்னியல்சடையினானைவிடைகொடுவலஞ்செய்தேகி
யின்னியமியக்கஞ்செய்யவெழில்கொடன்கோயிலெய்தித்
தொன்னிதிபெற்றான்போலச்சுருணையாண்டியனைப்பெற்று
மன்னியமகிழ்ச்சிவீங்கவைகினனிராசராசன். (௪௪)

இசைவாதுவென்றபடல முற்றிற்று.

ஆகப்படலம் - ௪௪ - க்கு - திருவிருத்தம் - ௨௧௬௨.

நாற்பத்தைந்தாவது

பன்றிக்குட்டிக்கு முலைகொடுத்தபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

இருளைக்கந்தரத்தில்வைத்தோன்றன்னிடத்தென்றமன்பின்
றெருளைத்தந்தவட்குமாறுந்தெரிவையையிசையால்வெல்ல
வருளைத்தந்தளித்தவண்ணமறைந்தனந்தாயாய்ப்பன்றிக்
குருளைக்குமுலைதந்தாவிகொடுத்தவாறெடுத்துச்சொல்வாம். (௧)

முறையெனவிமையோர்வேண்டமுளைத்தநஞ்சயின்றுசான்று
யுறையெனமிடற்றில்வைத்தவும்பரான்மதுரைக்காரந்
திறையெனவெறிநீர்வையைத்தெற்கதுகுருவிருந்த
துறையெனவுளதோர்செல்வத்தொன்மணிமாடமூதூர். (௨)

தருநாதனுதிவானோர்தங்குருவிருந்துநோற்பக்
குருநாதனெனப்பேர்பெற்றுங்கோதிலாவரந்தந்தேற்றில்
வருநாதன்சித்திரத்தேர்வலவனுருடனேகஞ்சத்
திருநாதன்பரவவைகியிருக்குமச்சிறந்தவூரில். (௩)

சுகலனென்றொருவேளாளனவன்மனைசுகலையென்பா
ளிகலருங்கற்பினாள்பன்னிருமகப்பெற்றாள்செல்வப்
புகலருஞ்செருக்காலன்னபுதல்வரைக்கடியாராகி
யகலருங்களிப்புமீதூரன்பினால்வளர்க்குநாளில். (௪)

தந்தையுந்தாயுமாயத்தநுகன்மிக்குடையராகி
மைந்தரும்வேடரோடுகூடிவெங்கானில்வந்து
வெந்தொழில்வேட்டஞ்செய்வார்வெயில்புகாப்புதர்ப்பிழையி
னையந்தவித்திருந்தோர்குங்குரவனையங்குகண்டார். (௫)

கைத்தலம்புடைத்துநக்குக்கல்லும்வெம்பரலும்வாரி
மெய்த்தவன்மெய்யிற்றாக்கவீசினார்வினையைவெல்லு
முத்தமன்வீக்கஞ்செய்தார்தவத்தினுக்குவொன்றுன்னிச்
சித்தநொந்தினையவஞ்சத்தீயரைச்செயிர்த்துநோக்கா. (௬)

தொழுந்தொழின்மறந்துவேடத்தொழிலுழந்துழல்வீர்நீர்மண்
ணுழுந்தொழிலுடையவீராற்பன்றியினுதரத்தெய்திக்
கொழுந்தழலனையவேனக்குருளையாய்த்தந்தைதாயை
யிழந்தலமுறுமினென்றுவிட்டனன்கடியசாபம். (௭)

பாவத்தையனையமைந்தர்பன்னிருபேருமஞ்சிச்
சாவத்தையேற்றப்போதுதணிவதிச்சாபமென்னா
வாவத்தையகற்றுமீசனருட்கழலினைந்துவந்த
சோவத்தைமுனிவுசெய்தக்கடவுளர்குரவன்கூறும். (௮)

என்னையாளுடையகூடலேகநாயகனேயுங்கட்
கன்னையாய்முலைதந்தாவியளித்துமேலமைச்சராக்கிப்
பின்னையாளாக்கவீடுதருமெனப்பெண்ணோர்பாகன்
றன்னையாதரித்தோன்சொன்னான்பன்னிருதநயர்தாமும். (௯)

தொன்மைசால்குருவிருந்ததுறையதன்புறத்தவான
பன்மைசால்கானவாழ்க்கைப்பன்றிகட்கரசாய்வைகுந்
தன்மைசாறனியேனத்தின்றன்பெடைவயிற்றிற்சென்று
வன்மைசால்குருளையாகிப்பிறந்தனர்வழக்கான்மன்னோ. (௧௰)

ஆனநாளொருநாளெல்லையரசருக்கரசனான
மீனவன்மதுரைநீங்கிமேற்றிசைக்கானநோக்கி
மானமாவேட்டஞ்செய்வான்மத்தமாவுகைத்துத்தண்டாச்
சேனைதன்புறம்பேமொய்ப்பச்செல்கின்றான்செல்லுமெல்லை. (௧௧)

மாவழங்கிடங்கடோரவல்லதோல்வன்காலொற்றர்
பாவடிச்சுவடுபற்றிப்படர்ந்துநாறழல்புலால்வாய்த்
தீவிழியுழுவையேனந்திரிமருப்பிரலைபுல்வாய்
மேவிடனறிந்துவல்லேவிரைந்துவந்தெதிரேசொன்னார். (௧௨)

மறந்துறைவேட்டமாக்கள்வல்லைபோயொடியெறிந்து
புறந்தவார்வலைகள்போக்கிகாயதன்புறம்புபோர்ப்ப
சிறைத்துமாவொதுக்கிநீட்டும்படைஞராய்க்கிளைசூழ்நிற்ப
வறந்துறைமாறுக்கோலானீனமேல்கொண்டுநிற்ப. (௧௩)

சில்லரித்துடிகோடெங்குஞ்செவிடுறச்சிலையாநிற்பப்
பலவகைப்பார்வைகாட்டிப்பயில்விளியிசையாநிற்பர்
வல்லியமிரலைமையன்மானினம்வெருளாநிற்ப
வில்லிறவலித்துவாங்கிமீளிவெங்கணைகடேர்த்தார். (௧௪)

கலிநிலைத்துறை.

செறிந்தமான்முறிந்ததாள்சிதைந்தசென்னிசெம்புனற்
பறிந்தவாறுவெண்ணிணம்பரிந்துவீசுகையிறு
மறிந்தவேழுயர்ந்தவேழமாண்டவெண்குவல்லியம்
பிறிந்தவாவிபோடும்வாய்பிளந்தவாய்விழுந்தவே. (௧௫)

தொட்டபுண்கிழங்குவாடைதொடர்ந்துகண்ணியுட்
பட்டவும்பொறித்துவைத்தபார்வைவீழ்ந்தநந்தவும்
கட்டியிட்டவலைபிழைத்துஞமலிகௌவநின்றவு
மட்டிலாதவொட்டிநின்றுமள்ளர்வேலின்மாய்ந்தவே. (௧௬)

பட்டமாவொழிந்துநின்றமறவிலங்குபல்சில
வட்டமாவளைந்தடுத்தவலையினுந்தியப்புறத்
தெட்டிநின்றகொலைஞர்மேலெதிர்ந்துமீள்வெயில்வனந்
தொட்டிஞரைமலையுமாப்பொறிக்கணங்களொத்தவே. (௧௭)

வல்லியந்தொலைத்தகன்றுமான்றொலைத்தகன்றுவெங்
கல்லியக்குமேனமீனைத்தொலைத்தகன்றுகையவுவாய்
வெல்லியர்தொலைத்துமன்னர்விட்டவாளியிங்ஙனஞ்
சொல்லினுங்கடுந்துபோய்த்துணித்தமாவளப்பில. (௧௮)

மடுத்தவாளியிற்பிழைத்துவலையைமுட்டியப்புறத்
தடுத்தமானைவௌவிநாயலைத்துநின்றவாதிகா
ருடுத்தபாசவலையினின்றுமுய்குவாரையொய்யெனத்
தடுத்தவாவிலைத்துநின்றதையலாரையொத்தவே. (௧௯)

மதியைநேர்வகிர்ந்துகௌவியனையவான்மருப்புவெங்
கதியவேழமீதுதாதுகானுநீலமுகையினி
னுதியவேலுழைத்தசெம்புணூழில்வீழுமுதிரநீர்
முதியகானவரையின்மீதுமொய்த்ததீயையொத்தவே. (௨௦)

மள்ளரோசைதுடியினோசைவயிரினோசைவாளியோய்த்
தள்ளவீழ்விலங்கினோசைதப்பியோடுமானின்மேற்
றுள்ளுநாய்குரைக்குமோசைகானமூடுதொக்குவா
னுள்ளுலாயுடன்றொலிக்குமுருமினோசைபுரையுமால். (௨௧)

இன்னவேறுபல்விலங்கெலாமலைத்திலக்குவேன்
மன்னரோறுதென்னர்கோமகன்குடக்கினேகுவா
னன்னபோதொரேனமேனவரசிருக்குமடவிவாய்
முன்னரோடிவந்துநின்றுவந்தசெய்திமொழியுமால். (௨௨)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

எங்களுக்கரசேகேட்டியிங்குளவிருகமெல்லாந்
திங்களுக்கரசன்கொன்றுவருகின்றானென்றுசெப்ப
வெங்களிப்படைந்துபன்றிவேந்தனுமடுபோராற்றச்
சங்கையுற்றெழுந்துபோவான்றன்னுயிர்ப்பெடையைநோக்கா. (௨௩)

இன்றுயாண்டியனைநேரிட்டிருஞ்சமராடிவென்று
வன்றிறல்வாகையேறுவருகுவனேயோவென்றிப்
பொன்றுவனேயோநீயுன்புதல்வரைப்பாதுகாத்து
நன்றிவணிருத்தியென்னநங்கைப்பேடின்னகூறும். (௨௪)

ஆவியங்கேகவிந்தவாகமிங்கிருப்பதேயிப்
பாவியோமேனுளிந்தப்பறழினைவருத்ததெய்வ
மாவமராடிவென்றுவருதியேல்வருவேனன்றி
நீவிளிந்திடத்துமாயவேனிழதுக்குஞ்செயல்வேறுண்டோ. (௨௫)

போதுகமெழுகவென்னப்பொருக்கெனவெழுந்துநீலத்
தாதுறழேனப்பாட்டிதன்புடைதழுவிச்செல்லும்
பேதுறுபறழைநாக்கிப்பின்றொடர்ந்தணைந்துசெல்லக்
காதெயிற்றெறுழிவேந்தன்காலெனநடந்தானன்றே. (௨௬)

பல்வகைச்சாதியுள்ளபன்றியின்கணங்களெல்லாம்
வெல்படைத்தறுகட்சேனைவீரராய்முன்புசெல்லச்
செல்லெனத்தெழித்துச்செங்கட்டியுகமானமென்னு
மல்லல்வாம்புரவிமேல்கொண்டெழுந்தனன்வராகவீரன். (௨௭)

முற்படுதூசியாகநடக்கின்றமுரட்காற்பன்றி
யிற்படுசேனைநேரோவருகின்றமன்னர்மன்னன்
வெற்படுதடந்தோள்வன்றாள்வீரர்மேற்சீறிச்செல்லப்
பிற்படவொதுங்கிவீரர்பெய்தனரப்புமாரி. (௨௮)

சொரிந்தனசோரிவெள்ளஞ்சொரிந்தனவீழ்ந்தயாக்கை
சரிந்தனகுடர்களென்புதகர்ந்தனவழும்புமூளை
பரிந்தனசேனங்காகம்படர்ந்தனவுயிருமெய்யும்
பிரிந்தனவேனநின்றபிறைமருப்பேனவீரர். (௨௯)

பதைத்தனரெரியிற்சீறிப்பஞ்சவன்படைமேற்பாய்ந்து
சிதைத்தனர்சிலரைத்தள்ளிச்செம்புனல்வாயிற்சோர
வுதைத்தனர்சிலரைவீட்டியுரம்புதைபடக்கோடூன்றி
வதைத்தனர்சிலரைநேரேவகிர்ந்தனர்சிலரைமாதோ. (௩௦)

தாள்சிதைந்தாருஞ்சில்லோர்தலைசிதைந்தாருஞ்சில்லோர்
தோள்சிதைந்தாருஞ்சில்லோர்தொடைசிதைந்தாருஞ்சில்லோர்
வாள்சிதைந்தாருஞ்சில்லோர்வரையறுத்தலரோனீட்டு
நாள்சிதைந்தாருஞ்சில்லோர்நராதிபன்சேனைவீரர். (௩௧)

கண்டனர்கன்னிநாடுகாவலனமைச்சர்சீற்றங்
கொண்டனர்முசலநேமிகூற்றெனவீசியார்த்தார்
விண்டனர்மாண்டார்சேனைவீரருமனையவெல்லைப்
புண்டவழெயிற்றுவேந்தைப்புடைநின்றபேடைநோக்கா. (௩௨)

ஏவியசேனையெல்லாமிறந்தனவினிநாஞ்செய்ய
லாவதென்வாளாநாமுமழிவதிங்கெனைத்தப்பிப்
போவதேகருமமென்றுபுகன்றதத்துணையைநோக்கிச்
சாவதையஞ்சாவேனத்தனியரசொன்றுசாற்றும். (௩௩)

நுண்ணறிவுடையராகிநூலொடுபழகினாலும்
பெண்ணறிவென்பதெல்லாம்பேதைமைத்தாதலாலுன்
கண்ணறிவுடைமைக்கேற்றகாரியமுரைத்தாய்மான
மெண்ணறிவுடையோர்க்கெல்லாமிழுக்குடைத்தன்றேயீதால். (௩௪)

ஆங்கிருள்வழுவாய்ச்சிங்கமிரண்டுறைதுறையின்மாடோர்
வாங்கிருமருப்புக்கேழல்வந்துநீர்பருகிமீளும்
வீங்கிருளுடற்காரேனமொன்றுறைதுறையில்வீரன்
தாங்கிருமடங்கனீர்க்குத்தலைப்படவஞ்சமன்றே. (௩௫)

அத்திடமரபின்வந்துபிறந்துளேனுதலாலே
கைத்திடுதாரான்வீரங்கவர்ந்திசைதிசையும்வானும்
வைத்திடவல்லேனன்றிமடிந்திடவல்லேனுகிற்
பொய்த்திடுமுடம்பேயன்றிப்புகழுடம்பழிவதுண்டோ. (௩௬)

கலித்துறை.

நீங்கல்லெனத்தன்பெடைதன்னைநிறுத்திநேர்த்தென்
கானில்லெனவாழ்கருமாவின்கணங்களெல்லா
மூனில்லுயிருண்டனமென்றினியோடல்கூடற்
கோனில்லெனவார்ப்பவன்போலக்கொதித்துநேர்ந்தான். (௩௭)

நிலத்தைக்கிளைத்துப்பிலங்காட்டிநிமிர்ந்ததுள்வான்
றலத்தைப்புதைப்பத்தனியேனவரவுநோக்கி
வலத்தைப்புகழ்ந்தான்வியந்தான்சிலைவாங்கிவாளிக்
குலத்தைச்சொரிந்தான்பொருனைத்துறைக்கொற்கைவேந்தன். (௩௮)

குறித்துச்செழியன்விடுவாளியைக்கோலவேந்தன்
பறித்துச்சிலவாளியைவாய்கொடுபைம்புலென்னக்
கறித்துச்சிலவாளியைக்கால்கொடுதேய்த்துத்தேய்த்து
முறித்துச்சிலவாளியைவாலின்முறித்துநின்றான். (௩௯)

மானம்பொருதுமதியின்வழிவந்தவேந்தன்
றானம்பொருதுகவிழ்க்கும்புகர்த்தந்திகையி
லூனம்பொருதமுசலங்கொடுத்தேறியுய்த்தா
னேனம்பொருதார்த்திடியேற்றினெழுந்ததன்றே. (௪0)

தந்திப்பொருப்பைத்துணிக்கென்றுதழன்றுசீற்ற
முந்திக்கதலிக்கொழுந்தன்னெனவூசற்கையைச்
சிந்திப்பிறைவாளெயிற்றேச்சிதைத்துவீட்ட
முந்திக்கடுந்தேர்மிசைப்பாய்ந்தனனேரித்தாரான். (௪௧)

திண்டேர்மிசைநின்றடனேமிதிரித்துவிட்டா
னுண்டேனவேந்தன்விலக்கிக்கடுங்காலிற்பாய்ந்து
தண்டேருடையத்தகர்த்தான்பரிதன்னிற்பாய்ந்து
வண்டேறுதாரான்விடவேலைவலந்திரித்தான். (௪௨)

சத்திப்படைமேல்விடுமுன்னர்த்தறுகண்வீரன்
பத்திச்சுடர்மாமணித்தார்ப்பரிமாவின்பின்போய்
மொத்திக்குடர்செம்புனல்சோரமுடுகிக்கோட்டாற்
குத்திச்செருத்தான்பொறுத்தானலன்கூடல்வேந்தன். (௪௩)

மண்ணிற்குதித்துவலிகண்டுவராகவேந்தை
யண்ணித்தலையிற்புடைத்தான்கையிருப்புத்தண்டாற்
புண்ணிற்படுசெம்புனலாறுபுடவிபோர்ப்ப
விண்ணிற்புகுந்தான்சுடர்வீறுவிமானமேலால். (௪௪)

வேனிற்கிழவோனில்விளங்கிவியந்துவானோர்
தேனிற்பொழிபூமழைபெய்யகனைந்துதெய்வக்
கானத்தமுதுண்டிருகாதுகளித்துவீர
வானத்தமுதுண்டரமங்கையர்கொங்கைசேர்ந்தான். (௪௫)

கலிவிருத்தம்.

பின்றுணையாயபெடைத்தனியேன
மென்றுணைமாயவிருப்பதுகற்போ
வென்றிலனேனும்விசும்படைவேனு
மென்றிகல்வேந்தையெதிர்த்ததுருத்தே. (௪௬)

வீறனவில்பேட்டைவிளிப்பதுவேந்தர்க்
கறனல்வென்றவனுள்வினைமள்ளர்க்
கிறைமகனுலசருச்சரனென்றோர்
மறமகனோர்ந்தமராடவளைந்தான். (௪௭)

கனிவொழுதாடமராடினனஞ்சிற்
கனிசினவன்பெடைகாய்சினவேடத்
தனிமகனைத்தரைவீட்டினதாற்ற
லினியிலையென்னவிளைத்துயிர்சோர்வான். (௪௮)

இரும்புசெய்தண்டினையிம்மெனவோச்சிப்
பொரும்படைசென்னிபுடைத்துவிளிந்தான்
விருந்தினராயிருவோரும்விமானத்
தருந்திறல்வானமடைந்தனரன்றே. (௪௯)

வன்றிறன்மன்னவர்மன்னவனுந்தன்
பொன்றிகழ்மாநகர்புக்கனனிப்பாற்
பன்றிவிழுந்துபருப்பதமாகா
நின்றதுபன்றிநெடுங்கிரியென்ன. (௫0)

அன்றுதொடுத்தநிலக்கதுபோரா
யின்றும்வழங்குவதிம்பரிலந்தக்
குன்றிலருந்தவர்விஞ்சையர்கோபம்
வென்றவரொண்ணிலர்வீடுறநோற்பார். (௫௧)

கலிநிலைத்துறை.

என்றுகூறியவருந்தமிழ்க்கிறைவனைநோக்கித்
துன்றுமாதவரறிவிலாச்சூகரவுருவக்
குன்றின்மீதருந்தவமொலாங்கோதறநோற்று
நின்றகாரணம்யாதெனக்குறுமுனிநிகழ்த்தும். (௫௨)

வேனில்வேளனவிளங்குவிச்சாதரனென்னுந்
தானையாழ்மகன்புலத்தியன்றவத்திறுக்கிடையூ
றுனபரன்செயப்பன்றியாச்சபித்தனனறவோ
னேனமாகுவோனுய்வதென்றெனக்கெனமுனிவன். (௫௩)

மன்னர்மன்னருந்தென்னவன்வந்துநின்வனத்திற்
றுன்னுபல்வகைவிலங்கெலாந்தொலைத்துனைமாய்க்கும்
பின்னரிவ்வுருப்பெறுகெனப்பணித்தனனியக்க
னன்னவாறுவந்திறந்துபின்பழவுருவடைந்தான். (௫௪)

ஆயபுண்ணியவிஞ்சையனுகமாய்க்கிடந்த
வாயதீரதாலவ்வரைமீமிசைத்துறந்த
பாயகேள்வியரிறைகொளப்பட்டதெவ்வுயிர்க்கு
நாயனார்மதுரேசருநயந்தவனுறைவார். (௫௫)

என்றகத்தியன்விடைகொடுத்தியம்பினனிப்பாற்
பன்றியேற்றையும்பாட்டியும்மைம்புனத்திட்டுச்
சென்றவித்தபின்பன்னிருகுருளையுந்திகைப்புற்
றன்றலக்கணேயுழந்தமையாரளந்துரைப்பார். (௫௬)

ஓடுகின்றனதெருமாலுறுவனநிழலைத்
தேடுகின்றனதாய்முலைத்தீயபால்வேட்டு
வாடுகின்றனதாகவெம்பசிநனிவருத்த
வீடுகின்றனவெயில்சுடவெதும்புகின்றனவால். (௫௭)

இன்னவாறிவையணங்குறுமெல்லைவேல்வல்ல
தென்னராகியதேவர்கடேவரங்கயற்கண்
மின்னுளொடுமின்னவிர்விமானமீதேறி
யன்னகானகத்திச்சையாலாடல்செய்திருந்தார். (௫௮)

ஏனமென்பறழுறுகணேய்க்கிரங்கினுரிச்சை
யானவன்புதந்தத்துயரகற்றுவானின்ற
மானவன்புடைப்பேடையின்வடிவெடுத்தயருங்
கானவன்பறழ்கலங்கனுர்கலங்கசேர்வந்தார். (௫௯)

இட்டுகின்றதந்தாயெதிர்குட்டியுங்கிட்டி
யூட்டுகின்றனமொய்ப்பனமுதுகுறத்தாவி
யெட்டுகின்றனகால்விசைத்தெறிவனநிலத்தை
வெட்டுகின்றனகுதிப்பனவோடுவமீள்வ. (௬௦)

ஏனமின்னமுங்காண்பரிதாகியவேன
மானமெய்ம்மயிர்முகிழ்த்திடத்தழுவிமோந்தருளின்
மானமென்முலையருத்திமாவலனும்வன்றிறனு
ஞானமும்பெருந்தகையுநற்குணங்களுநல்கா. (௬௧)

அங்கமாமுகமொன்றுமேசூகரமுகமா
வங்கம்யாவையுமானிடயாக்கையவாக்கிக்
கங்கைநாயகன்கடவுளர்நாயகன்கயற்கண்
மங்கைநாயகன்கருணையாந்திருவுருமறைந்தான். (௬௨)

இம்மையிப்பவத்தன்னையாயினிவருபவமுஞ்
செம்மைசெய்தசேதனத்தையுஞ்சேதனஞ்செய்தா
ரெம்மையெப்பவத்தாயினுமெனைப்பலவுயிர்க்கு
மம்மையப்பராய்க்காப்பவரவரலாலெவரே. (௬௩)

பன்றிக்குட்டிக்கு முலைகொடுத்தபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் - ௫௪ - க்கு - திருவிருத்தம் - ௨௨௫௫.

நாற்பத்தாறாவது.

பன்றிக்குட்டிகளைமந்திரிகளாக்கியபடலம்.

கலிநிலைத்துறை.

தந்தைதாயிழந்தலமருங்குருளையைத்தாயாய்
வந்துநாயகன்முலைகொடுத்தருளியவகையீ
தந்தவாறிருமைந்தருமந்திராகி
யெந்தையார்சிவபுரம்புகுந்திருந்தவாறிசைப்பாம். (௧)

ஆதிநாயகன்றிருவுருமறைந்தபினனைய
கோதிலாதிரண்டேனமாக்குமரருங்காலைச்
சோதியாதிரண்டருக்கர்போற்றோன்றியப்பொருப்பி
லோதியாய்ந்தபல்கலைஞராயொருங்குவீற்றிருந்தார். (௨)

அனையராயவர்வைகுநாளறைபுனற்கூடற்
புனிதநாயகனருட்டிறமுயிர்க்கெலாம்பொதுவா
யினியவாவனவென்பதையாவருந்தேற
வனிதைபான்மொழிமங்கைதன்மணாளனைவினவும். (௩)

வெவ்வினைக்கிறும்வெய்யவாயசேதனவிலங்கா
மிவ்விலங்கெயிற்றேனமென்குருளைகட்கிரங்கிக்
கைவிலங்கினையெய்தநீகருணையாய்முலைதந்
திவ்விலங்குறிவகற்றியதியாதெனவிறைவன். (௪)

அகிலவேதமுமாகமபேதமுநம்மைச்
சகலசீவதயாபரனென்றுரைசால்பா
லிகலில்சேதனமசேதனமாகியவிரண்டும்
புகலில்வேறலவெமக்கவைபொதுமையவதனால். (௫)

தாயிழந்துவெம்பசித்தழலகஞ்சுடத்தழன்று
காயுமாதபம்புறஞ்சுடக்கானிடைக்கிடந்து
தீயுமேனமென்குருளைகடெருமரவிரங்கி
யாயுமாமுலையளித்துயிரளித்தனமதனால். (௬)

அளவிலாற்றலுக்கிறனுகல்லரும்பெறற்கல்வி
விளைவுஞானமுங்கிடைத்தனர்மீனவற்கினிமேல்
வளைவிலாதகோலமைச்சராய்வளம்பலபெருக்கிக்
களைவில்பாசநீத்தெம்பெருங்கணத்தவராவார். (௭)

என்றுநாயகனுமைக்கிறைகொடுத்தியம்பி
யன்றுமீனவன்கனவில்வந்தரசகேள்பன்றிக்
குன்றிலேனமாமுகத்தராய்ப்பன்னிருகுமரர்
வென்றிவீரராய்வைகுநர்மிக்கறிவுடையார். (௮)

அவரைநின்கடைக்கமைச்சராக்கோடியென்றனனிச்
சிவபரஞ்சுடரருள்செயச்செழியர்கோவேந்தன்
கவலருங்களிப்புடையனாய்க்கண்மலர்ந்தெழுமான்
றவழ்கெழுந்திரைக்கருங்கடறத்திநீங்கெல்லை. (௯)

மாண்டகேள்விசான்மந்திரர்க்குணர்த்தியம்மலைமேற்
காண்டகேனமாவீரரைக்கொணர்கெனக்கருணை
பூண்டகாவலனமைச்சரும்போயவர்க்கண்டு
வேண்டவீரருமீண்டினார்மீனவன்றிருமுன். (௧௦)

[illegible]ங்கிறைஞ்சியவராகமாமைந்தரைநோக்கண்
[illegible]டந்தமிலிகளிப்படைந்துவேந்தமைச்சியற்கிழமை
தந்துவேறுபல்வரிசையுந்தக்கவாநல்கிக்
கந்துசீறியகடகரிக்கைதவன்பின்னர். (௧௧)

பழையமந்திரக்கிழார்மடப்பாவைபோல்வாரை
விழவுசால்கடிமங்கலம்விதியினாற்புணர்த்தி
யழகிதாமெனநடத்தினனனையரும்வீரக்
கழலினாற்கொருகவயமுங்கண்ணுமாய்நடப்பார். (௧௨)

கலித்துறை.

உடம்பாறிரண்டிற்குயிரொன்றெனவொன்றியைவாய்
விடம்பாயரவம்விழுங்கும்பிறையொத்துசெஞ்சந்
திடம்பாடுகொள்ளவினைவாங்கிச்செழியன்கல்வி
யிடம்பாடுநல்கும்பயன்போன்மகிழ்வெய்தநின்றார். (௧௩)

கல்லாவின்பாலினுந்தேன்கலந்தென்னப்பண்ணூல்
வல்லாருமாகிமதிநுட்பருமாகிச்சோர்வில்
சொல்லாலடையார்மனமுங்கவர்தாங்கச்சொல்லிப்
பல்லார்பிறர்சொற்பயனுய்த்துணரவல்லார். (௧௪)

பழையேயிறைபூழ்கொளப்பட்டமென்றேமாட்பெய்தா
ருழையேவல்செய்யுஞ்சிறார்போலவொதுங்கிவேகத்தன்
விழைவேதனைவிடம்போலவெறுத்துவெஃகா
ரழல்போலணுகாரகலார்கிழவன்னனேரார். (௧௫)

மறுக்குஞ்செயனீத்துகடக்கையின்வையத்தோரை
யொறுக்கும்பொருளும்பணிகேட்கையினுன்னலார்ச்
செறுக்கும்பொருளுங்கவரார்விழைசெல்வயர்க்க
ளிறுக்கும்பொருளேயிறைவற்கிவரீட்டுஞ்செல்வம். (௧௬)

மறத்தானவேலான்மனக்கொள்கைதன்னெஞ்சின்வான
நிறத்தாடிநீழலெனத்தோற்றநிறுத்துமற்ற
தறத்தாறெனிலாற்றுவரன்றெனிலாக்கமாவி
யிறந்தாள்வரினுமனத்தானுமிழைக்கவொண்ணார். (௧௭)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

இன்னவா றொழுகும் பன்னிரு வோரு மீகையுந் தருமமும் புக
ழுந், தென்னர்கோ மகற்கு வைகலும் பெருகத் திசையெலாம் விச

யமுண் டாக்கிப், பன்னகா பரணன் சிவபுர மடைந்து பரன்கணை
காதருட் கலந்து, மண்ணிவீற் றிருந்தார் மன்னர் மன்னவனும் வானப
பதமடைந்து வீற்றிருந்தான். (௧அ)

பன்றிக்குட்டிகளைமந்திரிகளாக்கியபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் - ௪௬-க்கு - திருவிருத்தம் - ௨௨௭௩.

நாற்பத்தேழாவது

கரிக்குருவிக்கு உபதேசஞ்செய்தபடலம்.

கொச்சகக்கலிப்பா.

வரிக்குருகிப்பத்திரற்குப்பலகையிட்டமணிகண்ட
னரிக்குருளைவடிவானவடல்வீரர்க்கரசன்பார்
பரிக்குமமைச்சியலளித்தபரிசுரைத்தாம்பசுபதியாற்
கரிக்குருவிகுருமொழிகேட்டருளடைந்தகதைபகர்வாம். (௧)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

மன்னவனிராசராசன்வானவர்க்கரசனனை
பின்னவன்குமாரனனபெருவலிமடங்கலன்னான்
முன்னலரடுபோர்சாய்க்குஞ்சுகுணபாண்டியனீர்ஞால
மின்னதீர்த்தறக்கோலோச்சியீர்ங்குடைநிழற்றுநாளில். (௨)

ஆற்றல்சாலொருவன்மேனுளாற்றவுமறனேயாற்றி
மாற்றமில்சிறிதுயாவருஞ்செய்ததன்வலத்தால்வந்து
தேற்றமில்கயவாயாகிச்செனித்தலாற்காகமாதி
கூற்றெனவாற்றஞ்செய்யக்குருதிசோர்தலையதாகி. (௩)

புட்குலாமெனிதாயூறுபாடஞ்சிப்புரத்துன்வைகி
யுட்கிகீள்வனத்துட்போகிவழிமருங்கொருசாரிற்கும்
கட்கவிழ்ந்தொழுகப்பூத்தகவிழிணர்மாமேல்வைகி
வெட்கமீதூரச்சாம்பிவெய்துயிர்த்திருக்குமெல்லை. (௪)

விடையவனீறுபூசுமெய்யவன்பூண்டகண்டித்
தொடையவன்புறம்புமுள்ளருக்காயவன்குடையுங்கையி
லுடையவன்றருமதீர்த்தயாத்திரையொழுக்கம்பூண்ட
கடையவனொருவன்றகுறுந்தருகிழலிற்சார்ந்தான். (௫)

இருந்தவன்சிலரைநோக்கியெம்புவானெவர்க்கும்பேறு
தருந்தலந்தீர்த்தமூர்த்திதன்மையிற்சிறந்தவன்பு
வருந்தமிழ்மதுரைபொற்றாமரைத்தடஞ்சுந்தரேசப்
பெருந்தகையென்றுசான்றோர்பேசுவாரதலாலே. (௬)

ஓரிடத்திவையமூன்றுவிழுப்பமுமுள்ளதாகப்
பாரிடத்தில்லையேனைப்பதியிடத்தொன்றேயென்றுஞ்
சீருடைத்தாகுங்கூடற்செழுநகரிடத்தம்மூன்றும்
பேருடைத்தாகுமென்றுதப்பிறிதொருபதியாதென்றான். (௭)

இம்மதுரேசன்சேவித்தேத்துவோர்க்கெளியனாகிக்
கைம்மலர்நெல்லிபோலக்கருதியவரங்களெல்லா
மிம்மையினுடனேநல்குமேனையதலத்துவாழ்வோ
ரம்மையினன்றிநல்காரதலாலதிகனென்றான். (௮)

மற்றதுகேட்டுக்கொம்பர்வைகியகயவாய்ஞானம்
பெற்றதுபறவையாகிப்பிறந்தும்பிறவுந்தேற்ற
முற்றதுநாமிச்சன்மமொழிப்பதற்கறவோனிங்ஙன்
சொற்றதேயுறுதியென்றுதுணிவுகொண்டெழுந்ததன்றே. (௯)

ஆய்மலர்க்கானநீங்கியாடகமாடக்கூடற்
போய்மலர்க்கனகஞ்சப்புண்ணியப்புனறோய்ந்தாம்பல்
வாய்மலர்க்கயனுண்கண்ணன்மணாளனைவலஞ்செய்தன்பிற்
றோய்மலர்க்கழலினனையகத்திறைற்றொழுதர்ச்சித்தே. (௧௰)

இன்னணமூன்றுவைகல்கழிந்தபினெம்பிராட்டி
தன்னமர்காதலானைத்தாழ்ந்தெதிர்நோக்கியைய
வென்னையிக்கயவாய்செய்யுஞ்செயலிதன்வரவியாதென்ன
முன்னவனதன்றன்செய்திவரவெலாமுறையாற்கூறு. (௧௧)

பத்திமைவியமம்பூண்டபறவைமேற்கருணைநாட்டம்
வைத்திமையாதமுக்கண்மறைமுதலொருசேய்க்கன்று
சித்தியகினமைநல்கிநேர்ந்தவெங்கூற்றைக்காய்ந்த
சத்தியஞானமித்திஞ்சயத்தினையுபதேசித்தான். (௧௨)

கலிவிருத்தம்.

உவமையற்றவனுணர்த்தமந்திரஞ்
செவிமடுத்ததுஞ்சிற்றுணர்ச்சிபோய்ப்
பவமகற்றிடப்படுகரிக்குரீஇக்
கவலைவிட்டரன்கழல்வழுத்துமால். (௧௩)

எண்ணிலாவுயிர்க்கிறைவபோற்றிவான்
றண்ணிலாமதிச்சடிலபோற்றியென்
புண்ணியப்பயன்போற்றியங்கயற்
கண்ணிநாதநின்கருணைபோற்றியால். (௧௪)

தெளிதலின்றியேசெய்ததீமையால்
விளியுமென்னையுமாளல்வேண்டுமோ
வெளியவொங்குளாரென்றுதேர்ந்துதேர்ந்
தளியையாவதுன்னருளின்வண்ணமே. (௧௫)

உம்மைகல்லறமுடையசீர்மையா
லிம்மையிம்மனுவியம்பினுயிது
வம்மைகன்னெறிக்கேதுவாதலான்
மும்மையுக்கலமுடையமொய்ம்பினேன். (௧௬)

ஆயினும்மெனக்கையவோர்குறை
தீயபுள்ளெலாமூறுசெய்தெனைக்
காயுமானமுங்கழியக்கண்டயே
ரேயெனும்படிக்கெளியனாயினேன். (௧௭)

என்னவக்குரீஇயியம்பவெம்பிரா
னன்னபுட்கெலாம்வலியையாகெனப்
பின்னுமக்குரீஇத்தாழ்ந்துபேதையேற்
கின்னுமோர்வரந்தருதியென்றதால். (௧௮)

வலியையென்பதென்மரபினுக்கெலாம்
பொலியவேண்டுமெய்போதநீசொன
வொலியமந்திரமோதியோதிநாங்
கலியைவெல்லவுங்கருணைசெய்கென. (௧௯)

ஆவதாகவென்றமரநாயகன்
மூவெழுத்தினுன்முடிந்தவம்மனு
தாவிறெய்வதமிருடிசந்தமோ
டோவிலோசைமூன்றொடுதெருட்டினான். (௨௰)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

குருமொழிபயின்றமுள்வாய்க்குருவிதன்குலனுந்தன்போ
லருமறைமுதல்வனீந்தவாற்றலாற்பறவைக்கெல்லாம்
பெருமைசால்வலியானென்னும்பெயரவாயுலகின்மன்னக்
கருமணிகண்டன்செம்பொற்கனைகழலடிசேர்ந்தன்றே. (௨௧)

இக்கரிக்குருவிதானேற்றெய்தியவரத்தைத்தன்போ
லொக்கலுமெளிதாவெய்தப்பெற்றதாலுலகின்மேன்மை
தக்கவனொருவன்வாழத்தன்கிளைவாழ்வதென்ன
மிக்கவரெடுத்துக்கூறும்பழமொழிவிளங்கிற்றன்றே. (௨௨)

மேற்படி வேறு.

ஈசனடிக்கன்பில்லார்போலெளியாரில்லையாவர்க்கு
மீசனடிக்கன்புடையார்போல்வலியாரில்லையாவர்க்கு
மீசனடிக்கன்பின்மையினாலெளிதாய்த்திரிந்தவிக்கயவா
யீசனடிக்கன்புடைமையினால்வலிதாயிற்றேயெவ்வுயிர்க்கும். (௨௩)

கரிக்குருவிக் குபதேசஞ்செய்தபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் - ௫௧ - க்கு - திருவிருத்தம் - ௨௬௧௧.

நாற்பத்தெட்டாவது

நாரைக்கு முத்திகொடுத்தபடலம்.

கலிவிருத்தம்.

அத்திதந்தவிமானமழகியார்
பத்திதந்துபறவைக்குமந்திர
சித்திதந்ததிறனிதுநாரைக்கு
முத்திதந்தகருணைமொழிகுவாம். (௧)

தெக்குநீர்வையைநாட்டொருதென்புலத்
தாக்குமாடவைப்பொன்றுளதவ்வயில்
வீக்குமியாழ்செயும்வண்டுக்குவீழ்கற
வாக்குதாமரைவாவியொன்றுள்ளதால். (௨)

ஆழமிக்கவயர்ந்தலையத்தலை
வாழுமீனமனைத்தையும்வாய்ப்பெய்து
சூழகத்துமுத்திறுத்துறைக்கணே
தாழ்வதோர்செய்யதாண்மடநாரையே. (௩)

சிறியகான்மழையின்றியச்சேயிதழ்
வெறியதாமரையோடைவியன்கரை
யிறைகொளுறையிருவினைப்பௌவமும்
வறியதாகிவறப்பவறந்ததால். (௪)

நுரைசெறித்தனவோன்சிறைநாரையு
மிரைவிரும்பியவாவியிகந்தொரீஇ
விரையவந்தொருகானிடைவீழ்ந்ததாற்
புரையிலோர்க்கிடனாகுமப்பொங்கர்வாய். (௫)

முத்தரானமுனிவர்குழாத்தொடுஞ்
சுத்தவானந்தவாரியுட்டோய்ந்துதன்
சித்தமாசகழீஇச்சிவமாகிய
சத்தியத்தவமாமுனிதங்குமால். (௬)

கூப்பிடெல்லைகுணித்துச்சதுரமா
யாப்பமைந்தசுற்றெங்கும்படித்துறைக்
கோப்பமைந்துகுளிர்சலியாமயங்
காப்பமைந்தோர்கயந்தலையுள்ளதால். (௭)

விரைசெய்சண்பகம்பாதிரிவேங்கைதே
னிரைசெய்வஞ்சியிலஞ்சிகுராமரா
நிரைசெய்கிஞ்சுகநீண்மருதாதியா
வுரைசெய்பன்மரமும்புறத்துள்ளவால். (௮)

அந்தவாவியின்பேரதோதீர்த்தமென்
றிந்துசாலயியம்புவதாலினை
யுந்தவாவுகொடுக்கவெழுந்துமுன்
வந்தகாரையதன்கரைவைகுமால். (௯)

ஆய்ந்தமாதவரப்புனிதத்தடந்
தோய்ந்துதோய்ந்தங்கெழுந்தொறுந்தோட்புறஞ்
சாய்ந்தவார்சடைக்கற்றையிற்றதுமீன்
பாய்ந்துபாய்ந்துபுரள்வனபார்த்தரோ. (௧௰)

எண்டையித்தவத்தோர்திருமேனியைத்
தீண்டவேத்தவஞ்செய்தனவேகொலென்
றுண்டைமீனமக்காரவெனவினை
வேண்டுகாரைவெறுத்தங்கிருந்ததால். (௧௧)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

தன்னிகர்தவத்தோர்யாருந்தடம்படிந்தேறிநித்த
மன்னியகருமமுற்றிச்சந்தியாமடத்தில்வைகி
மின்னியமகுடஞ்சூடிவேந்தனையுலகங்காத்த
பொன்னியற்சடையான்கூடற்புராணநூலோதுகின்றார். (௧௨)

அண்ணலெம்பெருமான்செய்தவருள்விளையாட்டமோதிப்
பண்ணவன்சிறப்புக்கூடற்பதியின்சிறப்புந்தீர்த்தத்
தெண்ணருஞ்சிறப்புஞ்சேர்ந்தோர்க்கெளிவருமிறைவனென்னும்
வண்ணமுமெடுத்துக்கூறக்கேட்டதக்குவியுநாரை. (௧௩)

மடம்படுமறிவுநீங்கிவல்வினைப்பாசம்வீசித்
திடம்படுமறிவுசார்ந்துசிவபரஞ்சோதிபாதத்
திடம்படுமன்புவாவென்றீர்த்தெழவெழுந்துநாரை
தடம்படுமாடக்கூடற்றனிநகரடைந்துமாதோ. (௧௪)

வாங்கியதிரைசூழ்பொற்றாமரைபடிந்திமையாவேழந்
தாங்கியவிமானமேயதலைவனைத்தாழ்ந்துசூழ்ந்து
தேங்கியவருட்கணோக்கந்தெரிசித்துத்திருமுன்வைகி
யோங்கியகருணைமேனியுள்ளுறத்தியானஞ்செய்து. (௧௫)

இங்கிலேசியமமைவந்தெல்லைநான்றியன்றுயின்று
ளங்கிலையொழுநாளையாடகமலர்தோய்வான்
வன்னிலைமதில்சூழ்நகர்வந்துழிப்பசியால்வந்து
மின்னிலைவேல்போற்றுள்ளுமீன்கவர்ந்துண்குமென்று. (௧௬)

சிறிதுளத்துள்ளிநாதன்றிருவருள்வலந்தாற்பின்ன
ரறிவுவந்தச்சோவிந்நகரப்பெருந்தீர்த்தத்துள்ளே
யெறியுமீனருந்தவாசையெழுந்ததேயெனக்கிப்போதிப்
பிறவியென்றொழிவதென்றுப்பேரருளடைந்துபின்னும். (௧௭)

அந்தரச்செம்மல்பாதத்துணைமலரன்பிற்றோய்ந்து
சிந்தையைத்திருக்குமெல்லைத்தேவருமறையுஞ்செய்யும்
வந்தனைக்கரியானானமனமிலவடிவாய்த்தோன்றி
யெந்தமக்கினியாய்வேண்டும்வரமென்கொலியம்புகென்றான். (௧௮)

கலிவிருத்தம்.

செய்யகான்மடநாரையுஞ்சென்றுதாழ்ந்
தையனேயிப்பிறவியறுத்துநின்
மெய்யர்வாழ்சிவலோகத்தின்மேவிநா
னுய்யவேண்டுமொன்றின்னமுமுண்டரோ. (௧௯)

வள்ளலென்மரபுள்ளவுமற்றைய
புள்ளுமிந்தப்புனிதமலர்த்தடத்
துள்ளமீனுயிருண்ணினெக்காலமுந்
தள்ளொணுதப்பழிவந்துசாருமே. (௨௰)

என்றுமித்தடமீனிலவாகநீ
நன்றுசால்வரநல்கெனவெள்ளிமா
மன்றுளாளும்வரந்தந்துபோயினன்
சென்றுநாரைசிவலோகஞ்சேர்ந்ததால். (௨௧)

இயங்கவோர்துமியம்பவிமானமேற்
புயங்கனுங்குமுக்கண்களும்பொற்பவான்
வியங்கொள்பூமழைவெள்ளத்துளாழ்ந்துபோய்
வயங்கொணக்கிகணத்துள்வதிந்ததே. (௨௨)

அன்றுதொட்டின்றளவும்பொற்றாமரை
யென்றுரைக்குமெழின்மலரோடையிற்
சென்றுகைத்துத்திரிகின்றமீனலா
லொன்றுமற்றனநீர்வாழுயிர்களும். (௨௩)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

தன்கிளையன்றிவேற்றுப்பறவைகடாமுந்தன்போ
னன்கதியடையவேண்டிற்றேகொலிந்நாரைசெய்த
வன்பினில்வியப்போவீசனருளினில்வியப்போவன்பாக்
கின்புருவானவீசனன்பருக்கெளிதேதைய. (௨௪)

கலிவிருத்தம்.

மறக்குறும்புகளைக்கட்டுமண்ணின்மே
லறப்பெரும்பயிராக்கியதன்பயன்
சிறக்கநல்கிடவுண்டுசெருக்குவான்
றுறக்கமெய்தியிருந்தான்சுகுணனும். (௨௫)

நாரைக்கு முத்திகொடுத்தபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் - ௪௮ - க்கு - திருவிருத்தம் - ௨௩௨௧.

திருவாலவாய்க்காண்டம்.

நாற்பத்தோன்பதாவது

திருவாலவாயானபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

வாயுடையார்விடுத்தபழி யழல்வழுதி யுடல்குளிப்பப் பதிகமோ
தினுஞ், சேயுடையா ரணர்கிளக்குஞ் செவியுடையாரளவிறந்த திசை
களெட்டுந், தோயுடையார் பொன்னிதழித் தொடையுடையார்விடவ
ரவஞ் சுற்றுமால, வாயுடையார் புகழ்பாடப்பெறுவேமேல் வேண்டு
வதிம் மனிதயாக்கை. (௧)

வேதனெடுமாலாதிவிண்ணுடர்மண்ணுடர்விரதயோகர்
மாதவர்யாவருங்காணமணிமுறுவல்சிறிதரும்பிமாடக்கூட
லுதனிருதிருக்கரந்தொட்டம்மியின்மேல்வைத்தகயனுட்டச்செல்வி
பாதமலரொழுபிறவிக்கடனீந்தும்புணையென்பர்பற்றிலாதோர். (௨)

மேற்படி - வேறு.

இலவாய்மறைக்கேறுவொருவன்றன்னுலகந்தன்னைச்
சேலவாயுழலுநாரைக்கருளியசெயலீதம்ம
நீலவாய்மணிநேர்கண்டனெடியகான்மாடக்கூட
லாலவாயாகச்செய்தவருட்டிறமெடுத்துச்சொல்வாம். (௩)

சித்திரமேருவென்றதிரண்டதோட்சுகுணன்பின்பு
சித்திரவிரதன்சித்ரபூடணன்றின்பேர்வல்ல
சித்திரதுவசன்வென்றிச்சித்திரவருமன்வன்றோட்
சித்திரசேனன்சீர்சால்சித்ரவிக்கிரமனென்போன். (௪)

மணிகெழுதேரிராசமார்த்தாண்டனிராசசூடா
மணியணிமுடியிராசசார்த்தூலவழுதிசித்தா
மணிநிகர்துவிசராசகுலோத்தமன்மடங்காவென்றி
மணியிகழ்பொலம்பூணுயோதனப்பிரவீணன்மன்னே. (௫)

இயம்பருந்திறலிராசகுஞ்சரன்பரவிராச
பயங்கரன்கைக்கும்பைந்தாருக்கிரசேனன்பானாச
சயங்கெழுதோண்மேலோனாசத்துருஞ்சயன்வீமத்தேர்
வயங்கெழுமன்னன்வீமபராக்கிரமவழுதிமாதோ. (௬)

பெய்வளைவிந்தைசேர்ந்தபிரதாபமார்த்தாண்டப்போர்த்
தெவ்வடுசிலையான்றேர்விக்கிரமகஞ்சுகன்றோரார்போர்
வெளவியசமரகோலாகலனெனும்வாகைவேலா
னவ்வியமவித்தசிந்தையதுலவிக்கிரமனென்போன். (எ)
எழில்புனையதுலகீர்த்தியெனவிருபத்திரண்டு
வழிவழிமைந்தராகிவையகங்காத்தவேந்தர்
பழிதவிரதுலகீர்த்திபாண்டியன்றன்பாலின்பம்
பொழிதரவுதித்தகீர்த்திபூடணன்புரக்குநாளில். (அ)
கருங்கடலேழுங்காவுங்கரைகடந்தார்த்துப்பொங்கி
யொருங்கெழுந்துருத்துச்சீறியும்பரோடிம்பரொட்டிப்
பொருங்கடகரியுமெட்டுப்பொன்னெடுங்கிரியுமேயிப்
பெருங்கடிவரையும்பேரப்பிரளயங்கோத்ததன்றே. (கூ)
அப்பெருஞ்சலதிவெள்ளத்தழிந்தனவழிவிலாத
வெப்பெரும்பொழிலுமேழுதீபமுமிவற்றுட்டங்கி
நிற்பனசெல்வவானதிணைகளுநீண்டசென்னிப்
பர்ப்பதவகையுமீறுபட்டனவாகவங்கண். (க0)
தேனிழிகுதலைத்தீஞ்சொற்சேனெடுங்கண்ணிகோயில்
வானிழிவிமானம்பொற்றாமரைவிளையாட்டின்வந்த
கானிழிவிடபக்குன்றங்கரிவரைநாகக்குன்ற
மானிழிவரைவராகவரைமுதலழிவிலாத. (கக)
வெள்ளநீர்வறப்பவாதிவேதியன்றூலமுன்போ
துள்ளவாறுதிப்பகல்லியும்பரோடிம்பரோனைப்
புள்ளொடுவிலங்குகல்லிக்கதிருடற்புத்தேண்மூவர்
தள்ளருமரபின்முன்போற்றமிழ்வேந்தர்தமையுந்தந்தான். (கஉ)

கலிவிருத்தம்.

அங்கிமைமதிமரபென்னுமாழியுட்
டங்கியகலையெனுங்கிரட்டிதன்னொடும்
பொங்கியநிலாமதிபோலத்தோன்றினான்
வங்கியசேகரவழுதிமன்னனே. (கங)
தாளணிகழலினான்றங்கணாயகன்
கோளணிபுரிசைசூழ்கோயில்சூழவோர்
வாளணிகடிநகர்சிறிதுவைகவைத்
தாளரியேறனையவனிகாக்குநாள். (கச)

செய்யகோன்மனுவழிசெலுத்துநீர்மையாற்
பொய்கெழுகலிப்பகைபுறந்தந்தோட்டத்தன்
வையகம்பல்வளஞ்சுரப்பவைகலு
மெய்கெழுமன்பதைமிக்கவாலரோ. (கரு)
பல்குறுமானிடப்பரப்பெலாமொருங்
கல்குறவிடங்குறைவாகவாய்மதுப்
பில்குறுதாரினான்பிறைமுடித்தவன்
மல்குறுகோயின்மருங்கணெய்தினான். (கசு)
கறையணிகண்டனைத்தாழ்ந்துகைதொழு
திறையவனின்னருள்வழியினின்னிலப்
பொறையதுவாற்றுவேற்கின்டிப்போதொரு
குறையதுண்டாயினதென்றுகூறுவான். (கஎ)
இத்தனைமாக்களுமிருக்கத்தக்கதாப்
பத்தனங்காணவிப்பதிக்கணுதியே
வைத்தறைசெய்திடும்வரம்புகாண்கிலே
னத்தமற்றதனையின்றறியக்காட்டென்றான். (கஅ)
நண்ணியபொருளினுநுண்ணிதாயவர்
விண்ணிழிவிமானநின்றெழுந்துமீனவன்
றிண்ணியவன்பினுக்கெளியசித்தராய்ப்
புண்ணியவருட்கடலாகிப்போதுவார். (ககூ)

கலிநிலைத்துறை.

பாம்பினாற்கடிசூத்திரங்கோவணம்பச்சந்தாட்
பாம்பினாற்புரிநூல்சன்னவீரம்வெம்பகுவாய்ப்
பாம்பினாற்குழைகுண்டலம்பாதகிங்கிணிகாண்
பாம்பினாற்கரகங்கணம்பரித்தனர்வந்தார். (உ0)
வந்தயோகர்மாமண்டபமருங்குநின்றங்கைப்
பந்தவாலவாயரவினைப்பார்த்துநீயிவனுக்
கிந்தமாநகரெல்லையையளந்துகாட்டென்று
ரந்தவாளராவடிபணிந்தடிகளீர்வேண்டும். (உக)
பெருமவிந்நகரடியனேன்பெயரினாலினக்கக்
கருணைசெய்திடென்றிரந்திடக்கருணையங்கடலு
மருளையந்துநேர்ந்தனையதேயாகெனப்பணித்தா
லுருகொளங்கசெல்வரசுமொல்லெனச்செல்லா. (உஉ)

கீட்டிசைத்தலைச்சென்றுதன்கேழ்கிளர்வாலை
நீட்டிமாநகர்வலம்படவிலம்படிக்குடலைக்
கோட்டிவாலைவாய்வைத்துவேற்கொற்றவற்கெல்லை
காட்டிமீண்டரன்கங்கணமானதுகரத்தில். (௨௩)

சித்தர்தஞ்சினகரத்தெழுந்தருளினார்செழியன்
வைத்தவாலவாய்கோலியபடிசுவரெடுத்துச்
சுத்தசேமமால்வரையினைத்தொட்டகழ்ந்தெடுத்து
வைத்ததாமெனவகுத்தனன்மஞ்சசூழிஞ்சி. (௨௪)

தென்றிசைப்பரங்குன்றமும்வடதிசையிடபக்
குன்றமுங்குடக்கேடகாகரமுங்குணபாற்
பொன்றலங்கிழித்தெழுபொழிற்பூவணகரு
மென்றுநாற்பெருவாயில்கட்கெல்லையாவகுத்தான். (௨௫)

அனையநீண்மதிலாலவாய்மதிலெனவறைவர்
நனையவார்பொழினகருமாலவாய்நாமம்
புனையலாயதப்போதுமப்பொன்னகர்தன்னைக்
கனையவார்கழற்காலிறுன்பண்டுபோற்கண்டான். (௨௬)

கொடிகொணீண்மதின்மண்டபங்கோபுரம்வீதி
கடிகொள்பூம்பொழில்வின்னவும்புதியவாக்கண்டு
நெடியகோளகைகிரீடம்வானிழன்மணியாற்செய்
தடிகள்சாத்தியகலன்களும்வேறுவேறமைத்தான். (௨௭)

பல்வகைப்பெருங்குடிகளும்பரப்பெலாநிரப்பிச்
செல்வவானவன்புரந்தரன்புரத்திறுஞ்சிறப்ப
மல்லன்மாநகர்பெருவளர்தனும்படவளர்ந்தான்
றொல்லைகாட்குலசேகரன்போல்வருதோன்றல். (௨௮)

திருவாலவாயானபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் - ௪௯ - க்கு - திருவிருத்தம் - ௨௩௪௬.

ஐம்பதாவது

சுந்தரப்பேரம்பெய்தபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அங்கணாரகமணிந்தருள்வடிவமடைந்தாசகமகிழக்
கங்கணவிடவரவங்கொடேகடிகைர்கண்டருண்முறையிதுவாஞ்
சங்கணிகுழையினர்பஞ்சவன்வழிபடுதம்பெயரெழுதியகூர்
வெங்கணைகொடுவளவன்படைமுடுகியவென்றியையினிமொழிவாம். ()

வெங்கயனின்கொடிவங்கியசேகரன்வெண்குடைநீழலின்வாய்
வங்கமுலாவியதெண்கடன்ஞாலமடங்கலையுமாசறுசீர்ச்
செங்கழுலாலயமங்கையும்வாலியதிண்பதுமாலயமே
னங்கையுமோவறமங்கலமானயம்பெறுவாழ்வுறுநாள். (௧)

வேழமறப்படைசூழவெதிர்த்தவர்வீறுகெடுத்தடியிற்
சூழவடர்த்திகல்வாகைதொடுத்தலர்தார்புனைவிக்கிரம
சோழனெனத்திக்குலநாயகனைப்பொருளுள்கருதித்தொலையா
வாழ்கடதுக்கிணையாமனிகத்தொடுமோடமருக்கெழுவான். (௨)

கயபதிகாய்சினநரபதிபாய்துரகதபதியேமுதலா
வயபிருதோள்வடதிசையினராதிபர்வல்லெழுசேனையினோ
டியம்படியேதிபிழிசையெனவாய்விடவிரதமதேதிகடாவப்
பயன்மலிகாவிரிநதியருகேயுறைபதிகொடுமேயினனால். (௩)

இலைத்தெழுசெம்பியன்வெம்படைமன்னர்செயிர்த்துமதிக்கடவுட்
குலத்தவனாட்டினிறுத்தெழிலானிரைகொண்டுகுறும்புசெய்து
மலர்த்தடமேரியுடைத்துநகர்க்குவரும்பயனுண்டுமுமா
றலைத்துமுடுக்கிநெடுக்கம்விளைத்துமமர்க்கடியிட்டனரால். (௪)

மாறனதிக்கினியென்செய்துசேரியன்வன்படையோவளவின்
றேறியெதிர்ந்தமராடினெனக்கரிதிக்குறையைப்பிறையோ
டாறணிபூரணசுந்தரனெக்கதையடித்தலமுன்குறுகாக்
கூறியிரக்குவரம்பெறுவென்றிறைகோயிலடைந்தனனால். (௫)

அடைந்துபணிந்தருணாயகனேயடியேனுவிக்கிரமன்
றொடர்ந்தமராடவயற்புலமன்னவர்தொகையொடுபாசறைவாய்ப்
படர்ந்திறைகொண்டனனேபொரவொத்தபதாதியெனக்கிலையே
மிடைந்துவரும்படைமிக்கவிடத்தரண்வேறுளதோவிறைவா. (௭)

என்னையினிச்செயுமாறெனமாறனிரந்துமொழிந்திடலு
முன்னவன்வானிடையன்றசரீரிமொழிந்தருள்வான்முதனீ
யன்னவனோடமராடபினுமுமடைந்துதவித்துணையாய்
மின்னதுவாகையெனப்பொருகின்றனைநீயினியஞ்சலெனா. (௮)

சிந்தைகளித்திருகண்கடளித்திருசெங்கைகுவித்திறைவ
னந்திமதிச்சடையன்றனைத்தொழுதன்றுபுறப்படமுன்
வந்தனனொற்றுவனங்கிவனைக்கயல்வந்ததுவிக்கிரமன்
வெந்தறுகட்படையென்றரசற்குவிளம்பினனப்பொழுதே. (௯)

அரசனியம்பல்வதிரவலம்புரியலறவலங்குழைமா
னிரதமனைந்திடவிசைகொடுசிந்தபினிடவலவன்கடவப்
புரசைநெடுங்கரிதிரையெறியுங்கடல்பொருபரிவிண்டொடுதேர்
விரைசெய்நறுந்தொடைவிருதர்கணம்புடைவிரவநடந்தனனால். (௧௦)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

அளந்தருகுந்திருவாலவாய்மதிலின்புறத்தகழாழிபோல்
வளைந்தசோழனெடும்படைக்கெதிர்வஞ்சிவேய்ந்தெழுபஞ்சவன்
றளர்ந்தசேனையதிர்ந்துகிட்டினகிட்டியவ்விருபடைஞருங்
களஞ்சிறந்திடவஞ்சினங்கொடுகைவகுத்தமர்செய்வரால். (௧௧)

சையமொத்தெழுதேரினோடுசையமொத்தெழுதேரரு
மையன்மைக்கரிவீரரோடெதிர்மையன்மைக்கரிவீரருங்
கொய்யுளைப்பரிவயவரோடிகல்கொய்யுளைப்பரிவயவருங்
கையழற்படைவீசிமின்விடுகாரெனப்பொருவாரரோ. (௧௨)

முடங்குவெஞ்சிலைவில்லரோடுமுடங்குவெஞ்சிலைவில்லரும்
விடங்கலுழ்ந்திடுவேலரோடுவிடங்கலுழ்ந்திடுவேலரு
மிடங்கைதோல்வள்வாளரோடுமிடங்கைதோல்வலவாளரு
மடங்கலேறுமடங்கலேறுமலைப்பதென்னமலைப்பரால். (௧௩)

அரவின்னிலமம்புயம்பொறையாற்றுமீனவனாற்றல்கூர்
புரவியின்னிறைவையமேல்கொடுபோர்த்தநேரியர்வேந்தனோ
டிரவிமின்னியமூரியம்பமிடைந்துவெஞ்சமராமோ
திரவிதன்னொடுமதியவன்பொரவேகினானிகராகுமால். (௧௪)

துள்ளுமாவொலிதானையாறுதுளும்புமாவொலிதூண்டுதேர்
தள்ளுமாவொலிபடையொடும்படை தாக்குமாவொலிபொருநரார்த்
தெள்ளுமாவொலிமள்ளர்பைங்கழலேங்குமாவொலிவீங்கியத்
தெள்ளுமாவொலிவேறுபாடுதெரிந்துகல்லெனலாயதே. (௧௫)

துடித்தவாளரவென்னவீசியதூங்குகையினவீங்குநீர்
குடித்தகாரொடுகார்மலைந்திடுகொள்கைபோலவுடன்றுடன்
றிடித்தவர்யினவசனியேறினிருப்புலக்கையெடுத்தெறிக்
தடித்தசோரியொடாவிசோரவிழுந்தவெஞ்சினவானையே. (௧௬)

எய்தவாரிவிலக்குவார்பிறிதெய்யும்வாளித * மார்புதோள்
செய்தபோதவராண்மைகண்டுசிரித்துவென்றிவியப்பரால்
வைதவாவடிவேலெறிந்திடவருவதைக்குறிவழியினும்
கொய்ததார்மறவாளெறிந்துகுறைத்துவேறுபடுத்துவார். (௧௭)

பின்னிடாதிருபடையுமொத்தமராடுமெல்லைபெரும்படைச்
சென்னிதன்றுணையானவுத்தரதேயமன்னவர்படையொடுத்
துன்னிஞாலமுடிக்குநாளெழுகூறைதன்னவிர்ந்தெழும்
வன்னியென்னவுடன்றெதிர்ந்தனர்வழுதிசேனையுடைந்ததே. (௧௮)

மின்னிலங்கிலைவாளொடுஞ்சிலைவில்லிழந்தனர்வீரரே
பன்னலம்புனைதேரொடுங்கரிபரியிழந்தனர்பாகரே
தென்னவன்பொருவலியிழந்தனனென்றுசெம்பியன்வாகையுந்
தன்னதென்றுதருக்குமேல்கொடுசங்கெடுத்துமுழக்கினான். (௧௯)

அந்தவேலையின்முன்னருந்தமதருளெனக்குளிர்கடிபுனற்
பந்தர்நீழலளித்துமோடைபடுத்தியும்புகைசாயவே
வந்தவேடரவண்ணமேயொருமானவேடர்சாய்வலஞ்
சிந்தவாகுலமுழ்குமீனவர்சேனைகாவலராயினர். (௨௦)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

குன்றவில்வேடன்சாபங்குழைவித்துச்சுந்தரேச
னென்றதன்னாமந்தீட்டியிட்டகூர்ங்கணைகண்டி
வென்றனனென்றுவாகைமிலைந்துவெண்சங்கமார்த்து
நின்றவன்சேனைமீதுநெறிப்படச்செலுத்தாநின்றான். (௨௧)

* மார்புபோழ்செய்த வென்றும்பாடாந்தரம்.

அம்முனைவாளியொவ்வொன்றடல்புனைநூறுநூறு
தெம்முனைவீரர்தம்மைச்செகுத்துயிருண்ணநோக்கி
யிம்முனைவாளியொன்றுக்கித்துணைவலியாதென்று
வெம்முனைமறவேற்சென்னிவியந்தனுமானமெய்தா. (௨௨)

அன்னகூர்வாளிதன்னைக்கொணர்கெனவதனைவாசித்
தின்னதுசுந்தரேசனெனவரைந்திருப்பதீது
தென்னவற்காலவாயான்றுணைச்செய்தசெயலென்றஞ்சிப்
பொன்னிநாடுடையான்மீண்டுபோகுவான்போகுவானை. (௨௩)

செருத்துணையாகிவந்தவுத்தரதேயத்துள்ளார்
திருக்கரொட்டியர்வேறுள்ளாரியாவருஞ்சூழ்ந்துநில்லென்
றுருத்தனர்வைதுநீபோர்க்குடைந்தனையோதியீதுன்
கருத்தெனிலாண்மையாவர்கண்ணதுன்மானமென்னும். (௨௪)

செல்லலைவருதியென்றுச்செயிர்த்தெழுந்திடியினார்த்துக்
கல்லெழுவனையதிண்டோட்கௌரியன்படைமேற்சென்று
வில்லிறவலித்துவாங்கிவேறுவேறுநின்று
சொல்லினுக்கடியவாளிதொடுத்தனர்விடுத்தாரார்த்தார். (௨௫)

வடுத்தவாமருமச்செம்புண்மறமகனுகின்ற
கடுத்தவாமிடற்றுமுக்கட்கண்ணுதற்சாமிதான்முன்
னெடுத்தவாடகவில்லன்னவிருஞ்சிலைவாளியொன்று
தொடுத்தவாட்டவர்தாம்விட்டசரந்தொலைத்துப்பின்னும். (௨௬)

பத்தம்புதொடுத்துநூற்றுப்பத்துமான்றேரைச்சாய்த்தான்
பத்தம்புதொடுத்துநூற்றுப்பத்துவெங்களிற்றைமாய்த்தான்
பத்தம்புதொடுத்துநூற்றுப்பத்துவாம்பரியைக்கொன்றான்
பத்தம்புதொடுத்துநூற்றுப்பத்துமானிடரைவென்றான். (௨௭)

நூறம்புதொடுத்துநூறுநூறுவெம்பரிமேலெய்தா
னூறம்புதொடுத்துநூறுநூறுவெங்கரிமேற்பெய்தா
னூறம்புதொடுத்துநூறுநூறுதேர்சிந்தவிட்டா
னூறம்புதொடுத்துநூறுநூறுசேவகரையட்டான். (௨௮)

ஆயிரம்வாளியாலாறாயிரம்பரியைக்கொன்றா
னாயிரம்வாளியாலாறாயிரங்கரியைவென்றா
னாயிரம்வாளியாலாறாயிரந்தேரைச்சாய்த்தா
னாயிரம்வாளியாலாறாயிரம்பேரைத்தேய்த்தான். (௨௯)

தடிந்தனதோளுந்தாளுந்தகர்ந்தனசென்னிமண்ணிற்
படிந்தனமடிந்தோர்யாக்கைபரிந்தனதும்பைத்தாம
மடிந்தனமையல்யானைமாண்டனதாண்டும்பாய்மா
னொடிந்தனகொடிஞ்சிமான்றேரொதுங்கினவொழிந்தசேனை. (௩௦)

ஆவிமுன்னேகத்தாமுமருக்கமண்டலத்தாறேகத்
தாவுவவென்னவாடுந்தலைபலசிலைவாள்பட்டுக்
கூவிளியெடுத்துவீழக்குறைத்தலையாடப்பாடிச்
சாவுடனின்றுகைகள்கொட்டுவதாளமென்ன. (௩௧)

நறைவிழத்தனதுசென்னிவீட்டினார்தம்மைமின்ற
குறையுடற்கைவேல்குந்திநாக்குலக்குரவையாடி
யெறிபடுதலைகள்வாய்மென்றெயிறதுகறித்துவீழ்ந்து
கறுவினமார்பந்தட்டிநிற்பனகவந்தயாக்கை. (௩௨)

ஒருவழிபட்டுவீழுமிருதலையொன்றற்கொன்று
மருவியகேண்மைத்தாகிவாயெயிறிலங்கநக்குப்
பிரிவறவந்தாய்நீயுமென்றெதிர்பேசிப்பேசிப்
பரிவுறமொழிந்துமோந்துபாடிநின்றாடல்செய்த. (௩௩)

மாகவாறியங்குசேனம்வல்லிருட்குவையினன்ன
காகம்வன்கழுகுவெம்போர்க்களிடையவிந்துவீழ்ந்தோ
ராகமேற்சிறகடிக்கொண்டசைவனவேடைநீக்கப்
பாகநின்றாலவட்டம்பணிப்பனபோன்றவன்றே. (௩௪)

வெள்ளமாச்சோரியீர்ப்பமிதக்கின்றதேர்கள்வெம்பேய்ப்
பிள்ளைகளாழ்ந்திங்கீழ்போயமிழ்ந்தெனப்பெயர்த்துவீழ்வ
தெள்ளுநீர்க்கடலின்மீதூர்சிதைக்கலநிரையுந்தாக்கித்
துள்ளிமற்றவற்றைச்சாய்க்குஞ்சுறவமும்போன்றவன்றே. (௩௫)

கத்திநின்றொருபாலீர்ப்பக்கருங்கொடிசேனத்துண்டன்
கொத்திநின்றொருபாலீர்ப்பக்குடவயிற்றழல்கட்பூதப்
பத்திநின்றொருபாலீர்ப்பப்பட்டவராக்கைகூளி
பொத்திநின்றொருபாலீர்ப்பவைம்பொறிபோலுமன்றே. (௩௬)

அடுவைவான்முறங்காதனாளுந்துனைச்செவியரிகோட்டி
ணுமிலைநேர்மணியின்குப்பையுரலடியுலக்கைதிண்கோ
டடுகலங்கடந்திச்சோரிமத்தமுமடுப்பென்றியானைப்
படுகளம்விசயச்செல்விபுமடைப்பள்ளிமாறும். (௩௭)

பிணத்தினைக்கோலிப்புண்ணீராற்றினைப்பெருக்கியுண்பேய்க்
கணத்தினையுதைத்துறாக்கிக்கரையுடைத்தொருவன்பூத
கிணத்தொடும்வருமந்நீத்தநேர்படவிருந்தகையா
லணைத்துவாய்மடுக்கும்வையையருந்தியபூதமென்ன. (௩௮)

புரத்தினுளுயர்ந்தகூடற்புண்ணியனெழுதியெய்த
சரத்தினிலவிர்ந்தார்சென்னிக்குற்றுழிச்சார்வாய்வந்த
வரத்தினையறுக்கும்வைவேலயற்புலவேந்தர்நச்சு
மரத்தினையடுத்தசந்துங்கதழெரிமடுத்ததென்ன. (௩௯)

மாசறுகாட்சியான்றன்வாளியாலவிந்தோர்தம்மை
மூசவண்டென்னச்சூழ்ந்துமொய்த்தனபைத்தகூளி
காய்சினச்சேனங்காகங்கழுகினம்பற்றியீர்த்துப்
பூசலிட்டொன்றோடொன்றுபோர்செய்வான்றொடங்கிற்றம்ம. (௪௦)

வெஞ்சினமறக்கோனம்பிவிடுகணைவெள்ளத்தாழ்ந்து
வஞ்சினமுறுதன்சேனைமடிந்ததுகண்டுமோழாந்
தெஞ்சினபடையுஞ்சூழவேதிலார்கையுஞ்சூழத்
அஞ்சினமறமுஞ்சூழச்சோழனுமுடைந்துபோனான். (௪௧)

வில்லொடுமேகமன்னவெஞ்சிலைவேடவேந்தன்
மல்லொடுபயின்றதென்னன்மலர்முகச்செவ்விநோக்கி
யல்லொடுமதிவந்தென்னவருணகைசிறிதுபூத்துச்
செல்லொடுபகைபோற்கொண்டதிருவுருமறைந்துபோனான். (௪௨)

பாடுவாயளிதேனூட்டும்பைந்தொடைச்செழியன்வென்றிக்
கோடுவாய்வைத்திட்டார்த்துக்குஞ்சரமுகட்டிலேறித்
தோடுவாய்கிழிக்குங்கண்ணார்மங்கலந்துவன்றியேந்த
நீடுவார்திரைநீர்வேலிநீண்மதினகரிற்புக்கான். (௪௩)

எண்சீரடியாசிரியவிருத்தம்.

சிலைவிற்சேவகஞ்செய்துவாகைவாங்கித் திருவளித்தசேவகற்குச்சிறந்தபூசை, நிலைவித்தாய்மணிப்பொலம்பூணிறுவிச்சாத்தி நிமலவிரிக்கும்வெயின்மணியா னெடியமேரு, மலைவிற்றா னென்னவரிச்சிலையுநாமம்வரைந்தகடுங்கூர்ங்கணையும்வனைந்துசாத்தி, யலைவித்தாழ்கடலுலகுக் ககலச்செங்கோ லறம்பெருக்கும் வங்கியசே கரனுமண்ணல். (௪௪)

சுந்தரப்பேரம்பெய்தபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் - ௫௰ - க்கு - திருவிருத்தம் - ௨௧௧௩.

ஐம்பத்தோன்றாவது

சங்கப்பலகைதந்தபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

வேடுருவாகிமேருவில்லிதன்னுமக்கோலெய்
தாடமராடித்தென்னனடுபகைதுரந்தவண்ணம்
பாடினஞ்சங்கத்தார்க்குப்பலகைதந்தவாறோடொப்பக்
கூடிமுத்தமிழின்செல்வம்விளங்கியகொள்கைசொல்வாம். (௧)

வங்கியசேகரன்கோல்வாழுநாண்மேலோர்வைகற்
கங்கையந்துறைசூழ்கன்னிக்கடிமதிற்காசிதன்னிற்
பங்கயமுளரிப்புத்தேள்பத்துவாம்பரிமாவேள்விப்
புங்கவர்மகிழ்ச்சிறாங்கமறைவழிபோற்றிச்செய்தான். (௨)

நிரப்பியவழிநாளொன்னீராடுவானீண்டவீணை
நரப்பிசைவாணிசாவித்திரியெனுநங்கைவேத
வரப்பிசைமனுவாங்காயத்திரியெனுமடவாரோடும்
பரப்பிசைக்கங்கைநோக்கிப்படருவான்படருமெல்லை. (௩)

கானவார்குழலினாரம்மூவரினுவின்செல்வி
வானவாரியங்கும்விஞ்சைமாதராளொருத்திபாடுந்
கானவாறுள்ளம்போக்கிநின்றனள்கமலயோனி
யானவாலறிவனேகியந்நதிக்கரையைச்சேர்ந்தான். (௪)

நாமகள்வரவுதாழ்ப்பநங்கையரிருவரோடுந்
தாமரைக்கிழவன்மூழ்கித்தடங்கரையேறுமெல்லைப்
பாமகள்குறுகியென்னையன்றியேபடிந்தவாறென்
றெனவெகுண்டாள்கேட்டவம்புயத்தண்ணல்சொல்வான். (௫)

குற்றமின்மேலதாகம்மைநீகோபங்கொள்வ
தெற்றெனவிளையதிங்கையென்னனுமாக்கடோற்ற
முற்றனையொழித்தியென்றுவுரைத்தலன்சாயமேற்கும்
பொற்றொடிமடந்தையஞ்சிப்புலம்புகொண்டவலம்பூண்டாள். (௬)

ஊனிடாகன்றேயுன்றருயிர்த்துணையாவேனிந்த
மானிடயோனிப்பட்டுமயங்குகோவென்னவண்டு
தேனிடையமுந்திவேதஞ்செப்பும்வெண்கமலச்செல்வி
தானிடாநலநோக்கிச்சதுமுகற்றலைவன்சாற்றும். (௭)

முகிழ்தருமூலமின்மெய்யாமுதலெழுத்தைம்பத்தொன்றிற்
றிகழ்தரும்ஆகாராதிஹாகாரமீறுச்செப்பிப்
புகழ்தருநாற்பத்தெட்டுநாற்பத்தெண்புலவராகி
யகழ்தருகடல்சூழ்ஞாலத்தவதரித்திடுவராக. (௮)

அத்தகுவருணமெல்லாமேதினின்றவற்றவற்றின்
மெய்த்தகுதன்மையெய்திவேறுவேறியக்கந்தோன்ற
வுய்த்திடும்அகாரத்திற்குமுதன்மையாயொழுகுநாதர்
முத்தமிழாலவாயெம்முதல்வரம்முறையான்மன்னோ. (௯)

தாமொருபுலவராகித்திருவுருத்தரித்துச்சங்க
மாமணிப்பீடத்தேறிவைகியேநாற்பத்தொன்ப
தாமவராகியுண்ணின்றவரவர்க்கறிவுதோற்றி
யேமுறப்புலமைகாப்பானென்றனன்கமலப்புத்தேள். (௧௦)

அக்கரநாற்பத்தெட்டுமவ்வழிவேறுவேறு
மக்களாய்ப்பிறந்துபன்மாண்கலைகளின்வகைமைதேர்ந்து
தொக்கவாரியமுமேனைச்சொற்பதினெட்டுமாய்ந்து
தக்கதென்கலைதுன்றேர்ச்சிப்புலமையிற்றலைமைசார்ந்தார். (௧௧)

கழுமணிவயிரம்வேய்ந்தகலன்பலவன்றிக்கண்டிக்
கொழுமணிக்கலனும்பூணுங்குளிர்நிலாவீற்றுமெய்யர்
வழுவறத்தெரிந்தசெஞ்சொன்மாலையாலன்றியாய்ந்த
செழுமலர்மாலையாலுஞ்சிவார்ச்சனைசெய்யுநீரார். (௧௨)

புலந்தொறும்போகிப்போகிப்புலமையால்வென்றுவென்று
மலர்ந்ததண்பொருனைநீத்தவளங்கெழுநாட்டில்வந்து
நிலந்தருதிருவினான்றநிறைநிதிச்செழியன்செங்கோ
னலந்தருமதுரைநோக்கிநண்ணுவாரண்ணுமெல்லை. (௧௩)

பற்பலகலைமாண்டேர்ச்சிப்பனுவலின்பயனுயர்ந்த
வற்புதமூர்த்தியெந்தையாலவாயடிகளங்கோர்
கற்பமைகேள்விசான்றகல்வியின்செல்வராகிச்
சொற்பதங்கடந்தபாதமிருநிலந்தோயவந்தார். (௧௪)

அவ்விடைவருகின்றாரைநோக்கிநீராரைநீவி
ரெவ்விடைநின்றும்போதுகின்றனிரென்னவன்னார்
வெவ்விடையனையீர்யாங்கள்விஞ்சையரண்டத்தோர்பாவம்
வெளவிடுபொருனைநாட்டின்வருகின்றேமென்னலோடும். (௧௫)

தனிவருபுலவர்நீவிர்தண்டமிழாலவாயெங்
கனிவருகருணைமூர்த்திகணைகழலிறைஞ்சல்வேண்டு
மினிவருகென்னநீரோயெங்களுக்களவில்கோடி
துனிவருவினைகடீர்க்குஞ்சுந்தரக்கடவுளென்றார். (௧௬)

மறையினூறொழுகும்பன்மாண்கலைகள்போன்மாண்டகேள்வித்
துறையினூறொழுகுஞ்சான்றோர்சூழமீண்டேகிக்கூடற்
கறையினார்கண்டத்தாரைப்பணிவித்துக்கரந்தாரொற்றைப்
பிறையினார்மகுடந்தோற்றாதறிஞராய்வந்தபெம்மான். (௧௭)

விம்மிதமடைந்துசான்றோர்விண்ணிழிவிமானமேய
செம்மலைவேறுவேறுசெய்யுளாற்பரவியேத்திக்
கைம்மலையுரியினார்தங்காறொழுதிறைஞ்சிமீண்டு
கொய்ம்மலர்வாகைச்செவ்வேற்செழியனைக்குறுகிக்கண்டார். (௧௮)

மறமலிநேமிச்செங்கோன்மன்னவன்வந்தசான்றோ
ரறமலிகேள்விநோக்கியவைக்களக்கிழமைநோக்கித்
திறமலியொழுக்கநோக்கிச்சீரியர்போலுமென்று
நிறைமலியுவகைபூத்தநெஞ்சினனிதனைச்செய்தான். (௧௯)

திங்களங்கண்ணிவேய்ந்தசெக்கரஞ்சடிலநாதன்
மங்கலம்பெருகுகோயில்வடகுடபுலத்தின்மாடோர்
சங்கமண்டபமுண்டாக்கித்தகைமைசால்சிறப்புநல்கி
யங்கமர்ந்திருத்திரென்னவிருத்தினனறிஞர்தம்மை. (௨௦)

வண்டமிழ்நாவினார்க்குமன்னவன்வரிசைநல்கக்
கண்டுளம்புழுங்கிமுன்னைப்புலவரக்கழகத்தோரை
மண்டினர்மூண்டுமூண்டுவாதுசெய்தாற்றன்முட்டிப்
பண்டையபுலனுந்தோற்றுப்படருழந்தெய்த்துப்போனார். (௨௧)

இளையர்போல்வந்துவந்தமருபுலத்திருக்குங்கேள்வி
விளைநருமதபேதங்கொண்டுவினாய்வினாப்பாதஞ்செய்து
மனவலியிளைப்பவென்றுவைகுவோரொன்றைவேண்டிப்
புனையிழைபாகர்நீங்காப்புலவர்முன்னண்ணினாரே. (௨௨)

முந்துநூன்மொழிந்தார்தம்மைமுறைமையால்வணங்கியெம்மை
வந்தவந்தெவரும்வாதஞ்செய்கின்றார்வரிசையாக
வந்தமிழ்ப்புலமையாக்கியளப்பதாயெம்மனோர்க்குத்
தந்தருள்செய்திசங்கப்பலகையொன்றென்றுதாழ்ந்தார். (௨௩)

பாடியபாணற்கன்றுவலியவேடலகையிட்டார்
பாடியபுலவர்வேண்டிப்பலகைதந்தருளார்கொல்லோ
பாடியபுலவராகும்படியொருபடிவங்கொண்டு
பாடியபுலவர்காணத்தோன்றினார்பலகையோடும். (௨௪)

சதுரமாயன்விரண்டுசாணதிப்பலகையம்ம
மதியினும்வாலிதாகுமந்திரவலியதாகு
முதியநும்போல்வார்க்கெல்லாமுழம்வளர்ந்திருக்கைநல்கு
மிதுநுமக்களவுகோலாயிருக்குமென்றியம்பியீந்தார். (௨௫)

காமகளுருவாய்வந்தநாவலர்தமக்குவெள்ளைத்
தாமரையமளிதன்னைப்பலகையாத்தருவதென்னக்
காமனைமுனிந்தார்நல்கக்கைக்கொடுகேளிறதாங்கு
மாமணிக்கோயிறன்னைவலங்துதங்கழகம்புக்கார். (௨௬)

நாறுபூந்தாமரைத்திகறும்பனிதோய்ந்தசாந்தச்
சேறுவண்மலர்வண்டீசுசெழும்புகைதீபமாதி
வேறுபல்வகையாற்பூசைவினைமுடித்திறைஞ்சிக்கீர
னேறினன்கபிலனோடுபரணனுமேறினானே. (௨௭)

இருங்கலைவல்லோரெல்லாமிம்முறையேறியேறி
யொருங்கினிதிருந்தார்யார்க்குமொத்திடங்கொடுத்துநாதன்
றருஞ்சிறுபலகையொன்றேதன்னுளைசெய்வோர்க்கெல்லாஞ்
சுருங்கிநின்றகலங்காட்டித்தோன்றுநூல்போன்றதன்றே. (௨௮)

மேதகுசான்றோர்நூலின்வினைபொருள்விளங்கத்தம்மி
லோதுவுமெடுத்துக்காட்டுமெழுவகைமதமுங்கூறும்
போதவைதெளிந்தவிள்ளைநூலையேபுறம்போந்து
வாதுசெய்வார்கள்வந்தான்மறுத்துநேர்நிறுத்துமன்றே. (௨௯)

கலிவிருத்தம்.

ஆயவாறெண்புலவருமாய்க்துணர்
பாயகேள்விப்பயன்பெறமாட்சியாற்
றூயபாடறொடங்கினர்செய்துகொண்
டேயவாறிருந்தாரந்தவெல்லைவாய். (௩௰)

பலருஞ்செய்தபனுவலுமாண்பொருண்
மலருஞ்செல்வமுஞ்சொல்லின்வளமையுங்
குலவுஞ்செய்யுட்குறிப்புமொத்தொன்றியே
தலைமயங்கிக்கிடந்தவத்தன்மையால். (௩௧)

வேறுபாடறியாதுவியந்துநீர்
கூறுபாடலிதுவென்றுங்கோதிலெ
னேறுபாடலிதுவென்றுஞ்செஞ்செவே
மாறுபாடுகொண்டார்சங்கவாணரே. (௩௨)

மருளுமாறுமயக்கறவான்பொருட்
டெருளுமாறுசெயவல்லகன்வர்சொற்
பொருளுமாமதுரேசர்புலவர்மு
னருளுநாவலராய்வந்துதோன்றினார். (௩௩)

வந்தநாவலர்வந்திக்குநாவலர்
சிந்தையாகுலஞ்செய்யமயக்குறும்
பந்தயாப்பைக்கொணர்கெனப்பாவல
ரொந்தையீங்கிவையென்றுமுன்னிட்டனர். (௩௪)

அயசொல்லின்பொருளின்றொடர்ச்சியு
மாயநாவலரவ்வவர்தம்முது
வாயபாடல்வகைதெரிந்தவ்வவர்க்
கேயவேயெடுத்திந்தனரன்பலே. (௩௫)

வாங்குசங்கப்புலவர்மனங்களித்
தீங்குநீரொமரோடுமொருத்தரா
யோங்கிவாழ்திரென்றெல்லெனத்தங்கனைத்
தாங்குசெம்பொற்றவிசிலிருத்தினார். (௩௬)

பொன்னின்பீடிகையென்னும்பொன்னூரமேற்
றுன்னுநாவலர்சூழ்மணியாகவே
மன்னினார்நடுநாயகமாமணி
யென்னவீற்றிருந்தார்மதுரேசரே. (௩௭)

நதியணிந்தவர்தம்மொடுநாற்பத்தொன்
பதின்மரென்னப்படும்புலவோரெனா
முதியவான்றமிழ்பின்னுமுறைமுறை
மதிவிளங்கத்தொடுத்தவண்வாழுநாள். (௩௮)

கலிநிலைத்துறை.

வங்கியசேகரன்வங்கியசூடாமணிதன்னைப்
பொங்கியதேசார்முடிபுனைவித்துப்புவிகாவலி
யிங்கியல்பாசவினைப்பகைசாயவிருந்தாங்கே
சங்கியல்வார்குழையானடியொன்றியசார்புற்றான். (௩௬)

சங்கப்பலகைதந்தபடலம் முற்றிற்று.

ஆகப்படலம்-௫௧-க்கு-திருவிருத்தம்-௨௪௩௨.

ஐம்பத்திரண்டாவது

தருமிக்குப்பொற்கிழியளித்தபடலம்.

கலிநிலைத்துறை.

சொற்குவைதேரும்பாவலர்மேவத்தொகுபீட
மற்குவைகண்டத்தண்ணலளித்ததறைந்தேமாற்
றற்குவைதந்தாலுய்குவனென்னுந்தருமிக்குப்
பொற்குவைநல்கும்வண்ணமெடுத்துப்புகல்கிற்பாம். (௧)

மன்னவர்மன்னன்வங்கியசூடாமணிமாறன்
றென்னவராகித்திகிரியுருட்டுந்தென்கூடன்
முன்னவரன்னங்கண்டறியாதமுடிக்கேற்பப்
பன்மலர்கல்குந்தனம்வைக்கும்பணிபூண்டான். (௨)

மாதவிபாதிரிதாதகிகூவிளமந்தாரந்
தாதவிழ்மல்லிகைமுல்லையிலஞ்சிதடங்கோங்கம்
வீதவழ்கொன்றைகரந்தைசெழுங்கரவீரந்தண்
போதவிழ்நந்திசெருந்திகுருந்தம்புன்னாகம். (௩)

முண்டகமென்கடிநீலமுதற்பலமுப்போது
மெண்டிசையுங்கமழும்படிகந்தனமெங்குந்தே
னுண்டிசைவண்டுபடிந்துமுரண்டிடவுண்டாக்கி
வண்டிமிர்சண்பகநந்தனமுந்தனிவைத்தானல். (௪)

பொய்த்திடுநுண்ணிடைமங்கலமங்கையர்பொன்பூண்டா
ரொத்தெழுசண்பகமொய்த்தவரும்பருடைந்தெங்கும்
வைத்திடுகந்தனவாசம்விழுங்கிமணங்கான்று
பைத்தலர்ந்தனகண்டுமகிழ்ந்துபரித்தோரான். (௫)

செருக்கியவண்டுவிழாமலர்கொய்துதெரிந்தாய்ந்து
நெருக்கியவின்டைநிரைத்தொடைதொங்கனெடுந்தாம
மருக்கிளர்கண்ணிதொடுத்தணிவித்துவணங்காருர்
கருக்கியகண்ணுதலார்திருமேனிகவின்செய்தான். (௬)

அன்னவியன்பொழின்மாமதுரேசரடித்தாழ்வோன்
பொன்னவிர்சண்பகமாலைபுனைந்தபுதுக்கோலத்
தன்னைவியந்தவர்சண்பகசுந்தரர்நாமென்றே
முன்னரிறைஞ்சினனிம்பமணிந்தமுடித்தென்னன். (௭)

அன்னதொர்நாமம்பெற்றனரின்றுமணிக்கூடன்
முன்னவரந்தத்தாமமவர்க்குமுடிக்கேற்று
மின்னதொர்வீரற்சண்பகமாறனென்றேபேர்
மன்னிவிளங்கினன்வங்கியசூடாமணிதானும். (௮)

சண்பகமாறன்சண்பகசுந்தரர்தம்பாடே
சண்பகமாறன்பணிசெய்யுநன்னாளிற்
பண்பகர்சொல்லார்தம்புடைமாரன்படுபோர்மூண்
டெண்பகவெவ்வாறுகியவந்தன்றிளவேனில். (௯)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

மனிதர்வெங்கோடைதீர்க்கும்வசந்தமென்காலும்வேறு
துனிதவிரிளங்கால்வேண்டுஞ்சோலையுஞ்சோலைவேண்டும்
புனிதநீர்த்தடமும்வேறுபுதுமலரோடைவேண்டும்
பனிதருமதியும்வேறுபான்மதிவேண்டுங்காலம். (௧௦)

அண்டவான்மருமேற்சேமிச்சிவந்தெழுந்தாங்குதேமா
தண்டளிரீன்றுவானத்தைவரநிவந்தகாசு
கொண்டிடையழுத்திச்செய்தகுழையணிமகளிர்போல
வண்டிறைகொள்ளப்பூத்துமலர்ந்தனசெருந்தியெல்லாம். (௧௧)

செங்கதிர்மேனியான்போலவிழ்ந்தனசெழும்பலாச
மங்குவார்செல்வன்போலமலர்ந்தனகாஞ்சிதிங்கட்
புங்கவன்போலப்பூத்தபூஞ்சிலைமரவஞ்செங்கை
யங்கிராழியான்போலலர்ந்தனவிரிந்தகாயா. (௧௨)

தரைகிழித்தெழுநீர்வையைத்தடங்கரையெங்கரல்கு
லரவமேகலைசூழ்ந்தென்னவலர்ந்தாதருப்பனூர்முன்
மரகதந்தழைத்துவெண்முத்தரும்பிப்பொன்மலர்ந்துவாங்குந்
திரைகடற்பவளக்காடுசெய்வனகன்னிப்புன்னை. (௧௩)

ஊடினார்போலவெம்பியிலையுதிர்ந்துயிரன்னாரைக்
கூடினார்போலவெய்குங்குழைவரத்தழைத்துநீங்கி
வாடினார்போலக்கண்ணீர்வாரமெய்பசந்தமைய
னீடினாரலர்போற்பூத்துநெருங்கினமரங்களெல்லாம். (௧௪)

விழைதருகாதலார்தாமெலிவுறமெலிந்துநெஞ்சங்
குழைவுறக்குழைந்துவிம்முங்கோதிலாக்கற்பினார்போன்
மழைவறுங்கோடைநீப்பமரந்தலைவாடவாடித்
தழைவுறத்தழைத்துநின்றதழீஇயபைங்கொடிகளெல்லாம். (௧௫)

சேட்டிசைத்தென்காறள்ளத்தெண்மதுச்சிதறத்தும்பி
நீட்டிசைமுரலச்சாயாநின்றபூங்கொம்பராட
னாட்டியப்புலவனாட்டகைமுகம்வெயர்வைசிந்தப்
பாட்டிசைத்தாடாநின்றபாவைமார்போன்றவன்றே. (௧௬)

மலர்ந்தசெவ்வந்திப்போதும்வகுளமுமுதிர்ந்துவாடி
யுலர்ந்துமொய்த்தளித்தேனக்கக்கிடப்பனவுள்ளமிக்க
குலந்தருநல்லோர்செல்வங்குன்றினுந்தம்பாலில்லென்
றலர்ந்தவர்க்குயிரைமாறியாயினுங்கொடுப்பரன்றே. (௧௭)

காதியதன்னந்தேமாந்துறந்தளிர்கோதிக்கூவி
யூதியகாமர்ப்பேட்டையுருக்குவக்குயின்மென்சேவல்
வீதியசெங்கோல்வேந்தன்வெளிப்படத்தேயக்காவன்
மாதியவேந்தன்போலவொடுங்கியமயில்களெல்லாம். (௧௮)

பொங்கரினுழைந்துவாவிபுகுந்துபங்கயந்துழாவிப்
பைங்கடிமயிலைமுல்லைமல்லிகைப்பந்தர்தாவிக்
கொங்கலர்மணங்கூட்டுண்டுகுளிர்ந்துமெல்லென்றுதென்ற
லங்கங்கேசுலவித்தேருமறிவன்போலியங்குமன்றே. (௧௯)

தாமரைகளாஞ்சிதாங்கத்தண்குயின்முழவமேங்க
மாமருதமருங்கிள்ளைமங்கலமியம்பத்தும்பி
காமரமிசைப்பமுள்வாய்க்கைதைவாளெடுப்பவேனிற்
கோமகன்மகுடஞ்சூடியிருப்பதக்குளிர்பூஞ்சோலை. (௨௦)

கலையினுணிறைந்தவித்தகாந்தமண்டபத்திற்செய்த
மலையினுமெழுதுமாடமருங்கினுநெருக்குசோலைத்
தலையினுங்கமலவாவித்தடத்தினுந்தண்முத்தார
முலையினுமன்றிக்கோடைமுடிவிடங்காணார்மைந்தர். (௨௧)

நிலந்தருதிருவினன்றசிழன்மணிமாடக்கூடல்
வலந்தருதடந்தோண்மைந்தர்வானமும்வீழும்போக
நலந்தருமகளிரோடுநாகநாடவர்தஞ்செல்வப்
பொலந்தருவனையகாட்சிப்பூம்பொழிலுகர்வான்போவார். (௨௨)

மேற்படி - வேறு.

மாத்தாண்மதமானெருத்தின்மடங்கலெனச்செல்வாரும்
பூத்தாரொலிவாம்பரிமேற்புகர்மாவெனப்போவாரும்
பாத்தார்பரிதியெனவாம்பரித்தேருகைத்தூர்வாருந்
தேத்தாருள்வண்டலம்பச்சிலம்பினடக்கின்றாரும். (௨௩)

நீலப்பிடிமேற்பிடிபோனெறிக்கொள்வாருந்தரள
மாலைச்சிவிகைமிசைவெண்மலரானெனச்செல்வாரு
மாலைக்கரும்பன்றனைபோலளித்தார்ப்பரியூர்வாருங்
கோலத்தடக்கையற்றிக்கொழுநருடன்போவாரும். (௨௪)

சுருப்புக்கமழ்தேங்கண்ணித்தொடைபைங்கழலாடவருங்
கருப்புச்சிலைமன்னவனுங்கருவிப்படையன்னவரும்
விருப்புற்றெறிநீர்வையைவெள்ளத்தகுளத்தெள்ளிப்
பொருப்பிற்குவிக்கும்புளினம்புகுஞ்சூழ்சோலைபுகுவார். (௨௫)

கூர்தந்திடியும்பரியுமூர்வார்கொழுநர்தடந்தோ
ளேந்தச்சயமாதென்னத்தழுவாவிழிந்துபொழில்வாய்ப்
பூந்தொத்தலர்பொற்கொடிதாதருமாறென்னப்புனைந்த
சாந்தக்கலவையுகப்போய்வனமங்கையர்போற்சார்ந்தார். (௨௬)

ஏமாசலமென்முலையார்நடையோவியமேயென்னப்
பூமாதவிசேர்வாரும்புன்னைநிழல்சேர்வாருந்
தேமாநிழல்சேர்வாருஞ்செருந்திநிழல்சேர்வாருங்
காமாயுதசாலைபோற்கைதைநிழல்சேர்வாரும். (௨௭)

கோடும்பிறைவாணுதலார்குழலைக்கருவிக்காரென்
றோடுந்தோகையவர்கண்ணோக்கிக்கணையென்றஞ்சி
யோடுங்கொடியின்னாருருமாக்கிளிசொன்றயில்வா
ளோடுங்குயிலன்னவர்பண்ணிசைகேட்டோடாநாணும். (௨௮)

நீடுந்தரங்கமிரங்குநிறைநீர்நிலையேயன்றிப்
பாடுஞ்சுரும்புண்கழுநீர்பைந்தாட்குமுதம்பதுமங்
கோடும்பூத்தவென்னக்கொடியேரிடையார்குழையுந்
தோடுங்கிடந்தவதனத்தொகையாற்பொலிவசோலை. (௨௯)

பிடிகளென்னநடந்தாருடன்போய்க்கொழுநர்பெருந்தன்
கொடிகணமிடைந்தவில்லிலியக்கர்போலக்குறுகிக்
கடிகொள்பனிநீர்தெளித்துவேடைதணித்துங்கன்று
மடிகள்பிடித்துஞ்சேடியவர்கைக்குதவியாவார். (௩௦)

மைவார்தடங்கண்மடவார்வளைப்பார்கொம்பின்மலரைக்
கொய்வார்குமிழ்மோந்துயிர்ப்பார்குழையுஞ்செவியுங்குழலும்
பெய்வார்மகிழ்ச்சிசெய்வார்பேராமையல்கூர
வெய்வார்கணைபோற்றைப்பக்கொழுநர்மார்பத்தெறிவார். (௩௧)

முத்தேர்நகையார்வளைப்பமுகைவிண்டலர்பூங்கொம்பர்ப்
புத்தேள்வண்டும்பெடையும்புலம்பிக்குழலிற்புகுந்து
தெத்தேயெனப்பாண்செய்துதீந்தேனருந்தத்துணையோ
டொத்தேழிசைபாடிக்களூன்னும்பாணரொத்தே. (௩௨)

மேற்படி - வேறு.

இம்பர்வீடளிக்குந்தெய்வமகளிரேயென்பார்கூற்றம்
வம்பலமெய்யேபோதும்வளைக்கையார்வளைப்பத்தாழ்ந்து
கம்பமுற்றடிப்பூச்சிந்திமலர்முகங்கண்ணீர்சோரக்
கொம்பரும்பணிந்ததென்றாலுலகியல்கூறற்பாற்றே. (௩௩)

மைக்கணாளொருத்தியெட்டாகிமிர்தொம்பைவளைக்குந்தோறுங்
கைக்குநேர்படாமைவாடுங்கடிமலர்க்கொடிபோனிற்பத்
தைக்கும்பூங்கணைவேளன்னாளொருமகன்றலைப்பட்டென்னை
யெய்க்கின்றாய்தோண்மேலேறிப்பறியெனவேந்திநின்றான். (௩௪)

தையலாளொருத்தியெட்டாமலர்க்கொம்பைந்தளிர்க்கைநீட்டி
யையநுண்மருங்குனோவவருந்துமாற்றாக்கேள்வ
னெய்யெனவிதுவுமென்னைநூடியமகளிரேயோ
கொய்யெனவளைத்துநின்றான்கண்மூத்தங்கொழிப்பநின்றாள். (௩௫)

மைக்குழலொருத்திகாதில்வட்டப்பொன்றேடொழூடே
யிக்கயமனையான்கொய்தசெருந்திப்பூச்செருகிநோக்கி
யிக்குழையழகிதென்றானிடுமெங்கைக்கிடுதியென்னா
யக்குழையோடும்வீசியன்பனுக்கலக்கண்செய்தாள். (௩௬)

மயிலினம்பெடையன்னாளோர்மாதர்மாங்குடம்பைசெல்லுங்
குயிலிளம்பெடைதன்னாவிச்சேவலைக்கூவநோக்கி
யயிலிளங்களிறன்னானைக்கடைக்கணித்தளியுந்தேனும்
பயிலினஞ்சோலைமாடோர்மாதவிப்பந்தர்சேர்ந்தாள். (௩௭)

பாசிழையொருத்தியாற்றுப்புலவியாள்பைந்தாரான்முன்
பூசலில்வாசங்காலிற்போக்கியும்புனைபூங்காஞ்சி
யோசையைச்செவியிலுய்த்துங்கலவியினுருவங்கீட்டிக்
காசினையுடுத்தும்போர்த்துங்காதிட்டவள்போனின்றாள். (௩௮)

வாய்ந்தகாண்மலர்கொய்தீவான்மெய்யிலம்மலர்த்தேர்தாது
சாந்தமான்மதம்போற்சிந்திக்கிடப்பவோர்தையல்யாரைத்
தோய்ந்தசாந்தென்றாளுள்ளத்துன்னையுஞ்சுமந்துகொய்த
வாய்ந்தசண்பகத்தாதென்றானெய்சொரியழலினின்றாள். (௩௯)

பிணியுவிழ்கோதையாளோர்பேதைதன்பதிதன்னோட
ரணியவந்தடியில்வீழத்தன்னிழலனையான்சென்னி
மணியிடைக்கண்டுகங்கைமணாளனையொப்பீரொம்மைப்
பணியவதென்னென்றநக்குப்பணிவுமேற்பரிவுசெய்தாள். (௪௦)

முதுவைவாளொருவனங்கோர்மங்கைதன்வடிவைநோக்கிப்
பதுமமேயடிகைகாந்தள்பயோதரங்கோங்குகாவிப்
புதுமலர்விழிவாயாம்பற்போதுநம்மூரவெய்யோ
ததனைவாய்திறந்துகாட்டிப்போமினென்றடுத்துநின்றான். (௪௧)

விடைத்தனியேறன்னானோர்விடலையோர்வேற்கணாள்முன்
கிடைத்துநம்மிடத்தென்னெஞ்சக்கெட்டுவந்தொளித்ததல்குன்
மடத்திடையொளித்ததேயோதனத்திடையொளித்ததோர்பூம்
படத்தினைத்திறந்துகாட்டிப்போவெனப்பற்றிச்சென்றான். (௪௨)

மாந்தளிரடியார்சாய்ப்பவளைந்தபூஞ்சினையன்னார்
கூந்தலிற்கிடந்தசெம்மற்கோதைமேல்வீழ்ந்தகற்பி
னேந்திழையவள்தீர்த்துப்பலர்நுகர்ந்தெச்சிலாக்கும்
பூந்தொடியவரைத்துய்க்கும்பேதையர்போன்றதன்றே. (௪௩)

கலிவிருத்தம்.

புல்லிமைந்தரொருங்கவர்ந்தானோ
வல்லியன்னமடந்தையர்கொய்தலி
னல்லிகாண்மலரற்றபின்கைப்பொரு
ளில்லியென்னவிளைத்தனகாவெலாம். (௪௪)

மையுண்கண்ணியர்மைந்தரோடம்மலர்
கொய்யுஞ்செல்வநுகர்ந்துகொழுங்கனு
மெய்யுந்தோயிற்கொழுநரின்வேற்றுமை
செய்யும்பொய்கைதிளைப்பச்சென்றரோ. (௪௫)

அன்னமன்னவராடுங்கயந்தலை
நன்னர்நீலநளினங்குமுதமென்
றின்னவன்றியெழின்முல்லைசண்பகம்
பொன்னைக்கோங்கமும்பூத்ததுபோன்றதே. (௪௬)

கலிதலைத்துறை.

குரவவோதியர்கயந்தலைகுறுகுமுன்கயனு
மரவும்யாமையுமலவனுமன்னமுமகன்று
பருவரால்களுமிரிந்தனபகைஞர்மேலிட்டு
வருவரோவெதிர்நிற்பரோவலியிழந்தவரே. (௪௭)

பண்ணெனுஞ்சொலார்குடைதொறும்பன்மலர்வீழ்ந்த
தண்ணெனுந்திரையலைதொறுநிரைநிரைதாக்கல்
கண்ணுநீலமுமுகங்களுங்கமலமும்வாயும்
வண்ணவாம்பலுந்தத்தமின்மலைவனவனைய. (௪௮)

கூழைபாசியின்விரிந்திடமலர்ந்துநீர்குடையு
மேழையுண்கணூர்கொங்கையுமுகங்களுமருங்கார்
சூழரும்பொடுமலர்ந்தசெந்தாமரைத்தொகுதி
யாழ்தரங்கநீரிடைக்கிடந்தலைவனவனைய. (௪௯)

ஆயநீர்குடைந்தேறுந்தன்றுணைவியைத்துணைவன்
வாயுங்கண்களும்வேறுற்றவண்ணங்கண்டெங்க
ணேயவின்னுயிரனையவளெங்குளாளென்றான்
காயும்வேற்கணாள்முலைகுளிப்பாட்டினாள்கண்ணீர். (௫0)

மங்கைநல்லவளொருத்திநீராடுவான்மகிழ்ந
னங்கைபற்றினளேகுவானவன்குடைந்தேறும்
பங்கயக்கணளொருத்தியைப்பார்த்தனன்சீசீ
யெங்கையெச்சினீராடலேனெனக்கரைநின்றாள். (௫௧)

வனைந்தபைங்கழலான்புனலாடலின்மார்பி
னணைந்தகுங்குமத்தலையெறிகளினமொட்டழுந்தப்
புனைந்தகொங்கையால்வடுப்படப்பொதித்தவள்யாவென்
றினைந்தழுங்கினளெண்ட்சொரியெரியெனவொருத்தி. (௫௨)

வீழ்ந்தகாதலன்செய்ததிங்காகியவேலாற்
போழ்ந்தநெஞ்சினுள்புலவிநோய்பொருளவன்காண
வாழ்ந்தநீரிடையழுந்துவாள்போன்றயர்ந்தயலே
தாழ்ந்தவன்னத்தைநோக்கிக்கைதாவெனவிரந்தாள். (௫௩)

கரும்புபோன்மொழியாளொருகாரிகைவதனஞ்
சுரும்புசூழ்கமலங்களுட்கமலமாய்த்தோன்ற
விரும்புகாதலனையுற்றுமெலிந்தனன்மெல்ல
வரும்புமுல்லைகண்டையத்தினீங்கிச்சென்றணைந்தான். (௫௪)

களித்தகாதலன்மொக்குள்வாய்த்தண்ணீழல்கண்டு
தெளித்துவாணகைசெய்யமாற்றுளொன்றழீஇத்
தளிர்க்கைநீட்டினள்கண்டிலடவினள்சலத்து
ளொளித்தியோவெனவுடைத்தனள்பேதைமாதொருத்தி. (௫௫)

நாறுசுண்ணமென்கலவையுமானமுந்தம்மின்
மாறிவீசினின்றுவோர்மாலைதாழகலத்
தாறுபாடறவந்தரத்தளிகவர்ந்துண்ப
வாறுசெல்பவர்பொருள்வெளவுமாட்டரோபோல. (௫௬)

கொய்யுநீலமுங்கமலமுங்கொண்டுகொண்டனங்க
னெய்யும்வாளியினெறிவராவெறிந்திடுமெலனோக்
கையினும்புடைத்தெறிந்தவர்கதிர்முகம்படக்கண்
டையவாணகைசெய்தகமகிழ்ச்சியுளாழ்வார். (௫௭)

வாசமென்பனிநீரொடுசுண்ணமும்வாரி
வீசுவாரிளம்பிடியொடுவேழமாநிரைபோற்
காசலார்தொடிவில்லிடக்கைகளாலள்ளிப்
பூசுசாந்தமையழிந்திடப்புனிதநீரிறைப்பார். (௫௮)

அப்பெரும்புனற்றடங்குடைந்தாடுவாராயத்
தொப்புருந்தனியொருமகளொருவன்றன்முகத்துத்
துப்பைவென்றசெந்துவரிதழ்ச்செய்யவாய்த்தநீர்
கொப்புளித்தனளம்பலந்தேனெனக்குடித்தான். (௫௯)

ஆழமல்லிடைச்செல்லலின்றிலெனவிழித்தோர்
வேழமன்னவன்விலக்குவான்போலொருவேற்க
ணேழைதன்னைக்கையால்வளைத்தேந்திவண்டறைதார்
சூழுமார்பணைத்திரதிதோடோய்ந்தவனொத்தான். (௬0)

மாசிறுனமுஞ்சூடியமாலையுமெய்யிற்
பூசுசாந்தமுமார்பமும்பொய்கைக்குக்கொடுத்து
வாசமெய்யினிலம்புயவர்சமுமயங்க
வாசைமைந்தரோடிளையவர்கண்களையடைவார். (௬௧)

தையலார்சிலர்நனைந்தநுண்டானையுட்பொதிந்த
மெய்யெலாம்வெளிப்படக்கரையேறுவான்வெள்கி
யையதாபொலந்துகிலெனவன்பரைக்கூய்க்கண்
செய்யமாயனைக்கேட்குழாய்ச்சிறுமியரொத்தார். (௬௨)

உலத்தைவென்றதோளாடவருச்சிமேற்பொழிந்த
வலத்தகத்தொடுகுங்குமமலைந்துசெம்புனலாய்
மலர்த்தடங்குடைந்தவர்க்குநீராசனவட்டக்
கலத்தையொத்தனசுற்றநின்றுரொத்தகடிக்கா. (௬௩)

பட்டும்பன்னிறக்கலிங்கமும்பன்மணிக்கலனுங்
கொட்டுஞ்சாந்தமுநானமுங்குங்குமச்சேறுங்
கட்டுந்தாமமுந்தமதுகட்டழகெலாங்கவர
மட்டுண்கோதையராடவர்மனமெலாங்கவர்ந்தார். (௬௪)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

காவியுங்கமலப்போதுங்கள்ளொழுகாம்பற்போது
மாவியுட்பூத்தபோலவாடியுட்பூப்பநோக்கி
யேவிரண்டன்னகண்ணாலனங்கனையேவல்கொள்ளும்
பூவிரிபொலங்கொம்பன்னார்புதுமதுநுகரப்புக்கார். (௬௫)

பொன்னினும்வெள்ளியாலும்பளிங்கினும்புலவன்செய்த
நன்னிறக்கலத்திற்கூர்வாணட்டெனவாக்கிச்சேடி
யின்னறாரளித்ததேறற்சிறுதுளிவிரலிற்றெள்ளித்
துன்னிவீழ்களிவண்டோச்சித்தொண்டையங்கனிவாய்வைப்பார். ()

வள்ளத்துவாள்போல்வார்க்குந்துக்குடத்தன்யாற்பெய்த
கொள்ளைத்தேன்மதுவைக்கொள்ளைகொள்வந்தவள்ளமீதென்
றுள்ளத்துவெருண்டுவைவாளுந்திமார்பிடப்பதொத்த
கள்ளச்சூழ்கானைவண்டுசெருச்செயக்காண்பவொத்த. (௬௭)

தனியவுண்டுள்ளஞ்சோருமொருமகடணியவுண்டான்
பிணியவிழ்கோதையாளோர்பெண்மகள்கலத்தில்வாக்குந்
துணிமதுதாராதன்னைவாவெனத்துணிந்துபேதாய்
திணிகதிர்வாளால்வள்ளஞ்சிதைத்தியோவென்றுநக்காள். (௬௮)

மலர்தொறுஞ்சிறுதேனக்கித்திரிவண்டுமேடவார்தங்கைத்
தலனெடுந்தோச்சவோடார்தழீஇத்தடஞ்சாடிமொய்ப்ப
விலமெனப்பல்லோர்மாட்டுமிரந்திரந்தின்மைநீங்கா
தலமரும்வறியோர்வைத்தநிதிகண்டாலகல்வரேயோ. (௬௯)

உண்டவளொருத்திகள்வாயுதிக்குந்தன்முகமுங்கண்ணுங்
கண்டுதாமரைகள்வேலைமுளைத்ததக்களையாரா
மொண்டுணுட்பேதைத்தும்பியம்மதுமுளரிவார்தே
னுண்டுளிசெறிவதென்றுநொடித்துக்கைபுடைத்துநக்காள். (௭௦)

மங்கையாளொருத்திதானுண்டெஞ்சியமதுவுட்டோன்றுந்
திங்களைநோக்கியென்னைப்பிரிவின்கட்டியாய்ச்சுட்டா
யிங்குவந்தகப்பட்டாயேயினிவிடேனிடத்தியென்று
வங்கொருவள்ளங்கொண்டுசேமித்தாளருந்தல்செய்யாள். (௭௧)

வெவ்வியநறவமுண்டவிளங்கிழையொருத்திகையிற்
கௌவியவாடிதன்னிற்கருங்கயனெடுங்கட்சேப்புங்
கொவ்வைவாய்விளர்ப்புநோக்கியென்னலங்கூட்டுண்டேகு
மௌவியமனத்தான்யாரென்றயர்கின்றாளயலாரெள்ள. (௭௨)

ஒருத்திகள்ளுண்கின்றாடன்னுருவமந்நறவுட்டோன்ற
வொருத்தியென்னுடன்வந்தன்பாள்காணெனவுண்டதோழி
யொருத்திவந்தென்செய்வாடன்னுருவமுநோக்கிப்பேதா
யொருத்தியோவிருவரொன்றுனெச்சிலென்றுருத்துநக்காள். (௭௩)

சாடியுணறவமுண்டாடன்னுருவேறுபாட்டை
யாடியுணோக்கிநானோவல்லனோவெனைத்தான்கைக்கொண
டோடினர்பிறருமுண்டோவுயிரன்றுனவந்திங்கென்னைத்
தேடினென்செய்கேனென்னைத்தேடித்தாசேடியென்றாள். (௭௪)

களித்தவளொருத்திநின்றவாடியுட்கணவன்றன்பி
னொளிந்தவனுருவுந்தானுஞ்சேர்படவுருத்துநோக்கித்
துளித்தக்கண்ணீரளாகியேதிலாளோடோய்க்கின்பங்
குளித்தனையிருத்தியோவென்றுதைத்துநள்கோபமுண்டாள். (௭௫)

இளம்புளித்தயிர்விராயவின்சுவைபொதிந்தசோறு
வளம்படவிருந்திறுமெருக்குவார்வசந்தவீணை
களம்படுமெழாவினோடுகைவிரனடத்திக்காம
னுளம்புகுந்தலைப்பவெண்ணெய்ப்பாலைபோலுருகிச்சோர்வார். ()

இவ்விளவேனிற்காலத்தின்னுயிர்த்துணைவியோடுஞ்
செவ்வியசெங்கோனேமிச்செண்பகமாறனேர்காள்
கைவ்வினைவல்லோன்செய்தகதிர்விடுகோத்தக்குன்றின்
வெவ்வியவேடைநீப்பானிருந்தனன்வேறுவைகி. (௭௭)

மார்தளிர்ன்றுகோங்குவண்டளவரும்பித்தன்பேட்
காந்தள்செங்கமலமாம்பல்சண்பகங்கழுநீர்பூத்துச்
சாய்ந்தமென்கொடியுந்தானுந்தனியிடத்திருப்பானேரோ
யாய்ந்ததோர்காற்றந்தோன்றவசைந்ததுவசந்தத்தென்றல். (௭௮)

வெவ்வியவேலான்வீசும்வாசமோந்தீதுவேறு
திவ்வியவாசமாகவிருந்ததுதென்றல்காயில்
வெளவியவாசமன்றுகாலுக்கும்வாசமில்லை
யெவ்வியல்வாசமேயோவிதுவெனவெண்ணங்கொள்வான். (௭௯)

திரும்பித்தன்றேவிதன்னைநோக்கினன்றேவியம்பா
லிரும்பித்தைவாசமாகியிருந்ததுகண்டிவ்வாசந்
சுரும்பிற்குத்தெரியாதென்னுச்சூழ்ந்திரும்பூதுகொண்டு
தரும்பித்தைக்கியல்போசெய்கையோவெனவையங்கொண்டான். ()

ஐயுறுகருத்தையாவராயினுமறிந்துபாடல்
செய்யுநரவர்க்கேயின்னவாயிரஞ்செம்பொனென்றக்
கையுறைவேலானீந்தபொற்கிழிகைக்கொண்டேகி
மெய்யுணர்புலவர்முன்னுத்தூக்கினார்வினைசெய்மாக்கள். (௮௧)

வங்கத்தார்பொருள்போல்வேறுவகையமைகேள்விநோக்கிச்
சங்கத்தாரெல்லாந்தம்மிற்றனித்தனித்தேர்ந்துதேர்ந்து
துங்கத்தார்வேம்பனுள்ளஞ்சூழ்பொருடோவியுற்ற
பங்கத்தாராகியெய்த்துப்பட்டருறுமனத்தாரானார். (௮௨)

கலிவிருத்தம்.

அந்தவேலையிலாதிசைவரில்
வந்தமாணவன்மணஞ்செய்வேட்கையான்
முந்தையாச்சிரமமுயலும்பெற்றியான்
றந்தைதாயிலான்றருமியென்றுளான். (௮௩)

ஒருவனுன்முகத்தொருவன்மார்புறை
திருவனுடருந்தேவனூனுரு
வருவனுலகனைத்தனன்கலி
வெருவகாடிமுன்வீழ்ந்துவேண்டுவான். (௮௪)

தந்தைதாயிலேன்றனியனாகிய
மைந்தனேன்புதுவதுவைவேட்கையேன்
சிந்தைநோய்செயுஞ்செல்லறீர்ப்பதற்
கெந்தையேயிதுப்பதமென்றேத்தியே. (௮௫)

நெடியவேதநூனிறையவாகம
முடியவோதியமுறையினிற்கெனும்
வடிவில்லறவாழ்க்கையின்றிமின்
னடியருச்சனைக்குருகனாவனே. (௮௬)

ஐயயாவையுமறிதியேகொலோ
வையைநாடவன்மனக்கருத்துணர்ந்
துய்யவோர்கவியுரைத்தெனக்கருள்
செய்யவேண்டுமென்றிரந்துசெப்பினான். (௮௭)

தென்னவன்குலதெய்வமாகிய
மன்னர்சொக்கநேர்வாழ்க்கையின்றமிழ்
சொன்னலம்பெறச்சொல்லிநல்கினு
ரின்னறீர்ந்தவனிறைஞ்சிவாங்கினான். (௮௮)

பொற்றளிர்ச்சடைப்புவனநாயகன்
சொற்றபாடல்கைக்கொண்டுதொன்னிதி
பெற்றெடுத்தவன்போன்றுபீடுறக்
கற்றநாவலர்கழகநண்ணினான். (௮௯)

கல்வியாளர்தங்கையினீட்டினான்
வல்லையாவரும்வாங்கிவாசியாச்
சொல்லின்செல்வமும்பொருணோக்கியே
நல்லநல்லவென்றுவகைநண்ணினார். (௯௦)

அளக்கில்கேள்வியாரரசன்முன்புபோய்
விளக்கியக்கவிவிளம்பினார்கடன்
உளக்கருத்துநேரொத்தலாற்சிரந்
துளக்கிமீனவன்மகிழ்ச்சிதூங்கினான். (௯௧)

உணர்ந்தகேள்வியாரிவரொடொல்லைபோய்
புணர்ந்தவாயிரம்பொன்னுமின்றமிழ்
கொணர்ந்தவேதியன்கொள்கவின்றெனா
மலர்ந்ததாரினான்மகிழ்ந்தூங்கினான். (௯௨)

வேந்தனேவலால்விபுதர்தம்மொடும்
போந்துமீண்டவைப்புறம்புகுங்கிய
வாய்ந்தபொற்கிழியறுக்குநம்பியை
நேர்ந்துகீரனில்லெனவிலக்கினான். (௯௩)

குற்றமிக்கவிக்கென்றகூறலுங்
கற்றிலானெடுங்காலம்வெம்பசி
யுற்றவன்கலத்துன்னுமெல்லைகைப்
பற்றவாடினான்பண்புபற்றினான். (௯௪)

உலர்ந்தநெஞ்சுகொண்டொதுங்கிநாயக
னலந்தருங்கழலணணினானவன்
மலர்ந்தபாடல்கொண்டழினர்வைகிடத்
தலர்ந்தசிந்தைகொண்டடைந்தமைந்தனே. (௯௫)

செய்யுள்கொண்டுபோய்த்திருமுன்வைத்துளப்
பையுள்கொண்டவப்பனவனென்னைநீ
மையுள்கண்டவிவ்வழுவுபாடலைக்
கையுணல்கினாய்கதியிலேற்கெனா. (௯௬)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

வறுமைநோய்பிணிப்பப்பன்னாள்வழிபடுமடியேனின்பாற்
பெறுபொருளிழந்தேனென்றுபேசிலேன்யார்க்குமேலாங்
கறைகெழுமிடற்றோய்நின்றன்கவிக்குற்றஞ்சொல்வாழ்நாட்சிற்
றறிவுடைப்புலவர்சொன்னாலாருனைமதிக்கவல்லார். (௯௭)

எந்தையிவ்விகழ்ச்சிநின்னதல்லதையெனக்கியாதென்றுச்
சிந்தைநோயுழந்துசைவச்சிறுவனின்றிரங்கயார்க்கும்
பந்தமும்வீடும்வேதப்பனுவலும்பயனுமான
சுந்தரவிடங்கனங்கோர்புலவனாய்த்தோற்றஞ்செய்தான். (௯௮)

கண்டிகைமதாணியாழிகதிர்முடிவயிரம்வேய்ந்த
குண்டலங்குடிகொண்டாகத்தழகெலாங்கொள்ளைகொள்ளத்
தண்டமிழ்மூன்றும்வல்லோனன்றனெனக்குறியிட்டாங்கே
புண்டரநுதலிற்பூத்துப்பொய்யிருள்கிழித்துத்தள்ள. (௯௯)

விரிகதிர்ப்படாத்திற்போர்த்தமெய்ப்பையுளடங்கிபக்கத்
தெரிமணிக்கடகத்திண்டோளிளையவரடைப்பையோடுங்
குருமணிக்களாஞ்சியம்பொற்கோடிகர்தாங்கமுத்தாற்
புரிமதிக்குடைக்கீழ்ப்பொற்காற்கவரிபாலிரண்டுதுள்ள. (௧௦௦)

சொல்வரம்பிகந்தபாதமென்பதுதோன்றவேத
நல்லபாதுகையாய்ச்சூடநவின்றனகற்றுப்பாட
வல்லவர்மறையினாறும்மனுமுதற்கலைபோற்பின்பு
செல்லநூலாய்ந்தோர்வைகுந்திருந்தவைக்களத்தைச்சேர்ந்தான். ()

ஆரவைகுறுகிநேர்நின்றங்கிருந்தவரைநோக்கி
யாரைநங்கவிக்குக்குற்றமியம்பினாரொன்றுமுன்னங்
கீரனஞ்சாதுநானேகிளத்தினேனென்றானின்ற
கீரணிபுலவன்குற்றம்யாதெனத்தேராக்கீரன். (௧௦௨)

சொற்குற்றமின்றுவேறுபொருட்குற்றமென்றான்றூய
பொற்குற்றவேணியண்ணல்பொருட்குற்றமென்னையென்றான்
றற்குற்றம்வருவதோராண்புனைமலர்ச்சார்பாலன்றி
யற்குற்றகுழற்குநாற்றமில்லையேயென்றானையன். (௧௦௩)

பங்கயமுகமென்கொங்கைப்பதுமினிகுழலோவென்ன
வங்கதுமனைத்தேயென்றானலவாயுடையான்றெய்வ
மங்கையர்குழலோவென்னவன்னதுமந்தாரத்தின்
கொங்கலரணிந்தநாறுங்கொள்கையாற்செய்கைத்தென்றான். (௧௦௪)

பாவிகைவழிபட்டேத்தும்பரஞ்சுடர்திருக்காளத்தி
யரவுநீர்ச்சடையார்பாகத்தமர்ந்தஞானப்பூங்கோதை
யிரவிகீர்ங்குழலுமற்றேவெனவஃதுமற்றேயென்று
வெருவிலான்சலமேமுற்றச்சாதித்தான்விளைவுநோக்கான். (௧௦௫)

கற்றைவார்சடையானெற்றிக்கண்ணினைச்சிறிதேகாட்டப்
பற்றுவானின்னுமஞ்சானும்பரார்பதிபோலாக
முற்றுநீர்கண்ணானாலுமொழிந்தநும்பாடல்குற்றங்
குற்றமேயென்றான்றன்பாலாகியகுற்றந்தேரான். (௧௦௬)

கலிநிலைத்துறை.

தேய்ந்தநாண்மதிக்கண்ணியானுதல்விழிச்செந்தீப்
பாய்ந்தவெம்மையிற்பொறாதுபொற்பங்கயத்தடத்து
ளாய்ந்தகாவலன்போய்விழுந்தாழ்ந்தனனவனைக்
காய்ந்தகாவலனிம்மெனத்திருவுருக்கரந்தான். (௧௦௭)

தருமிக்குப் பொற்கிழியளித்தபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் - ௬௧ - க்கு - திருவிருத்தம் - ௨௫௧௧.

ஐம்பத்து மூன்றாவது
கீரனைக்கரையேற்றியபடலம்.

கலிநிலைத்துறை.

மாரனைப்பொடிகண்டவனந்தணமைந்தனுக்
காரநற்கனகக்கிழியீந்ததறைந்தன
மீனத்திரள்சூழ்மலரோடையிடத்தினுங்
கீரனைக்கரையேற்றியவாறுவிளத்துவாம். (௧)

தாழ்ந்தவேணியனெற்றிமுளைத்ததழற்கணாற்
போழ்ந்தநாவலனுடைபங்கயப்பொய்கைவாய்
வீழ்ந்தரும்படர்வேலையில்வீழ்ந்தனன்விம்முறச்
சூழ்ந்தநாவலர்கண்டுபொருதுளங்குவார். (௨)

என்றவேந்தனிலாக்குடியீட்டமுமின்கதிர்
கான்றநாயகமாமணிபோகியகண்டியு
மான்றஞானமிலாதவர்கல்வியுமானதே
சான்றகீரனிலாதவைகூடியசங்கமே. (௩)

ஐயசொற்பொருடன்வடிவானவராலவாய்
மைதழைத்தமிடற்றினர்தம்மொடும்வாதுதான்
செய்தவிப்பிழையோபெரிதெப்படிநீருமோ
யுய்வதற்புதமேயெனயாவருமுன்னினார். (௪)

எய்திவெள்ளிமலைபெயர்த்தானுமிறுத்ததன்
கையில்வீணைதொட்டின்னிசையாட்கனிந்தவன்
செய்ததீங்குபொறுத்ததுமன்றித்திண்டேரொடு
மொய்கொள்வாளுங்கொடுத்தனன்புண்ணியமூர்த்தியே. (௫)

யாவராலுமகற்றரிதிப்பிழையாவர்க்குந்
தேவராமவரோதிருவுள்ளந்திரும்பினும்
போவதேயிதுவேதுணியென்றுபுகன்றுபோய்ப்
பாவலோர்பரன்றன்முன்னிற்பணிந்தேத்துவார். (௬)

திருத்தனேசரணஞ்சரணம்மறைச்சென்னிமே
லிருத்தனேசரணஞ்சரணந்நிறைவேதநூ
லருத்தனேசரணஞ்சரணந்திருவாலவா
யொருத்தனேசரணஞ்சரணங்களுனக்குநாம். (௭)

பாயுமால்விடைமேல்வருவோய்பல்லுயிர்க்கெலாந்
தாயுந்தந்தையுமாகுநின்றண்ணளிதாமரைக்
கேயுமாதவன்போனல்லநீயவியற்றினார்க்
காயுமின்பமுந்துன்பமுமாக்குவதாதலால். (௮)

அத்தகற்றசெருக்கினறிவழிகீரனின்
வித்தகக்கவியைப்பழுதென்றவிதண்டையான்
மத்தகக்கண்விழித்துவெதுப்பின்மலர்ந்தபொன்
முத்தகக்கமலத்திடைவீழமுடிக்கினாய். (௯)

இருணிறைந்தமிடற்றடிகேளிவியப்பிழை
கருணைசெய்துபொறுத்தருளென்றுகபிலனும்
பரணனும்முதலாகியபாவலர்யாவருஞ்
சரணமென்றுவிழுந்திரந்தாரடிசாரவே. (௧௰)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அக்கீரவேலையாலமயின்றவெங்கருணைவள்ள
லிக்கீரமழலைத்தீஞ்சொலிறைவியோடெழுந்துபோந்து
நக்கீரன்கிடந்தசெம்பொனளினப்பூந்தடத்துநாங்கர்ப்
புக்கீரமதுரத்தீஞ்சொற்புலவர்தங்குழாத்துணின்றான். (௧௧)

அனற்கணானோக்கினான்பின்னருட்கணானோக்கவாழ்ந்த
புனற்கணேகிடந்தகீரன்பொறிபுலன்கரணமெல்லாங்
கனற்கணார்தமவேயாகக்கருணைமாகடலிலாழ்ந்து
வினைக்கணேயெடுத்தயாக்கைவேறிலன்புருவமானான். (௧௨)

போதையாருலகமீன்றபுனிதையார்பரஞானப்பூங்
கோதையார்குழற்குத்தீங்குகூறியகொடியநாவின்
றீதையார்பொறுப்பரோயோவவரன்றித்திருக்காளத்திக்
காதையார்குழையினாரைக்காளத்திகைலையென்று. (௧௩)

எடுத்தசொன்மாறிமாறியிலைசயநேரிசைவெண்பாவாற்
றொடுத்தவந்தாதிசாத்தத்துணைச்செவிமடுத்துநேர்வந்
தடுத்தவன்கையைப்பற்றியக்கரையேற்றினார்தாள்
கொடுத்தெழுபிறவிவேலைக்கொடுங்கரையேற்றவல்லார். (௧௪)

கைதந்துகரையேற்றிட்டகருணையங்கடலைத்தாழ்ந்து
மைதந்தகயற்கணாளைவந்தித்துத்தீங்குநன்கு
செய்தத்தோர்க்கிதமுமன்புஞ்செய்தமைபொருளாச்செய்யு
ளெய்தத்துபாடுகின்றான்பிரானருணாடுகின்றான். (௧௫)

அறனிலானிழைத்தவேள்வியழித்தபேராண்மைபோற்றி
மறனிலாத்தன்னடிக்கீழ்த்தமரான்பெருங்கருணைபோற்றி
கறுவிழ்கூற்றைக்காய்ந்தகழற்கமலம்போற்றி
சிறுவனுக்கழியாவாழ்நாளளித்தருள்செய்திபோற்றி. (௧௬)

சலந்தரனுடலங்கீண்டசக்கரப்படையாய்போற்றி
வலந்தருமதனைமாயோன்வழிபடக்கொடுத்தாய்போற்றி
யலர்ந்தசெங்கமலப்புத்தேணடுச்சிரமரிந்தாய்போற்றி
சிலந்தியைமகுடஞ்சூட்டாவரசருள்செல்வம்போற்றி. (௧௭)

திரிபுரம்பொரியநக்கசேவகம்போற்றிமூவர்க்
கருளியதலைமைபோற்றியனங்கனையாக்கீய
வெரியிடுநயனம்போற்றியிரதிக்கிரப்பமீளக்
கரியவன்மகனுக்காவியுதவியகருணைபோற்றி. (௧௮)

நகைத்திடவக்தவக்தகருசிரந்திருகிவாங்கிச்
சிகைத்திருமுடிமேல்வைத்தவிண்டிறல்போற்றிகோயி
லகத்தவிசடைத்தூண்டுமெலிக்கரசாளமூன்று
சகத்தையுமளித்ததேவர்தம்பிரான்சரணம்போற்றி. (௧௯)

யொருப்பகழ்ந்தெடுத்தோன்சென்னிபுயமிறமிதித்தாய்போற்றி
யிருக்கிசைத்தவனேபாடவிரங்கிவாள்கொடுத்தாய்போற்றி
தருக்கொடிருவர்தேடத்தழற்பிழம்பானாய்போற்றி
செருக்குவிட்டவரோடூசைசெய்யநேர்நின்றாய்போற்றி. (௨௦)

பருக்கைமால்யானையேனம்பாய்புலியரிமான்மீன
மிருக்குறள்யாமைகொண்டவிகல்வலிகடந்தாய்போற்றி
குரக்குபாம்பெறும்புநாரைகோழியானலவன்றேரை
கருங்குரீஇக்கழுகினன்புக்கிரங்கியகருணைபோற்றி. (௨௧)

சாலகானிழைத்ததீங்குக்கென்னையுந்தண்டஞ்செய்து
கோலமேபோற்றியஞ்சிக்கொடியனேன்றெருடுத்தபுன்சொன்
மாலைகேட்டென்னையாண்டமலைமகண்மணாளபோற்றி
யாலவாயடிகள்போற்றியம்மைநின்னடிகள்போற்றி. (௨௨)

கலித்துறை.

ஆவலந்தனேனடியனேற்கருள்ளுளென்றுக்
கோவழும்பிரசாதமுங்குதித்தாரைபனுவற்
பாவலங்கலாற்பரனையும்பங்கிலங்கயற்கட்
பூவைதன்னையுமுறைமுறைபோற்றியென்றேத்தா. (௨௩)

தேவதேவனைப்பின்பெருந்தேவபாணியொடுக்
தாவிலேழிசையேழுகூற்றிருக்கையுஞ்சாத்திப்
பூவர்சேவடிசென்னிமேற்பூப்பவீழ்ந்தெழுந்தான்
பாவலோர்களுந்தனித்தனித்துதித்தனர்பணிந்தார். (௨௪)

துதித்தகீரனுக்கின்னருள்சுரந்துநீமுன்போன்
மதித்தநாவலர்குழாத்திடைவதியெனமறைநூ
லுதித்தநாவினார்கருணைசெய்துருக்காந்தயன்சேய்
விதித்தகோயில்புக்கமர்ந்தனர்விளங்கிழையோடும். (௨௫)

கற்றகீரனைக்கலைஞருங்கழகமண்டபத்தி
லுற்றவாடகத்தியறுத்தந்தணற்குதவிக்
கொற்றவேந்தனும்வரிசைகள்சிலசெய்கொடுப்பித்
தற்றநீங்கியகல்வியின்செல்வராயமர்ந்தார். (௨௬)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

சம்பகமாறனென்னுந்தமிழ்நர்தம்பெருமான்கூட
லம்பகநுதலினுனையங்கயற்கண்ணினானை
வம்பகநிறைந்தசெந்தாமரையடிவந்துதாழ்ந்து
நம்பகநிறைந்தவன்பாற்பல்பணிநடத்திவைகும். (௨௭)

கீரனைக்கரையேற்றியபடலம் முற்றிற்று.

ஆகப்படலம்-௫௩-க்கு-திருவிருத்தம்-௨௫௬௬.

ஐம்பத்துநான்காவது

கீரனுக்கு இலக்கணமுபதேசித்தபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

கொன்றையந்தெரியல்வேய்ந்தைக்கூடலெம்பெருமான்செம்பொன்
மன்றலங்கமலத்தாழ்ந்துவழிபடுநாவலோனை
யன்றலங்கரையேற்றிட்டவருளினைச்செய்தேமிப்பாற்
றென்றமிழனையான்றேறத்தெருட்டியதிறனுஞ்சொல்வாம். (௧)

முன்புகான்மாடக்கூடன்முழுமுதலானையாற்பே
ரின்புறவறிஞரீட்டத்தெய்தியாங்குறையுங்கீரன்
வன்புறுகோட்டந்தீர்ந்தமதுரையெம்பெருமானருளி
லன்புறுமனத்தனாயத்தமற்றிதனைச்செய்வான். (௨)

கட்டவிழ்கடுக்கையண்ணல்கன்னிநூலவித்தகாவென
மட்டவிழ்மலரோனாதுமாயவனாலுங்காக்கப
பட்டவனல்லனென்னநுதல்விழிப்படுதீக்கம்மைச்
சுட்டபோதுருப்பத்தீர்த்துக்காத்ததிச்சுவணகஞ்சம். (௩)

இப்பெருந்தடமேயெம்மையெம்மையுங்காப்பதென்னாக்
கப்பிலாமனத்தான்மூன்றுகாலமுமூழ்கிமூழ்கி
யப்பனையாலவாயெம்மடிகளையடியார்சேம
வைப்பினையிறைஞ்சிசித்தம்வழிபடுநியமம்பூண்டான். (௪)

மையறுமனத்தான்வந்துவழிபடுநியமநோக்கிப்
பையரவாரம்பூண்டபராஞ்சுடர்மாடக்கூட
லையனுமணியனாகியகமகிழ்ந்தவனுக்கொன்று
செய்யகன்கருணைபூத்துத்திருவுளத்திதனைத்தேர்வான். (௫)

இலக்கணமிவனுக்கின்னுந்தெளிவிலவிதனாலாய்ந்த
கலைத்தசொல்லமூடச்சொலென்பதறிகிலனவைநீர்கேள்விப்
புலத்தவர்யாரைக்கொண்டுபோதித்துமிவனுக்கென்று
மலைத்தனுவனைத்தமுக்கண்மன்னவனுன்னுமெல்லை. (௬)

பங்கயச்செங்கைகூப்பிப்பாலினேர்மொழியாள்சொல்வா
ளங்கணவங்கைசெல்விக்கனியெனவனைத்துங்கண்ட
புங்கவாகினதுசங்கைக்குத்தரம்புகலவல்லா
ரெங்குளாரோனுமென்னெஞ்சதிப்பதொன்றிசைப்பேனையா. (௭)

பண்டொருபோதுவெள்ளிப்பனிவரையிடத்துன்பாங்கர்ப்
புண்டவிழ்குலிசக்கோமான்பூமகன்மாயப்புத்தே
ளண்டருஞ்சனகனாதியருந்தவர்பிறருமீண்டிக்
கொண்டனரிருந்தாரிந்தக்குவலயம்பொறுமாதோ. (௮)

தாழ்ந்ததுவடதிசைமேலுயர்ந்ததுதென்மேற்கெல்லை
சூழ்ந்ததுகண்டுவானோர்தொழுதனைப்பாரவிவ்வைய
மாழ்ந்திடுமோவம்பூண்டோயொருவனின்னுப்பாணங்கே
வாழ்ந்திடவிடுத்தாலிந்தவையநேர்நிற்குமென்றார். (௯)

பைத்தலைப்புரட்டுமுந்நீர்ப்பெளவமுண்டவனேயெம்மை
யொத்தவனிவனேயான்வாழ்க்கைக்குரியனாகியவுலோபா
முத்திரையிமவான்பெற்றமுகிழ்முலைக்கொடியொப்பாளொன்
றத்திருமுனியைநோக்கியாயிடைவிடுத்தாயன்றே. (௧௰)

விடைகொடுபோவாரென்றைவேண்டினனேகுந்தேயத்
தொடைபெறுதமிழ்காடென்றுசொல்லுபவந்தநாட்டி
னிடையயின்மனித்தரொல்லாமின்றமிழாய்ந்துகேள்வி
யுடையவரொன்பகேட்டார்க்குத்தரமுரைத்தல்வேண்டும். (௧௧)

சித்தமாசகலவந்தச்செந்தமிழியனூறன்னை
யத்தனேயருளிச்செய்தியென்றனனையான்றேற
வைத்தனைமுதனூறன்னைமற்றதுதெளிந்தபின்னு
நித்தனேயடியேனென்றுநின்னடிகாண்பேனென்றான். (௧௨)

கடம்பமாவனத்திலெம்மைக்கண்டனையிறைஞ்சியுள்ளத்
திடம்பெறயாதுவேட்டாயவையெலாமெம்பாற்பெற்றுத்
திடம்பெறமலயத்தெய்தியிருக்கெனவிடுத்தாய்சென்று
குடம்பெறுமுனியுமங்கேயிருக்கின்றான்கொடியினோடும். (௧௩)

இனையதுன்றிருவுளத்துக்கிசைந்ததேலிவற்குக்கேள்வி
யனையமாதவனைக்கூவியுணர்த்தெனவணங்குகூற
வினையகாரணிதம்பிசெல்லாமறந்திடாதின்றுஞ்சான்று
மனையதேசெய்துமென்னாவழிவனைநினைந்தானையன். (௧௪)

கலிநிலைத்துறை.

உடையநாயகன்றிருவுளமுணர்ந்தனன்முடிமே
லடையவஞ்சலிமுகிழ்த்தனனருந்தவவிமானத்
திடைபுகுந்தனன்பன்னியோடெழுந்தனனகல்வா
னடையநூகிவந்தடைந்தனனற்றமிழ்முனிவன். (௧௫)

இயங்குமாதவத்தேரினும்பன்னியோடிழிந்து
புயங்கனாலயம்புகுந்துநாற்புயம்புடைகொத்துத
தயங்குசெம்பவளாசலந்தன்னையுமதன்பால்
வயங்குமிந்திரநீலமால்வரையையும்பணியா. (௧௬)

பெருகுமன்புளந்துளும்பமெய்யானந்தம்பெருக
வருகிருந்தனனாவியிற்கீரனும்பொன்
முருகவிழ்ந்ததாமரைபடிந்திறைவனைமுன்போ
லருகுமன்பினாலிறைஞ்சுவானெருல்லைவந்தடைந்தான். (௧௭)

இருந்தமாதவச்செல்வனையெதிர்வரநோக்கி
யருந்தவாவிவற்கியற்றமிழமைந்திலவெம்பாற்
றெரிந்தநீயதையறிவித்தெருட்டெனப்பிணிபு
மருந்துமாகியபெருந்தகைசெய்யவாய்மலர்ந்தான். (௧௮)

வெள்ளைமாமதிப்பிளவணிவேணியங்கருணை
வள்ளலார்பணிசிரத்தினுமனத்தினுந்தாங்கிப்
பள்ளமேழையும்பருகினேன்பணியுநக்கீர
னுள்ளமாசறவியாகரணத்தினையுணர்த்தும். (௧௯)

இருவகைப்புறவுரைதழீஇயெழுமதமொடேழ்
பொருளொடும்புணர்க்கையிருகுற்றமும்போக்கி
யொருவிலையிரண்டழகொடுமுத்தியெண்ணான்கு
மருவுமாநூலினைத்தொகைவகைவிரிமுறையால். (௨0)

கருத்துக்கண்ணழிவாதியகாண்டிகையானும்
விருத்தியானுநூற்கிடைப்பொருளைக்கறவிளக்கித்
தெரித்துரைத்தனனுரைத்திடுதிறங்கண்டுநாலி
னருத்தமேவடிவாகியவாதியாசிரியன். (௨௧)

தருக்குமின்பமுங்கருணையுந்தழையமாதவனைத்
திருக்கரங்களான்மகிழ்ச்சியுட்டிளைத்திடத்தழுவிப்
பெருக்கவேண்டியபேறெலாம்பீடுறநல்கி
யிருக்கையிற்செலவிடுத்தனனாலவாயிறைவன். (௨௨)

பொன்னனானொடுங்குறுமுனிவிடைகொடுபோன
பின்னையாருயிர்க்கிழத்திதன்பிரானைநேர்நோக்கி
யென்னைநீயிவற்குணர்த்திடாதித்தவப்பொதியின்
மன்னனுக்குணர்த்தியதெனமதுரைநாயகனும். (௨௩)

தன்னைநித்தலும்வழிபடுந்தகுதியோர்சாலப்
பொன்னனிப்பவர்தொடுத்தமற்சரமிலாப்புனிதர்
சொன்னசொற்கடவாதவர்துகடவிர்நெஞ்சத்
தின்னவர்க்குநூல்கொளுத்துவதறனெனவிசைப்ப. (௨௪)

இவனெடுத்தமற்சரத்தினுல்யாமுணர்த்தாதத்
தவனைவிட்டுணர்த்தினமெனச்சாற்றினன்கேட்டுக்
கவலைவிட்டகமகிழ்ச்சிகொண்டிருந்தனள்கதிர்கா
னவமணிக்கலம்பூத்ததோர்கொடிபுரைநங்கை. (௨௫)

கற்றகீரனும்பின்புதான்முன்செய்தகவிகண்
முற்றுமாய்ந்தசொல்வழுக்களும்வழாநிலைமுடிபு
முற்றுநோக்கினனறிவின்றிமுழுதொருங்குணர்ந்தோன்
சொற்றபாடலிற்பொருள்வழுச்சொல்லினேனென்று. (௨௬)

மறையினந்தமுந்தொடாததாணிலந்தொடவந்த
விறையர்ஞ்சுடர்விராமயநிருத்தற்குப்பிழைத்தேன்
சிறியகேள்வியோர்கழியவுஞ்செருக்குடையோனென்
றறிஞர்கூறியபழஞ்சொலென்னளவிற்றேயம்ம. (௨௭)

அட்டமூர்த்திதன்றிருவடிக்கடியனேன்பிழைக்கப்
பட்டநீங்குறுவலையவனுதல்விழிப்படுதீச்
சுட்டதன்றியென்னெஞ்சமுஞ்சுடுவதேயென்றென்
றட்டதும்பியவிழுமநோயுவரியுளாழ்ந்தான். (௨௮)

மகவையீன்றதாய்கைத்திடருந்துவாய்மடுத்தூட்
டகைபடும்பிணியகற்றிடும்பான்மைபோலென்னை
யிகலிழைத்தறிவுறுத்தினுற்கேழையென்செய்யத்
தகுவதியாதெனவரம்பிலாமகிழ்ச்சியுட்டாழ்ந்தான். (௨௯)

மாதவனீறனக்காலவாய்மன்னவனருளாற்
போதகஞ்செய்தநூலினைப்புலவரோனோர்க்கு
மாதரஞ்செயக்கொளுத்தியிட்டிருந்தனனமலன்
பாதபங்கயமூழ்கியபத்திமைக்கீரன். (௩0)

கீரனுக்கிலக்கணமுபதேசித்தபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் - ௫௪ - க்கு - திருவிருத்தம் - ௨௫௩௬.

ஐம்பத்தைந்தாவது

சங்கத்தார் கலகந்தீர்த்தபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

காமனைப்பொடியாக்கண்டவன்றூதறென்னூல்கீர
னாமகற்புலவற்கீந்தவயிதுபொலம்பூங்கொன்றைத்
தாமனச்சங்கத்துள்ளார்தலைதமோற்றைத்தேற
னாமனைக்கொண்டுபோட்டுணர்த்தியவொழுக்கஞ்சொல்வாம். (௧)

அந்தமில்கேள்வியோரொனைவருவருமவேறுவேறு
செந்தமிழ்செய்துதம்மிற்செருக்குறுபெருமைகூறித்
தந்தமின்மாறுய்த்தந்தந்தரதரமளக்கவல்ல
முந்தைநான்மொழிந்தவாசன்முன்னர்வந்தெய்தினோ. (௨)

தொழுதனரடிகள்யாங்கட்கொடுத்தவிப்பாடறம்முள்
விழுமிதுந்தீதுந்தூக்கிவேறுபாடளந்துகாட்டிப்
பழுதறுத்தியைந்தரப்பணிக்கெனப்பணிந்தார்கேட்டு
முழுதொருங்குணர்ந்தவேதமுதல்வனுமுக்கண்மூர்த்தி. (௩)

இருவருந்துருவநீண்டவெரியழற்றூணிற்றோன்று
முருவெனவறிவானந்தவுண்மையாயுலகுக்கெல்லாங்
கருவெனமூளைத்தமூலவிலிங்கத்துணின்றுங்காண்டற்
கரியதோர்புலவனாகித்தோன்றியொன்றருளிச்செய்வான். (௪)

கலிவிருத்தம்.

இம்மாநகருள்ளாரொருவணிகன்றனபதியென்
றம்மாநிதிக்கிழவோன்மனைகுணசாலினியனையாள்
தம்மாதவப்பொருட்டால்வெளிற்றறிவாளனைத்தழுவும்
பொய்ம்மாசறவினன்போல்வதரித்தாளொருபுத்தேள். (௫)

ஓயாவிறன்மதனுக்கிணையொப்பானவனாமச்
சேயாமவனிடைநீருரைசெய்யுட்கவியெல்லாம்
போயாமிமினையானதுபுக்கிசைந்தானன்
றுயாவருமதிக்குந்தமிழதுவேயெனவறைந்தான். (௬)

வன்றுன்மழவிடையாயவன்மணிவாணிகனாம
னென்றுலவன்கேட்டெங்ஙனமிப்பாடலிற்கிடக்கு
நன்றுனவுந்தீதாணவுநயந்தாய்ந்ததன்றன்மை
குன்றுவகையறிவானெனமன்றுடியகூத்தன். (௭)

மல்லார்தடம்புயவாணிகமைந்தன்றனக்கிசையச்
சொல்லாழமும்பொருளாழமுங்கண்டான்முடிதுளக்காக்
கல்லார்புயம்புளகித்துளங்களிதூங்குவனலக
மெல்லாமகன்றிடுமுங்களுக்கென்றுலயஞ்சென்றான். (௮)

பின்பாவலரெல்லாம்பெருவணிகக்குலமணியை
யன்பாலழைத்தேகித்தமதவையத்திடையிருத்தா
நன்பான்மலர்நறுஞ்சாந்துகொண்டருச்சித்தனர்நயந்தே
முன்பாலிருந்தருந்தீந்தமிழ்மொழிந்தாரவைகேளா. (௯)

மகிழ்ந்தான்சிலர்சொல்லாழ்ச்சியைமகிழ்ந்தான்சிலர்பொருளை
யிகழ்ந்தான்சிலர்சொல்லைப்பினையிகழ்ந்தான்சிலர்பொருளைப்
புகழ்ந்தான்சிலர்சொல்லின்பமும்பொருளின்பமுமொருங்கே
திகழ்ந்தான்சிலர்சொற்றின்மையும்பொருட்டிண்மையுந்தேர்ந்தே. ()

இத்தன்மையனாகிக்கலைவல்லோர்தமிழெல்லாஞ்
சித்தங்கொடுதெருட்டுஞ்சிறுவணிகன்றெருள்கீரன்
மூத்தன்றமிழ்கபிலன்றமிழ்பரணன்றமிழ்மூன்று
மத்தன்மையனறியுந்தொறுமறியுந்தொறுமெல்லாம். (௧௧)

நாழைந்தான்பொருடொறுஞ்சொற்றொறுநுண்மைஞ்சுவையுண்டே
தழைந்தானுடல்புளகந்திளைத்தான்சிரம்பனித்தான்
குழைந்தான்விழிவழிவேலையுட்குளித்தான்றலையளித்தான்
விழைந்தான்புரிதவப்பேற்றினைவிளைத்தான்களிதிளைத்தான். (௧௨)

பல்காசொடுகடலிற்படுபவளஞ்சுடர்தரளா
மெல்லாநிறுத்தளப்பானெனவியல்வாணிககுமரன்
சொல்லாழமும்பொருளாழமுந்துலைகாவெனத்தூக்க
கல்லாறறிபுலவோர்களுநகட்டாரிகல்விட்டார். (௧௩)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

உலகிலுட்பெருகியந்தவொண்டமிழ்மூன்றும்பாடத்
திலகமாய்ச்சிறந்தவாய்ந்ததெய்வநாவலருந்தங்கள்
கலகமாகவையிற்றீர்ந்துகாசறுபனுவலாய்ந்து
புலமிகுகோட்டிசெய்துபொலித்தனரிருந்தார்போலும். (௧௪)

சங்கத்தார் கலகந்தீர்த்தபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் - ௫௫ - க்கு - திருவிருத்தம் - ௨௬௩௦.

ஐம்பத்தாறவது.

இடைக்காடன் பிணக்குத்தீர்த்தபடலம்.

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

குடைக்காடன் பசுக்கன்னக் குழியருத்தி வேட்கையறக் கொடுத்த கங்கைச், சடைக்காடன் புல்வரிக தணிவித்த முறையிதுமேற் றன்னைப் பாடுக், தொடைக்காடன் பகன்றிகழ்ந்த தென்னவனை முனிக்குதன்னைத் தொழுதுபோன, விடைக்காட னுடன்போய்ப்பின் பெருந்தருளிப் பிணக்கறுத்த வியப்பு சொல்வாம். (௧)

இந்திரன்றன் பழிதீர்த்த யாசனித்துப் பின்புகதி யின்பமீந்த, சுந்தரன்பொன் னடிக்கன்பு தொடுத்தருஞ் சண்பகத்தார் தொடுத்துச் சாத்தி, வந்தனைசெய் திருத்தொண்டின் வழிக்கேற்பச் சண்பகப்பூ மாறவேந்த, னந்தரசூ டாமணியாஞ் சிவபுரத்து ணிறைசெல்வ மடைந்தா னிப்பால். (௨)

ஆற்றன்மிகுபிரதாபசூரியன்வங்கிசத்துவசனளவில்சீர்த்தி
சாற்றரியவிரிபுமருத்தனன்சோழவங்கிசாந்தகன்றன்வெற்றி
மாற்றரியபுகழ்ச்சேரவங்கிசாந்தகன்பாண்டிவங்கிசேசன்
றேற்றமுறயரித்தேர்வங்கிசசிரோமணிபாண்டீச்சுரன்றன்மன்றே
அணிவுடையகுலத்துவசன்வங்கிசவிபூடணமாறன்சோமசூடா
மணிகுலசூடாமணியேயிராசசூடாமணியேமாற்றார்போற்றிப்
பணியவரும்பூபசூடாமணியேகுலேசபாண்டியனேயென்னக்
கணிதமுறாப்பதினைவர்வழிவழிவந்துதித்துநிலங்காவல்பூண்டோர். ()

அத்தகைய பாண்டியருட் குலேசபாண் டியனென்னு மரசன் றேன்மேல், வைத்தவனி தலம்புரப்போ னிலக்கணமு மிலக்கியமும் வரம்பு கண்டோ, னெத்தகைய பெருநூலு மெல்லைகண்டோ னுதலி னிவனுக்கேற, முத்தமிழோர் பயில்சங்க மிடங்கொடுத்த தனையமணி முழவுத் தோளான். (௫)

கழிந்தபெருங் கேள்வியினு னெனக்கேட்டு முழுதுணர்ந்த கபிலன் றன்பாற், பொழிந்தபெருங் காதன்மிகு கேண்மையினா னிடைக்காட்டுப் புலவன் றென்சொன், மொழிந்தரசன் றனைக்காண்டு மெனத்தொடுத்த பனுவலொடு மூரித் தீந்தேன், வழிந்தொழுகு தாரானைக் கண்டுதொடுத் துரைப்பனுவல் வாசித்தானால். (௬)

வழுக்காத சொற்சுவையும் பொருட்சுவையும் பகிர்ந்தருந்த வல்லோ ருள்ளந், தழுக்காற்றும் சிரந்துளக்கா னகமகிழ்ச்சி சிறிது முகத் தலர்ந்து காட்டா, னெழுக்காயுந் திணிதோளா னென்றுமுனை யான்வாளா விருந்தானேய்ந்த, குழுக்காத லன்புடையான் றனைமானம் புறந்தள்ளக் கோயில்புக்கான். (௭)

சன்னிதியில் வீழ்ந்தெழுந்து தமிழறியும் பெருமானே தன்னைச் சேர்ந்தார், தன்னிதியே திருவால வாயுடைய நாயகனே நறுந்தார் வேம்பன், பொன்னிதிபோ லளவிறந்த கல்வியுமிக் குளனென்று புகலக்கேட்டுச், சொன்னிறையுங் கவிதொடுத்தே னவமதித்தான் சிறிது முடி துளக்கானென. (௮)

பரிவாயின் மொழிதொடுத்து வருவித்தோர்க் ககமகிழ்ச்சோர் பயனு நல்கா, விரிவாய தடங்கடலே நெடுங்கழியே யடுங்கான விலங்கே புள்ளே, பொரிவாய பராரைமரா நிரையேவான் றொடுகுடுமிப் பொருப்பே வெம்பு, மெரிவாய கொடுஞ்சுரமே யெனவிவற்றோ ரஃறிணையொத் திருந்தா னெந்தாய். (௯)

என்னையிகழ்ந் தனனோசொல் வடிவாய்நின் னிடம்பிரியா விமையப்பாவை, தன்னையுஞ் சொற் பொருளான வுன்னையுமே யிகழ்ந்தனனென் றனக்கியாதென்று, முன்னைமொழிந் திடைக்காட னணியாத முனிவீர்ப்ப முந்திச்சென்றா, னன்னவுரை திருச்செவியி னூறுபா டனவுறைப்ப வருளின் மூர்த்தி. (௰)

போனவிடைக் காடனுக்குங் கபிலனுக்கு மகத்துவகை பொலியு மாற்றான், ஞானமய மாகியதன் னிலிங்கவுரு மறைத்துமையா நங்கை யோடும், வானவர்தம் பிரானெழுந்து புறம்போய்த்தன் கோயிலினேர் வடபால் வையை, யானநதித் தென்பாலோ ராலயங்கண் டங்கணினி தமர்ந்தான் மன்னோ. (௧௧)

சங்கவான்றமிழ்த்தெய்வப்புலவோருமுடனெழுந்துசைலவேந்தன்
மங்கைநாயகன்போனவழிபோயங்கிருந்தாரவ்வழிநான்மைகற்
கங்குல்வாய்புலரவரும்வைகறையிற்பள்ளியுணர்காலத்தெய்தி
யங்கணுயகனடியார்சேவிப்பாரிலிங்கவுருவங்காணார். (௧௨)

என்னவதிசயமோவீ தென்றயிர்த்தாரிரங்கினா ரிதனையோடி, மன்னவனுக் கறிவிப்பான் வேண்டுமெனப் புறப்பட்டு வருவாராயி, னன்னவரைப் பிரிந்துறையு மணங்கனையா ரெனவுமல ரணங்குநீத்த, பொன்னனையார் தாமரையெனவும் புலம்படைந்து பொலிவழிந்த புரமுங்கண்டார். (௧௩)

அரசனிடைப் புகுந்தன்ன கடுகேங்கி யாவணங்கி யரசேயா மொன், றுரைசெயவஞ் சுதுமங்க ணுயகனைத் திருப்பள்ளி யுணர்ச்சி நோக்கி, மறைமலர்ச்சேவடி பணியப் புகுந்தனமின் றங்கவன்றன் வடிவங்காணேம், புரமுனைபுலம்படைந்த தென்றழல்வே லெனச்செவியிற் புகுத்தலோடும். (௧௪)

வழுதியுரியணையிலிருந் தடியிறவீழ்ம் பழுமரம்போன் மண்மேல் யாக்கை, பழுதுறவீழ்ந் துயிரொடுங்க வறிவொடுங்கி மட்டாவை யடிந்தாங்கொல்லைப், பொழுதுமிடைத் தறிவுநிறீஇ யெங்கவெழுந் தரு

சலிக்கைப் போதுகும்பி, யழுதிருகண்ணீர்வெள்ளத் தாழ்ந்தடியே
னென்பிழைத்தே னன்றலன்றால். (௧௫)

கொலையினையோ ரவுணர்புர நொடிவரையிற் பொடியாகக் குனி
த்தமேருச், சிலையினையோ யழையசிவ புரத்தினையோ வருவிமணிதெ
றிக்கும்வெள்ளி, மலையினையோ தம்மைமறந் துனைநினைப்பார் மனத
தினையோ வாழ்த்தும்வேதத், தலையினையோ வெங்குற்ற மெங்குற்
றென்றென்று தளருமெல்லை. (௧௬)

சிலர்வந்து மன்றுவோ ரறிசயங்கன் டனம்மவையைத் தென்சா
ராக, வலர்வந்தோன் படைத்தகான் முதலொருகாலமுங்கண்டதன்
றுகேள்வித், தலைவந்தபுலவரொடு மாலவாயுடையபிரான் றனேசெ
ம்பொன், மலைவந்தவல்லியொடும் வந்திறைகொண் டிறைகின்றான்
மாதேரவென்றார். (௧௭)

அவ்வுரைதன் செவிநுழைந்து புகுந்திரப்ப வெழுந்தரச னச்ச
த்தாழ்ந்து, தெவ்வர்முடித் தொகையிடறுங் கழற்காலா னடந்தேகி
ச்செழுநீர்வையைக், கௌவைநெடுந் திரைக்கரத்தாற் கடிமலர்தூ
உய்ப்பணியத்தென் கரைமேல்வந்து, மௌவலின் முகைமூரன் மா
தினொடு மிருக்கின்ற மணியைக்கண்டான். (௧௮)

படர்ந்துபனிந் தனபுருக்குங் கண்ணீர்சோர்ந்தானந்தப் பெள
வத்தாழ்ந்து, கிடந்தெழுந்து நாக்குழறித் தமொழிநின்றதனைக் கிள
க்கும்வேதர், தொடர்ந்தறியா வடிசிவப்ப நகர்புலம்ப வலகின்ற
தோகையொடிங், கடைந்தருளுங் காரணமென் னடியேனாற் பிழை
புனதோ வையாவையா. (௧௯)

அல்லதையென் றமராலென் பகைஞராற் கள்வரா லரியகானத்,
தெல்லவிலங்காதிகளா லிடையூறின் றமிழ்நாட்டி லெய்திற்றோ,
தொல்லைமறை யவரொழுக்கங் குன்றினரோ தவந்தருமஞ் சுருங்கிற்
றோ, வில்லறமுந் துறவறமும் பிழைத்தனவோ யானறியே னெந்
தாயெந்தாய். (௨௦)

கள்ளேறுகடுக்கைமருஞ் சடையானே போற்றிபெருங் கருணை
போற்றி, வெள்ளேறுகொடியுயர்த்த விடையானே போற்றியருள்
விகிர்தா போற்றி, புள்ளேறு கொடியுயர்த்த புனிதனயன் றேறுத
புனிதா போற்றி, வள்ளேறுசிறுகுழவி மதிநுதலங் கயற்கண்ணி
மணாளா போற்றி. (௨௧)

பாதமலரினைபோற்றிபன்னிரண்டுகையானைப்பயந்தாய்போற்றி
வேதமுடிகடந்தபரஞானத்திலானந்தவினைவேபோற்றி [றி
போதவடிவாய்நால்வர்க்ககன்சவிறந்துநிறைந்தபரம்பொருளேபோற்
மாதவளநீறணிந்துமன்றாடுங்கயற்கண்ணிமணாளாபோற்றி. (௨௨)

பொக்கமுடையார்செய்யும்பூசைதவங்கண்டுநகும்புராணாபோற்றி
தக்கன்மகம்பொடியாகத்திருப்புருவநெரித்தகொடுந்தழலேபோற்றி
செக்கமலக்கண்ணிடந்தகண்ணனுக்குத்திகிரியருள்செல்வாபோற்றி
மைக்குவளையனையமணிகண்டாவங்கயற்கண்ணிமணாளாபோற்றி. ( )

மேற்படி - வேறு.

தென்னவனின்னவண்ணமேத்தினன்செம்பொற்கூடன்
மன்னவன்கேட்டாகாயவாணியால்வையையாட
வுன்னதுசோத்தரக்கேட்டுவந்தனையினியதாயிற்
பின்னமொன்றுளதுகேட்டியென்றனனருளிச்செய்வான். (௨௪)

இயம்பரும்பதிகடம்முளாலவாயேற்றமீங்குச்
சயம்புவாயனந்தமுள்ளதானவரியக்கர்சித்தர்
வயம்புரியரக்கர்வானோர்முனிவர்மனிதருள்ளார்
பயம்பெறவிதியாற்கண்டகுறியனந்தமுண்டால். (௨௫)

அக்குறிகளின்மேம்பட்டகுறியறுபத்துநான்கா
மிக்குறிகளின்மேம்பட்டகுறிகளெட்டினையவெட்டுத்
திக்குறைவானோர்பூசைசெய்தனவிவற்றியாமவ்வத்
புக்குறைகுறிநந்தோழன்பூசித்தகுறியதாகும். (௨௬)

அறைந்தவித்தெய்வத்தானமனைத்துமோரூழிக்காலத்
திறந்தகந்தோழன்கண்டலிங்கமாமதனுலிங்கே
யுறைந்தனமுறைதலாலேவுத்தரவாலவாயாய்ச்
சிறந்திடத்தகுவதின்றுமுதலித்தெய்வத்தானம். (௨௭)

இங்குதண்பணைசூழ்நீபவனத்தைநீத்தொருபோதேனு
நீங்குவமல்லேங்கண்டாயாயினுமியம்வேறு
நீங்குவாயல்லகாடன்செய்புன்மையிகழ்தலாலே
யாங்கவணிடத்தியாமவைத்தவருளினல்வந்தேமென்று. (௨௮)

பெண்ணிரைப்பாகங்கொண்டபெருந்தகைப்பரமயோகி
விண்ணிடைமொழிந்தமாற்றமீனவன்கேட்டுவானோர்
புண்ணியாசிறியோர்குற்றம்பொறுப்பதுபெருமையன்றோ
வெண்ணியபெரியோர்க்கென்றுவேந்தனுமிறைஞ்சினானே. (௨௯)

அடிபணிந்தேத்தினானை யருள்சுரந்தசையுமின்னுங்
கொடியணிமனையிற்போக்கிக் கோமளவல்லியோடு
முடியுறைபுலவரோடு மொல்லைதன் கோயில்புக்கான்
வடதிருவாலவாயில் வைகாதிருந்தவள்ளல். (௩௰)

பின்மதிச்சடையினான்பின் னடந்துபோய்விடைகொண்டேகு
மன்னவன்றன்னைப்பாடிவந்தவன்றன்னை மாட்சித்
தன்மைசால்சங்கவாணர் தம்மொடுங்கொடுபோய்வென்றாட்
பொன்மகள்காணிகொண்டபுரிசைசூழ்கோயில்புக்கான். (௩௧)

விதிமுறைகதலிபூகங் கவரிவால்விதானந்தீபம்
புதியதார்நிறைநீர்க்கும்பங் கதலிகைபுனைந்தமன்றத்
கதிர்மணிமாடத்தம்பொற்சேக்கைமேற்கற்றோர்சூழ
மதிபுனைகாடன்றன்னை மங்கலவனிசெய்தேற்றி. (௩௨)

சிங்கமான்சுமந்தபொன்னாஞ்சேக்கைமேலிருத்திவெள்ளைக்
கொங்கவிழ்தாமஞ்சூழ்ந்து குளிர்மணியாரந்தாங்கி
மங்கலமுழவமார்ப்ப மறையவராக்கங்கூற
நங்கையர்பல்லாண்டேத்த நன்மொழிப்பனுவல்கேட்டு. (௩௩)

அறிவுடைக்காடனுக்குமாறுமைமாண்புலமையோர்க்கு
முறைமையாலருச்சனைசெய்து முனைக்கொடியினானோர்
சிறைதவிர்வேழம்பாய்மா சிவிகைபொற்கலங்கள்பல்ல
யறைகழற்காலிற்பின்னேழ்புடைத்திதனைவேண்டும். (௩௪)

புன்னெறிப்புலவீர்யானிப்போழ்திடைக்காடனுக்குப்
பன்னியகுற்றமெல்லாம்பொறுக்கெனப்பரவித்தாழ்ந்தா
னன்னெறியகேள்வியோருமன்னநீயுலவுற்றசொல்லாற்
றன்னெறியமுதாமெங்கள்கோபத்தீத்தணிந்ததென்றார். (௩௫)

இன்னமுமாலவாயெம்மிறையவன்கருணைநோக்காற்
பன்னரும்புகழ்மைநன்றாய்ப்பாக்கியமுனக்குண்டாக
வென்னனல்லாக்கங்கூறியவிரோராகவந்தத்
தென்னவன்றேறுவான்செய்தவமுருத்திரிந்தாலென்னா. (௩௬)

ஏரிமருத்தவனிமூன்றுமெனவகைமூர்த்தியன்பு
புரிமருத்துவனைச்சூழ்ந்தபொருபுழிநடைத்தோன்சோதி
விரிமருத்தடல்வான்றிங்கள்மிகைத்துமனருளின்வந்தா
னரிமருத்தனனுக்குத்தென்னனடலரிக்குருவாயனான். (௩௭)

கவிநிலைத்துறை.

பரிசிலைப்புலவருக்கருள்ருலேசன்பல்பகல்நீதித்
திரிமருப்பிரலைவெம்மழுவெடுத்தவன்மதிச்சென்னிமேல்
வரிசிலைப்படைபொறித்தவனெனப்பெறுவரமைத்தனுே
மரிமருத்தனனிடத்தவனிவைத்தரனடியெய்தினான். (௩௮)

இடைக்காடன் பிணக்குத்தீர்த்தபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் - ௫௬ - க்கு - திருவிருத்தம் - ௨௯௪௮.

ஐம்பத்தேழாவது

வலைவீசினபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

மின்றிரித்தன்னவேணிவேதியனிடைக்காடன்பின்
சென்றநீள்விடையான்கொண்டபிணக்கினைத்தீர்த்தவண்ண
மின்றுரைசெய்தும்முந்நீர்வலைவீசியதென்முன்
மன்றலஞ்சூழலினுமையுணர்த்தியவண்ணஞ்சொல்வாம். (௧)

அந்தமிலழகன்கூடலாலவாயமர்ந்தசீவ
சுந்தரனுலகமீன்றகன்னியங்கயற்கண்ணாள்
கொந்தவிழலங்கற்கூந்தற்கொடிக்குவேறிடத்தனைவி
மந்தனமானவேதமறைப்பொருளுணர்த்துமாதே. (௨)

நாதவின்னருணாற்கூறுகாண்மறைப்பொருளையெல்லாம்
யாதுகாரணத்தான்மன்றேனிலமெய்பிராட்டி
யாதரமுடைத்தாயோலக்கவலையுருவெதிர்தோன்று
வாதராயினாய்க்கேட்டாளஃதறிந்தமலச்சோதி. (௩)

அராமுகமனையவல்குலுமைக்கிளைநோக்கியேனை
யிராமுகமனையவுள்ளத்தேமையோர்போலவெம்பால்
பராமுகமாகிவேதப்பயனுறும்படாதகேட்டாய்
குராமுகையுமிழ்ந்தகோதாயுந்தவிக்குற்றத்தன்றால். (௪)

வீரதமுமறனுமின்றிமீன்படுத்திழிஞரான
பரதவர்மகளாகென்றுபணித்தனன்பணித்தலோடு
மரதனவாரந்தாழ்ந்தவாரமென்முலையாளஞ்சி
வரதநிற்பிரிந்துவாழுவல்லனேவென்றுதாழ்ந்தாள். (௫)

வீங்குநீர்ச்சடையானீங்குமெல்லியல்பரிவுநோக்கி
வாங்குநீர்க்குரனல்வாழ்க்கைவலைஞர்கோன்மகளாய்வைகி
யாங்குநீவளர்நாள்யாம்போந்தருங்கடிமுடித்துமென்றுத்
தேங்குநீரமுதன்னானைச்செலவிடுத்திருந்தானிப்பால். (௬)

அன்னதுதெரிந்துநால்வாயைங்கரக்கடவுடாதை
முன்னர்வந்திதனுலன்றேமூண்டதிச்செய்தியெல்லா
மென்னவீர்ங்கவனம்போலாங்கிருந்தபுத்தகங்களெல்லாந்
தன்னெடுங்கரத்தாலவாரியெறிந்தனன்சலதிமீதால். (௭)

வரைபகவெறிந்தசூர்வேன்மைந்தனுந்தந்தைகையி
லுரைபெறுபோதநூலையொல்லெனப்பறித்துவல்லே
திரைபுகவெறிந்தானகச்செல்வநான்மாடக்கூட
னரைவிடையுடையநாதனந்தியைவெகுண்டுநோக்கா. (௮)

அடைத்துநாமிருக்குஞ்செவ்வியறிந்திடாதிவரைவாயில்
விடுத்துநீயிருந்தாய்நீங்குவிளைந்ததுன்றனக்குமிந்தத்
தொடுத்தநீங்கொழியவின்றேர்சுறவுருவாகிவைய
முடுத்தகாரோதநீர்புக்குழல்கெனப்பணித்தான்மன்றே. (௯)

வெருவருஞ்செலவின்வேழமுகத்தனைவிதித்தசாபப்
பெருவலிதன்னைச்சாரும்பெற்றியாற்சாயங்கூறு
னருவரைநெஞ்சுபோழ்ந்தவள்ளிலைவடிவேற்செங்கை
முருகனைவணிகர்தம்மின்மூங்கையாகென்றுனிப்பால். (௧௦)

நாயகனேவலாலேசாயகிவலைஞர்மாத
ராயதுகந்தபுத்தேனாசேறவாகிமுந்நீர்
மேவதுங்கருவைளவானமீன்படுத்தனைந்தைவேட்டுப்
போயதுமவட்குக்கேள்விபுகன்றதுமுறையிற்சொல்வாம். (௧௧)

கலிநிலைத்துறை.

குழும்வார்திரைவையயத்துறைகெழுகாட்டுட்
கைழயார்கலிமுகத்துநெய்தலஞ்சீழ்ங்
தாழுநீள்கருங்கழியகழ்வனைத்துகாரனைந்து
தாழைமூதெயிலுடுத்ததோர்தன்றுறைப்பாக்கம். (௧௨)

முடங்குமுள்ளிலையாற்புதைந்தெதிரொதிர்மொய்த்து
நடங்குகைதையேபோதொடுவெளிநாக்கின்றசைவ
மடங்குமெய்ப்பராக்கையிருங்கேடகவட்டத்
தடங்கிவாள்பணித்தாடமராற்றுவாரனைய. (௧௩)

புலவுமீனுணக்கோசையும்புட்களோப்பிசையும்
விலைபகிர்ந்திடுமமலையுமீன்கொள்கம்பலையும்
வலையெறிந்திடுமரவமும்வாங்குமாரவமு
மலையெறிந்திடுபரவைவாயடைப்பனமாதோ. (௧௪)

வாட்டுநுண்ணிடைநுளைச்சியர்வண்டலம்பாவைக்
கூட்டுகின்றசோறருகிருந்துடைத்தழுக்கைதை
யூட்டுகின்றனநித்திலம்பொருகடற்றரங்கங்
குட்டுகின்றனகடிமலர்சூழ்ல்குழ்ஞாழல். (௧௫)

நிறைந்ததெண்கடலாடிநீரென்றியிடைச்செல்வோர்க்
கறந்தெரிந்தயோற்பொதிந்தசோறவிழ்ப்பனதாழை
சிறந்தமுத்தொடுபசும்பொனும்பவளமுந்திரட்டிப்
புறந்தெரிந்திடக்கொடுப்பனமலர்ந்தபூம்புன்னை. (௧௬)

கொண்டமீன்பகர்பரதவர்குரம்பைகட்டோறுஞ்
சென்றுதாவிமேற்படர்வனதிரைபடுபவள
மன்றல்வார்குழனுளைச்சியர்மனையின்மீனுணக்கு
முன்றிலிற்சிப்பனகடலிடுமுழுமணிக்குப்பை. (௧௭)

கூற்றம்போன்றகன்னுளைச்சியர்குமுதவாய்திறந்து
மாற்றம்போக்கினர்பகர்தருங்கயற்குநேர்மாறுந்
தோற்றம்போக்குவதவர்விழித்துணைகளக்கயன்மீ
னாற்றம்போக்குவதவர்குழனகைமலர்க்கைதை. (௧௮)

அலர்ந்தவெண்டிரைக்கருங்கழிக்கெங்கரிணரும்பர்
குலைக்குவிழ்ந்துதேன்றுரும்பியகுமுதமேயல்ல
கலந்தருங்கடலெயிகருங்காற்பன்கள்வாய்
மலர்க்கருங்கியகுமுதமுமொய்ப்பனவன்றே. (௧௯)

ஆயபட்டினத்தொருவன்மேலாற்றியதவத்தால்
நாயனாவனர்தம்மினுள்நாயனுஞ்சிறிது
தீயதில்லைச்செப்பியாற்றின்டிமில்வாணர்
மேயசாதியிற்பிறந்துளான்மேம்படுமனையான். (௨௦)

செடியகாருடற்பரதவர்திண்டிமினட்த்தா
நெடியவாழியிற்படுத்தமீன்றிறைகொண்டிறைக்குங்
கடியவாயிலோனவர்க்கெலாங்காவலோனேற்றுக்
கொடியவானவனடிக்குமெய்யன்புசால்குணத்தோன். (௨௧)

மகவிலாமையாலாற்றநாண்மறுமையோடிம்மைப்
புகலிலாவென்னவருந்துவாரொருபகற்போது
தகவுசால்பெருங்கிளையொடுஞ்சலதிமீன்படுப்பா
னகலவார்கலிக்கேகுவானதன்கரையொருசார். (௨௨)

தக்கமேருமாமலைமகளுடையிற்றவத்தாள்
மிக்கமீனவன்வேள்வியின்விரும்பியமகவாய்ப்
புக்கநாயகிதன்பதியாணையாற்புலவு
தொக்கமீன்விலைவலைஞன்மேற்றவப்பயனாப்ப. (௨௩)

இச்சையாலவனன்பினுக்கிரங்குவாள்போலச்
செச்சைவாய்திறந்தழுதொருதிருமகவாகி
நெய்ச்சபாசிலைப்புன்னைதன்னீழலிற்கிடந்தாள்
மைச்சகாருடற்கொடுந்தொழில்வலைஞர்கோன்கண்டான். (௨௪)

கார்கொணீர்த்திருமாதுகொல்காந்துநீருறையும்
வார்கொள்பூண்முலைமடந்தைகொல்வனத்துறைவாழ்க்கைத்
தார்கொள்பூங்குழலணங்குகொறடங்கணுமிமைப்ப
வார்கொலோமகவாகியீண்டிருந்தவளென்று. (௨௫)

பிள்ளையின்மையேற்கிரங்கியெம்பிரான்றமிழ்க்கூடல்
வள்ளனல்கியமகவிதுவேயெனவலத்தோ
மெள்ளவன்புகூர்த்தெடுத்திருதோளுறப்புல்லித்
தள்ளருந்தகைக்கற்பினுடைத்துணைக்கொடுத்தான். (௨௬)

பிறவியந்தகன்றெரிக்குகன்பெற்றெனக்களித்த
வறியனீணிதிபெற்றெனவாங்கினன்வலைஞ
னெறியும்வேலையினார்த்தனர்கைபெறத்தாட்டிக்
குறியவர்ணகைவலைச்சியர்குழுவினர்குரவை. (௨௭)

பிறையில்கற்புடைமனைவியும்பெறுதுபெற்றெடுத்த
குழவியைத்தடக்கொங்கையுங்கண்களுங்குளிரத்
தழுவிமுத்தமிட்டுச்சிமோந்தன்புளந்ததும்ப
வழுகிதாகியமணிவிளக்காமெனவளர்ப்பாள். (௨௮)

புலவுமீன்விலைப்பசும்பொனாற்செய்தபல்பூணு
மிலகுமாரமும்பாசியுங்காசிடையிட்டுக்
குலவுங்கோவையுஞ்சங்கமுங்குலத்தினுக்கிசைய
வலகிலாதபேரழகினுக்கழகுசெய்தணிந்தாள். (௨௯)

தொண்டைவாய்வலைச்சிறுமியர்தொகையொடுந்துறைபோய்
வண்டலாடியும்பித்திலமாமணிகொழித்துங்
கண்டனூழல்சூழ்கானலங்கடிமலர்கொய்துங்
கொண்டலோதியின்ருழ்தரக்குளைகடல்குளித்தும். (௩௦)

தளர்த்தலைக்கொடிமருங்குலுக்கல்லுயிர்த்தலைவ
னளந்தவைகளுங்குறைபடவனித்தார்வ
கிளர்ந்தவன்புமொண்கொங்கையுங்கிளரவாட்சிறிதில்
வளர்ந்துவைகினுள்வைகலுமுழுவொலாம்வளர்ப்பாள். (௩௧)

ஆலவாயுடைநாயகனேவியவாறே
மாலைதாழிளமதிச்சடைமகுடமுங்கரங்க
ணாலுமாகியவடிவுடைநந்தியுஞ்சிறவக்
கோலமாகிவெண்டிரைக்கடல்குளித்தினிதிருந்தான். (௩௨)

குன்றெறிந்தவேற்குழகனுங்கரிமுகக்கோவு
மன்றெறிந்ததக்கிரமெலாமுணர்மிசைபடக்கா
கன்றெறிந்தவனறிவருங்கழன்மனத்தடக்கா
வின்றெறிந்தகன்மத்தெனவுழக்கியொளிற்கும். (௩௩)

இட்டுத்தோணியைப்பாட்டினைக்கிழிப்பவிலைபோய்த்
தட்டுஞ்சோங்கினைமேலிசோக்கொடுங்கவிழ
முட்டுஞ்சீறிமேல்வரும்பலசுறவெலாமுழக்கி
வெட்டுங்கோடுகோத்தேணையபீனெலாம்வீசும். (௩௪)

தரங்கவாரிநீர்கலக்கலாற்றாக்கிரங்கொடுமே
லிரங்குவான்புலவோர்க்குநிகைபாலெண்ணார்
புரங்களுன்றையும்பொடித்தினாணையாற்புனலிற்
காங்கணன்னையுங்கரந்தமீன்மந்தரங்கடுக்கும். (௩௫)

தன்னுநீர்த்திரைபோய்நுலைச்சேரிகள்சாய்ப்பத்
துன்னுநீருடித்தெழுமழைகுலிறப்பாய
முன்னுநீண்மருப்புடையமீன்மொய்கலமகத்த
தென்னுநீர்த்துறைகடையறவின்னணந்திரியும். (௩௬)

ஏற்றிதாலெனத்துறைமகன்யாமிதுபிடிக்கும்
பெற்றியாதெனக்கிளையொடும்பெருவலைப்பாசம்
பற்றியாழிபூர்படவுகைத்தெறிந்தனன்படலைச்
சுற்றிவாய்கிழித்தெயிற்றிறப்பாய்ந்ததுசுறவம். (௩௭)

படவுடைப்பவோர்தோணிமேற்பாய்ந்துமத்தோணி
விடவுறத்தெறித்தெறிந்திடவிசைத்தொருசோங்கி
னிடைபுகுந்துநீள்வலையெறிந்திஙனம்வெவ்வே
றுடல்புகுந்துழலுயிரெனப்பரதனுழலவான். (௩௮)

முன்னர்வீசினாற்பின்னுறமுளைத்தெழுமுயன்று
பின்னர்வீசினான்முன்னுறப்பெயர்ந்தெழும்வலத்தி
னுன்னிவீசினாலிடம்படவுருத்தெழுமிடத்தின்
மன்னிவீசினால்வலத்தெழுமகரவேறது தான். (௩௯)

எறிவலைப்படுமகமலர்நீர்ப்பவனுள்ள
மறுதலைப்படவலையினும்வழீஇப்பொருளாசை
நெறிமலர்க்குழனல்லவர்நினைவெனநினைவுற்
றறிபவர்க்கரிதாம்பரம்பொருளெனவகலும். (௪௦)

ஏவலாளரோடின்னவாறின்னமீன்படுத்தற்
காவதாந்தொழிலியற்றவுமகப்படாதாக
யானரோயிதுபடுப்பவரொன்றிருங்கானற்
காவலாளரும்பரதருங்கலங்கருழந்தார். (௪௧)

சங்கலம்புதண்டுறைகெழுநாடனிச்சலதித்
துங்கமந்தரமெனக்கிடந்தலமருஞ்சுறவை
யங்கணந்தெவன்பிடிப்பவனவனியானீன்ற
மங்கைமங்கலக்கிழாவெனமனம்வலித்திருந்தான். (௪௨)

ஈந்திராதனுமினையனாயங்கயருட்டத்
திந்துவாணுதலாளுயங்கினையளாயிருப்பத்
தந்திராவிரண்டேந்தியதமனியவிமானத்
துந்துசீர்ச்சடையார்மனமுன்னினார்மன்றே. (௪௩)

உயர்ந்தசாதியுந்தம்மினுமிழிந்தவென்றன்னிக்
கயர்ந்துநெஞ்சடைவலைக்குலக்கன்னியைவேட்பான்
வியந்துகேட்டெவ்வாறவர்வெறுக்குமுன்னவருக்
கியைந்தமீன்வலையுருவெடுத்தேகுதுமென்று. (௪௪)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

கருகிருண்முழுக்காலன்னக்சினன்கச்சோடார்த்த
சுரிகையன்றோன்மேலிட்டதுகிலினன்குஞ்சிசூடி
முருகுமலர்காப்புளிக்குசெய்தற்கண்ணியன்மூத்தவானே
சிறுவருமறையுந்தேடியிளைப்பவோர்வலைஞனானான். (௪௫)

முழுதுலகீன்றசேற்கண்முதல்வியையருளிலார்போ
லிழிதொழில்வலைமாதாகச்சபித்தவாறென்னேயென்றும்
பழிபடுசாபமேனூர்பரதராய்வரவும்வேண்டிற்
றழகிதன்றுகொன்றேயால்வாயடிகள்செய்கை. (௪௬)

தன்பெருங்கணத்துளாரோர்தலைவனுஞ்சலதியான
னென்பதுதோன்றவேடமெடுத்தெறிவலைதோளிட்டு
வென்புறமலைப்பக்காலினீடுகுடம்பைதாங்கிப்
பின்புறநடந்துசெல்லப்பெருந்துறைப்பாக்கம்புக்கான். (௪௭)

கழித்தலைக்கண்டற்காடுங்கைதையுங்கானுங்கெய்தற்
கழித்தலைக்கிடங்குநீத்துச்சுறவுந்தோட்டுப்பெண்ணை
வழித்தலைசமர்ந்துவார்கள்வார்ப்பனங்காந்தாம்பல்
குழித்தலைமலர்பூங்கானற்கொடிவலைச்சேரிசேர்ந்தான். (௪௮)

பெருந்தகையமுதன்னானைப்பெற்றுப்பெற்றெடுப்பானோற்ற
வருந்தவவலைஞர்வேந்தனிசயமகத்துட்டோன்ற
வருந்தகையுடையகாளைவலைமகன்வரவுநோக்கித்
திருந்தழகுடையநம்பியாரைநீசெப்புகென்றான். (௪௯)

சுந்தரான்மறைகடேறுந்தனியொருவடிவாய்த்தோன்றி
வந்தமீன்கொலைஞன்கூறுமதுரையில்வலைஞர்க்கெல்லாந்
தந்தைபோற்சிறந்துளானோர்தனிவலையுழவனல்ல
மைந்தன்யானடைந்துகாத்துத்துடைக்கவும்வல்லனானேன். (௫௦)

அல்லதுவானமீனெல்லாமகப்படவலைகொண்டோச்ச
வல்லவனானேனென்மற்றிவன்வலைஞன்கோலம்
புல்லியமகன்கொலாமுன்னம்புகன்றசொல்லொன்றிப்போது
சொல்லியதொன்றிரண்டுஞ்சோதனைகாண்டுமென்றான். (௫௧)

தொண்டுறைமனத்துக்கானற்றுறைமகனஃதேலித்தத்
தண்டுறையிடத்தோர்வன்மீன்றழலெனக்காந்துசீறற்
கொண்டுறைகின்றதையருத்தடுபிடித்தியேலென்
வண்டுறைகோதைமாதைமணஞ்செயத்தருவேனென்றான். (௫௨)

சிங்கவேறனையான்காலிற்சென்னடைப்படவிற்பாய்ந்து
சங்கெறிதரங்கத்தட்பத்தடங்கடல்கிழித்துப்போகிக்
கிங்கரனுனைகாளைவரையெனக்கிளைத்ததோண்மேற்
றொருங்கலிற்கிடந்துஞான்றதொருகுமணிவலையைவாங்கி. (௫௩)

செவ்விதிற்றொக்கியாகத்திருகின்றெறிந்தான்பக்கங்
கௌவியமணிவில்வீசவிசையொலிகறங்கிப்பாயப்
பைவிரித்துயிர்த்துநாகம்விழுங்கவாய்ப்பட்டமீன்போல்
வெவ்வினைச்சுறவேறையன்விசிவலைப்பட்டதன்றே. (௫௪)

மாசறுகேளிரன்பின்வலைப்படும்வலைஞர்கோன்றாய்
வீசியவலையிற்பட்டமீனினைச்சுருக்கிவாங்கிக்
காசெறிதரங்கமுந்நீர்க்கரையிடையிட்டான்கள்வாய்
மூசுதேனென்னவார்த்துமொய்த்தனபரதச்சாதி. (௫௫)

இளையுநங்கோனும்வீசுவலைஞராய்க்கிளர்தோளாற்றல்
விளைவொடுமுயன்றுயன்றான்வினைசெயப்படாதமீனிவ்
விளையவனொருவன்றானேயொருவிசையெறிந்தானீர்த்தா
னளியகங்குலத்தோர்தெய்வமகனிவனாகுமென்றார். (௫௬)

கைதைசூழ்துறைவர்ஞானைகைமிகப்பம்பையேங்க
நொய்தெனுநுசுப்பிற்கள்வாய்நுளைச்சியர்குரவைதூங்கப்
பைதழைபகுவாய்க்கச்சைப்பரதவர்கலங்கன்ஞாழல்
செய்தெழுங்கோதைமாதைத்திருமணம்புணர்த்தினானே. (௫௭)

அந்நிலைவதுவைக்கோலமாயினமருகனாரு
மின்னிலைவேற்கணாளும்விண்ணிடைவிடைமேற்கொண்டு
தன்னிலைவடிவாய்த்தோன்றத்தடக்கைமீனவன்றானு
நன்னிலைவடிவேபோன்றுகந்தியாய்முந்தித்தோன்ற. (௫௮)

கொற்றவெள்விடைமேற்காட்சிகொடுத்தவர்கருணைகாட்டம்
பெற்றவின்மேலைச்சார்பாற்பிணித்தவிப்பிறவிவாழ்க்கைச்
சிற்றறிவொழிந்துமுக்கீர்ச்சேர்ப்பனல்லறிவுதோன்றப்
பொற்றனுமேருவீரன்பூங்கழலடிக்கீழ்த்தாழ்ந்தான். (௫௯)

இரக்கமிலிழிந்தயாக்கையெடுத்துழலேழையேனைப்
புரக்கவின்றென்போல்வந்துபுண்ணியவடிவம்போற்றி
யரக்கெறிபவளச்செவ்வாயணங்கினைமணக்கதென்பாசங்
கரக்கவெள்விடைமேனின்றகருணையேபோற்றியென்றான். (௬௦)

அகவிலான்பரவினின்றவன்பனைநோக்கிப்பன்னா
ளகவிலாவருத்தநோக்கியுமையைநாமகளாத்தந்து
நகவிலான்மனந்தேரியித்தரணியிற்றனதனைவ்வ
நகவிலாப்போகமூழ்கிநம்முலகடைவாயென்ன. (௬௧)

பெண்ணினைவதுவைக்கீந்தபெருந்துறைச்சேர்ப்பற்கன்று
தண்ணளிசுரந்துநல்கித்தருமமால்விடைமேற்றோன்றி
விண்ணிடைநின்றான்சென்றானவேத்திரப்படையானோடு
முண்ணிறையன்பரோடுமுத்தரகோசமங்கை. (௬௨)

அங்கிருந்தனாதிமூர்த்தியாதிநான்மறைகளேத்துங்
கொங்கிருங்கமலச்செவ்விக்குரைகழல்வணங்கிக்கேட்ப
வங்கிருந்தவட்குவேதப்பயனெலாந்திரட்டிமூன்றாய்ப்
பொங்கிருஞ்சுவைபோலட்டிப்புகட்டினான்செவிகளார. (௬௩)

மேற்படி - வேறு.

அவ்வேலையன்புடையாரறுபதினாயிரவர்க்குமளித்துப்பாச
வெவ்வேலைகடப்பித்துவீடாதபரானந்தவீடுநல்கி
மைவ்வேலையனையவிழியங்கயற்கணங்கையொடுமேதுணாசார்ந்தா
னிவ்வேலைநிலம்புரக்குமுடிகவித்துப்பாண்டியனென்றிருந்தமூர்த்தி.

வலைவீசினபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் - ௫௭ - க்கு - திருவிருத்தம் - ௨௭௩௨.

ஐம்பத்தெட்டாவது

வாதவூரடிகளுக்கு உபதேசித்தபடலம்.

கொச்சகக்கலிப்பா.

கலைவீசுமதிச்சடையோன்கடற்றுறைவன்றனைச்சென்று
வலைவீசியவன்பாசவலைவீசம்பரிசுதுமே
யலைவீசம்புனல்வாதவூராளவந்தவிச்சைவலி
நிலைவீசிப்பணிகொண்டநெறியறிந்தபடிமொழிவாம். (௧)

தொடுத்தவருமையும்பயனுந்தூக்கிவழங்குனர்போல்
வடுத்தவயற்குளநிரப்பியறம்பெருக்கியவனியெலா
முடுத்தகடலொருவற்குமுதவாதவ்வரியென
மடுத்தறியாப்புனல்வையைக்கரையுளதுவாதவூர். (௨)

விழவறாநகரெங்கும்விருந்தறாமனையெங்கு
மழவறாமகிழ்வெங்குமறையறாவிடையெங்கு
முழவறாவரங்கெங்குமுகிலறாபொழிலெங்கு
முழவறாவயலெங்குமுடம்பறாவுயிரொன்ன. (௩)

ஆயவளம்பதியதனின்மாத்தியரிலருமறையின்
றாயசிவாகமநெறியின்றுறைவிளங்கவஞ்சனையா
மாயனிடும்புத்தவிருளுடைந்தோடவந்தொருவர்
சேயவிளம்பரிதியெனச்சிவனருளாலவதரித்தார். (௪)

பேர்வாதவூரரெனப்பெற்றுத்தம்பிறங்குமறைச்
சார்வாயநூல்வழியாற்சடங்கெல்லாநிறைவெய்தி
சீர்வாயவிளம்பிறையோனிரம்புவார்வேதமுதற்
பார்வாயவெண்ணெண்கலையும்பதினாறாண்டினிற்பயின்றார். (௫)

இத்தகையோர்நிகழ்செய்தியறிந்தவர்சென்றியம்பவரி
மர்த்தனபாண்டியன்கேட்டுவரவழைத்துமற்றவரைச்
சித்தமகிழ்வரிசையினாற்சிறப்பளித்துத்தன்கோயில்
வித்தகன்மதியமைச்சின்றொழில்பூட்டிமேம்படுத்தான். (௬)

செற்றமிகுங்கருவிகளின்றிறநூலுமனுவேந்தன்
சொற்றபெருந்தொன்னூலுந்துளக்கமறவிளக்கமுறக்
கற்றறிந்தோராதலினாற்காவலற்குக்கண்போன்ற
முற்றுணர்ந்தவமைச்சரினுமுதலமைச்சராய்நிகழ்வார். (௭)

புல்லாதார்முரணடக்கிப்பொருள்கவர்வாரென்பதெவன்
செல்லாதயல்வேறுநீயத்துச்செங்கோன்மை
வல்லாருந்தத்தமதேத்தரியபொருள்வரவிடுத்து
நல்லாராயொப்புரவுநடப்பவையடக்கின்றார். (௮)

அன்னவரிமருத்தனனுக்கடல்வாதவூரமைச்சர்
கன்னலுமிகவசமும்போற்காரியஞ்செய்தொழுகுவார்
தன்னனிசெய்தவனியெலாந்தங்கிளைபோற்குளிர்தூங்க
வன்னமதிக்குடைநிழற்றிமுறைசெய்துவாழுநாள். (௯)

கலிநிலைத்துறை.

மெய்ம்மையாம்பொருள்விவேகமும்வேறுபாடாய
பொய்ம்மையாம்பொருள்விவேகமும்புத்தியுட்டோன்ற
விம்மையாசையுமறுமையிலாசையுமிகந்து
செம்மையாகியகருத்தராய்ப்பரகதிதேர்வார். (௧௦)

புத்தராதியோர்புறவுரைநெறிகளும்பொய்யா
நித்தவேதநூன்மொழியவகவுரைநெறியுஞ்
சித்தமாசறுத்தருட்டெளிவியாவதனு
மித்தையாணவத்தொடக்கறுவில்லையாம்வீடும். (௧௧)

பத்திசெய்தானருட்பெரும்பத்தருக்கன்றி
முத்தியெய்தரிதெனமறைமொழிவதப்பொதுநூல்
சத்தியப்பொருட்டெளிவெலாஞ்சத்தினியாதர்க்
குய்த்துணர்த்தியதாகமமென்பர்மெய்யுணர்ந்தோர். (௧௨)

வேதவாகமச்சென்னியில்விளைபொருளபேதம்
பேதமாகியபிணக்கறுத்திருட்பிணியவிழ்த்து
நாதனாகியதன்னையுமென்னையுநல்கும்
போதனாகியகுருபரன்வருவதெப்பொழுதால். (௧௩)

காவிலாதபேரன்பினுக்கெளிவருங்கருணைக்
கூரவனருளன்றியிக்கொடியவெம்பாசம்
புரையில்கேள்வியாற்கழிப்பதுபுணையிலனன்றி
யரவுநீர்க்கடல்கரங்கொடுநீந்துவதொக்கும். (௧௪)

என்றிவ்வாதவூர்மறையவரின்பவீடெய்தத்
துன்றுமாசையாற்றொடக்குண்டுசுருதியாகமநூ
லொன்றுகேள்வியோர்வருந்தோறுமுணர்ந்தவரிடைத்தா
சென்றுகாண்டொறுமளவளாய்த்தேர்குவாரானார். (௧௫)

எண்ணிலாரிடத்தனந்தளர்ந்தறிபொருளெல்லா
முண்ணுநீர்விடாய்க்குவரிநீருண்டவரொப்ப
வண்ணலாரகத்தமைவுறாதரசனுக்குயிருங்
கண்ணுமாயமைச்சுரிமையுங்கைவிடாதியல்வார். (௧௬)

கள்ளக்காதலனிடத்தன்புகலந்துவைத்தொழுகு
முள்ளக்காரிகைமடந்தைபோலும்பணைக்காப்பான்
பள்ளக்காரியுண்டவனிடத்துள்ளன்புபதித்து
வெள்ளக்காவலனிடையுறாத்தொழிலுமுட்கொண்டார். (௧௭)

இன்னசெய்கையினெழுகுவாரொருபொழுதேகித்
தென்னர்தம்பிரானவையிடைச்சென்றெதிர்நின்
றன்னபோதுபரிநிரைகாப்பவரரசன்
முன்னர்வந்துதாழ்ந்தொருசிறைநின்றிதுமொழிவார். (௧௮)

மறந்தவாதவேல்வலவசம்பயப்பரிவெள்ளத்
திறந்தவாம்பரிபோகநின்றெஞ்சியவெல்லா
நிறைந்தநோயவுநெடிதுமூப்புடையவுமன்றிச்
சிறந்தவாம்பரியொன்றிலதேர்ந்திடினென்றார். (௧௯)

மன்றல்வேம்பனும்வாதவூரர்வள்ளலைநோக்கி
யின்றுநீர்கமதறைதிறந்திருநிதியெடுத்துச்
சென்றுவேலையந்துறையில்வந்திறங்குவதெரிந்து
வென்றிவாம்பரிகொடுவரப்போமென்றுவிடுத்தான். (௨௦)

உள்ளம்வேறுபட்டமைச்சியனெறியினின்றொழுகும்
வள்ளலார்நிதியறைதிறந்தரும்பெறல்வயமான்
கொள்ளவேண்டியபொருளெலாங்கொண்டுதாழிறுக்கி
வெள்ளைமாமதிவேந்தனைவிடைகொடுபோவார். (௨௧)

எடுத்தபொற்சுமையொட்டகத்திட்டுமுன்னேக
விடுத்துவிண்டொடுதிண்டிறல்விடையவன்கோயி
லடுத்தவிழ்ந்தபொன்னம்புயத்தடம்படிந்தனைய
படுத்தடங்கரைச்சித்தியைங்கரத்தனைவணங்கா. (௨௨)

கருணைநாயகியங்கயற்கண்ணியெம்பிராட்டி
யருணாண்மலர்ச்செய்யசீரடித்தலமிறைஞ்சி
வருணனூர்பெருவயிற்றுநோய்வலிகெடுத்தாண்ட
தருணநாண்மதிச்சடையுடையடிகண்முன்றொழா. (௨௩)

ஒன்றுவேண்டிப்பொருளெலாமுனக்குமைம்பொறியும்
வென்றுவேண்டுநின்னன்பர்க்குமாக்குகவென்னி
மன்றுவேண்டிநின்றடியவன்வன்குறையீ
தென்றுவேண்டிநின்றேத்துவார்க்கிறைவனின்னருள்போல். (௨௪)

ஆதிசைவனுமருச்சகனொருவனோரணைந்து
பூதியீந்தனனமகிழ்ந்துபோவிலையிமித்த
மீதுநன்னெறிக்கேதுவென்றிருகையேற்றணிந்து
வேதநாதனையிறைஞ்சினார்விடைகொடுமீண்டார். (௨௫)

கலிவிருத்தம்.

இன்னியமதிர்ந்தனவெழுந்தனபதாகை
துன்னியவிணைக்கவரிதுள்ளினதுகிர்க்காற்
பொன்னியன்மதிக்குடைநிழன்றனபொலங்கொள்
மின்னியமணிச்சிவிகைமேற்கொடுநடந்தார். (௨௬)

மற்றிவர்வழிப்படுமுன்மாதிகடமாடும்
வெற்றிவிடையாரிவர்வினைத்தொகையினெப்பும்
பற்றியவிருட்டுமலபக்குவமுநோக்கா
வுற்றடிமைகொண்டுபணிகொண்டருளவுன்னூ. (௨௭)

சந்தமறைதீண்டரியதங்கருணையாலோ
ரந்தணர்குலக்குரவனாகியடிநீங்கா
மைந்தர்பலர்தம்மொடுபெருந்துறையில்வந்தோர்
கொந்தலர்நெருங்கியகுருந்தடியிருந்தார். (௨௮)

பொருங்கடலனீகமொடுபோய்ப்புறவடுத்த
விருங்கடமனப்பிலகடக்கெழுபிறப்பாங்
கருங்கடல்கடக்கவருவார்கருணைவெள்ளப்
பெருங்கடனிறைந்துறைபெருந்துறையடைந்தார். (௨௯)

அடுத்திடவடுத்திடவகத்துவகைவெள்ள
மடுத்திடமுகிழ்த்தகைம்மலர்க்கமலமுச்சி
தொடுத்திடவிழிப்புனறுளித்திடவினைக்கே
விடுத்திடுமனத்தருள்விளைத்திடநடந்தார். (௩௦)

பித்திதுவெனப்பிறர்நகைக்கவருநாலாஞ்
சத்திபதியத்தமதுசத்தறிவுதன்னைப்
பொத்தியமலத்தினும்வெரீஇச்சுமைபொறுத்தோ
ரொத்திழிபிணிப்புறுமொருத்தனையுமொத்தார். (௩௧)

நெருப்பிலிடுவெண்ணெயெனநெஞ்சுருகவென்னை
யுருக்குமிதனாலெனையொளித்தமலவாற்றல்
கருக்குமவனாகியெனையாள்கருணைவெள்ள
மிருக்குமிடனேயிதெனவெண்ணிநகர்புக்கார். (௩௨)

காயிலையடைத்தகழுமுட்படைவலத்தார்
கோயிலையடைந்துகுளிர்வான்புனல்குடைந்து
வாயிலையடைத்துடலமண்ணுறவிழுந்து
வேயிலையடைத்தவரைமெய்ப்புகழ்வழுத்தா. (௩௩)

ஆலயமருங்குவலமாகவருவார்முன்
மூலமறையோதிமுடியாதபொருடன்னைச்
சீலமுனிவோர்தெளிப்மோனவழிதேற்றுங்
கோலமுறைஇன்றதோர்குருந்தையெதிர்கண்டார். (௩௪)

கலிநிலைத்துறை.

வேதநூலொருமருங்கினுமெய்வழிச்சைவப்
போதநூலொருமருங்கினும்புராணத்துட்கிடந்த
கீதநூலொருமருங்கினுங்கிளைகெழுசமய
பேதநூலொருமருங்கினும்வாய்விட்டுப்பிறங்க. (௩௫)

சுருதிகூறியவறமுதனான்குமத்தொன்றூற்
கரியதாங்கதிக்கேதுவென்றாகமங்கட்டுஞ்
சரியையாதிநாற்பாதமுந்தலைதெரிந்துணர்ந்த
பெரியமாணவர்கழகமும்விஞ்ஞிடைபேச. (௩௬)

சரியைவல்லமெய்த்தொண்டருஞ்சம்புவுக்கினிய
கிரியைசெய்யுநன்மைந்தருங்கிளர்சிவயோகத்
தெரியுஞ்சாதகக்கேளிருந்தேசிகத்தன்மை
புரியும்போதகச்செல்வருமளவிலர்பொலிய. (௩௭)

ஒழிந்தநோன்பினராடலர்பாடலருலகம்
பழிந்தசெய்கையராழ்கையர்கையினர்பாசங்
கழிந்தவன்களாலரனுருக்கவ்விக்கொண்டிலகில்
விழித்தகண்குருடாத்திரிவீரரும்பலரால். (௩௮)

கரவிலுள்ளமாம்விசும்பிடைக்காசறவிளங்கும்
பரசிலாச்சுடர்க்குதயமீநின்மையாற்பகலு
மிரவுமேர்படக்கண்டிலரியன்றுசெய்நித்த
விரதமாதிநோன்பிழுக்குறைவிஞ்ஞையர்பலரால். (௩௯)

உடையுங்கோவணமுண்டியுங்கைப்பலியுறவென்
றடையுங்கேளிருமரணடியார்கண்டிகலன்கண்
படையும்பாரிடமாயினும்பகலிராமுதலீ
றிடையின்றாமிடத்துறக்குவதிஃதவர்யாழ்க்கை. (௪௰)

இத்தகைப்பலதொண்டர்தங்குழாத்திடையால
மொத்தபைங்குருந்தடியினில்யோகவாசனத்திற்
புத்தகத்தெழுதியசிவஞானமெய்ப்போதங்
கைத்தலந்தரித்திருப்பதோர்கருணையைக்கண்டார். (௪௧)

மன்றுளாடியவானந்தவடிவமும்வடவா
லொன்றிநால்வருக்கசைவறவுணர்த்தியவுருவு
மின்றுநாயினேற்கெளிவந்தவிவ்வுருவென்று
வன்றுநாயகன்குறிப்புளத்துணர்த்திடவறிந்தார். (௪௨)

முன்பணிந்தனரணிந்தனரஞ்சலிமுடிமே
லன்புநெக்கிட்டுருகினரினியராயெளிவர்
தன்பெரும்வலைப்பட்டவாருள்வலைப்பட்டார்
துன்பவெம்பவவலையறுத்திடவந்ததொண்டர். (௪௩)

காலமுங்களுக்காட்சியுநிமித்தமுங்கடிந்தார்
சீலமாணவர்செவ்விநேர்தேசிகனென்ன
மூலவாகமமோதினன்முறைக்கவிழ்கழுநீர்
மாலைசார்ந்தனிந்தடியின்மேல்வன்கழல்வீக்கி. (௪௪)

அண்ணல்வேதியரொழுக்கமுமன்புங்கண்டியாக்கை
புண்ணிலாவுயிர்பொருட்புனலுடன்கவர்ந்துன்னக்
கண்ணினான்மலங்கழீஇப்பதகமலமுஞ்சூட்டி
வண்ணமாமலர்ச்செங்கரஞ்சென்னிமேல்வையா. (௪௫)

சூக்கமாகுமைந்தெழுத்தினிற்கூறியபாச
வீக்கநீக்கிமெய்யர்னந்தம்விளைநிலத்துய்த்துப்
போக்குமீட்சியுட்புறம்பிலாப்பூரணவடிவ
மாக்கினான்றனுநிபகம்போல்வருமண்ணல். (௪௬)

பார்த்தபார்வையாலிரும்புண்டநீரெனப்பருகுந்
தீர்த்தன்றன்னையுங்குருமொழிசெய்ததந்தம்மைப்
போர்த்தபாசமுந்தம்மையுமறந்துமெய்ப்போத
மூர்த்தியாயொன்றுமதிர்இலர்வாதவூர்முனிவர். (௪௭)

தேனும்பாலுந்தீங்கன்னலுமமுதுமாய்த்தித்தித்
தானுமுள்ளமுமுருக்கவுள்ளொளியுணர்ந்தின்ப
மானவாறுதேக்கிப்புறஞ்சசியதொத்தொழியா
ஞானவாணிவந்திறுத்தவனன்டார்தக்காவிப். (௪௮)

தொழுதகையினர்துளங்கியமுடியினர்துளும்ப
வழுதகண்ணினர்பொடிப்புறமியாக்கையர்காக்குந்
தழுதழுத்தவன்புரையினர்தமையிழந்தழல்வா
யிழுதையன்னமெய்யினர்பணிந்தேத்துவாராணார். (௪௯)

பழுதிலாதசொன்மணியினைப்பத்திசெய்தன்பு
முழுதுமாகியவடத்திணுன்முறைதொடுத்தலங்க
வழுதுசாத்துமெய்யன்பருக்ககமகிழ்ந்தையர்
வழுவிலாதபேர்மாணிக்கவாசகனென்ருர். (௫௰)

பாட்டிறகின்புறுகுருபரன்பாதமேற்கண்ணீ
ராட்டிச்சொன்மலரணிந்ததற்போதவினமுதை
யூட்டித்தம்பரஞானமாமோமவெங்கனலை
மூட்டிச்சம்புவின்பூசைமேன்முயற்சியாராஞர். (௫௧)

ஆசைவெம்பவவாசனையற்றுமாணிக்க
வாசகப்பிரான்றேசிகன்மாணவரோது
மோசையாகமவுபனிடப்பொருளெலாங்கேட்டு
நேசமங்குவைத்திருந்தன்னதுகண்டுகிருத்தன். (௫௨)

எண்சீரடியாசிரியவிருத்தம்.

தித்திக்கு மணிவார்த்தை யின்னுஞ்சின்றுட் டிருச்செவியி லரு
ந்தவுங்கைச் செம்பொனெல்லாம், பத்திப்பே ரன்பளித்துக் கவர்ந்
துவேண்டும் பணிகொடபோண் டியனையிவர் பண்புதேற்றி, முத்திக்
கே விடுத்திடவும் புத்தைவாது முடித்திடவுந் திருவுள்ள முன்னமெ
ய்தி, யெத்தித்தொண் டனைக்கருமஞ் சிறிதுண்டிங்கே யிருத்திடெ
ன வருக்கரந்தா னடியரோடும். (௫௩)

கனவில்வருங் காட்சியெனக் கருணைமூர்த்தி காட்டிமறைத்தலு
மன்பர் கலக்கத் தாழ்ந்து, கனவுகொல்லோ கனவுகொல்லோ வின்
றுநாதன் ருமலிக்குத் தவிசிட்ட கலம்போலென்னை, நினைவரிய திரு
மேனி யாட்டியாண்டு நீத்ததையென் றையுற்று நெஞ்சந்தேறி, யின்
வடியா ருடன்கூட்டா தேகிறுயோ வென்னையுமென் வினையையுமிங்
கிருத்தியெந்தாய். (௫௪)

வஞ்சவினைக் கொள்கலனு முடலைத்தீவாய் மடுக்கிலேன் வரையு
ருண்டு மாய்ப்பேனல்லே, னஞ்சொழுகு வாளாலுங் குறைப்பேனல்
லே னுதனை யதுவுன்ன தடைமை யென்றே, யஞ்சினேன் றானெயு
மழியாதாவி யையனே நினைப்பிரிந்து மாற்றகில்லே, னென்செய்
கோ வெந்தாயோ வெந்தாயோவென் றிரங்கினுர் புரண்டழுதா ரினை
ய சொல்வார். (௫௫)

வறியனு மொருபிறவிக் குருடன்கையில் வந்தபெரு விலைமணி
போன் மழலைதேருச், சிறியனு மொருமதலை கையிற்கொண்ட செம்

பொன்மணி வள்ளம்போற் றேவர்யார்க்கு மறிவரியாய் சிறியேனை
யெளிவந்தாண்ட வருமையறி யேன்றுன்பத் தழுவத்தாழ்ப், பிறிவறி
யாவன்பரொடு மகன்ருய் கல்லாப் பேதையேன் குறையலதெம்
பிரானுலென்னே. (௫௬)

கலிநிலைத்துறை.

மன்னுதியார்ருமனத்துழாவித்தமொறிப்
புண்ணுகியெனைக்காணுதுழல்கின்றேனைப்போதக்கூட்
கண்ணுலவைமுழுதுங்காயநோக்கியோன்யாவென்
றெண்ணுவெனைத்தந்தாயெங்குற்றுயோவெந்தாயே. (௫௭)

வானுகியைந்துமுதல்வகுத்தவோசைமுதலைந்து
மாறுகியங்குமனமாகிநான்கும்வழியடைப்பத்
தேனுகியசுவையுங்கழியவூறுந்தெள்ளமுதம்
யானுனல்கினையாலெங்குற்றுயோவெந்தாயே. (௫௮)

மாசாய்மறைக்குமலவலியுங்காணும்வேறின்றி
யாசாவிகாரமலமாயினேனைப்பொருட்படுத்திப்
பேசாதவின்பருவினின்றுன்னைப்பின்வைத்த
வீசாவெனையிங்கிட்டெங்குற்றுயோவெந்தாயே. (௫௯)

மேற்படி – வேறு.

என்றுவாய்திறந்தரற்றினுரிரங்கினுர்புனிற்றுக்
கன்றுநீங்கியவானெனக்கலைந்தநெஞ்சினராய்ச்
சென்றுகோபுரவாயிலின்புறம்புபோய்த்திரண்டு
நின்றகாவலன்றமர்களைநோக்கனர்நோக்கா. (௬௰)

துங்கவாரியிற்கடும்பரித்தொகையெலாமாடித்
திங்களின்றலைவருமெனமுன்புபோய்த்தென்னர்
புங்கவன்றனக்குணர்த்துமின்போமெனவிடுத்தா
ரங்கணுயகன்பெருந்துறைநாயகனன்பர். (௬௧)

புரசைமாவயப்புரவிதேர்பொருசர்போய்ப்பொலிவண்
டடைசெய்தார்முடிவேந்தன்முனிறைஞ்சினுருள்ள
துரைசெய்தாரதுகேட்டோன்மருணாத்திலனிருந்தா
னிரைசெய்தார்ப்பரிவரவினைநோக்கியநிருபன். (௬௨)

வள்ளல்வாதவூர்முனிகளுமன்னவன்பரிமாக்
கொள்ளநல்கியபொருளெலாங்குருந்தில்வந்தாண்ட
பிள்ளைவான்மதிச்சடைமுடிப்பெருந்துறைமறையோர்க்
குள்ளவாதரம்பெருகமுன்வேண்டியாங்குய்ப்பார். (௬௩)
சிறந்தபூசைக்குந்திருவிழாச்சிறப்புக்குஞ்செல்வ
நிறைந்தவாலயத்திருப்பணித்திறத்துக்குநிரப்பி
யறந்தவாதபேரன்பர்க்குஞ்செலுத்தியத்தலத்தே
யுறைந்தவாவறவின்னணமொருநாள்கழிப்பார். (௬௪)
எல்லைகூறியகுளிர்மதியடுக்கவர்தெய்த
மல்லல்யானையானின்றும்வயப்பரிவந்த
தில்லையாலிதவென்னெனவோலையுமெழுதிச்
செல்லவுய்த்தனன்வாதவூரமைச்சர்தந்திருமுன். (௬௫)
மன்னவன்றிருமுகங்கண்டுமுறைமையால்வாங்கி
யன்னவாசகந்தெரிந்துகொண்டாதியீறில்லா
முன்னவன்றிருவருட்கடன்மூழ்கியமுனிவ
ரென்னைவேறினிச்செய்யுமாறென்றுநின்றயர்வார். (௬௬)
சிந்தையாகியசெறுவினுட்சிவமுதலோங்கப்
பந்தபாசம்வேரறக்களைந்தருட்புனல்பாய்ச்சி
யந்தமாதியின்றாகியவானந்தபோகந்
தந்ததேசிகவுழவன்றன்கோயிலைச்சார்ந்தார். (௬௭)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

என்னாயகனேபொன்னாடரோறேயேறுகொடியுயர்த்த
மன்னாதென்னாபெருந்துறையெம்மணியேவழுதிபொருளெல்லா
நின்னாலயத்துநின்னடியாரிடத்துஞ்செலுத்துநெறியளித்தாய்
பின்னாவனுக்கென்கொண்டுபரிமாச்செலுத்தப்பெறுமாறே. (௬௮)
என்னாவிறைஞ்சியெழுந்தேத்தியிரந்தாரொதிரேபெருந்துறையின்
மின்னார்சடைமேற்பிறைசூடித்தோன்விசும்பினிறைந்ததிருவாக்கான்
மன்னனவற்குப்பரியெல்லாம்வருமென்றோலைவிடுதியெனச்
சொன்னானதுகேட்டகத்துவகைதளும்பிவளாந்துசுருள்விடுத்தார். ()
அந்தவோலைப்பாசுரமுமறையக்கேட்டுநின்றாங்கோர்
சிந்தையானுமகிழ்சிறப்புவிருந்தான்புரவித்தேரோடும்
வந்தவாதிச்செங்கதிரோன்மறைந்தானவனுல்வையமெலாம்
வெந்தவேட்கைதணிப்பான்போன்முளைத்தானுதிவெண்கதிரோன். ()

அன்றதுயிலும்வாதவூரடிகள்கனவிற்சுடர்வெள்ளி
மன்றுளிழவர்குருந்தடியில்வடிவங்காட்டியெழுந்தருளி
யென்றிவேந்தன்மனங்கவரும்விசயப்பரிகொண்டணைகின்றே
மின்றுநீமுன்னேகுதியென்றருளிச்செய்யவெழுந்திருந்தார். (௭௧)
கனவினிடத்துந்தேவர்க்குங்காண்டற்கரியகருணையுரு
கனவினிடத்துங்கனவிடத்துமெளிதேயன்றோநமக்கென்ன
நினைவின்விடைக்கொண்டிருக்கின்றார்நிருத்தானந்தச்சுடருளாத்
தினவிருளைத்தின்றெழுவதெனவெழுந்தானிரவியிரவொதுங்க. (௭௨)
எழுந்தாருடையபெருந்துறையாரிருந்தாள்பணிந்தாரினிப்பிறப்பி
லழுந்தார்வழிக்கொண்டாரடைந்தாரகன்றார்நெறிகள்விர்திங்கட்
கொழுந்தார்சடையார்விடையார்தென்கூடலணைந்தார்பாடலிவண்
டொழுந்தார்வேந்தன்பொற்கோயிலுற்றார்காணப்பெற்றாரால். (௭௩)
மன்னர்பெருமானெதிர்வந்தமறையோர்பெருமான்வழிபாடு
முன்னர்முறையாற்செய்தொழுகிமுன்னேநிற்கமுகநோக்கித்
தென்னர்பெருமானெவ்வளவுசெம்பொன்கொடுபோயெவ்வளவு
கன்னரிவுளிகொண்டதெனக்கேட்டான்கேட்டகான்மறையோர். ()
பொன்னுமளவோவிலைகொண்டபுரவித்தொகையுமளந்தவைதாம்
பின்னர்வரக்கண்டருளுதியெம்பெருமானிதனாற்றூரங்கபதி
யென்னுநாமம்பெறுதிமதியென்றாரென்றமந்திரர்க்குத்
தென்னன்சிறந்தவரிசைவளஞ்செய்துவிடுப்பச்செல்கின்றார். (௭௫)
பொன்னங்கமலத்தடம்படிந்துபுழைக்கைமதமாமுகக்கடவு
டன்னங்கமலசரணிறைஞ்சித்தனியேமுளைத்தசிவக்கொழுந்தை
மின்னங்கயற்கட்கொடிமருங்கில்விளைத்ததேனைமுகந்துண்டு
முன்னங்கருத்துமொழியுடம்புமூன்றுமன்பாய்த்தோன்றினார். (௭௬)
மன்னேயென்னையாட்கொண்டமணியேவெள்ளிமன்றுடை
மன்னேயடியேன்வேண்டியவாறரசனிந்தநிதியெல்லா
முன்னேகொண்டுன்பணிகொண்டாய்முனியாதரசனிமகிழ
வென்னேபுரவிவரும்வண்ணமென்றுவேண்டுபரின்றிடலும். (௭௭)
மெய்யன்புடையார்யாருஞ்சலிக்கவேட்டவன்னம்வின்னிரவி
வையம்பரிக்கும்பரியனையமாக்கொண்டுவருதுமெனவை
யையன்றிருவாக்ககல்விசும்பாறெழுந்ததகவுங்கேட்டுப்
பொய்யன்பகன்றார்சிவன்கருணைபோற்றிமனையிற்போயினார். (௭௮)

மேற்படி - வேறு.

கடிமனையடைந்தவெல்லவாதவூர்க்காவலோகூர
மடிமையில்சுற்றத்தோருங்கேளிருமாண்டகாத
லடிமையுள்ளாருமேதிலாளரும்பிறருமீண்டி
யிடிமழைவாய்விட்டென்னப்புந்திகளினையசொல்வார். (எகூ)

மந்திரக்கிழமைபூண்டமன்னவர்கருமஞ்செய்வ
தந்தணர்க்கறனேயல்லவமைச்சியலறத்துநின்றால்
வெந்திறலரசர்க்கேற்றசெய்வதேவேண்டுமென்னத்
தந்திரமறநூல்வல்லோர்சாற்றுவாரன்றேவையா. (அ0)

அரைசியலமைச்சநீதியாய்ந்தறங்கட்குநாங்க
ளுரைசெய்வதெவனீர்செய்வதொன்றுமன்றுவதில்லை
விரைசெறிதாராற்கின்றுவெம்பரிவருவதாக
வரையறைசெய்தீர்நாளையென்சொலவல்லீரையா. (அக)

தழுவியகிளைஞர்நட்டோர்சார்வுளோர்தக்கசான்றோர்
குழுவினைக்காக்கவேண்டுங்குறிப்பிலீர்போலுநீவி
ரொழுகுறுசெயலினாலேயுஞ்செயலுமக்கேசால்
வழகிதுபோலுமென்னக்கழறினாரதுகேட்டையன். (அஉ)

சுற்றமுந்தொடர்புநீத்தேந்தன்பழமின்பமற்றேம்
வெற்றுடன்மானந்தீர்த்தேம்வெறுக்கைமேல்வெறுக்கைவைத்தேஞ்
செற்றமுஞ்செருக்குங்காய்ந்தேந்தீவினையிரண்டுந்தீர்த்தேங்
கற்றைவார்சடையான்கோலங்காட்டியாட்கொண்டவன்றே. (அங)

தந்தைதாய்குரவருஞ்சான்சங்கரனிராசைபெண்டிர்
மைந்தர்பல்லுயிருஞ்சுற்றமாசிலர்வீசனன்ப
ரந்தமில்பிறவியேழுமடுபகையைம்புதோர்த்தே
மெந்தையார்கருணைகாட்டியெம்மையாட்கொண்டவன்றே. (அச)

ஊரெலாமட்டசோறுகம்மதேயுவரிசூழ்ந்த
பாரெலாம்பாயறுன்னத்கோவணம்பரிக்குமாடை
சீரெலாஞ்சிறந்தசாந்தந்தெய்வநீறணிபூண்கண்டி
நீரெலாஞ்சுமந்தவேணிநிருத்தனுட்கொண்டவன்றே. (அரு)

எழுசீரடியாசிரிய விருத்தம்.

இறக்கினு மின்றே யிறக்குக வென்று மிருக்கினு மிருக்குக வே
ந்த, னொறுக்கினு மொறுக்க வுவகையுமுட்டனே பூட்டினு மூட்டுக வா

னிற், சிறக்கினுஞ் சிறக்க கொடியதீ நரகஞ் சேரினுஞ் சேருக சிவனை,
மறக்கிலம் பண்டைப் பழவினை விளைந்தான் மாற்றுவார் யாரென
யறுத்தார். (அசூ)

வாதவூரடிகளுக்கு உபதேசித்தபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் - ருஅ - க்கு - திருவிருத்தம் - உகூஅ.

ஐம்பத்தொன்பதாவது

நரிபரியாக்கியபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அரிகளைதொடுத்துவேழமட்டவல்செழியன்வாயிற்
றெரிகலையமைச்சரோற்றைத்தேசிகவடிவத்தீண்டி
வரிகழல்சூட்டியாண்டவண்ணமிவ்வண்ணமைய
னரிகளைப்பரிகளாக்கிநடத்தியவாறுஞ்சொல்வாம். (க)

சுற்றமாம்பாசநீவித்துகளறுத்திருந்தார்தம்மை
மற்றைநாளழைத்துவேந்தன்வந்திலபோலுமின்னங்
கொற்றவாம்பரிகளென்னக்குறுமதிமுடித்தானன்ப
ரிற்றைநாண்முதனாண்மூன்றிலீண்டுவவிறைவவென்றார். (உ)

இந்துநாதன்மால்யானைச்செல்வவப்பரிக்குவேறு
மந்துரையகன்றவாகவகுக்கசூழ்தண்ணீருட்ட
னந்துறைதடங்கள்வேறுதொடுகநீணகரமெங்கு
மிந்துறைமாடமெல்லாமழகுசெய்திடுகவென்றார். (ங)

காவலன்கருமஞ்செய்வோர்கந்துகப்பந்தியாற்றி
யோவறநகரமெங்குமொளிபெறவழகுசெய்யத்
தாவுதென்கடலேழ்கண்டசகரர்போல்வகன்றூன்றில்
வாவியுங்குளனுந்தொட்டார்மன்னொடுகருவிமாக்கள். (ச)

வரையறைசெய்தமூன்றுவைகலுங்கழிந்தபின்னாட்
கரையறுபரிமாவீண்டக்காண்டிலபின்னமென்னு
விரையமைவண்டார்தண்டார்வேம்பனும்விளித்துவந்த
வரையறைநாளிலானவொறுப்பவனெந்தச்சீறு. (ரு)

என்னிவன்பரிமாக்கொண்டதென்றவைவருவதென்றுத்
தன்னெதிர்நின்றவஞ்சத்தறுகணர்சிலரைநோக்கிக்
கொன்னுமிக்கள்வன்றன்னைக்கொண்டுபோய்த்தண்டஞ்செய்தெம்
பொன்னெலாமறுவுகொண்டுவாருமின்போமினென்றான். (௬)

கற்பணிதோளான்சீற்றங்கண்டெதிர்நில்லாதஞ்சிச்
சுற்றியபாசம்போலத்தொடர்ந்துகொண்டேகிமள்ள
ரெற்றினிவகைதான்பொன்னுக்கியம்புமென்றெதிர்த்துச்சீறிச்
செற்றமில்சிந்தையார்மேற்செறிந்தகல்லேற்றினாரே. (௭)

பொன்னெடுஞ்சைலங்கோட்டிப்புரம்பொடிபடுத்தவீரர்
சொன்னெடுந்தாளையுள்ளிநின்றனர்சுமந்தயார
மங்கெதிர்ந்தகையார்தாங்கியாற்றினாரடைந்தவன்பர்
தங்கெடும்பாரமெல்லாந்தாங்குவாரவரேயன்றே. (௮)

சிலையதுபொறைதோற்றுந்திவனடிநிழலினின்றார்
நிலையதுநோக்கிமாயநெறியிதுபோலுமென்னாக்
கொலையதுவஞ்சாவஞ்சர்கொடுஞ்சினந்திருகிவேதத்
தலையதுதெரிந்தார்கையுந்தாள்களுங்கிட்டியார்த்தார். (௯)

அக்கொடுந்தொழிலுமஞ்சாதிருந்தனராரையுள்கி
யிக்கொடுந்தொழிலினார்தாமினிக்கனியொறுப்பரென்னாப்
புக்கதுகாண்டற்குள்ளம்பொறாதெனவிரவிப்புத்தேண்
மிக்கதன்னொளிகண்மாழ்கிவிரிகடலழுவத்தாழ்ந்தான். (௧0)

சுந்தரவிடங்கரன்பர்சூழ்துயரகற்றகேசே
வந்தெழுகாட்சிபோலவந்ததுசெக்கர்வான
மிந்தவர்மார்பந்துங்குமோவெண்கோடுபோன்ற
தந்தரவுடுக்களெல்லாமயன்றலைமாலையொத்த. (௧௧)

சுழிபடுபிறவித்துன்பத்தொடுகடலழுவத்தாழ்ந்து
கழிபடுதனையுங்காப்பான்கண்ணுதன்மூர்த்திபாதம்
வழிபடுமவரைத்தேறான்வன்சிறைப்படுத்ததென்னன்
பழிபடுபுகழ்போலெங்கும்பரந்ததுகங்குலீட்டம். (௧௨)

கங்குல்வந்திருந்தவேலைக்கருஞ்சிறையகற்றிப்போக்கிச்
சங்கிலிநிகளம்பூட்டித்தவத்தினைச்சிறையிட்டென்னச்
செங்கனல்சிதறநோக்குஞ்சினங்கெழுகாவலாளர்
மங்குலிருண்டகண்டர்தொண்டரைமறுக்கஞ்செய்தார். (௧௩)

மிடைந்தவர்தண்டஞ்செய்யவெஞ்சிறைவெள்ளத்தாழ்ந்து
கிடந்தவர்கிடந்தோன்பூமேலிருந்தவன்றேடக்கீழ்மே
னடந்தவர்செம்பொற்பாதகமலம்புணையாப்பற்றிக்
கிடந்தனர்துன்பவேலைபுலர்ந்ததுகங்குல்வேலை. (௧௪)

அந்தமிலழகன்றன்னையங்கயற்கண்ணியோடுஞ்
சுந்தரவமளிப்பள்ளியுணர்த்துவான்றொண்டர்சூழ
வந்தனைசெய்யுமார்ப்புமங்கலசங்கவார்ப்பும்
யந்தணர்மறையினார்ப்பும்பருகினார்செவிகளார. (௧௫)

போதவானந்தச்சோதிபுனிதமெய்த்தொண்டர்க்காக
நாதமாமுரசமார்ப்பநரிப்பரிவயவர்சூழ
வேதவாம்பரிமேற்கொண்டுவீதியில்வரவுகாணுங்
காதலான்போலத்தேர்மேற்கதிரவனுதயஞ்செய்தான். (௧௬)

கயனெடுங்கண்ணிபோலுங்கட்டவிழ்கடிப்பூஞ்சேக்கைத்
துயிலுணர்ந்திருந்தசோமசுந்தரக்கருணைவெள்ளம்
பயினெடுஞ்சிகரநோக்கிப்பங்கயச்செங்கைகூட்டி
நயனபங்கயநீர்சோரநாதனைப்பாடலுற்றார். (௧௭)

கொச்சகக்கலிப்பா.

எந்தாயனைத்துலகுமீன்றெத்தேவர்க்குந்
தந்தாய்செழுங்குவளைத்தாராய்பெருந்துறையில்
வந்தாய்மதுரைத்திருவாலவாயுறையுஞ்
சிந்தாமணியேசிறியேற்கிரங்காயோ. (௧௮)

மூவாமுதலாய்முதுமறையாயம்மறையுந்
தாவாதசோதித்தனிஞானபூரணமாய்த்
தேவாதிதேவாய்த்திருவாலவாயுறையு
மாவார்கொடியாயடியேற்கிரங்காயோ. (௧௯)

முன்னாமுதுபொருட்குமுன்னாமுதுபொருளாய்ப்
பின்னாம்புதுமைக்கும்பின்னாகும்பேரொளியாய்த்
தென்னாமதுரைத்திருவாலவாயுறையு
மென்னாயகனேயெளியேற்கிரங்காயோ. (௨0)

மண்ணாய்ப்புனலாய்க்கனலாய்வளியாகி
விண்ணாயிருசுடராயித்தனையும்வேறாகிப்
பண்ணாயிசையாய்ப்பலுவலாயெங்கண்ணுங்
கண்ணானவென்னுறுகண்காணுவாறென்கொல்லோ. (௨௧)

பொங்குஞ்சினமடங்கல்போன்றுருத்துவெங்கூற்ற
மங்கும்புரியாவருந்துன்பத்தாழ்த்துநான்
மங்கும்படியறிந்தும்வந்தஞ்சலென்கிலையா
லெங்குஞ்செவியுடையாய்கேளாயோவென்னுரையே. (௨௨)

பூட்டியருட்பாசமிருபாதம்பொறித்துடலிற்
கூட்டியடியாருளகப்படுத்தாட்கொண்டருமை
காட்டியவோவின்றென்னைக்கைவிட்டாய்வெய்யரென்னை
யாட்டியொறுக்குமிடத்தாரோன்றுகொள்வாரே. (௨௩)

ளூராகூனச்சிரிப்பதோராயென்றுன்னடிமைக்
காராயடியேனயர்வனைத்தறிந்தும்
வாராயரசன்றமரிழைக்கும்வன்கண்ணோய்
பாராயுன்றன்மையிதுவோபரமேட்டீ. (௨௪)

கவிதிலைத்துறை.

என்றிரங்குவோரிரங்கொலியிளஞ்சிறுகழுகை
சென்றுதாயர்தஞ்செவித்தொளைநுழைந்தெனச்செல்லக்
குன்றிருஞ்சிலைகோட்டியகூடலுநாயகன்கேட்
டன்றுவன்சிறைநீக்குவான்றிருவுளத்தமைத்தான். (௨௫)

நந்தியாதியாம்பெருங்கணநாதரைவிளித்தான்
வந்தியாவரும்பணிந்தனர்மன்னவற்கின்று
முந்தியாவணிமூலநாள்வந்ததுமுனிவு
சிந்தியாமுனம்பரியெலாஞ்செலுத்துவான்வேண்டும். (௨௬)

யாவரும்புனத்தியங்குறுநரியெலாமீட்டித்
தாவரும்பரியாக்கியத்தாம்பரிகடத்துஞ்
சேவகஞ்செய்வோராகிமுன்செல்லுமின்யாமும்
பாவகம்படவருதுமப்படியெனப்பணித்தான். (௨௭)

ஏகநாயகனுணைபூண்டெழுகணத்தவரு
மாகநாடரும்வியப்புறநரியெலாந்திரட்டி
வேகவாம்பரியாக்கியவ்வெம்பரிகடத்தும்
பாகராயினாரவர்வரும்பரிசதுபகர்வாம். (௨௮)

தாக்கியார்த்தசெம்பட்டினர்சுரிகையர்தொடுதோல்
வீக்குகாலினரிருப்புடற்காப்பினர்வெருளி
னோக்குபார்வையர்புண்டரநுதலினரிடியிற்
றூக்கியார்ப்பெழுகையினர்தழன்றெழுசினத்தோர். (௨௯)

வட்டத்தோல்வரிபுறங்கிடந்தசையவைவடிவா
ளொட்டுகையினர்சிலர்நெடுந்தோமரஞ்சுழல
விட்டகையினர்சிலர்வெரிநிடைநெடுவிசிகப்
புட்டில்வீக்கிவிற்றூக்கியபுயத்தினர்சிலரால். (௩0)

செம்பட்டாஞ்செய்தபோர்வையர்சிலர்பசும்படத்தான்
மொய்ம்புவீக்கியகவயத்தர்சிலர்கருமுகில்போ
லம்புயம்புதைகாப்பினர்சிலர்சிலரவிரும்
பைம்பொன்வாணிறப்பட்டாஞ்செய்குப்பாயத்தர்சிலரால். (௩௧)

பிச்சவொண்குடையார்பலர்கவரிவால்பிறங்கத்
தைச்சதன்குடையார்பலர்சல்லிசூழ்காற்றி
வைச்சவண்குடையார்பலர்வாணிலாமுத்த
மொய்ச்சவெண்குடையார்பலர்மொய்ம்பினரிவருள். (௩௨)

தருமமாதிநாற்பொருளனுந்தானதுஞான
கருமகாண்டமாஞ்செவியதுகாட்சியைக்கடந்த
வொருமையாம்பரமபரமாமுணர்வெனுங்கண்ண
தருமையாம்விதிமுகத்ததுநிட்டைவாலதுவால். (௩௩)

தந்திரங்களாற்புறவணிதரித்ததுவிரித்த
மந்திரங்களாற்சதங்கைதார்மணிச்சிலம்பணிந்த
தந்தாஞ்சுழல்சோமனுமருக்கனுமிதிக்குஞ்
சந்தரப்பதம்பொறைகொள்த்தாங்கிருபுடைத்தால். (௩௪)

மாண்டதாரகப்பிரமமாங்கலினம்வாய்கிழியப்
பூண்டதார்புறச்சமயமாம்பொருபடைமுரிய
மூண்டபோரெதிர்விளைத்திகன்முடிப்பதுமுனரி
யாண்டகோமுகமந்திரமாகமேவியதால். (௩௫)

அண்டகோடிகளனைத்துமோர்பிண்டமாவடக்கி
யுண்டவீரதாமுதகின்மேலுபநிடதக்கலனை
கொண்டவாலியவைதிகப்புரவிமேற்கொண்டான்
றெண்டர்பாசவன்றொடரவிழ்த்திடவருஞ்சோதி. (௩௬)

ஆனமந்திரக்கிழார்பொருட்டன்றியும்வென்றி
மீனவன்பிறப்பறுக்கவும்வார்கழல்வீக்கி
வானநாயகனேந்தியமறைபுறைகழித்த
ஞானவாள்புறவிருளையுநக்கிவாளெறிப்ப. (௩௭)

சாய்ந்தகொண்டையுந்திருமுடிச்சாத்தும்வான்வைரம்
வேய்ந்தகண்டியுந்தொடிகளுங்குழைகளும்வினையைக்
காய்ந்தபுண்டரநுதலும்வெண்கலிங்கமுங்காப்பு
மாய்ந்ததொண்டர்தமகம்பிரியாதமழகெறிப்ப. (௩௮)

பிறக்குமாசையோர்மறந்துமிங்கணுகன்மின்பிறப்பை
மறக்குமோசையோரிம்மெனவம்மினன்பரைவேங்
தொறுக்குநோய்களைவாவெனவொருவனும்பிறவி
யறுக்கவந்தனனென்பபோற்பரிச்சிலம்பலம்ப. (௩௯)

கங்கையைச்சடைமுடியின்மேற்கரந்தனையவள்போ
லெங்கடம்மையுங்கரந்திடென்றிரந்துகாவேரி
துங்கபத்திரியாதியாநதிகளுஞ்சூழப்
பொங்கிவீழ்வபோலொலியதுங்கவரியும்புரள. (௪0)

வாவிநாறியவாலிதழ்த்தாமரைமலரோ
ருவிருஞ்மைநாயகனுன்மறைபரியா
மேவினனெனத்தானொருவெண்குடையாகிப்
பாவினுலெனமுடியின்மேற்பானிலாக்கால. (௪௧)

முறையினேதியபுராணமூவாறுமாமொழியு
மிறைவனுமிவன்படைத்தளித்தழிப்பவனிவனே
மறையெலாமுறையிடும்பரம்பொருளெனவாய்விட்
டறையுமாறுபோலியங்கணீரொன்பதுமார்ப்ப. (௪௨)

மிடைந்தமாயவாம்பரித்திரண்மேற்றிசைநோக்கி
நடந்தநாயகனுன்மறைப்புரவியுநாப்ப
ணடைந்ததாலெழுந்துளிகளண்டமுந்திசையும்
படர்ந்தபோம்வழியாதெனமயங்கினன்பரிதி. (௪௩)

பன்னமாக்குவதிடரினைப்பன்னத்தைமேடு
கொள்ளவாக்குவதாரொலாம்விலாழிகொப்புளித்து
வெள்ளமாக்குவதூளியால்வெள்ளத்தைவெறிதா
யுள்ளதாக்குவபுள்ளுவவுருக்கொண்டபரிமா. (௪௪)

கொய்யுளைப்பரியெழுந்ததூள்கோப்பவான்கங்கை
வையையொத்ததேழ்பசும்பரிசெம்பரிமாவாச்
செய்ததொத்ததுசிந்துரந்திசைக்கயமுகத்துப்
பெய்ததொத்ததாலொத்தபெரும்பகன்மாலை. (௪௫)

விளம்புகின்றவச்சம்புவெம்பரித்திரண்மிதிக்குங்
குளம்புகிண்டியவெழுந்ததூழ்குன்றநகரித்தோன்
வளம்புகுந்தணைவார்குரவழியுரிவேள்விக்
களம்புகைத்தெழுதோற்றமேயல்லதுகடாதால். (௪௬)

மட்புலத்திசைவான்புதைபூழியுண்மறைந்து
கொட்புறும்பரிசதங்கைதாரொலியினுங்குளிர்வான்
பெட்புறுங்குரலொலியினுஞ்செவியினிற்பிதிர்ந்து
கட்புலங்களாற்கண்டிலர்வழிவரக்கண்டோர். (௪௭)

கலிவிருத்தம்.

தரங்கமெறிமுத்திரைவிலாழியலதார்மா
விரங்குமொலியல்லதிரையேங்குமொலியின்ன
துரங்கமலமற்றிவைசுரர்க்கரசனின்றும்
புரங்கொலவிடுத்திடவரும்புணரியென்பார். (௪௮)

இம்பருலகுன்னவலபண்டிலையபாவமா
வும்பருலகாளிபரியேகொலதுவொன்றே
வெம்பரிதிவெம்பரிகொலேழவைகளேழும்
பைம்பரிகள்யாவினையபாய்பரிகளென்பார். (௪௯)

வெம்பணிகளைப்பொரவெகுண்டெழுவதேயோ
பைம்புனலுடுத்தமுதுபார்முதுகுகீற
மும்பருலகைப்பொரவுருத்தெழுவதேயோ (௫0)
வம்பரமுகட்டளவடிக்குரமழுத்தும்.

உத்தரதிசைப்புரவிதெற்கடையுமாறு
மத்தகையதெற்குளவடக்கடையுமாறு
மித்தகைகுடக்கொடுகுணக்கடையுமாறுஞ் (௫௧)
சித்தர்விளையாடலின்வெளிப்படுதல்செய்யா.

மறைமரபுசாலைருமவன்னியிலைபொன்னித்
துறைதொறுளமுஞ்சுடிரும்பனைதொடக்கு
மறவனுளமுஞ்சுடுமமைச்சனையொறுக்கு (௫௨)
மிறைவழுதியுள்ளமுமினிச்சுடுவதென்பார்.

மூக்கைதொருமந்திரிபொருட்டரசன்முன்னு
வந்தவினிமொட்டுருப்பரியில்வந்தாங்
கிந்தமறைமந்திரிபிம்பைதணிவிப்பான் (௫௩)
வந்தனர்கொலிப்பரிவரும்பொருளென்பார்.

காமனிவனேகொலறுகாலுமுகட்டப்பர்
தாமனிவனேகொல்பொருதாருகனைவென்றோன்
மாமனிவனேகொன்மலைவன்சிறகரிந்த
காமனிவனேகொலெனநாரியரயிர்த்தார். (௫௪)

அடுத்திடுவர்கண்ணிறையுவண்ணலழகெல்லா
மடுத்திடுவர்கைவளையைமாலிவிலையென்னக்
கொடுத்திடுவர்மாலைகள்கொடுத்திடுதியன்றே
லெடுத்திடுதியெங்கள்வளையெங்கள்கையிலென்பார். (௫௫)

ஏர்தன்முடிமாலைமலர்சிந்தினவெடுத்துக்
கூந்தலின்மிலைந்துமதன்வாகைமலர்கொள்வார்
சார்ந்தனையசிந்தினதனந்தடவியண்ணற்
றோய்ந்தளவிலாமகிழ்துளும்பினவராவார். (௫௬)

பொட்டழகன்மார்பிலிடுபோர்வைகவசப்பே
ரிட்டதுமெய்நம்முயிர்தடுத்தமையினென்பார்
கட்டழகன்மாலையதுகண்ணியெனவோதப்
பட்டதுமெய்நம்முயிர்படுத்தமையினென்பார். (௫௭)

கலித்துறை.

இச்சையால்வடிவெடுப்பவனிந்திரசால
விச்சைகாட்டுவானென்பபரிவீரனிவுலகைப்
பிச்சதேற்றிடமயக்கியுங்காமனிற்பெரிது
நச்சமாதரைமயக்கியுமிங்ஙனநடந்தான். (௫௮)

தாவுகந்துகமிந்தியமொத்தனசயமா
வரவுதின்கணமன்னர்கண்மனங்களையொத்தார்
மேவியம்மனந்தொறுமிடைவிடாதுநின்றியக்கு
மாவியொத்ததுகவெருமருமறைப்பரியே. (௫௯)

துன்னுமின்னியமுழக்கமுந்துரகதவொலியு
மன்னவீரர்வாயரவமுந்திசைசெவியடைப்பக்
கன்னிமாமதில்சூழ்கடிநகர்க்கரைகாத
மென்னவெய்தினன்மறைப்பரிப்பாகனவ்வெல்லை. (௬௦)

கலிவிருத்தம்.

கண்டவர்கடிதோடிக்கடிநகர்குறுகிக்கார்
விண்டவழ்மணிமாடத்தடுசிறைமிடைகின்ற
கொண்டலினனையார்முன்குறுகினர்மலர்செவ்வி
முண்டகவதனத்தார்முகிழ்நகையினர்சொல்வார். (௬௧)

மன்னவனெறிகோட்டாமந்திராடலேறே
பன்னிறவெழுமுந்நீர்ப்பரவைகள்வருமாபோற்
றுன்னினவருகின்றதுரகதமுளவெல்லாம்
பொன்னெயின்மணிவாயில்புகுவனவிதுபோதில். (௬௨)

ஒல்லையிலதுமன்னற்குரையுமினெனமேரு
வில்லவனருள்பெற்றவேதியர்பெருமான்போய்ச்
செல்லதுதளைவிட்டதிருமகனருசெய்தி
மல்லணிதிணிதோளாய்வருவனபரியென்றார். (௬௩)

மருத்தெனவருகின்றமாக்கடலெனமன்னன்
றிருத்தளரிகடகப்பூண்டெறித்திடவுடல்வீங்கப்
பெருத்தெழுமகிழ்தூங்கிப்பெருவிலைமணியாரந்
மருத்திகொள்கலைகலியமைச்சனைமகிழ்வித்தான். (௬௪)

ஏந்தரியணைநீங்கியெழுதியதலைவாயிற்
சேர்ந்தருகொளிர்மாடம்புகுந்தரியணைமேவிக்
காந்தளின்விரனல்லார்கவரிகள்புடைவீச
வாய்ந்தவர்புறஞ்சூழவடுபரிவரவேற்பான். (௬௫)

பரனருள்விளையாட்டல்காட்டியபரிவெள்ள
வருவனசிறுகாலந்தாழ்த்ததுமதிவேந்தர்
புரவலன்மனம்வெள்கிப்பொய்யிதுவெனவுள்கி
யருகணையுமையோனைக்குறித்தனனுழையன்றோன். (௬௬)

மன்னவனினைவாற்றன்மந்திரர்பெருமானைத்
துன்னினர்கொடுபோயத்தோன்வலிமறமுள்ள
றுன்னரிதெனவஞ்சாறொறுத்தனராவோர்தந்
தென்னவர்தமையுள்கிச்சேவடிதுதிசெய்வார். (௬௭)

கலித்துறை.

...வார்முளரியபுத்தேளரியாகெறிதந்தாய்
...ாவார்தென்சொற்பனுவன்மாலைப்பணிகொண்டாய்
...தவாதேவர்க்கரசேசிறியேனுறுதுன்ப
...ாவாவென்றவருஞ்சேலென்றெயர்றனையோ. (௬௮)

...ருஞ்சேயுனைப்போச்செயலேயெல்லாநினவென்றாய்
...ருஞ்சேபோதுமஃதேவின்றுவாராயோ
...ஞ்சேரடியாள்யாகாகூடற்பரமேட்டி
...ஞ்சேலென்றுவிதுவோவருளுக்கழகையா. (௬௯)

காவிநேருங்கண்டார்நாயிற்கடையான
பாவியேனைப்பொருளாக்கொண்டென்பணிகொண்டா
யாவியோடிவ்வுடலுமினிதேயன்றேவின்
றேவிவாளாதிருந்தாலியாரென்னுடையானே. (எ0)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

என்றிரந்திரங்குமன்பரிருசெவிப்புடையெங்கு
கன்றிளஞ்செவியின்லலான்கனைகுரலோசைபோல
வொன்றியசின்னங்காளங்காகளமொலிக்குமோசை
வென்றிகொள்புரவிச்செந்தூழிசையெலாம்விழுங்கக்கண்டார். (எக)

வழுதியுமதிர்துவாதலூரரைவிளித்துவந்து
தொழுகுலவமைச்சர்தம்பாற்றுகடவிரன்புகூர்ந்தெம்
பழுதற்கருமநம்போற்பரிக்குரார்யாரையுன்று
வெழுதருமகிழ்ச்சிமேற்கொண்டனவளாயிருக்குமெல்லை. (எஉ)

பாயிருட்படலங்கீறிப்பல்கதிர்பரப்பித்தோன்றுஞ்
சேயிளம்பரிதிவாநேரானையராய்ச்சிறந்தகாட்சி
மேயினபாகரோடும்விலாழியாற்பரவைசெய்யும்
வாயினவாகிவந்தமாயவாம்பரிகளெல்லாம். (எஙு)

வண்டுழுதாரினான்றன்மரபின்மன்னவருமன்று
கண்டறியாதகாட்சிக்கவனவாம்பரியைநோக்கி
யண்டர்நாயகன்போனும்மாயிரங்கண்பெற்றானு
முண்டமையாவென்றுள்ளக்குறிப்பொடுமுவகைபூத்தான். (எச)

தானெனமகிழ்ச்சியென்னத்தலைதடுமாறிவேந்தன்
மானவெம்பரிமேல்வந்தவயவரையியந்துமிக்கா
ரானவரிவருள்யாரென்றமைச்சரைவினவவையா
யானதுவறியேனென்றாரியாரையுமறியவல்லார். (எரு)

எண்சீரடியாசிரியவிருத்தம்.

அண்டமெலாமாதாரமாகத்தாங்குமானகதத்தனிச்சோதியண்டக்தாங்கும், சண்டமறைப்பரிதனக்காதாரமாகித்தரிக்கவொருகாலத்தமைவிலாத, புண்டரிகத்தாளசையப்பாசநீக்கும்புனைகரத்தாற்பரிபூண்டபாசம்பற்றிக், கொண்டரசனெதிர்போந்துமன்றவெங்கள்குறையேற்றஞ்சிறிதுகாண்டியென்றார். (எசு)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

இசைத்தலைவங்கதியுஞ்சாரியெனப்பதிற்றிரட்டியாதி
விசித்திரவிகற்பந்தோன்றவேந்தனுமவையுமன்றித்
திசைப்புலத்தவருமேலைத்தேவருமருளமேற்கொண்
டசைத்தனரசைவற்றெல்லாவுலகுமசைக்கவல்லார். (எஎ)

ஆண்டகையவர்போனின்றவடுகணத்தவருந்தந்
தாண்டருபுரவியெல்லாநடத்தினார்காட்டக்கண்டு
பாண்டியனவரைநோக்கிநுங்களிற்பதியார்தன்மை
பூண்டவர்யாவரென்றானிவரென்றார்புரவிவீரர். (எஅ)

சுட்டுதற்கரியசோதிசருதிவாம்புரவியோடு
மட்டவிழ்தாரினான்முன்வருதலுங்கருணைகாட்டும்
பட்டவிழ்மலர்ச்செங்கைதலைமிசைக்கூப்பிநின்றான்
மட்டுளமயங்கித்தன்னைமறந்தெழீஇபாண்டிவேந்தன். (எகூ)

பின்னவனுணையாலேமறைப்புண்டபெருநீர்க்கூடன்
மன்னவனறிவுதோன்றவின்றுருவமாவீரன்
றன்னைநோக்கண்டெழுந்துதடங்கரங்கூப்பிநின்ற
தென்னெனத்தலையின்மீளவிருந்திடாணிநின்றான். (அ0)

சித்தமின்றான்முகத்தைநோக்கிநேர்நின்றமறைநமாவீரர்
பொற்குன்றம்புயத்தாயுன்றன்பொருளெலாங்கொண்டுபோந்தன்
சொற்குன்றவமைச்சரானேநமக்குநன்குமனிங்கா
மற்குன்றநமர்க்குமாறுவழங்கினானவழக்கலாவே. (அக)

வானவர்தமக்கேயன்றிமனிதருக்கிசையத்தக்க
வானவன்றறிஞரிட்டவிலைவரம்பகன்றதுலின்
மானமுன்னனவராயநிலவாசிகளுணக்குவந்த
வானமில்பரிமாவிற்கும்வாணிகமுறைப்படக்கேட்டி. (அஉ)

இன்னவாம்பரிகளொன்பாலின்றுநீகயிறுமாறி
யின்னவாக்கொள்ளுநீராளின்னவாம்பரியேகாலி
யென்னவாவிருந்தவேறுமெனக்குமுன்றனக்குங்கொண்டு
மன்னவாகருமமில்லைபரிவிலைவழக்கிதென்றார். (அஙு)

அப்பொழுதரசன்றானுமகமகிழ்ந்ததற்குநேர்ந்தெம்
மெய்ப்புகழமைச்சர்தம்மின்மேம்படுவாதவூர
ரொப்பருந்திறத்தரசியும்மிடைகட்டாண்மிக்க
தப்பரவுடையாருன்னைநனிசொல்லினானே. (அச)

உரகதவாரந்தோற்று துயர்மறைப்பரிமேல்வந்தார்
மரகதநிறத்துகிம்பமாலைதாழ்மார்பினற்குக்
குரகதங்கயிறுமாறிக்கொடுப்பவர்பொதுமையாய
துரகதவிலக்கணங்கள்சொல்லுவான்றொடங்கினாரே. (௮௫)

காயும்வேன்மன்னவோரிக்கடும்பரியமையம்வந்தான்
ஞாயிறுந்தாண்டிச்செல்லுநாட்டமுநுழையாச்சால
வாயிலுநுழையுங்கண்டவெளியெலாம்வழியாச்செல்லுந்
தீயவெம்பசிவந்துற்றாற்றின்னுதவெளியுந்தின்னும். (௮௬)

கலிவிருத்தம்.

பொருவில்சீரிலக்கணப்புரவியொன்றுதா
னொருவனதிடைவதிந்துறையினல்லன
மருவுறுந்திருமகண்மல்லற்செல்வமும்
பெருகுறுங்கீர்த்திகள்பலவும்பெற்றியால். (௮௭)

நெய்த்திடுமாந்தளிர்நிறத்ததாயினை
வைத்திடுகுளம்புகளுயர்ந்தவாரதே
ரொத்திடுமெயிற்றினவரமுங்கண்டமும்
பைத்திடுமோராப்படம்போன்றபாடலம். (௮௮)

அகலியநுதலினவாய்த்தகுஞ்சிபோ
னிகரறுகொய்யுளைநிறமொன்றாயின
புகரறுகோணமூன்றுகிப்பொற்புறு
முகமுடையனவுமொய்கொள்கோடகம். (௮௯)

முட்டியசமரிடைமுகத்தில்வாளினால்
வெட்டினுமதர்ப்பதாய்க்குரங்குவேகைதோல்
பட்டிமைநரியரிசரபம்பாய்முய
லெட்டியகதியினவிவுளியென்பவே. (௯0)

உன்னதநீளமூன்றாகிச்சங்குலவெண்
கன்னலின்வாலியவிலாழிகால்வதாய்ப்
பின்னமாகியதனிவன்னம்பெற்றமை
வன்னமுமுடையதுவன்னியாவதே. (௯௧)

கிளிகருகழுத்தினிற்சிறந்ததெய்வத
மணியுளதாகியெண்மங்கலத்ததா
யணிதருபஞ்சகல்யாணமுள்ளதாய்க்
குணிதருசீர்துருதிரையாவதே. (௯௨)

குங்குமங்கருப்புரங்கொழுந்தின்காரகிற்
பங்கமான்மதமெனக்கமழும்பாலதாய்ச்
சங்குமேகமுஞ்சரபமுங்கொடுஞ்
சிங்கமும்போலொலிசெய்வதாம்பரி. (௯௩)

நாலுகால்களுங்கடைத்தெடுத்துகாட்டினாற்
போல்வதாய்க்கொட்புறும்போதுசுற்றுநீக்
கோலையொப்பாகிமேற்கொண்டசேவகன்
காலினுளடங்குவதாகுங்கந்துகம். (௯௪)

அரணமுந்துருக்கமுமாறுந்தாண்டிடு
மூரணதுவாகியிம்முற்றிலக்கண
பூரணமெல்லாநிறைபுரவிபோந்தன
விரணவேலாய்வயதெட்டுச்சென்றதால். (௯௫)

பகைத்திறமுருக்குமிப்பரிகண்மன்னநீ
புகைத்திடத்தக்கவென்றோதிவேதநூற்
சிகைத்தனிச்சேவகர்திரும்பித்தம்மனோர்
முகத்தினைநோக்கினார்மொய்த்தவீரரும். (௯௬)

வாம்பரிமறைக்கெலாம்வரம்புகண்டவ
தாம்படிகண்டவரறிவும்பிற்படப்
போம்படிமுடுக்கினார்புரவியாவையும்
வேம்பணிதோளினன்வியப்பமெய்தியே. (௯௭)

ஆத்தராய்மருங்குறையமைச்சர்யாரையும்
பார்த்தசையாமுடியசைத்துப்பைப்பயப்
பூத்தவாணகையொடுமகிழ்ச்சிபொங்கினான்
றீர்த்தனூடத்தினான்றெய்வமாவினை. (௯௮)

இருவகைச்சாரியுமெதிர்த்துவட்டமாய்
வருவழிஞெகிழ்போன்மறுகெலாமொரு
துரகதமேநிலைநின்றதோற்றமொத்
தொருவனடத்தினானொருகணத்தினே. (௯௯)

இந்நிலையலமருமிவுளிமேலொரு
மின்னிலைவேலினன்வினவத்தங்கையின்
மன்னியகங்கணம்விடுத்துமாநகர்
தன்னிலைகாட்டியதன்மையொத்ததே. (௧00)

பன்னிறமுடையவாம்பரியும்வீதியுட்
பின்னியவாவெனப்பின்னிவட்டமாய்த்
தன்னிகர்மதுரையார்க்கதையல்கையணி
துன்னியபன்மணித்தொடியும்போன்றவே. (௧0௧)

இந்தியனுதவிநூரிடித்தபொற்சுணஞ்
சிந்தியமறுகிடைடக்குந்தின்பரிப்
பந்தியினெழுந்தாளசுவணப்பாரிவமா
வுந்தியவெழுந்தபொற்பூழியொத்ததே. (௧0௨)

தேவருமனிதருந்திருக்குகூடலா
யாவருமுவப்புறவிவுளிவிட்டமென்
காவலன்முன்குதிஇக்கருணைமாக்கடன்
மாவருதிறனெலாம்வகுத்துத்தேற்றுவான். (௧0௩)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

வளங்கொள்காம்போசமிப்பரியிம்மாமத்தரமித்தவாம்புரவி
விளங்குகாந்தாரமிக்குரங்குளவான்மீகமிக்கந்துகஞ்சிந்து
துளங்கில்பாஞ்சாலமிக்கன்வட்டாந்துளுவமிக்குதிரையித்துரகந்
களங்கமிலிமயப்பருப்பதமிந்தக்கற்கியின்மண்டலங்கலிங்கம். ()

ஆரியமிந்தப்பாடலமிந்தவச்சுவங்கூர்ச்சரமிந்தச்
சீரியதுரங்கங்கேகையமிந்தத்திறலுறுகொய்யுளையவனம்
வேரியம்பணைசூழ்மக்கமிக்கொக்குவிரிபொழில்வளையுசமிந்தப்
போரியலிவுளிபல்லவமிந்தப்பொலம்புனைதார்நெடும்பாய்மா. (௧0௫)

கற்றவர்புகழ்சவ்வீரமிக்கோரகன்னிமாராட்டமிவ்வன்னி
கொற்றவர்பயில்வாசந்திகமிந்தக்கோடகங்காடகங்கன்ன
டற்றகாஞ்சீரமிவ்வயமிந்தவுத்தமகோணமாளவமிவ்
வெற்றிசேர்குந்தங்கந்தரமிந்தவிறல்புனையரிசவுராட்டம். (௧0௬)

விரிபொழிற்சாலிவேயமிதுவின்னவேறுதிவாந்தரமிந்தத்
தாரகமிந்தக்குரகதங்கொண்டல்சூழ்குருக்கேத்திரமின்ன
பரவுபலவேறுதேயமுமுள்ளபரியெலாமிவன்றருபொருனின்
விரவியகையாற்கொணர்ந்திவர்கந்தார்வேந்தகேளிந்துமுரியுள்.
வெண்ணிறஞ்சிவப்புப்பொன்னிறங்கருப்பும்வேறறவிரவியகான்கு
வண்ணமுள்ளனவும்வேறுவேறுருவமாபுமைவண்ணமும்வந்த [கா
வெண்ணியவிவற்றின்சிறப்பிலக்கணத்தையியம்புதுங்கேளென விகல்
யண்ணலங்களிற்றுறக்குமறையப்பரிமேலழகியாரடைவுறவிரிப்பார் ()

வெள்ளிகித்திலம்பால்சந்திரன்சங்குவெண்பனிபோல்வதுவெள்ளைத்
துள்ளியபுரவிமாதுளம்போதுசுகிர்ந்தசெம்பஞ்சியின்குழம்பிற்
றெள்ளியநிறத்தசெம்பரிமாமை சிறைக்குயில்வண்டுகார்முகில்போ
லொள்ளியகரியபரியெரியழலாறுரோசனைநிறத்தபொற்பரியே. ()

தெரிதரவகுத்தவிந்நிறநான்குஞ் செறிந்தனமிச்சிரமிதன்பே, ருரை
செய்வர்முக மார்புச்சிவால்கா லென்றுரைத்தவெட்டுறுப்பினும்வெ
ண்மை, விரவியதட்டமங்கலந்தலைவால் வியனுரமென்றவிம்மூன்று,
மொருவியவுறுப்போரைந்திலும்வெள்ளையுள்ளதுபஞ்சகல்யாணி. ()

அணிகிளர்கழுத்தில்வலஞ்சுழித்திருந்தாலறிந்தவரதனையேதெய்வ
மணியெனவிசைப்பர்முகந்தலைகாசிமார்பயிர்நான்குமிவ்விரண்டு
பணிதருசுழியுறுதனடுப்பின்னைப்பக்கமுமொவ்வொருசுழியுக்
துணிதரவிருப்பதிலக்கணமுளதிச்சுழியிலதிலக்கணவழுவே. (௧௧௧)

பிரிவுறவுரத்திலஞ்சுழியுளதுபோர்சிரீவற்சமாநுதலி
லிருசுழியாதன்முச்சுழியாதலிருக்கினுநன்றதுவன்றே
லொருவறநான்குசுழிவலம்புரியாயுள்ளதுநல்லதுவன்றி
யிருசுழிமுன்னங்கால்களின் மூலத்திருக்கினுநல்லதென்றிசைப்பார்.

களநடுவிரட்டைச்சுழியுடைப்பரிதன்கருத்தனுக்கறமிடிகாட்டு
மளவறுதுன்பமரணமுண்டாக்குமவைகளைக்காதுனவாகி
இளையயக்துன்பங்களபந்தனமேலுதடுமுற்காலடிகபோலம் [ம்
வளர்முழந்தாளிந்நான்கினுஞ் சுழிகண்மன்னினுந்தலைவனவதைக்கு

இச்சுழியுடையபுரவிபத்தியில்யாத்திருக்கினும்பழுதிலைகிடக்க, வச்
சமில்பரிக்குப்பிராயகாலெட்டாமவத்தை பத்தாகுமொவ்வொன்றில்
சமிசிர்ப்பவைசமைந்தனமதித்தனவெவன்றறினுக்கு, நிச்சயி
வைச்சதுமூன்றுவருடமுமிரண்டு மதியமும்பன்னிருநாளு, (௧௧௪)
த்தளந்தாரின்னமுமொருசார்நிகழ்த்திடுமிலக்கணமதுகேள்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

எவ்வண்ணபேதமிகுந் திருந்தாலும்வெள்ளைகலர் திருந்ததாறு,
லவ்வண்ணப்பரிநன்று கரும்புரவிக்ககடேனு மகன்மார்பேனுஞ், செ
வ்வண்ணமிருக்கினது சயமுளதப்படிவெண்மை சேர்ந்துகலந்த, மை
வ்வண்ணப் பரியின்பேர்வாருணமாஞ் சயங்கொடுக்கு மாற்றார்போ
ரில். (௧௧௫)

மகவளிக்கும்பிடர்வெளுப்பு மகிழ்வளிக்குமுரவெளுப்பு மணித்
தார்கண்டத், தகவெளுப்புப் பொருள்கொடுக்கு முகவெளுப்புச் சய

ங்கொடுக்கு மதன்பின்பக்கத், தகவெளுப்புச்சகம்பக்கு மிடவெளு ப்புச்சந்தானந் தழைக்குஞ்செல்வ, மிகவளர்க்குந்தனம்பல தானியமு ல்கும் வலப்புறத்து வெள்ளைமாதோ. (கக௬)

நற்புறம்வான்முகமூன்றும் வெளுத்தபரிவென்றிதரு நாபிதொ ட்டு, முற்புறமெல்லாம் பரிதியெனச்சிவந்த மதியெனப்பின்புறமு ம்வெள்கும், பொற்புடைய வலப்பாரிக்குப்பகல் விசயமதியென முற் புறம்புவெள்கிப், பிற்புறமெல்லாந்திரிபோற் சிவந்தபரிக்கிரசவிச யம் பெருக்குமன்றே. (ககஎ)

வந்தனவாவிவ்விரண்டுவகைப்பரியும்புரவியடிவைத்தாலொத்த
பந்தனவுநின்றோமலையெனவுமொலித்தாலோபகடுநேரும்
வெந்தறுகணரியெனவும்வேகத்தாற்காற்றெனவுமிக்குக்கூத்தாற்
சந்தனிடமகனெனவுடக்கிலரிகளிறெனவுந்தகையவாகி. (ககஅ)

குலமன்னியோர்கவிழ்முகமுந் தருசெய்தவெனக்கண்டு மகிழ்கொ ண்டோர்போ, விலவியசீர்வண்ணமுங் கார்செய்தலெனக் கடிமணமு லிற்றத்துகாற்ற, மலரிலச்சந்தெரிமணிப் பூணலங்கரிக்கொளுகமகிழ் ச்சியெய்தி, யிலகுவதுத்தமவாசி யென்றுரைப்பர்பரிவேத மெல்லை கண்டோர். (கக௯)

ஆறுவிரவுத்தமவாம்பரிக்குயர்வீரொட்டுவிரலுள்ளதுநீக்கிக்
கூறுவிரன்மத்திமவாம்பரிககுறுத்தோன்றதமக்குதிரைக்கெண்ப
வீறில்புகழாயவொருநரிப்பரியைப்பூசனைசெய்திறைஞ்சியபாச
மாறுவாரெனமுனித்தார்சதங்கைசிலம்பணிவித்துமதிக்கோமாறன்

கொத்தவிழ்தார்நறுஞ்சாந்தங் கொண்டுசெழும்புகைதீபங் கொ டுத்துப்பூசை, பத்திமையாற்செய்திறைஞ்சி யெதிர்நிற்பவாலவாய்ப் பரனைநோக்கிக், கைத்தலந்தஞ் சிரமுகிழ்த்து வாழியெனப் பரிகொ டுத்தான் கயிறுமாறி, முத்தொழிலின்மூவராய் மூவர்க்குந்தெரியாத முக்கண்மூர்த்தி. (கஉக)

மேற்படி-வேறு.

உலவிடக்கலினவாசியொன்றலாவின்றமாயக்
கலனவாம்புரவியெல்லாங்கொடுத்திடக்கவர்ந்தவீரு
தலனவில்விளங்குந்தென்னன்றன்பெருங்கோயிலுய்ப்பப்
பவனமுங்கடவும்போலக்கொண்டுபோய்ப்பந்திசேர்த்தார். (கஉஉ)

வாசிவாணிகர்க்குத்தென்னன்வெண்டுகில்வரிசையாக
வீசினன்பாணற்கேவல்செய்தவர்வெள்குவாரோ
கூசிலாநேசர்க்காப்பான்குதிரையினிழிந்தேற்றந்தத்
தூசினையிரண்டாங்கங்கையெனமுடிசூடினின்றார். (கஉ௩)

இனையதூசிவன்பாலூர்தியிழிந்துநின்றேற்றுச்சென்னி
புனைவதென்னிவர்கையோடும்புனைந்ததிக்குடையும்பூண
கனலராப்பூணுமன்னன்வருமோவென்றுதம்மில்
வினவினர்வெகுண்டுசொன்னார்கணத்தனிவீரரெல்லாம். (கஉ௪)

அறந்தருகோலான்வெவ்வேறுபேரிவயவர்யார்க்கு
நிறந்தருகலிங்கமீந்தானேர்ந்தவைவாங்கியன்பிற்
சிறந்தருள்வடிவாய்வந்தார்செழுமறைப்புரவியோடு
மறைந்தனர்மறைந்தாரொக்கமாயவாம்பரிமேல்வந்தார். (கஉ௫)

இருமைக்குந்துணையாய்நின்றவிருபிறப்பாளர்க்கேற்ப
வருமைத்தாஞ்சிறப்புநல்கியவரிடத்தவரையுய்த்துப்
பருமத்தயானைவேந்தன்பகற்கதிர்வானந்துச்சி
வருமப்போதெழுந்துசெம்பொன்மாடநீள்கோயில்புக்கான். (கஉ௬)

ஏனைமந்திரருந்தத்தமில்புகப்புரவிபார்த்த
மானகராருந்தத்தமனைபுகப்பரியின்பாக
ரானவர்தாமுங்கோயிலடைந்துதம்விளையாட்டெல்லா
மீனெடுங்கண்ணிடைக்குவிளம்பினிருந்தாரன்றே. (கஉஎ)

நரிபரியாக்கியபடலம் முற்றிற்று.

ஆகப்படலம்-௫௯-க்கு-திருவிருத்தம்-உகஉ௫.

அறுபதாவது

பரிநரியாக்கியபடலம்.

கலித்துறை.

ஞானநாயகனுணையானரிபரிவெள்ள
மானவாறுசெய்துமீண்டப்பரிநரியாய்ப்
போனவாறுகண்டமைச்சரைப்புரவலன்கறுப்ப
வானவாதுபோல்வையைநீர்வந்தவாறுரைப்பாம். (க)

நெருங்குதூரியமுழக்கமுந்தானையுமிமிர
மருங்கிலாதவர்வந்தெதிர்மங்கலமேந்த
வரங்கொள்வேலினனருளியவரிசையோடணைந்து
புரங்கொள்வேதியர்க்கன்பர்தந்திருமனைபுகுந்தார். (௨)

உடுத்தசுற்றமுங்கழகமுமொட்டியபட்டு
மடுத்தகேண்மையால்வினவுவாரவரவர்க்கிசைய
வெடுத்தவாய்மையான்முகமனுமகிழ்ச்சியுமீக்கூ
விடுத்தவாதவூராளிகள்வேறிடத்திருந்தார். (௩)

கரந்தைசூடியவாலவாய்க்கண்ணுதலுமன்
மிரந்தவண்ணமேயாக்கொடுபோகியவெல்லாம்
பரந்தவன்பருந்தானுங்கொண்டெம்மையும்பணிகொண்
டரந்தைதீர்த்தனனின்றியுமரசனுக்கிசைய. (௪)

நல்லவாம்பரிசெலுத்தினனமக்கினிக்கவலை
யில்லவாம்படியாக்கினனின்னமொன்றுலக
வெல்லவாம்படிதன்னருள்விளைக்குமானந்தம்
புல்லவாம்படியெமைத்தவம்பூட்டுவானவேண்டும். (௫)

என்றவாதரந்தலைக்கொளவிகபரத்தாசை
யொன்றுமின்றியேயுணர்விலுக்குள்ளுணர்வாகத்
துன்றுபூரணமாகியசுந்தரச்சோதி
மன்றுளாடியசேவடிமனம்புதைத்திருந்தார். (௬)

நாளையூர்திருவாலவாய்நாயகன்றமரை
யாளமன்சுமந்தருளுமென்றதனையுங்காண்பா
னாளைவெம்பரித்தானியோர்ப்புண்டமெய்க்கழுவி
மீளவேண்டுவான்போற்கடல்குளித்தனன்வெய்யோன். (௭)

ஈசனுடல்வெம்பரிக்குழாத்தெழுந்தசெந்தூளான்
மாசுமூழ்கியவண்டத்தைவானிலாவென்னுந்
தூசினான்வைதுடைப்பவனெனமணித்தொகுதி
வீசுமாழியுண்முளைத்தனன்வெண்மதிக்கடவுள். (௮)

சேயதாரகைவருணமாத்திட்டியவான
மாயவேட்டினையிருளெனுமஞ்சனந்தடவித்
தூயவாணிலாவென்னும்வெண்சிறுமுறுடைப்பான்
பாயவேலையின்முளைத்தனன்பனிமதிக்கடவுள். (௯)

கள்ளொழுக்குதார்மீனவன்கடிமனைபுகுந்த
புள்ளுவப்பரிநள்ளிருட்போதுவந்தெய்தப்
பிள்ளையாகியமதிமுடிப்பிரான்விளையாட்டா
லுள்ளவாறுதம்வடிவெடுத்தொன்றொடொன்றுசாவும். (௧0)

சங்கினோசையும்பணைப்பறையோசையுஞ்சரிந்த
மங்குலோதியரழுகுரலோசையும்வடந்தாழ்
கொங்கைசேப்புறக்கையெறியோசையுங்குளிர
வெங்குராஞ்செவிபருகுவயின்னமுதென்ன. (௧௧)

வாம்பரித்திரளாகிமணித்தலைச்சுமந்த
தாம்புசங்கிலிதொடக்குண்டுமத்திகைதாக்க
வேம்பலுற்றனம்பகலெலாமிப்பொழுதினி
நாம்படைத்தனநம்முருவ்விதிவலத்தால். (௧௨)

கானகந்தனிலொழுகுநாண்முதலிந்தக்கவலை
யானதுன்பமற்றிந்திலமின்னமுமார்த்த
மானவன்றொடாவுக்கருமத்திகைத்தழும்பும்
போனவன்றிலப்பலருமுன்போவதேகருமம். (௧௩)

உள்ளமாரநாத்தின்பதற்கூன்சரித்தொழுகு
கொள்ளைகாசிலக்கிலருமைந்தனையோதுக்குங்
கள்ளநீர்களைக்காண்டொறுண்டுமிலவிளிக்கட்லை
கொள்ளிரேறுமைம்பவறாபுறக்கொள்வகையாதால். (௧௪)

நாடிக்காவலன்றமருணார்கருளார்கண்டாற்
சாடிக்காய்வரோடுலனுமுன்சங்கிலித்தொடரத்
தோடிப்போவதேசூழ்ச்சியென்றுக்கழற்றுறுகின்
கூடிப்பேசினவூளைவாய்க்குறுநரிக்குழாங்கள். (௧௫)

வெறுத்தகாணமூன்கடலையும்விரும்பினகோமுன்
மறுத்தகோருகந்தலவன்சங்கிலித்தொடரை
முறித்தகால்களிற்கட்டியகயிற்றொடுமுளையைப்
பறித்தவூளையிட்டெழுந்தனயோமவாழியாரப்ப. (௧௬)

நின்றநீணிலைப்பந்தியுள்ளெருக்குமாலிரையைச்
சென்றுதாவியாளெயிறுசிதைபடக்கடித்து
மென்றுசோரியைக்குடிப்பனவீக்கியமுனையோ
டொன்றவோடவேயன்பத்திலூறுசெய்வனவால். (௧௭)

ஊளையோசைகேட்டிம்மெனவுறக்கநீத்தெழுந்து
காளைவீரராய்மக்துறைகாப்பவர்கெருண
லாளிபோல்வருபரியெலாநரிகளாய்மற்றை
யோளிமானிரைகுடர்பறித்துண்பனகண்டார். (௧௮)

காண்டலுஞ்சிலவலியுளகடியமுள்ளரணைத்
தாண்டியோடினசிலநரிசாளரமுழையைத்
தூண்டியோடினசிலநரிசுருங்கையின்வழியா
வீண்டியோடினநாழில்புக்கேகினசிலவே. (௧௯)

மூடக்குகாலுடைச்சம்புவுமூப்படைந்தரற
லடக்குமோரியுங்கன்குருடாகியகரியு
மொடுக்குநோயுழந்தலமருமிகலனுமோடு
மிடங்கள்கண்டிலபக்கியிற்கிடந்தனவேங்கி. (௨௦)

இட்டியோடினர்வெருட்டுவோர்கீழ்விழக்கடித்துத்
தட்டியோடுவசிலவெதிர்தடுப்பவரடிக்கீ
ழொட்டியோடுவசிலகிடங்கூளையிட்டிராக்குங்
குட்டியோடணைத்தெயிலிறக்குதிப்பனசிலவே. (௨௧)

மறம்புனைந்தவேன்மீனவன்மாளிகைதள்ளிப்
புறம்படைந்தவிக்கரியெலாம்பொய்கையுய்யானம்
மறம்பயின்றகீண்மனைமறுகாலயங்கவலைத்
திறம்படர்ந்தபன்மாடநீளகொலாஞ்செறிந்த. (௨௨)

மன்றுஞ்சித்திரகூடமுமாடமுமணிசெய்
குன்றுந்தெற்றியுமுற்றமுநாளொடுகோள்வர்
தென்றுஞ்சுற்றியபொக்கருமெங்கணுநிரம்பி
யொன்றுஞ்சுற்றமோடூளையிட்டுழல்வனநரிகள். (௨௩)

கரியிரைச்சையும்பல்லியவோசையுங்கடுந்தேர்ப
பரியிரைச்சையுமின்றமிழோசையும்பாணர்
வரியிரைச்சையுநிரம்பியமணிநகரொக்கு
நரியிரைச்சையாய்க்கிடந்ததுவிழித்ததுநகரம். (௨௪)

விழித்தஞாளிகள்விழித்தனகேகையம்வெருவி
விழித்தகோழிகள்விழித்தனமதுகரம்வெருண்டு
விழித்தவோதிமம்விழித்தனகுருகினம்விளைய
விழித்தவாரணம்விழித்தனகருங்கொடிவெள்ளம். (௨௫)

அட்டிலிற்புக்கனநிணத்திலையழற்பசியுருக்கப்
பட்டகெக்கியகருங்கலமுருட்டுவபாகு
சுட்டசோறுபல்லுணவுவாய்மடுப்பனசூழ்ந்த
குட்டியுண்ணவுங்கொடுப்பனகூவிளிகொள்வ. (௨௬)

புறவுபூவைபைங்கிள்ளைகள்பூத்தலைச்சேவல்
பிறவும்வாருவவுறங்கியபிள்ளையைக்கொடுபோய்
நறவுகாறியுகுமுதவாய்நகையெழநக்கி
யுறவுபோல்விளையாடுவழுறுசெய்யாவால். (௨௭)

பறிப்பவேவொடுமுன்றில்வாய்ப்படாபசுங்கொடியைக்
கறிப்பகாவிளங்கூழையொடுங்கரும்புதேன்கவிழ
முறிப்பவாயிடைக்குதட்டுவவன்மவாய்மொய்ப்பத்
தெறிப்பவூளையிட்டாடுவதிரிவனபலவே. (௨௮)

ஆயிரம்பொறிநிரிமருப்பயல்கெழுமேட
மாயிரங்கருந்தாதுமோராக்கையவேனை
மாயிரங்கவிரலையகுட்டவிர்தலைக்கோழி
யாயிரங்குரும்பார்ப்பொடுமோருயிர்செகுப்ப. (௨௯)

பின்றொடர்ந்துதாய்குரைப்பொருடதொடாக்கிடப்பெயர்ந்து
முன்றொடர்ந்துயிர்செகுப்பனவெருசினமூட்டி
வன்றடம்புயமன்னர்போய்வலிசெயப்பொருது
கன்றிவந்துசெம்புனலுகக்கடிப்பனவனந்தம். (௩௦)

பன்றிவாய்விடுமிரக்கமுமயல்பொறிமுள்வாய்
வென்றிவாரணச்சும்மையுமேழைக்தொலிபு
மன்றிநாய்குரைப்போசையுமாடவரார்ப்பு
மொன்றிபூளைவாய்நரிக்குரற்கொப்பதன்பொருசார். (௩௧)

கன்றுலைக்கூகாலியநகர்கண்விழித்தாங்கு
மங்குறேய்பெருவாயிலகடிறத்தலுமாறு
தெங்குநீண்டியகரியெலாமிம்மெனவோடிப்
பொங்குகாரிருட்டெனிபெனப்போயினகானம். (௩௨)

ஈறிலாச்சிவபரஞ்சுடர்க்கவிவந்தெறியத்
தேறுவாரிடைத்தோன்றியசிறுதெய்வம்போல
மாறிலாதபன்மங்கலம்பெருக்குவாளொளிப்ப
வீறுபோய்மாளிமறுக்கினமீன்களமெல்லாம். (௩௩)

அண்டருக்கரிதாகியமறைப்பொருளூகைத்
தொண்டருக்கெளிதாகிமண்சுமந்தருள்வருத்தங்
கண்டருட்கழல்வருவோன்கைகளாயிரமுங்
கொண்டருக்கவெங்கடவுளுங்குணகடலுதித்தான். (௩௪)

கவனவெம்பரிசெலுத்திமேற்கவலைதீர்ந்துள்ளே
சிவமுணர்ந்தவர்சிந்தைபோன்மலர்ந்தசெங்கமல
முவமையில்பரம்பொருளுணர்ந்துளாயிறந்திருந்தோர்
மௌனவாயெனவடங்கினமலர்ந்தவைங்குமுதம். (௩௫)

பந்தியாளர்கள்யாதெனப்பகர்துமென்றச்சஞ்
சிந்தியாவெழுந்தொல்லைபோய்த்திரள்மதங்கவிழ்க்குந்
தந்தியானரசிறைகொளுமிருக்கையைச்சார்ந்து
வந்தியாவுடல்பணிப்புறவந்துமொழிவார். (௩௬)

கார்றினுங்கடுங்கதியவாய்க்சட்கினியனவாய்
நேற்றுவந்தவம்பரியெலாமின்றவாம்பரிக்குக்
கூற்றெனும்படிநரிகளாய்நகரெலாங்குழுமி
யூற்றஞ்செய்துபோய்க்காட்டகத்தோடியவென்றார். (௩௭)

கருத்தழுதவிச்சொல்லெனுங்கடியகால்செவியாந்
துருத்தியூடுபோய்க்கோபமாஞ்சுடுதழன்மூட்டி
யெரித்ததீப்பொறிசிதறிடக்கண்சிவந்திறைவ
னுருத்தவாறுகண்டமைச்சரும்வெருவினுளொதுங்கி. (௩௮)

அமுதமுண்டவனஞ்சமுண்டாலெனமுதனாட்
சமரவெம்பரிமகிழ்ச்சியுட்டாழ்ந்தவனவையே
திமிரவெங்குறுநரிகளாய்ச்சென்றவேயென்னு
மமரரஞ்சியவாணையாணாவாழ்ந்தான். (௩௯)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அருகிருக்குந்தொல்லமைச்சர்தமைநோக்கிவாதவூராளியென்னுந் [ற
கருகிருட்டிமனக்கள்வனம்முடையபொருண்முழுதுங்கவர்ந்துகாட்டி
குருதிநிணக்குடர்பிடுங்கித்தின்றுதிரிநரிகளெல்லாங்குதிரையாக்கி
வரவிடுத்தானிவன்செய்தமாயமிதுகண்டீரோமதிநூல்வல்லீர். (௪௦)

இம்மாயஞ்செய்தானையென்செய்வதெனவுலகிலெமருக்கெல்லாம்
வெம்மாசுப்போவம்பழியிரண்டும்படவிழுக்குவிளைத்துத்திய [ன்று
கைம்மாறுகொன்றான்றன்பொருட்டினியாமேதுணைக்கக்கடவேமெ
சும்மாதுசிரந்துளக்கியெதிராடாதிருந்தாரச்சூழ்வல்லோர்கள். (௪௧)

அவ்வேலைமனக்கினியபரிசெலுத்தியரசுகாரியனன்றாக்கி
வெவ்வேலைமனக்கவலைவிடுத்தனமென்றகமகிழ்ச்சியினைவுகூர
மைவ்வேலைவிடமுண்டவானவனைநினைந்தழிவுமயமாயின்ப
மெய்வ்வேலையிடைவீழ்ந்தார்வினைத்ததியார்வந்தார்வேந்தன்மாட்டே.

வந்தவரைச்சிவந்தவிழிப்பொறிசிதறக்கடுகடுத்துமறவோனுக்கி
யந்தமிலாப்பொருள்கொடுபோய் நல்லவயப்பரிகொடுவந்தழகிதாகத்
தந்தனையன்றோவரசகருமமுடித்திசைநிறுத்ததக்கோர்நின்போ
லெந்தவுலகுளரோயோவெனவெகுண்டானதுகேட்டவீசன்றொண்டர்

குற்றமேதப்புரவிக்கெனக்கேட்டார்கோமகனுங்குற்றமேது
மற்றதாலவையிரவினரியாகியனின்றபுரவியெல்லாஞ்
செற்றுவார்குருதியுகநிணஞ்சிதறக்குடர்பிடுங்கித்தின்றுநேர்வந்
தாற்றபேர்க்கூற்றமிழைத்தார்கலங்கக்காட்டகத்திலோடிற்றன்றே. ()

கன்னுமிடுகவசமும்போற்காரியஞ்செயுதொழுகியதுங்காலம்
பார்த்தெதம், மெண்ணரியநிதியீட்டங்கவர்வதற்கோவின்னமைச்சி
னியற்கைகன்றாற், புண்ணியவேதியர்மரபிற்பிறந்தனமென்றொரு
பெருமைபூண்டாயேகீ, பண்ணியகாரியம்பழுதுபிறராகிற்றன்றிக் (௪௫)
கப்படிவொன்றான்.

தண்டலாளர்களிவனைக்கொடுபோய்கம்பொருண்முழுதுந்த
த்துமீர்த்து, மின்டிறலவலி செய்துமாவாங்குமென வெகுண்டரசன்
விளம்பக்கூற்று, மண்டுமேன்மறஞ்செய்யும்வலியுடையார்கதிரையி
ருளடுத்துப்பற்றிக், கொண்டுபோனவென்னக்கொடுபுறம்போயற (௪௬)
வோரைக்கொடுமைசெய்வார்.

கதிர்நோக்கிக்கண்ணுமூடுக்கம்பகலுச்சியிலிரவிக்கடவுனை
வினை, றெதிர்நோக்கநிலைநிறுத்திக்கரங்களிலுநுதலிலுங்கல்லேற்றிச்
செந்தீப, யிதிர்நோக்கத்தவரெறுப்பவாதவூராய்வீழ்ந்திருந்தப்பிள
ப்போன்செந்தீ, மதிநோக்கத்தனிச்சுடரைமுழுதுநுதிசெய் (௪௭)
வார்வாதவூரர்.

கொச்சகக்கலிப்பா.

நாதவோநாதமுடிவிறந்தநாடகஞ்செய்
பாதவோபாதகனுமென்னையபணிகொண்ட
வேதவோவேதமுடிவின்விளைந்ததனிப்
போதவோபோதநெறிகடந்தபூரணவோ. (௪௮)

ஐயவோவென்னுடையவன்பவோவன்பர்க்கு
மெய்யவோமெய்யில்வினையேன்றலைவைத்த
கையவோசெய்யகழற்காலவோகாலனைக்காய்
செய்யவோவேதப்பரியேறுஞ்சேவகவோ. (சக)

அத்தவோகல்லாக்கடையேனையாட்கொண்ட
பித்தவோபொய்யுலகைமெய்யாகப்பேதிக்குஞ்
சித்தவோசித்தந்தெளிவித்தெனைத்தந்த
முத்தவோமோனமயமானமூர்த்தியவோ. (ருO)

கலிவிருத்தம்.

என்றேறியபுகழ்வேதியரிரங்குந்துதிசெவியிற்
சென்றேறலும்விடையேறுசுந்தரன்மற்றிவர்செயலை
மன்றேறவுமுடிமேனதிமண்ணேறவுமுதியா
னன்றேறியதேரோடும்விண்ணடைந்தேறவுநினைந்தான். (ருக)

கங்கைப்புனல்வடிவாகியகௌவைத்திரைவையைச்
சங்கச்சரியறலாமலர்த்தாரோதியைகோக்கா
வங்கக்கடல்பெருழியில்வருமாறெனவெவரு
மிங்கற்புதமடையப்பெருகென்றானருள்குன்றான். (ருஉ)

தும்பைச்சடைமுடியானொருசொல்லாடவுமுன்னாள்
வம்பைப்பொருமுலையாள்வரிவளையாள்வடிவேழுத்துங்
கொம்பைத்தவங்குலைப்பானதிங்கோபங்கொடுகட்கும்
கம்பைப்பெருகதியிற்கடுங்கதியால்வரும்வையை. (ருங)

பத்திக்குளிர்கமுகின்குலைபரியக்கணமுரியக்
குத்திப்பழஞ்சிதறச்செறிகோட்டக்கனிவீட்டி
முத்திக்கொடுகதலிப்புதன்முதுசாலிகள்பரித்துத்
தத்திப்பலதருவேரொடுந்தள்ளிக்கடுகியதே. (ருச)

பல்லாயிரஞ்செந்தாமரைபரப்பிக்கொடுவரலா
னல்லாயிரங்கண்ணுடனெழினயக்குங்குளிர்களினங்
கல்லாரமுங்கடிமுல்லையுங்கரும்புங்கொடுவரலால்
வில்லாயிரங்கொடுபோர்செயும்வேள்வீரனுமானும். (ருரு)

மணிமாலையுமலர்மாலையுஞ்சிதறுவிருமருங்கே
யணிகாஞ்சியுமொளிசங்கமுமலறப்புடையெறியாக்
கணியாவெழின்முகதாமரைகண்ணீரொடுங்கவிழத்
தணியாமுனிவுடனாடியதடங்கண்ணியர்போலும். (ருசு)

வளையுந்தியமதுமுல்லையினெய்பாறயிர்மருதத்
தளையுந்தியகரும்பின்குறைசாரோடுவரன்றி
யிளையுந்தெழுநீர்வையையிக்கன்னகர்வைகுந்
திளையுந்தெழுகட்டறம்மிடஞ்சென்றுலவைபோலும். (ருஎ)

கல்லென்றதிர்கம்மைப்புனல்கடிமாமதிற்புறம்போ
யில்லங்களுஞ்சிறிதுச்சிலுமறித்திட்டிருங்கடல்வாய்ச்
செல்லுங்கலநாவாய்பலதியில்போற்சுமந்தேகிப்
புல்லும்புரிசையுந்தள்ளியுள்புகுகின்றதையன்றே. (ருஅ)

மறுகும்பலபொருளாவணமணிவீதியுமன்றுஞ்
சிறுகுங்கணமதமாகிலாசேருந்தெருவும்போய்
முறுகுஞ்சினமொடுதெண்டிலாமூரிப்புனருவிக்
குறுகும்படிகண்டஞ்சினர்கொடிமாநகருள்ளார். (ருகூ)

சிலர்மைந்தரையெடுப்பார்களுஞ்சிலர்மைந்தரைக்காணு
தலமந்தழுவாருஞ்சிலரங்கைத்தளிர்பற்றிக்
குலமங்கையர்தமைக்கொண்டுயப்போவார்களுங்குறுகுந்
தலமெங்கெனத்திகைப்பார்களுந்தமோறுகின்றாரும். (சுO)

பொன்னுள்ளனபணியுள்ளனபொருள்பேணல்செய்வாரு
மன்னுஞ்சிலபொருள்கைக்கொளமறப்பார்களுமாட
மின்னுங்கொடிநெடுமாளிகைமேலேறுகின்றாரு
மிந்நன்னகர்துயர்மூழ்குதற்கேதேதுவென்பாரும். (சுக)

நேற்றும்பரிநரியாயினநெடுமாகவிரங்கு
மூற்றஞ்செய்தவென்பார்களுமொருகாலமுமிந்த
வாற்றின்பெருக்கிலையென்றயர்வாருங்கடலரசன்
சீற்றங்கொடுமுன்போல்வருஞ்செயலேகொலென்பாரும். (சுஉ)

தங்கோமகன்செங்கோல்பிழைத்தனனோவெனதவில்வா
ரங்கோல்வளையங்கன்விளையாட்டோவெனவன்றவா
ரிங்காரிதுதணிப்பாரொனவிசைப்பாரிதுதணிப்பான்
பொங்காலமுண்டருள்சுந்தரனலதியாரெனப்புகல்வார். (சுங)

அடுத்தாயிரங்குண்டோதரரொதிரேற்றிருந்தகல்வாய்
மடுத்தாலுமிதடங்காதெனமதிப்பாரிதுதனையு
மெடுத்தாயிரமுககங்கையினிறைவன்சடையேறக்
கொடுத்தாலலதடங்காதிதன்கொடுங்கோபமதென்பார். (சுச)

வாளுறிழிகதியாயிரமுகத்தாழ்வருவதுபோ
லாளுதெழுநீத்தந்தணியாவாறுகஃடன்பு
தாளுஙியசிவனன்பனையொறுக்குந்தறுகண்ணர்
போனூர்தமதகத்தேயுளபொருள்பேணுதல்கருதா. (௬௫)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

வழுதிதன்றமர்விட்டேகமதுரைநாயகன்பாலேகி
யழுதிசைபாடுந்தொண்டிலகப்படும்பாதம்போற்றித்
தொழுதுகொண்டிவாபூறுஞ்சுகப்பெருங்கடலின்மூழ்கி
யெழுதுசித்திரம்போன்மன்னியிருந்தனர்வாதவூரர். (௬௬

பரிநரியாக்கியபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் - ௬௰ - க்கு - திருவிருத்தம் - ௨௬௬௪.

அறுபத்தொன்றாவது

மண் சுமந்த படலம்.

எழுசீரடியாசிரியவிருத்தம்.

பண்சுமந்தமறைநாடரும்பொருண்பதஞ்சுமந்தமுடியார்மனம்
புண்சுமந்ததுயர்தீரவந்தபரிநரிகளாயடவிபோனபின்
விண்சுமந்தசுரங்கியெனப்பெருகுவித்தவையையிதுவிடையவன்
மண்சுமந்துதிருமேனிமேலடிவடுச்சுமந்தகதையோதுவாம். (௧)

கருங்கடற்றிரையிடைக்கிடந்துசுழல்கலமெனக்கனமுகடனாய்
வரும்புனற்பரவைபுட்கிடந்துநகர்மறுகிபுட்கமறவேலினு
ளொருங்கமைச்சரைவிளித்துநீர்கரைசுமக்கொதுக்கிவருமோதநீர்ப்
பொருங்கதத்திலையடக்குவீரெனவமைச்சருந்தொழுதுபோயினர். ( )

வெறித்தடக்கைமதயானைமந்திரிகள்வேறுவேறுபலகுடிகளுங்
குறித்தெடுத்தெழுதியெல்லையிட்டளவுகோல்கிடந்திவரைகிறியே
யறுத்துவிட்டிநகரொங்களும்பறையறைந்தழைத்துவிமோளொலஞ்
செறித்துவிட்டவரவர்க்களந்தபடிசெய்மினென்றுவருவித்தனர். (௩)

மண்டொடுங்கருவிகூடையாளருமரஞ்சுமந்துவருவார்களும்
விண்டொடும்படிகிமிர்த்துவண்பெடுவிரிபசுந்தழையபாலமுமு
கொண்டிதிர்த்துவருவாரும்வேறுபலகோடிகூடியகுழாமுகீர்
மொண்டுறர்தவருமேகசாலமெனவருபுனற்கரையின்மொய்த்தனர்.

இட்டுவார்பரிநிறுத்துவாரரவுருட்டுவாரடிகிடத்துவா
ரிட்டுவார்தழைநிரப்புவார்விளியெழுப்புவார்பறையிரட்டுவார்
வெட்டுவார்மணலெடுத்துவார்செலவெருட்டுவார்கடிதுதுடுமெனக்
கொட்டுவார்கரைபரப்புவார்ருவகைகூருவார்குரவைகுழறுவார். (௫)

கட்டுவார்கரை யுடைப்பநீர்கடுகல் கண்டுநெஞ்சது கலங்குவார், மட்டிலாதமுனி வெள்ளையுள்ளையினி யாறுகென்றெதிர் வணங்குவார், கொட்டுவார்மண் ணுடைப்படுக்கமகிழ் கொள்ளுவார்குரவை துள்ளுவா, ரொட்டுமோதிரமு மெட்டவாயொலி யெழுப்புவார்பறை யிரட்டுவார். (௬)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

இக்கிலூரிலுள்ளார்யாவர்க்குங்கூலியாளர்
துன்னிமுன்னளந்தவெல்லைத்தொழின்முறைமூண்டுசெய்வா
ரங்கிலங்கரின்றென்கீழ்த்திசையுளாளவிலாண்டு
மன்னியகரைமூதாட்டியொருத்திபேர்வந்தியென்பாள். (௭)

செவியுணவானவேதசிரப்பொருளுணர்ந்துசெந்தீ
யவியுணூட்டுமீசனன்பரிறுற்றநோற்ற
தவநிறைபேறுதய்ப்பாடாயிலார்க்கன்னையொப்பான்
சுவையுறுபிட்டுவிற்றுண்டொழிலினுடமியளாவாள். (௮)

வைகலுமவித்தசெவ்விப்பிட்டினைமருங்குநான்கு
கைகளாய்மூனைத்தமுக்கட்கரும்பினையரும்புமூரற்
செய்கதிர்முகத்தாணந்தத்தேறலையாலவாயெம்
மையனையகத்தானுக்கியன்பினாலருத்துவிற்பாள். (௯)

வளர்ந்தமெய்யுடையவந்தமாதவனைமூதாட்டிக்
களந்தபங்கடைப்பான்கூலியாள்கிடையாமலாற்றத்
தளர்ந்தினியென்னேமன்னன்றண்டிக்கினென்செய்கேனென்
றளர்ந்தமொழிக்கூடலுடையகாய்க்கையுன்றே. (௧௦)

பிட்டுவிற்றுண்டுவாழும்யேதையேனிடும்பையென்பு
தெட்டினையேனுமின்றியிரவியெங்கெழுகென்றிக்காண்
மட்டுகின்னருளாவிக்குவைகினேற்கின்றுவந்து
விட்டதோரிடையூறையமீனவனாணையாலே. (௧௧)

துணையின்றிமக்களின்றித்தமரின்றிச்சுற்றமாகும்
பணையின்றியேன்றுகொள்வார்பிறரின்றிப்பற்றுக்கோடாம்
புணையின்றித்துன்பத்தாழ்ந்துபுலம்புறும்பாவியேற்கின்
றிணையின்றியிந்தத்துன்பமெய்துவதறனேவெந்தாய். (கஉ)

தேவர்க்குமரியனாகுந்தேவனேயன்பராவார்
யாவர்க்குமெளியனாகுமீசனேவேந்தனானைக்
காவற்செங்கோலாற்சீற்றங்கடுகுமுன்கூலியாளா
யேவற்செய்வாரைக்காணேனேழையேனினியென்செய்கேன். (கங)

கூலியாள்வருவதுண்டோவென்றுதன்கொங்கைமுற்றத்
தாலிபோற்கண்ணீர்சோர்வாள்குறித்தமுன்பருத்தும்பிட்டை
வேலைநீர்ஞாலங்காணமிசைந்தவ்விடும்மைதீர்ப்பான்
பாலினேர்மொழியாள்பாகமறைத்தருட்படிவங்கொள்வான். (கச)

குறட்குநீருத்திவையைக்குடிஞையாயொழுகுங்கங்கை
யறற்குழல்பிரிவிற்றுதன்பிறைலவனைக்காண்பான்
மறைக்கயனெடுங்கணவைஞ்சித்துவடிவமாறிப்
புறப்படுவானைப்போலப்போதுவான்போதலூர்த்தி. (கரு)

கொச்சகக்கலிப்பா.

அழுக்கடைந்தபழந்துணியொன்றரைக்கசைத்துவிழுத்தொண்டர்
குழுக்கடந்தவிண்டையிகர்சும்மையடைமேற்கூடைகவிழ்த்
தெழுக்கடந்ததிசைகடந்திட்டிணைகடந்ததிருந்தோண்மேன்
மழுக்கடைந்துவிளங்கியவாய்மண்வெட்டியொண்படையேந்தி. (கசு)

இடங்காதல்கொண்டறவோர்திருவேண்விதருமமுது
மிடக்காவல்கொண்டுறைவாளருந்தமுதமினிதுண்டு
மடங்காதபசியினர்போலன்னைமுலைப்பாலருந்த
மடங்காதபெருவேட்கைமகவுபோற்புறப்பட்டார். (கஎ)

ஆறுமறைச்சிரமுடியாரடிக்கமலமிலஞ்சூடக்
கூலிகொடுத்தென்வேலைகொள்வாருண்டோவென்றென்
றோலமறைத்திருமொழிபோலுலாப்பரப்பிக்கலுழ்கண்ணீர்
வேலையினைப்படிந்தவர்வாழ்வீதியிடத்தணைகின்றார். (கஅ)

தந்தைதாய்பிறரின்றிவருகின்றதனிக்கூலி
மைந்தனார்வாய்மலருங்குரல்கேட்டுவந்தியுந்தன்
சிந்தையாகுலமிறந்தகங்கூர்ந்தார்செல்வ * மகத்
தந்தபோதெழுமகிழ்ச்சிதலைக்கொள்ளப்புறம்போந்தாள். (ககூ)

* செல்வமிகவென்றும் பாடாந்தரம்.

அன்னையெனத்தன்பாலினருள்சுரந்துவருகாளை
தன்னையழைத்தெனக்களந்தகரையடைத்துத்தருவாயோ
வென்னவிசைத்தனளாகவடைக்கின்றேனெனக்கன்னை
பின்னையதற்கிடுங்கூலியாதென்றான்பெருமுதியாள். (உ0)

பிட்டிடுவேனுனக்கென்றாளதற்கிசைந்துபெரும்பசியாற்
சுட்டிடடான்மிகமெலிந்தேன்சுவைப்பிட்டிலுதிர்ந்தவெலா
மிட்டிடுவாயதுமுந்தத்தின்றுநானிளைப்பாறிக்
கட்டிடுவேனின்னுடையகரையென்றான்கரையில்லான். (உக)

தெள்ளியடுசிற்றுண்டிசிக்கடைந்தபொதிநீக்கி
யள்ளியெடுத்தருந்தப்பாவென்றிட்டாளாக்கசைத்த
புள்ளியுடைத்துகினீத்தான்புறத்தானைவிரித்தேந்தி
யொள்ளியதென்றவளன்புறுமடங்கூட்டியமுதுசெய்தான். (உஉ)

அன்னைமுலைத்தீம்பாலினரியசுவைத்திஃதெனத்
தென்னவனுயக்கொண்டதிருவாலவாயுடைய
மன்னர்பிரானெனக்கேயாமென்றென்றுவாய்மலர்ந்து
சென்னியசைத்தமுதுசெய்தார்தீவாய்நஞ்சமுதுசெய்தார். (உங)

தந்தையொடுதாயின்றித்தனிக்கூலியாளாக
வந்தவெனக்கொருதாயாயருள்சுரந்துமாறாத
விந்தவிளைப்பொழித்தனையேயினிவேலைத்தலைச்சென்றுன்
சிந்தைகளிப்பெழவேலைசெய்வேனென்றிசைத்தெழுந்தார். (உச)

தந்திவாய்மருப்பிடறிவருங்குடிஞைத்தடங்கரையில்
வந்தியான்வந்தியாளென்றேட்டிலவலாவித்துப்
புந்தியாலுணராநாற்பொருளினுளப்பரிய
வந்திவான்மதிச்சடையார்கரையடைப்பாராயினார். (உரு)

வெட்டுவார்மண்ணைமுடிமேல்வைப்பார்பாரமெனக்
கொட்டுவார்குறைத்தெடுத்துக்கொடுபோவார்சுமடுவிழத்
தட்டுவார்சுமையிறக்கியெடுத்ததனைத்தலைப்படியக்
கட்டுவாருடன்சுமந்துகொடுபோவார்கரைசொரிவார். (உசு)

இவ்வண்ணமிவரொருகாலிருகான்மண்சுமந்திளைத்துக்
கைவ்வண்ணமலரகன்றகதிர்முடிமேல்வடுவெழுந்த
மைவ்வண்ணனறியாதமலரடிசெம்புனல்சுரந்து (உஎ)
செவ்வண்ணம்படைப்பவொருசெழுந்தருவின்மருங்கணைந்தார்.

திருமேவுமலைமகளுஞ்சலமகளுமறியாமற்
றிருமேனிமுழுதிலடிகடைத்திரைப்பெய்தக்
குருமேவுந்திருமுடியைக்கூடையினைமேற்கிடத்தி
வருமேருவனையார்தம்வடிவுணர்ந்துயில்கின்றார். (௨௮)

அத்தருவேயாலமெனேர்தருவாகவலைபுரட்டித்
தத்திவருமபுனலடைப்பார்சனகாதிமுழுதுணர்ந்த
மெய்த்தவராய்க்கண்களிப்பமெய்யுணர்ச்சிமோனமயச்
சுத்தவுருத்தெளிவிப்பானொத்தயிலுக்துயிலுணர்ந்தார். (௨௯)

ஆடுவார்சாமமெனத்திருந்திக்குமமுதவிசைப்
பாடுவார்கைசெய்வார்தொழிற்செய்வார்பாக்கடையக்
கோடுவார்மணல்குவிப்பார்குதிப்பாருள்ளெழவடியாய்த்
தேடுவாருடன்மீள்வாருன்மத்தரெனவிருப்பார். (௩௦)

வேலையிறுவறவருத்தியினைந்தார்போன்மெய்வேர்வை
காலமிசைசெழச்செறிந்துவாயொலியாற்காற்றழைத்துச்
சாலநெடும்பசியினர்போற்றளர்ந்தடியாளிடம்பிட்டின்
மேலடைந்தவிருப்பினராய்மீண்டுமவள்பாலணைவார். (௩௧)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

இம்மையைநோய்வெள்ளநீக்கியின்பநீர்வெள்ளத்தாழ்த்த
கொடும்புறமுதியாள்முன்போய்க்கூறுவார்கோளுக்கேற
விடம்படுகரைகளெல்லாமடைபடுகின்றவின்னங்
கடும்பசியுடையேனன்னேபிட்டுகொடுதியென்றார். (௩௨)

ஆங்கவள்புபோதட்டசிற்றுணவளித்தாளையன்
வாங்கியங்கையுகாவுங்களலெழவாயிற்பெய்து
பாகிருகொழுமொற்றிப்பதமுறப்பருகிக்கொண்டு
நீங்கிமுன்போலப்போந்துநெடுங்கரையடைக்கலுற்றார். (௩௩)

பிட்டுவாய்மிதப்பவுண்பார்பெருவலியுடையார்போல
வெட்டுவாரெடுத்துமண்ணைக்கொண்டுபோய்வேற்றுப்பங்கிற்
கொட்டுவாருடைப்புமாறுங்கொள்கைகண்டார்த்துத்திண்டோ
டட்டுவாரயனின்றாளைத்தழுவுவார்களிப்புத்தாங்கி. (௩௪)

எடுத்தமண்கூடையோடுமிட்டிவீழ்வார்போலாற்றின்
மடுத்திடவீழ்வார்நீந்திவல்லைபோய்க்கூடைதள்ளி
யெடுத்தகண்கரைமேலேறியடித்தடித்திரம்போக்கித்
தொடுத்தகட்டவிழ்ப்பர்மீளத்துன்னுவர்தொடுவர்மண்ணை. (௩௫)

கொட்டுமண்சுமந்துசெல்வர்கூடையையுடைப்பில்வீழ்த்
தட்டுவரொயேயார்போலத்தாவிவீழ்ந்தலையிலோட
விட்டொருமரத்தைப்பற்றிமிதப்பர்திண்கரையிலேற
முட்டுவர்சுழியிலாழ்வர்சேட்சென்றுமூழ்ப்பர்மீள்வர். (௩௬)

கொட்டினைக்கழலப்பார்ப்பர்கோப்பர்கோலிடையாயபிட்டுத்
தட்டுவருயிர்ப்புவீங்கித்தள்ளாகின்றிலைப்பர்கச்சிற்
பிட்டினைநுகர்வர்வேலைவினைகெடப்பிறக்குமள்ளி
யிட்டமோரேச்சநோக்கிரங்கப்பர்கையிரண்டுந்தாங்கி. (௩௭)

வானத்தின்மண்ணிற்பெண்ணின்மைந்தரிற்பொருளிலாசை
தானற்றுந்தமையுந்துத்தத்துவமுணர்ந்தயோகர்
ஞானக்கண்கொண்டேடன்றிநாடருஞ்சோதிமண்ணை
நூனக்கண்கொண்டுங்காணவுடனவிளையாடல்செய்வான். (௩௮)

அருளினுலகமெல்லாமாக்கியுமளித்துநீத்தும்
பெருவிளையாடல்செய்யும்பிறைமுடிப்பெருமானிங்ங
னொருவிளையாடல்செய்யவோச்சுகோற்கையராகி
யருகுகின்றவல்கொள்வாரடைகளைநோக்கப்புக்கார். (௩௯)

நெட்டலையொதுங்கியோடச்செப்புறவரையோலிட்டுக்
கட்டியகரைகளெல்லாங்கண்டுகெல்டப்புநோக்கி
யட்டமேசெல்வார்திங்களாயிரந்தொழுதாள்பேறாஸ்
விட்டபங்கடைபடாமைகண்டனர்வெகுளிமூண்டார். (௪௦)

வந்திக்குக்கூலியாளாய்வந்தவன்யாரென்றேடிக்
கந்தர்ப்பனெனகேர்நின்றகாளையைநோக்கியேடா
வந்தபங்குள்ளவெல்லாமடைபட்டதிவனீயின்ன
மித்தப்பங்கடையாய்வாளாநிருத்தியாறம்பியென்றார். (௪௧)

வேறுரையாததம்மையுணர்ந்தவர்வீறுதோன்ற
வீறிலாளிறுமாப்பெய்தியிருந்தனனுகமேலிட்
டாறுவந்தடுத்தபங்கிலடைக்கைதல்லிச்செல்ல
மாறுகொண்டோச்சவஞ்சிமயங்கினார்வலியகோலார். (௪௨)

பித்தனேயிவன்றானென்பாரல்லதுபேய்கோட்பட்ட
மத்தனேயிவன்றானென்பார்வந்தியையலைப்பான்வந்த
வெத்தனோவிவன்றானென்பாரிந்திரசாலங்காட்டுஞ்
சித்தனோவிவன்றானென்பாரொன்றுந்தெளியோமென்பார். (௪௩)

பாடல்விஞ்சையனேவென்பார்பண்ணினற்பாணிக்கேற
வாடல்விஞ்சையனேவென்பாரரும்பெறற்செல்வத்தாழ்ந்து
வாடியமகனேவென்பாரிசைபடவாழ்ந்துகெட்ட
வேடவிழ்தாரினருள்யார்மகனிவன்கொலென்பார். (௪௩)

கரும்பனும்விரும்பரின்றகட்டழகுடையனென்பா
ரரும்பெறலிவன்றான்கூலிக்காட்செய்ததெவனேவென்பா
ரிரும்பெருங்குரவரற்றதமியனேவென்பார்வேலை
புரிந்தவனல்லனென்பாரதுமேனிபுகலுமென்பார். (௪௫)

கூலியுங்கொண்டான்றானேகணக்கிலுங்குறிக்கச்சொன்னன்
வேலையுஞ்செய்யானின்சொல்விளம்பினுங்கேளான்கல்லின்
பாலறைமுனையையாகிப்பராமுகம்பண்ணிநின்று
னெலநாமிதனைவேந்தற்குணர்த்துதுமென்றுபோனர். (௪௬)

தலைமகன்றிருமுன்றாழ்ந்துசாற்றுவாரடிகேளித்த
வலைபுனகரார்த்தம்பங்கெலாமளந்தவர்ற்றன்
மலையினும்வலியவாகச்சமைந்தனர்வளைந்தசிற்றாண்
விலகளையாட்டிதன்பங்கடைத்திலன்வென்றிவேலோய். (௪௭)

வேலையும்வனப்பினுலேவென்றவனொருவன்வந்தி
யாளெனவங்கேவந்துபதிந்தனனரசர்செல்வக்
காளைபோற்களிப்பன்பாடுமாடுவன்காலம்போக்கி
நீளுவன்வேலையென்றுநெஞ்சினுநினைதல்செய்யான். (௪௮)

ஆண்டகைவனப்பைநோக்கியடிக்கவுங்கில்லேமஞ்சி
யீண்டினேமென்றுகூறவிம்மெனவமைச்சரோடும்
பாண்டியனெழுந்துநாம்போய்ப்பங்கடைப்பட்டவெல்லா
காண்டுமென்றெயிநீர்வையைக்குடிரையங்கரையைச்சார்ந்தான். ()

எடுத்ததின்கரைகளெல்லாமிறைமகனுள்ளத்தோகை
மடுத்தனனேக்கிச்செல்வான்வந்திபங்கடைப்பாரின்றி
யடுத்தகோன்கரையுங்கல்லியழித்தெழுவெள்ளநோக்கிக்
கடுத்துநின்றெங்குற்றான்கொலாசமைத்தடைப்பானென்றான். (௫௦)

வள்ளறன்கோபங்கண்டமாறுகோற்கையரஞ்சித்
தள்ளருஞ்சினத்தராகித்தடக்கைதொட்டார்த்துபற்றி
யுள்ளொடுபுறங்கீழ்மேலாயுயிர்தொறும்மொளித்துநின்ற
கள்வனையிவன்றான்வந்தியாளெனக்காட்டிநின்றார். (௫௧)

கண்டனன்கனன்றுவேந்தன்கையிற்பொற்பிரம்புவாங்கி
யண்டமுமளவிலாதவுயிர்களுமாகமாகக்
கொண்டவன்முதுகில்வீசிப்புடைத்தனன்கூடையோடு
மண்டனையுடைப்பிற்கொட்டிமறைந்தனனிறைந்தசோதி. (௫௨)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

பாண்டியன்முதுகிற்பட்டதுசெழியன்பன்னியருடம்பினிற்பட்ட
தாண்டகையமைச்சர்மேனிமேற்பட்டதரசிளங்குமரர்மேற்பட்ட
திண்டியகழற்கால்வீரர்மேற்பட்டதிவுளிமேற்பட்டதுபருமம்[மும்பு
பூண்டவெங்கரிமேற்பட்டதெவ்வுயிர்க்கும் போதனமேற்பட்டவத்த
பருதியுமதியும்பாம்புமைங்கோளும்பன்னிறம்படைத்தநாண்மீனு
மிருநிலம்புனல்காவெரிகடுங்கனல்வானென்னுமைம்பூதமுங்காருஞ்
சுருதியுமாறுசமயவானவருஞ்சுரர்களுமுனிவருந்தொண்டின்
மருவியமுனிவர்கணங்களும்பட்டமதுரைநாயகனடித்தழும்பு. (௫௪)

வானவர்மணிநர்காசர்புள்விலங்குமாசுணஞ்சிதலெறும்பாதி
யானபல்சரமுமலைமரங்கொடிபுல்லாதியாமசரமும்பட்ட
ஆனடைகருவும்பட்டனதழும்போதித்தனவுயிரிலோவியமுந்
தானடிபட்டசராசரசடங்கடமக்குயிராயிநின்றதழும்பு. (௫௫)

தன்னெனமாயோன் விழித்தனன்கமலச் சோதியும்யாதென
வியந்தான், விண்ணவர்பெருமான் வெருவினன்வானோர் வேறுனார்
மெய்ப்பனிப் படைந்தார், வண்ணயாழியக்கர் சித்தர்சாரணர்தம்
வடுப்படாவுடம்பினிற் பட்ட, புண்ணையாதென்று தந்தமிற்காட்டி
மயக்கினர் புகுந்தவாறறியார். (௫௬)

ஏகாரயுக னெவ்வுயிர்களுந் தானேயென்பது மண்பினுக்கெளிய,
ஞகியதிறனுங் காட்டுவானடிபட் டங்கொரு கூடைமண்கொட்டி,
வேகநீர்சுருங்கக்கரை யினியுயர்த்தி யிருந்துடன்வேலைநீத் தொளித்
துய், போகிய வாறு கண்டுகோற்கையர்போய்கரையாட்டியைத்
தொடர்ந்தார். (௫௭)

வன்புதாழ்மனத்தோர் வலிசெயவின்ன மன்னனுண்மறுக்க மு
வன்புதாழ்மனத்தோர் வலிசெயவின்ன மன்னனுண்மறுக்க மு
ன்டேயோ, முன்புபோகியவாளென் செய்தாளென்றும் முடியுமோ
விளி யெனத்திரங்கி, யென்புபோல்வெளுத்த குழலினன்கூட விறை
வினைநோக்கி நின்றிரங்க, வன்புதேனுகவருத்திய சிற்றுணமுதுசெய்
தருளினராளால். (௫௮)

கண்ணுதனந்திகணத்தவர்விசும்பிற்கதிர்விடுதிப்பியவிமான
மண்ணிடையிழிச்சியன்னைவாவென்றுவல்லைவைத்தமரர்பூமழையும்
பண்ணிறைகீதவோதையும்வேதப்பனுவலுந்துந்துபியைக்தும்
விண்ணிடைசிமிரச்சிவனருளடைந்தோர்மேவியசிவபுரத்துய்த்தார்.

மன்றுடையானோர்கூடைமண்கொட்டி மறைந்துமடைகரைநீண்ட
குன்றெனவுயர்ந்ததன்மையுந்தம்மேற்கோலடிபட்டதுநோக்கி [சர்
யென்றன்மேற்பட்டதென்றன்மேற்பட்டதிதுவெனவதுவெனவமைச்
சின்றவருணர்த்துநிகழ்ச்சியும்பிறர்பாணிகழ்ச்சியுநோக்கியக்கிருபன்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

உள்ளத்தாசங்கைபூண்டானுகமண்ணுடைப்பிற்கொட்டிக்
கள்ளத்தாராகிப்போனார்கணத்தாராகிச்சேனை
வெள்ளத்தார்பிறருங்கேட்பமீனவற்குவகைவெள்ளங்
கொள்ளத்தாமழைத்தாகாயவாணியாற்கூறலுற்றார். (௬௧)

மறத்தாறுகடந்தசெங்கோல்வழுதிநின்பொருள்களெல்லா
மறத்தாற்றிரட்டப்பட்டவனையவைபுனிதமான
திறத்தாலேரமக்குநம்மைச்சேர்ந்தவர்தமக்குமார்வ
முறத்தாவில்லாதவூரனுதவினனுதலாலே. (௬௨)

அனையவனைமறுக்கஞ்செய்தாயரும்பிணப்புலவுத்திவாய்
வனரிரித்திரளையீட்டிவாம்பரியாக்கித்தந்தேம்
கனையிருட்கங்குற்போதிற்கழிந்தனபின்னுந்தண்ட
வினையர்பால்விடுத்துத்துன்பம்விளைத்தனையதுபொறுத்தேம். (௬௩)

வரும்புனல்பெருகப்பார்த்தேம்வந்திகைப்பிட்டுவாங்கிப்
பருகிவந்தாளாய்மாறுபட்டனமண்ணோகட்டுப்
பொருகரையுயரச்செய்துபோகியவ்வன்னைபோல்வாள்
பெருகியவிடும்பைதீர்த்தெம்பேருலகடையச்செய்தேம். (௬௪)

இத்தனையெல்லாஞ்செய்ததிவன்பொருட்டிந்தவேத
வித்தகன்றன்மையொன்றுமறிந்திலைவேட்கையென்பால்
வைத்துனக்கிம்மையோடுமறுமையுந்தேடித்தந்த
வுத்தமன்றுடைச்சுத்தாதிப்புறப்பற்றுமொழிந்தநீரான். (௬௫)

நிறையுடையிவனையிச்சைவழியினனிறுத்தியன்ற
மறைவழிநின்றுநீதிமன்னவர்க்களந்தவாழ்நாள்
குறைபடாதானுச்செல்வமாரியுட்குளித்துவாழ்கென்
றிறையவன்மொழிந்தமாற்றமிருசெவிநிரப்பத்தென்னன். (௬௬)

அச்சமுற்றுவகையீர்ப்பவதிசயவெள்ளத்தாழ்ந்து
பொச்சமிலன்பமொக்குற்றானைப்புகுந்துதேடி
நச்சரவசைத்தகூடனாயகன்கோயினண்ணி
விச்சையிலிருக்கின்றானைக்கண்டுபோயிறைஞ்சிவீழ்ந்தான். (௬௭)

தொல்லைநீருலகமாண்டுகூடுதுயர்நாகத்தாழ
வல்லவென்னறிவுக்கேற்றவண்ணமேசெய்தேனொன்
னெல்லைதீர்தவப்பேறுய்வர்திகபரவேதுவாகி
யல்லல்வெம்பிறவிநோய்க்குமருமருந்தானீரையா. (௬௮)

செறுத்துநானும்மையென்னுறிமைத்தவித்தீங்குதன்னைப்
பொறுத்துநீர்முன்போலுங்கள்புவியெலாங்காவல்பூண்டு
மறுத்துடைத்தாள்வதாகென்றிரந்தனன்மன்னிலாரை
வெறுத்தவர்நகைபட்டோன்றவேந்தனைநோக்கிச்சொல்வார். (௬௯)

பாய்திரைபுரளுமுந்நீர்படுகடலுலகுக்கெல்லா
மாயிரஞ்செங்கணன்போலரசுவீற்றிருப்பீருங்க
ணாயகனருளிச்செய்தவண்ணமேநயந்துசெய்வீர்
தூயவரன்றோநுங்கள்சூழல்சேர்தொழுகவல்லார். (௭௦)

உம்மைநானடுத்தநீராலுலகியல்வேதநீதி
செம்மையாவிரண்டுமென்றாய்த்தெளிந்துதெளிந்தநீரான்
மெய்ம்மையாஞ்சித்தசுத்திவிளைந்துவிளைந்தநீரா
பொய்ம்மைவானவரினீங்கிப்போந்ததுசிவன்பாற்பத்தி. (௭௧)

வந்தவிப்பத்தியாலேமாயையின்விருத்தியான
பந்தமாம்பவஞ்சவாழ்க்கைவிளைவினுட்பட்டதுன்பம்
வெந்ததுகருணையாகிமெய்யுணர்வின்பந்தன்னைத்
தந்துபாதஞ்சூட்டித்தன்மயமாக்கிற்றன்றே. (௭௨)

சச்சிதானந்தமாமத்தனிப்பரசிவனேதன்னை
யிச்சையாலகிலமெல்லாம்படைத்தளித்திறுசெய்யும்
விச்சைவானவரைத்தந்தமேலவன்பிறவித்துன்பத்
துச்சமுற்றடைந்தோர்க்கானுவின்பவீடளிக்குமன்னோன். (௭௩)

மந்தரங்கயிலைமேருப்பருப்பதம்வாரணாசி
யிந்தநல்லிடங்கடோறுமிவைபரபோகம்யார்க்குஞ்
தந்தருள்செய்தெம்போல்வார்தம்மனம்புறம்போகாமற்
சிந்தனைதிருத்திஞானத்திருவுருவாகிமன்னும். (௭௪)

ஒப்பவர்மிக்கோர்வேறற்றொருவனுயெங்குந்தங்கு
மப்பரஞ்சுடரோயிந்தவாலவாயுறையுஞ்சோதி
கைப்படிகனிபோன்மேஞட்கண்ணுவனுதியோர்க்கு
மெய்ப்பொருள்விளங்கித்தோன்றுவேதத்தைவிருத்திசெய்தான். ()

தன்னருளானஞானத்தம்னியமாகுந்தில்லைப்
பொன்னகரிடத்திலென்னைப்போகெனப்பணித்தானீரு
மன்னதற்கிசைந்தீராகென்றுலவரயடிகடம்மைப்
பன்னருந்துதியாலேத்திவிடைகொபேணிந்துயோவார். (எசு)

தன்றொடக்கறுத்தநாதன்றுட்டொடக்குண்டுபோவார்
பின்றொடர்ந்தரசன்செல்லப்பெருந்தவர்நின்மினின்மி
னென்றனர்செலவுக்கூப்பிடெல்லைசென்றணியனுகிச்
சென்றடிபணிந்தத்தென்னன்விடைகொடுதிரும்பினுனே. (எஎ)

துறந்தவர்போகமீண்டுதொன்னகரடைந்துதென்ன
னுறந்தருபங்கிஞளையடைந்துதான்பிரம்புசீட்டப்
புறந்தருகருணைவெள்ளம்பூரிப்பத்தாழ்ந்துநெஞ்ச
நிறைந்ததுவாய்கொள்ளாமனின்றெதிர்துதிப்பதானுன். (எஅ)

கொச்சகக்கலிப்பா.

அடையாளம்படவொருவனடித்தகொடுஞ்சிலைத்தழும்புந்
தொடையாகவொருதொண்டன்றொடுத்தெறிந்தகல்லும்போற்
கடையானேன்வெகுண்டடித்தகைப்பிரம்புமுலகமெல்லா
முடையானேபொறுத்ததோவுன்னருமைத்திருமேனி. (எகூ)

கடியேறுமலர்மகன்மான்முதலாயகடவுளரும்
படியேழுமளவிறந்தபல்லுயிருநீயேயோ
முடியேறமண்சுமந்தாய்முதுகுதனிலடிபட்ட
தடியேனும்பட்டேனின்றிருமேனியானேனோ. (அ0)

கைக்குமருந்தின்சுவைபின்காட்டுமாறெனவினைக்கும்
பொய்க்குமருங்கலனுகிமண்ணுண்டுபுலைநரகந்
துய்க்குமருந்துயர்களைவான்மாறுய்நின்றுணையடிக்கே
யுய்க்குமருந்தவரிவனென்றறியாமையொறுத்தேனே. (அக)

பாதியுமையுருவானபரமேட்டியெனக்கிம்மை
யூதியமும்பரகதியுமுறுதியெனவிளைவிக்கும்
நீதியினுன்மந்திரியாய்நின்னருளாயவதரித்த
வேதியனையறியாதேவெறுத்தூறொன்றுத்தேனே. (அஉ)

மாயாவிருத்தியினுன்மாழாந்துமாதவனை
யாயாதொறுத்தேனருநரகத்தாழ்ந்தான்
வீயாமலின்றனையார்மெய்ம்மையெலாந்தேற்றியவென்
றுயானுய்தன்னளிக்கென்றமியேன்செய்கைம்மாறே. (அங)

கின்னையுணர்ந்தவர்வேதநெறிவேள்விசெய்தூட்டு
மின்னமுதிற்கழிசுவைத்தோவிவளிடும்பிட்டெவ்வுயிர்க்கு
மன்னவனேசெந்துவர்வாய்மலர்ந்தமுதுசெய்தனையா
லன்னையிலாவுனக்கிவளோரன்னையாய்வந்தாளோ. (அச)

அன்றுசிறுத்தொண்டரிடும்பிள்ளைக்கறியமுது
மென்றுசுவைதெரிந்தவேடனிட்டவூனும்போ
னன்றுகரையாட்டியிடுபிட்டுநயந்தருந்தி
யென்றுமடியார்க்கெளிவந்தாயெந்தாயே. (அரு)

கரியாவும்பரியாக்கிடத்தியுமம்பரமன்றித்
தரியாயான்றருதுகிலைத்திருமுடிமேற்றரித்துமறைக்
கரியாய்நீயென்பாசமறுக்கவருந்திருமேனி
தெரியாதேபரியாசைதினைத்திறுமாந்திருந்தேனே. (அசு)

விண்சுமக்கும்புள்ளாய்விலங்காய்ச்சுழன்றுமனம்
புண்சுமக்குஞ்சூழ்ச்சிவலியுடையபுத்தேளிர்
மண்சுமக்குமள்ளராய்வந்திலரோவந்துக்காற்
பண்சுமக்குஞ்சொல்லிபங்கன்பாதமுடிகாண்பாரோ. (அஎ)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

என்றுபலமுறையாலேதுதித்தடைந்தோர்க்கன்பரிவரிவனாத்தேறி
னன்றுமிகப்பரபோகம்வீடுபெறலெளிதென்றுகைத்தார்வேந்த
னன்றுதிருப்பணிபூசைபிறவுநனிவளம்பெருக்கியழகார்வெள்ளி
மன்றுடையானடிக்கன்புமுயிர்க்கன்புஞ்சுரந்தொழுகிவாழுநாளில். ()

மூன்புபெருந்துறையார்க்கு மடியார்க்குமறத்தெரிந்த முறையா லீட்டுந், தன்பொருள்போ யுடன்பலவாய்த் தழைத்துவரு பயனே போற் றலையுவாவி, னன்பனிகான்மதிகண்ட வுவரியெனப் பலசெல் வநாளுமோங்க, வின்புறுவான்சகாத னெனுமகப்பெற் றின்பத்து ளின்பத்தாழ்ந்தான். (அகூ)

அம்மகனைமுடிசூட்டி யரசாக்கிவாதவூ ரமைச்சர்சார்பான், மெய்ம்மைநெறிவிளங்கியிரு வினையொப்பி லரன்கருணை விளைந்தேனாக்

காண் மும்மைமலத்தொடர்நீக்கிச் சிவானந்தக் கடற்படிந்து முக்க ணமூர்த்தி, செம்மலர்த்தா ணிழலடைந்தான் றிறலரிமர்த்தனனெ ன்னுந் தென்பார்வேந்தன். (கூ0)

மேற்படி - வேறு.

வழுதியால்விடுக்கப்பட்டவாதவூர்முனிகடம்மைப்
பழுதிலாப்பாடல்கொள்வார்பதிபலபணிந்துபோந்து
முழுதுணர்மறையோர்வேள்விப்புகையண்டமுடிகீண்டேறி
யெழு *வடவனாபோற்றேன்றுமெழிற்றில்லைமூதூர்சேர்ந்தார். (கூக)

மேற்படி - வேறு.

வீதிதொறும்வீழ்ந்துவீழ்ந்திறைஞ்சியாலயத்தெய்திமெய்மையான
சோதியறிவானந்தச்சுடருருவாஞ்சிவகங்கைதோய்ந்துமேனி
பாதியிலர்ந்தவள்காணப்பரானந்தத்தனிக்கூத்துப்பயிலாநிற்கு
மாதியருளாகியவம்பலங்கண்டுகாந்தநேரயம்போற்சார்ந்தார். (கூஉ)

அன்றுகுருந் தடியிலடி வைத்தாண்ட கோலமே யருளானந்த மன்றினிடத் தெதிர்தோன்றி வாவென்பாவொனமூரன் மணிவாய்தோ ற்றி, நின்றதனிப் பெருங்கூத்தர் நிலைகண்டாரஞ்சலித்தார் நிலமேல் வீழ்ந்தா, ரொன்றறியப்புலன்கரணை வழிநீந்திமெய்யன்பின்னுருவமானார்.

வண்டுபோற் புண்டரிக மலரில்விளை சிவானந்த மதுவைவாரி, யுண்டுவாசகம்பாடி யாடியழல் வெண்ணெயெனவுருகுந்தொண்டர், விண்டுழா வியகுமிழி மன்றுடையான் றிருவாக்கான் மிருந்தகேயங், கொண்டுபோய்க் குணதிசையி லருந்தவர்வாழ் தபோவனத்தைக் குறுகியங்கண். (கூச)

குறிகுணங்கள் கடந்ததனிக் கூத்தனுரு வெழுத்தைந்தின் கொ டுவாளோச்சிப், பொறிகரணக்காடெறிந்து வீசிமனப் புலந்திருத்திப் புனிதஞ்செய்து, நிறைசிவமாம் விதைவிதைத்துப் பசுபோதங்களைக் களைந்து நீர்கால்பாய, வறிவுருவாய் விளைந்ததனிப் பரானந்தவமு தருந்தா தருந்திநின்றார். (கூரு)

மானிறாயுங்குயவரியும்வர்தொருங்குநின்றுரிஞ்சமயங்குகாலத்
தானிறாகன்றெனவிரங்கிமோந்துநக்கவானந்தவருட்கண்லழீராக்
கானிறாபுள்ளினம்பருகக்கருணைநெடுங்கடலிருக்குங்காட்சிபோலப்
பானிறவெண்ணீற்றன்பரசைவின்றிச்சிவயோகம்பயிலுநாளில். (கூசு)

* வடவனல்போற்றேன்றுமென்னும் பாடாந்தரம்.

புத்தர்சிலரிலங்கையினும்போந்துமூவாயிரமெய்ப்போதவேத
வித்தகரோடேழுநாள்வளையறுத்துச்சூளொட்டிவிவாதஞ்செய்வா
ரித்தகையநாளேழில்யாமிவரைவேறுமெனுமெண்ணம்பூண்ட
சித்தமுடையவராகவவர்கனவிலெழுந்தருளித்தேவதேவர். (கூஎ)

வாதவூரனைவிடுத்துவாதுசெய்வீரெனவிழித்துமறையோரந்தப்
போதவேதியரைவனம்புகுந்தழைத்தாரப்போதுபொதுவிலாடும்
வேதநாயகன்பணித்தவழிநின்றொதிர்மறுப்பமீண்டுபோந்து
காதராகுலமூழ்கியிருந்தார்முத்தமுனிமிர்த்துக்கலியைக்காய்வார். ()

பின்னுமவர்கனவின்கண்முன்றுணடம்பிரியாதபெருமான்வந்து [னு
முன்னவனைப்பெருந்துறையிற்குருந்தடியி லாட்கொண்டமுறையி
மின்னிசைவண்டமிழ்மணிபோற்பாடுங்காரணத்தாலும்யாமன்றிட்ட
மன்னியபேர்மாணிக்கவாசகனென்றறைமின்கள்வருவனென்றார். ()

உறக்கமொழிந்தறவோர்சென் றவர்காமமொழிந்தழைப்ப வுணர் க்குநீத, னறக்கருணையிதுவோவென் றவரோடுமெழுந்துநக ரடைந் துமண்ணுந், துறக்கமுநீத்தருவருத்தர் மன்றுடுத்துணைக்கமலந் தொ ழுதுமீண்டோர், நிறக்கனகமண்டபத்திற் புக்கிருந்தார்நிரைகுழா நெருங்கிச்சூழ. (க00)

மேற்படி - வேறு.

தத்துநீர்க்கலத்திற்போந்தசிவரப்போர்வைதாங்கும்
புத்தரைவேறுவைத்துப்புகன்மினும்மிறையுநூலு
மத்தலைநின்றேயொய்துங்கதியுமென்றாழ்ந்தகேள்வி
மெய்த்தவநெறிமாணிக்கவாசகர்வினாவினாரே. (க0க)

கனவினுநீறுகாணுக்கைதவர்காட்சியானு
மனவனுமானத்தானும்வாசகப்பெருமானம்மை
வினவியமூன்றுமுத்தேசாதியின்விதித்தார்வேத
மனையவர்கேட்டமூன்றுமனுவாதஞ்செய்துட்கொள்ளா. (க0உ)

இனறிவர்க்கனுமானுதியெடுப்பதென்னென்றுகாட்சி
யொன்றுகொண்டவர்கடாமேயுடம்படன்மறுத்தார்காட்சி
யன்றியேயின்மையாலேயனுமானவளவையானு
நின்றதன்றுங்கோணுநிறுத்தியமூன்றுமென்றார். (க0ங)

பொன்றுதன்முத்தியென்பார்பூசுரர்பிரானைநோக்கி
யின்றமைக்காட்சியொன்றால்வென்றனமென்றீரானு
னன்றுநுங்கடவுள்ளையளவையானுட்டியெம்மை
வென்றிடுமென்றாரைத்தும்வென்றவர்முறுவல்செய்யா. (க0ச)

பிறவியந்தகர்க்குவெய்யோன்பேரொளிகாட்டலாமோ
மறைகளாலளவைதன்னாற்றேர்வரான்மனத்தால்வாக்கா
லறிவருஞ்சோதியெங்கோனவன்றிருநீற்றுத்தொண்டின்
னெறிவழியன்றிக்காணுங்கொள்கையானல்லனென்றார். (க0ரு)

தேற்றமில்லாதாருங்கள்சிவனுக்குந்திருநீற்றுக்குந்
தோற்றுமிப்படியிட்டாங்குச்சொல்லுமினென்றார்தூயோர்
வேற்றுமையறநாமின்னேவிளக்குதுமதனைநீங்க
டோற்றமிலுமக்குத்தண்டம்யாதுசொல்சொன்மினென்றார். (க0சு)

செக்குரலிடையிட்டெழுமைத்திரிப்பதுதண்டமென்று
வெக்கராம்புத்தர்தாமேயிசைந்தனரொரிவர்யாகக்
கொக்கிறகணிந்தாரன்பருலர்ந்தகோமயத்தின்றவாங்கிச்
செக்கர்தழல்வாய்ப்பெய்துசிவந்திடவெதுப்பிவாங்கி. (க0எ)

இவ்வண்ணமிருக்குமெங்களிறைவன்னவடிவுமந்தச்
செவ்வண்ணமேனிபூத்ததிருவெண்ணீறதுவுமென்று
மெய்வ்வண்ணமுணர்ந்தவேதவித்தகரவைமுன்காட்ட
விவ்வண்ணமறியாமூடருள்ளமுமுயிருந்தோற்றார். (க0அ)

இங்கிவர்தோற்றவண்ணங்கேட்டவரிறப்பதின்பந்
தங்குவீடென்றுதேற்றுஞ்சமயத்திலாழ்ந்தவாத்திக்
கொங்கிவர்தாரான்மூவாக்குயிற்பெடையனைத்தாளின்ற
மங்கையைக்கொண்டுதில்லைமல்லன்மாநகரில்வந்தான். (க0கூ)

யாவரோயாகவின்றிங்கென்மகண்மூங்கைதீர்த்தோ
ராவரோவென்றேறொன்றாணற்றவுமானம்பூண்டு
சாவதேமுத்தியென்பார்மணிமூதன்மூன்றுந்தங்க
டேவரோவென்றென்றுள்கிச்செய்யவுந்தீராதாக. (கக0)

அந்தணர்பெருமான்முன்போயரசன்றன்மகளைப்போகட்
டிந்தகோய்தீரோதீர்க்கவேண்டுமென்றிரந்தானையன்
சுந்தரநாதன்மன்றுளாடியதுணைத்தாடன்னைச்
சிந்தைசெய்தருட்கணோக்காற்றிருந்திழையவளைநோக்கா. (ககக)

வேறுவேறிறைவன்கீர்த்திவினாவுரையாகப்பாடி
யீறிலானன்பர்கேட்கவிறைமொழிகொடுத்துமூங்கை
மாறினாள்வளவன்கன்னிமடவரல்வளவன்கண்டு
தேறினான்சிவனேயெல்லாத்தேவர்க்குந்தேவனென்று. (ககஉ)

பின்பரவாரம்பூண்டபிரானருள்விளையப்பாடு
மன்பரைமுனிவர்மூவாயிரவரையடியிற்றாழ்ந்து
முன்பவர்சொன்னவாறேமூர்க்கரைத்தடிந்துமன்று
ளின்பரைநடங்கண்டேத்தியிறைமகன்சைவனானான். (ககங)

மாசறுமணிபோற்பன்னான்வாசகமாலைசாத்திப்
பூசனைசெய்துபன்னாட்புண்ணியமன்றுளாடு
மீசனதடிக்கீழெய்தியீறிலாவறிவானந்த
தேசொடுகலந்துநின்றார்சிவனருள்விளக்கவந்தார். (ககச)

மணசுமந்தபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் - எ0 - க்கு - திருவிருத்தம் - ஙக0ரு.

அறுபத்திரண்டாவது

பாண்டியன்சுரந்தீர்த்தபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

வானலமுதமதிமுடிமேன்மதுரைப்பெருமான்மண்சுமந்து
தேனலமுதவாசகரைக்கதியில்விடுத்ததிறமிதுமேற்
பானன்மணிவாய்க்கவுணியனைவிடுத்துச்சமணர்படிற்றொழுகுங்
கூனல்வழுதிசுரந்தணித்தாட்கொண்டகொள்கைகூறுவாம். (க)

வாகுவலத்தான்சகநாதவழுதிவேந்தன்மகன்வீர
வாகுவலவன்சேய்விக்கிரமவாகுவவன்சேயபராக்கிரம
வாகுவனையான்மகன்சுரதமாறனனையான்றிருமைந்தன்
வாகுவலத்தான்மறங்கடிந்துமன்னனுங்குங்குமத்தென்னன். (உ)

அன்னான்குமரன்கருப்புரபாண்டியனுமவன்சேய்காருணிய
மன்னனுமவன்றன்மகன்புருடோத்தமனுமவன்றன்மகனாகு
மின்னார்மௌலிச்சத்துருசாதனபாண்டியனும்விறல்வேந்த
னின்னான்மகன்கூன்பாண்டியனுமிவன்றோள்வலியாலிசைமிக்கான்.

திண்டோள்வலியாற்குடநாடர்செம்மறனையுமாரலங்கல்
வண்டோலிடுதாரிரவிகுலமருமான்றனையுமலைந்துபுறங்
கண்டோர்குடைக்கீழ்நிலமூன்றுங்காவல்புரிந்துகோலோச்சிப்
புண்டோய்குருதிமறக்கன்னிப்புகழ்வேல்வழுதிநிகழ்நாளில். (ங)

விண்டுழாவுங்கைம்மாவும்வெறுக்கைக்குவையுமலிக்குவையும்
வண்டுவீழுந்தாரளகவல்லியாயமொடுகலிக்
கண்டுகூடற்கோமகனைக்காலில்வீழ்ந்துதன்னூடு
பண்டுபோலக்கைக்கொண்டோனுண்டேறேர்பனந்தாரான். (௫)

சென்னிக்கோனூர்தானீன்றதிலதடப்பிடியையுலகமெலா
மின்னிக்கோதில்புகழொளியால்விளக்குஞ்சைவமணிவிளக்கைக்
கன்னிக்கோலமங்கையருக்கரசிதன்னைக்கௌரியர்க்கு
வன்னிக்கோமுன்மணம்புணர்த்தியாங்கினன்றன்வளநாடு. (௬)

மேற்படி - வேறு.

வளவர்கோன்செழியன்கற்பின்மங்கையர்க்கரசியாருக்
களவறுநிதியஞ்செம்பொற்கலிங்கமுமணியும்போகம்
விளைநிலமனையவாயவெள்ளமும்பிறவுந்தென்ன
னுளமகிழ்சிறப்பவேந்தர்வரிசையாலுதவிப்பின்னர். (௭)

கோதறுகுணத்தின்மிக்ககுலச்சிறையென்பானங்கோர்
மேதகுகேள்வியானைவிடுத்தனன்மீண்டுதென்னன்
காதலியோடுமாயக்கடவுள்செம்பதுமக்கோயின்
மாதரைமணந்துசெல்வான்போல்வந்துமதுரைசேர்ந்தான். (௮)

மலர்மகண்மார்பன்பொன்னிமன்னவன்பயந்ததெய்வக்
குலமகளுடனேவந்தகுலச்சிறைகுணனுங்கேள்வித்
தலைமையுமதியுமிக்கதன்மையுந்தூக்கிநோக்கி
நலமலியமைச்சனாக்கிநானிலம்புரக்குநாளில். (௯)

வல்வினைவலியான்மெய்யில்வலியகூனடைந்தான்போலக்
கொல்வினையிலராய்வஞ்சங்கொண்டுழன்றுடுத்தபாசம்
வெல்வினையறியாகக்கன்வேடர்சொல்வலையிற்பட்டு
கல்வினையுதவாத்தென்னன்றன்மறையொழுக்கநீத்தான். (௧௦)

போதவிழ்தாரானக்கர்புன்னெறியொழுக்கம்பூண்டோ
னாதலிற்கன்னிநாடுமமணிருண்மூழ்கிப்பூதி
சாதனநெறியாஞ்சைவசமயமுமுத்திச்செல்வ
மாதவநெறியுங்குன்றமறைந்தறவேதநீதி. (௧௧)

பதியடுதலையும்பாயிலுடுக்கையும்பாசிப்பல்லு
முறிபொதிகலனுமத்திராத்தியென்றுரைக்குநாவு
மறிவழியுளம்போனுணர்றழிக்கவெற்றரையுங்கொண்டு
குறிகெடுமணங்குஞ்சூழ்ந்தாங்கமணிறைகொண்டதெங்கும். (௧௨)

அருந்தமிழ்ப்பாண்டிவேந்தர்க்குறுதியாவாக்கஞ்செய்யு
மருந்தினிற்சிறந்தகற்பின்மங்கையர்க்கரசியாரும்
பெருந்தகையமைச்சுநீர்த்தகுழைத்தன்றிடம்பிறங்கப்பேறு
தருந்திருநீறிடாராய்ச்சிவனடிச்சார்பினின்றார். (௧௩)

பொய்யுரைபிதற்றுமித்தப்புன்சமண்களைகட்டுண்டு
மெய்யுரைவேதநீதிவியன்பயிர்தலைச்செய்தோங்கச்
செய்யுநாவரோவென்றுசிந்தையிற்கவலைபூண்டு
வையகராகிக்கூடனுதலைவணங்கப்போனார். (௧௪)

பேதுற்றமுனிவர்க்கன்றுபெருமறைவிளக்கஞ்செய்த
வேதத்தின்பொருளேயித்தவெஞ்சமண்வலையிற்பட்டுப்
போதத்தையிழந்தவேந்தன்புந்தியைமீட்டிப்போதன்
பாதத்திலடிமைகொள்வாரென்றடிபணியுமெல்லை. (௧௫)

வேதியனொருவன்கண்டிவேடமும்பூண்டோன்மெய்யிற்
பூதியன்புண்டரீகபுரத்தினும்போந்தோன்கூட
லாதியைப்பணிவான்வந்தான்மங்கையர்க்கரசியாரு
நீதியமைச்சரொருசேர்படவவனைநோக்கா (௧௬)

எங்கிருந்திந்தணனீர்வந்தனீரொன்றாயந்த
புங்கவன்சென்னிபொன்னிநாட்டினும்போந்தேனென்று
மங்கவரங்குண்டானபுதுமையாதறைதியென்றார்
சங்கரற்கன்புபூண்டோனுண்டென்றுசாற்றுகின்றான். (௧௭)

ஏழிசைமறைவல்லாளர்சிவபாதவிதயனென்னக்
காழியிலொருவருள்ளார்காரமண்கங்குல்சீப்ப
வாழியிலிரவியென்னவொருமகவளித்தியென்ன
வூழியிலொருவன்றனையுள்கிநோற்றொழுகின்றார். (௧௮)

ஆயமாதவர்பாலீசனருளினாலுலகமுய்யச்
சேயிளங்கதிர்போல்வந்தான்செல்வனுக்கிரண்டாண்டெல்லை
போயபின்மூன்றுமாண்டிற்பொருகடன்மிதந்ததோணி
நாயகன்பிராட்டியோடும்விடையின்மேனடந்துவந்தை. (௧௯)

திருமுலைப்பாலினோடுஞானமுந்திரட்டிச்செம்பொற்
குருமணிவள்ளத்தேந்திக்கொடுப்பவப்பாலன்வாங்கிப்
பருகியெண்ணிறந்தவேதாகமப்பிவைபற்றிச்சார்வாய்
விரிகலைபிறவுமோதாதுணர்ந்தனன்விளைந்தஞானம். (௨௦)

நம்பந்தமறுப்போன்ஞானநாயகன்ஞானத்தோடு
சம்பந்தஞ்செய்யுஞானசம்பந்தனுகாவில்
வம்பந்தழைமெய்ஞ்ஞானவாணியுங்காணிகொள்ள
வம்பந்தமறைகளெல்லாமருந்தமிழாகக்கூறும். (௨௧)

கரும்பினிற்கோதுநீத்துச்சாறடுகட்டியேபோல்
வரம்பிலாமறையின்மாண்டபொருளெலாமாணத்தெள்ளிச்
சுரும்பிவர்கொன்றைவேணிப்பிரானிடத்தோறும்போகி
விரும்பியதென்சொன்மாலைசிவமணம்விளையச்சாத்தி. (௨௨)

வருமுத்தமுலையாள்பங்கனருளினாற்பசும்பொற்றுளந்
திருமுத்தின்சிவிகைகாளந்தெண்முத்தின்பந்தரின்ன
நிருமித்தவகைபோற்பெற்றுப்பாலையைநெய்தலாக்கிப்
பொருமுத்தநதிசூழ்வீழிப்பொற்படிக்காசுபெற்று. (௨௩)

அருமறைவணங்குங்கோயிற்கதவினையடைக்கப்பாடிப்
பரனுறைபதிகளெங்குந்தொழுதனர்பாடிப்பாடி
வருமவர்தங்கண்டுவணங்கவும்வருவரொன்றுத்
தருமநூலணிந்ததெய்வத்தாபதன்சாற்றலோடும். (௨௪)

கற்பலர்கொடியனாருந்தென்னவன்கண்போல்வாரு
மற்புறாயமண்பேயோட்டியன்றுதங்கோமான்மெய்யிற்
பொற்புறுநீறுகண்டுபூதிசாதனத்தாலெய்துஞ்
சிற்பரவீடுகண்டமகிழ்ச்சியுட்டிளைத்தோரானார். (௨௫)

தங்கள்பேர்தீட்டியோலைவிண்ணப்பஞ்சண்பைநாடர்
புங்கவர்க்குணர்த்தவந்தப்பூசுரன்கையிற்போக்கி
மங்கையர்க்கரசியாருமரசற்குமருந்தன்னானு
மங்கயற்கண்ணிகோனைப்பணிந்துதம்மகத்திற்புக்கார். (௨௬)

பண்படுவேதச்செல்வன்வல்லைபோய்ப்பழனவேலிச்
சண்பையர்பிரானைக்கண்டுபெறியுண்டுதலைகளெல்லாம்
புண்படத்திரியுங்கையர்பொய்யிருள்கடந்தார்தந்த
வெண்படுமோலைகாட்டிப்பாசுரமெடுத்துச்சொன்னான். (௨௭)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

வெங்குருவேந்த ரடியணிந்தடியேன் குலச்சிறை விளம்புவின்ணப்ப, மிங்கெழுந்தருளிச் சமணிருளோதுக்கி யெம்மிறை மகற்குநீறளித்துப், பொங்கிரும்பணைசூழ் தென்றமிழ்நாட்டைப் பூதிசாதன

வழிநிறுத்தி, யெங்களைக்காக்க வென்றபாசுரங்கேட் டெழுந்தனர்
கவுணியர்க்கிறைவர். (௨௮)

ஆதகாதிதுவென்றெழுதுவார்நாவுக்கரையர்நீர்சிறியவரவரோ
பாதகமஞ்சார்தம்மொடும்பன்னாட்பழகியவெனையவர்செய்த
வேதனையளந்துகூறுவதென்னைவிடுகதிலம்மவோவுமக்கிப்
போதுநாள்கோள்கள்வலியிலவென்னப்புகலியர்வேந்தரும்புகல்வார்.

எந்தையெம்பெருமா னருளிலார்போல வின்னணமிசைப்ப தெனவர்செய், வெந்தவேதனையி னுய்ந்தநீர்நாள்கோள் விலங்குபுள்ளவுணர் பேய்பூத, மந்தமில்பலவு மம்மையோடப்பனாணை யானடப்பனவவர்தஞ், சிந்தையேகோயில் கொண்டுவீற்றிருப்பத் தீங்கிழையாவென வெழுந்தார். (௩0)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

மாமுரசொலிப்பச்சங்கங்காகளம்வாய்விட்டேங்கச்
சாமரைபணிப்பமுத்தின்பந்தரிற்றரளத்தெய்வக்
காமருசிவிகைமேற்கொண்டமணிருள்கழுவுஞ்சோதி
யாமெனநெறிக்கொண்டேகனிடந்தொறுமடைந்துபாடி. (௩௧)

செம்பியனாடுநீங்கித்தென்னவனாடுநண்ணி
வெம்பியசுரமுமுல்லைப்புறவமுமேகவில்லைத்
தும்பிகைநீட்டிவாங்குமல்களுந்துறந்துயாகத்
தம்பிகையுடையான்கூடனகர்ப்புறனணுகச்செல்வார். (௩௨)

புண்ணியநீற்றுத்தொண்டர்குழாத்திருப்புகலிவேந்தர்
நண்ணியசிவிகைமீதுகைவிடுதாளப்பந்தர்
கண்ணியதோற்றந்தீம்பாற்கடல்வயிறுதித்துத்திர்ந்து
விண்ணியன்முழுவெண்டிங்கள்விளக்கமேயொத்ததன்றே. (௩௩)

தேம்படுகுமுதச்செவ்வாய்ச்சிரபுரச்செல்வர்முன்னம்
போம்பரிசனத்தார்தம்மிற்பொன்னெடுஞ்சின்னமார்ப்போர்
தாம்பரசமயசிங்கஞ்சமணிருள்கிழியப்பானு
வாம்படிவந்தாரென்றென்றார்த்தெழுமோசைகேளா. (௩௪)

நின்றுண்டுதிரியுங்கையரெதிர்வந்துநீவிர்நுங்கள்
கொன்றறஞ்சொன்னதேவைக்கும்பிடவந்தாலிந்த
வென்றிகொள்சின்னமென்கொல்வீறென்கொல்யாரைவென்றீ
ரென்றனர்தடுத்தாரென்றுமீறிலானடியார்தம்மை. (௩௫)

மாமதமொழுகச்செல்லுந்தின்டிறன்மத்தவேழத்
தாமரைநூலாற்கட்டத்தடைபடவற்றேகொற்றக்
காமனைமுனிந்தார்மைந்தரீயவர்தந்தடையைநீத்துக்
கோமணிமாடமூதூரடைந்தான்கோயில்புக்கார். (௩௬)

கைம்மலைசாபந்தீர்த்தகருணையங்கடலைத்தாழ்ந்து
மும்முறைவளைந்துஞானமுகிழ்முலைப்பாலினோடு
செம்மணிவள்ளத்தீந்ததிருவொடுந்தொழுதானந்த
மெய்ம்மையவெள்ளத்தாழ்ந்துநின்றனர்வேதச்செல்வர். (௩௭)

மறைவழிநின்றுநின்னைவந்திசெய்தய்யமாட்டா
திறைவழிவஞ்சநெஞ்சச்சமணர்நெறிகளெல்லாஞ்
சிறைபடவாதுசெய்யத்திருவுள்ளஞ்செய்திகூற்றைக்
குறைபடவுதைத்தோயென்றுகுறித்துரைபதிகம்பாடி. (௩௮)

வேண்டுகொண்டருளைப்பெற்றுமீளுமப்போதுகண்டு
மூண்டவைம்பொறியும்வென்றவாகீசமுனிகளென்ன
வாண்டுளாரொருவர்வேண்டவவர்திருமடத்திலன்பு
பூண்டெழுகாதலோடும்போயினார்புகலிவேந்தர். (௩௯)

அங்கெழுந்தருளியெல்லினமுதுசெய்திருப்பவற்றைக்
கங்குல்வாயமணர்செய்யுங்கருதருஞ்செயலுந்தங்கண்
மங்கலமரபின்வந்தாள்வருத்தமுங்காணவஞ்சிச்
செங்கதிரவன்போய்மேலைச்செழுங்கடல்வெள்ளத்தாழ்ந்தான். (௪௰)

மாறுகொளவுணர்செய்யும்வஞ்சனைக்கிடனாயொத்து
வேறகட்புச்செய்வான்வந்தெனவிரிந்தகங்கு
லீறறமுளைத்தவான்மீனினமவர்பறித்தசென்னி
யூறுபட்டெழுந்தமொக்குளொத்தவக்கங்குலெல்லை. (௪௧)

கலிநிலைத்துறை.

வைதிகத்தனியிளஞ்சிறுமடங்கலேறடைந்த
செய்தியைத்தெரிந்தயன்மலையிடங்களிற்றிரண்ட
கைதவத்தவெண்ணாயிரங்கயவருமொருங்கே
யெய்திமுத்தமிழ்விரகர்மேற்பழித்தழலிழைத்தார். (௪௨)

மெய்யில்சிந்தையாரத்தழற்கடவுளைவிளித்தாங்
கெய்தியெம்பகையாயினோரிருக்கையையழுது
செய்துவாவெனப்பணித்தனர்சிறுவிதிமகத்துக்
கையிழந்தவன்செல்லுமோவஞ்சினான்கலங்கி. (௪௩)

ஈனர்தாஞ்சுடத்தீயினையெடுத்தனரேகி
ஞானபோனகர்மடத்தினிற்செருகினார்கந்தா
தானதீப்புகையெழுவதையடியவர்கண்டு
வானநாயகன்மைந்தருக்குணர்த்தினர்வல்லை. (௪௪)

சிட்டர்நோக்கியத்தீயினைத்தென்றமிழ்க்கூட
லட்டமூர்த்தியையங்கிருந்தருமறைப்பதிகந்
துட்டர்பொய்யுரைமேற்கொண்டுதொன்முறைதுறந்த
விட்டவேந்தனைப்பற்றெனப்பாடினர்விடுத்தார். (௪௫)

அடுத்ததக்கணத்தாசனைவெப்புநோயாகித்
தொடுத்ததிட்டபல்கலன்களுந்துகளெழப்பனிநீர்
மடுத்தசாந்தமுங்கலவையுமாலையுங்கருகப்
படுத்தபாயலுஞ்சருகெழப்புரவலன்பதைத்தான். (௪௬)

வளவர்கோன்றிருமடந்தையுமந்திரேறுந்
தளர்வடைந்தகன்மருத்துநூல்விஞ்சையர்தமைக்கூஉய்ப்
பளகில்பன்மருந்தருத்தவும்பார்வையினாலும்
விளைவதேயன்றிவெஞ்சுரந்தணிவதுகாணார். (௪௭)

சவலைநோன்புழந்திம்மையுமறுமையுஞ்சாரா
வவலமாசரைவிடுத்தனரனைவரும்பார்த்துத்
துவலத்தினுமருந்தினுந்தணிந்திலதாகக்
கவலையெய்தினாரிருந்தனர்விடிந்ததக்கங்குல். (௪௮)

வட்டவாழியொன்றுடையதேர்ப்பரிதிதன்மருமான்
வெட்டகாதல்கூர்மருகனைப்பற்றியபிணிகேட்
டிட்டகாரிருளொழிவியையெடுத்தெடுத்தங்கை
தொட்டுநோக்குவான்வந்தெனத்தொடுகடன்முளைத்தான். (௪௯)

வாலிதாகியசைவவான்பயிரினைவளர்ப்பான்
வேலியாகியோரிருவரும்வேந்தனைநோக்கிக்
காலபாசமுஞ்சுடுமிகோயருமறைக்கொழிப்
பாலராலன்றித்தீர்த்திடப்படாதெனப்பகர்ந்தார். (௫௰)

பொய்யர்சார்பினைவிடாதவனீங்குநீர்புகன்ற
சைவர்நீறிட்டுப்பார்ப்பதுதகுவதோவென்ன
வையநீயெனைத்திறத்தினாலாயினுநோய்தீர்ந்
துய்யவேண்டுமேயிதனில்யாதுறுதியென்றுரைத்தார். (௫௧)

அழைமினீண்டெனவரசனுமிசைந்தனனவ்வந்
தழையுமந்திரத்தலைமகன்றனிககொங்கும்
விழவுதூங்கநன்மங்கலவினைகளால்விளக்கி
மழலையின்றமிழ்விரகர்தம்மடத்தில்வந்தெய்தா. (௫௨)

அன்றுகேள்வியாலருந்தியஞானவாரமுதை
யின்றுகண்களாலுண்டுகண்பெற்றபேறெய்திச்
சென்றிறைஞ்சினனெழுந்திருந்தியமண்சூழ்ச்சி
வென்றசிங்கையீரொன்றனர்பூந்தராய்வேந்தர். (௫௩)

நன்றிருந்தவிரோவெனநகைமலர்த்தடந்தார்
வென்றிமீனவன்கற்பினர்தம்மையும்வினவ
வென்றுநம்மருளுடையவர்க்கெவன்குறையென்று
வொன்றுகேண்மைகூரன்பினரிதனையுமுரைப்பார். (௫௪)

கையர்மாளவுநீற்றினாற்கவுரியன்றேய
முய்வதாகவுமின்றுநம்மருளினாலொவிநீர்
வையைநாடன்மேல்வெப்புநோய்வந்ததாலதனை
யையதீர்த்திடல்வேண்டுமென்றடியில்வீழ்ந்திரந்தார். (௫௫)

இரந்தவன்பருக்கன்னதாகென்றருள்சுரந்து
பரந்தநித்திலயானமேற்பனிக்கதிர்மருமான்
சுரந்தணிப்பவென்றேகுவாரொத்துமெய்ச்சுருதி
புரந்தளிப்பவர்பாண்டியன்கோயிலிற்புகுவார். (௫௬)

வாயிலெங்கணுந்தூபமுமங்கலவிளக்குந்
தோயகும்பமுங்கொடிகளுஞ்சுண்ணமுந்துவன்றிச்
சேயகாகளவொலிமன்னன்செவிப்புலன்சுவைப்பக்
கோயிலெய்தினாரமணர்தங்கோளரியனையார். (௫௭)

காவலோன்மருங்கிட்டதோர்கதிர்மணித்தவிசின்
மேவினாரவர்நோக்கினன்மீனவன்றெளிந்து
வாவிதாழ்செழுந்தாமரையெனமுகமலர்ந்து
பாவியேன்பிணிதணித்தெனைப்பணிகொண்மினென்றான். (௫௮)

புலைத்தொழிற்குவித்தாயினோர்கேட்டுளம்புழுங்கிக்
கலைத்தடங்கடனீந்தியகாவலோயுன்றன்
வலப்புறத்துநோயிவராயுமற்றைநோயெமையுந்
தொலைத்திடப்பணியென்றனர்கைதவன்சொல்வான். (௫௯)

அனையசெய்திகொன்றிசையுமுன்சமணருமசோகன்
றனைநினைந்துகைப்பீலியாற்றடவியுங்கரத்துக்
கனைகொளாவிநீர்சிதறியுநெய்சொரிகனல்போற்
சினவிமேலிடக்கண்டனர்தீர்க்கிடக்காணார். (௬௦)

தீயர்மானமிக்குடையராய்ச்செருக்கழிந்திருப்ப
பாயகேள்வியோர்புண்ணியப்பையுணீறள்ளிக்
காயநோயதுதணித்திடக்கருதினாரதனை
மாயநீறெனவிலக்கினார்மாயைசெய்தழிவார். (௬௧)

அண்டநாயகன்றிருமடைப்பள்ளிநீறள்ளிக்
கொண்டுவாருமென்றருமறைக்கவுணியர்கூறக்
கண்டுகாவலனேவலர்கைக்கொடுவந்தார்
வண்டுலாவுதார்வழுதிநோய்தணிப்பவர்வாங்கி. (௬௨)

மருந்துமந்திரம்யாவையுமறையுமாயதுவும்
பொருந்துமின்பவீடளிப்பதும்போகமும்பொருளுந்
திருந்துமாலவாயரன்றிருநீறெனச்செப்பி
யருந்துமின்னமுதனையசொற்பதிகமதறைந்து. (௬௩)

மெய்யிலிட்டனரருட்டுமம்வெஞ்சுரந்துறக்க
மையில்கதைதயோர்வெருளியிற்றணிந்துவாசஞ்
செய்ததண்பனிநீர்விரைச்சந்தனக்கிமிர்ந்தா
லெய்துதண்மையதாயினதிறைவலப்பாகம். (௬௪)

பொழிந்ததண்மதுத்தார்புனைபூழியர்கோனுக்
கிழிந்தசெய்கையர்கைதொடவெரியிடுசுரத்தாற்
கழிந்ததுன்பமுங்கவுணியர்கைதொடச்சுரந்தீர்ந்
தொழிந்தவின்பமுமிருவினையொத்தபோலொத்த. (௬௫)

ஜயவிச்சுரமாற்றரிதாற்றரிதென்று
வையைநாடவன்வல்லமண்மாசுதீர்ந்தடியே
னுய்யவேண்டுமேலதனையுமடிகளேயொழித்தல்
செய்யவேண்டுமென்றிரந்தனன்சிரபுரக்கோனை. (௬௬)

பின்னையாரிடப்பாகமும்பண்டுபோற்பெருமான்
வெண்ணீறுதொட்டங்கையானீவுமுன்மேனு
ளுள்ளகூனொடுவெப்புநோயொழிந்துமீனுயர்த்த
வள்ளன்மாசறக்கடைந்தவிண்மணியெனப்பொலிந்தான். (௬௭)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அன்னதொரு காரணத்தாற் சவுந்தரிய பாண்டியனென் றாகிய
ன்ன, தென்னவர்கோன் கவுணியர்கோன் றிருநோக்காற் பரிசத்தா
ற்றெருட்டும்வாக்காற், பொன்னடிதாழ்ந் தைந்தெழுத்து முபதேசப்
பேறடைந்து பொலிவால்வஞ்சம், துன்னமணர் நெறியிகழ்ந்து தொ
ல்வேத நெறியடைந்து தூயனானான். (௬௮)

பாண்டியன்சுரந்தீர்த்தபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் - ௬௨ - க்கு - திருவிருத்தம் - ௩௧௭௩.

அறுபத்துமூன்றவது

சமணரைக்கழுவேற்றியபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

பஞ்சவன்றடைந்தநோயைப்பாலறுவாயர்தீர்த்து
நஞ்சணிகண்டனீறுநல்கியவண்ணஞ்சொன்னே
மஞ்சலராகிப்பின்னும்வாதுசெய்தடங்கத்தோற்ற
வஞ்சரைக்கழுவேற்றிட்டவண்ணமுஞ்சிறிதுசொல்வாம். (௧)

தென்னவன்றேவியாருமமைச்சருட்சிறந்தசிங்க
மன்னவன்றானுங்காழியந்தணரடியில்வீழ்ந்தெம்
மன்னவன்வெப்புக்கூனும்பாசமுமாற்றினீரே
யின்னமுமடியேம்வேண்டுங்குறைசெய்தக்கதென்றார். (௨)

கன்னிநாடெங்குமிந்தக்காரமண்காடுமூடித்
துன்னினவிதனையின்னே துணித்திடல்வேண்டுமென்றா
ரன்னவராலவாயார்திருவுள்ளமறிவேமென்று
வுன்னியமனத்தராகியொய்யெனக்கோயில்புக்கார். (௩)

அவ்விருவோருங்கூடவடைந்துபொற்கமலம்பூத்த
திவ்வியதீர்த்தந்தோய்ந்துசேணெடுங்கண்ணியாக
நவ்வியங்கமலச்செங்கைநாதனைத்தாழ்ந்துவேந்தன்
வெவ்வியவெப்புநீத்தார்தொழுதிதுவினவுகின்றார். (௪)

காயமேயொறுத்துநாளுங்கைதவம்பெருகநோற்கும்
பேயரிம்மையோடுமறுமையும்பேறற்றாரை
நீயுரைசெய்தவேதவேள்வியைநிந்தைசெய்யுந்
தீயரையொறுத்தல்செய்யத்திருவுளஞ்செய்தியென்றார். (௫)

வெம்மதவேழங்காய்ந்தவிடையவர்விசும்பிற்சொல்வா
ரெம்மனோராவீர்துங்கட்கிசைந்ததேயெமக்கும்வேண்டுஞ்
சம்மதமதனால்வெல்லத்தக்கவராகநீரே
யம்மதமுடையார்தோற்கத்தக்கவராகவென்றே. (௬)

எம்மொழிதேறினீர்போயிறைமகனவையத்தேறிச்
செம்மையிலாரைவாதுசெய்திர்நீரனையர்தோற்று
வெம்முனைக்கழுவிலேறிவிளிகுவரென்னக்கேட்டு
மைம்மலிகளத்தான்மைந்தர்தொழுதுதம்மடத்திற்போனார். (௭)

இருவருமீண்டுதந்தமிருக்கையிற்போகியன்றைப்
பருவமங்கைகலப்பின்றைபாண்டிமாதேவியாரும்
பெருமதியமைச்சரோடும்பின்னையார்மடத்திற்போகி
யருகரைவெல்லுஞ்சூழ்ச்சியாதெனவனைந்துதேர்வார். (௮)

பேரருணிறைந்தகாழிப்பெருந்தகையுடன்போய்த்தங்கோன்
சீரவைகுறுகியீதுசெப்புவார்செய்யகோலாய்
காரமண்காடேயெங்குங்கழியவுமிடைந்தவின்ன
வேரொடுங்களைந்தாற்சைவவிளையுமேரோங்குமென்றார். (௯)

அவ்வண்ணஞ்செய்வதேயென்றரசனுமனுச்சைசெய்யச்
செவ்வண்ணவெண்ணீற்றண்ணலனுச்சையுந்தெரிந்துதேய
மூவ்வண்ணமிதுவென்றங்கனுண்மகிழ்ந்திருந்தார்நீண்ட
மைவ்வண்ணவாரம்பூண்டார்புகழெங்கும்பரப்பவல்லார். (௧௦)

கலிவிருத்தம்.

அந்தவேலையருகந்தக்கையரைக்
குந்தவேற்கட்குலம்படமாதரு
மைந்தராகியமக்களுங்கன்னமுல்
சிந்தநோக்கியிகழ்ந்திவைசெப்புவார். (௧௧)

செழியர்கோமகன்சூழ்ந்தியதீப்பிணி
கழியமாற்றும்வலியின்றிக்கற்றிலா
மழலைவாயொருமைந்தற்குத்தோற்றுவெம்
பழிவிளைத்தீர்பகவன்றமார்க்கெலாம். (௧௨)

சாம்பராடுஞ்சமயம்புகுந்துவெம்
பாம்பணிந்தவனேபகவானென
வேம்பனுங்கள்விரதநெறியெலாஞ்
சோம்பலெய்தத்துறந்தாளிகழ்ந்தரோ. (௧௩)

ஏதுமக்குநிலையினியென்றவப்
போதுமற்றவர்தம்மைப்புறகிட
வாதுசெய்தற்கெழுந்தனர்வஞ்சகர்
போதுமென்னத்தடுத்தனர்பூவைமார். (௧௪)

செல்லன்மின்கணுமக்கிதுசெவ்வியன்
றல்லல்கூரவருந்துன்பத்தாழுநர்
மெல்லிகண்டகனவுண்டிதனையாஞ்
சொல்லுகேமென்றுகேண்மெனச்சொல்லுவார். (௧௫)

கலிநிலைத்துறை.

இடையறுதரும்பாழியும்பள்ளியுமெங்குஞ்
சடையர்முஞ்சியர்சாம்பலர்தாங்கியசூலப்
படையர்நீவிழிப்புலவுவாய்ப்பாய்பெரும்புலித்தோ
லுடையராய்ச்சிலர்வந்துவந்துலாவுதல்கண்டேம். (௧௬)

கன்னியிற்றுறவன்னங்கள்கணவனிற்றுறவின்
மன்னுமாரியாங்கனைகளுல்வாங்குமக்குசைக
ளென்னமூவகைப்பெண்டவப்பள்ளிகளெல்லாஞ்
சின்னவெண்பிறைக்கோட்டுமாசிதைக்கவுங்கண்டேம். (௧௭)

முண்டிதஞ்செய்ததலையராய்முறுக்குறிதூங்கு
குண்டிகைத்தடங்கையராய்க்கோவணம்பிணித்த
தண்டுதாங்கியசுவலராய்ச்சடையன்பேர்நாவிற்
கொண்டசைத்தனராயெங்குங்குலாவவுங்கண்டேம். (௧௮)

காந்துவெங்கதமுடையதோர்கயந்தலைவந்து
சூழ்ந்துகொண்டுநம்மடிகண்மார்கணமெலாந்துரத்தி
யேந்துபூஞ்சினையலைத்திடவிரங்கிவண்டிரியப்
பாய்ந்துபிண்டியைவேரொடும்பறிக்கவுங்கண்டேம். (௧௯)

அந்தமூவிலைவேலினுமயின்மூனைக்கழுவின்
பந்திமீதுநீரேறவுங்கண்டுளம்பனிப்பச்
சந்தமார்பகஞ்சேப்பவந்தளிர்க்கரம்புடைத்துக்
கந்தவார்குழல்சோரவுங்கலுழவுங்கண்டேம். (௨௦)

தன்னருந்திறலிந்திரசாலமேமாதி
யுள்ளவிஞ்சையிவ்வெல்லைவந்துதவிலவொன்றுங்
கள்ளராற்பறிபட்டவோகனலில்வெந்தனவோ
வெள்ளங்கொண்டவோசேமத்திற்கிடப்பவோவிளம்பீர். (௨௧)

தாவுதீவளர்த்தெழுகரிதன்னையாடரவை
யாவையேவிமுன்னம்மனோர்பட்டதுமறிந்தீர்
காவலன்பிணிதணித்திலீரினிச்செயுங்கருமம்
யாவதாகுமோவதனையுமெண்ணுமினென்றார். (௨௨)

இற்றைவைகலுக்கேகன்மினென்றனராறத்தைச்
செற்றவஞ்சகர்செல்லுவார்திரும்பவுங்கையைப்
பற்றியீர்த்தனர்பெண்டிர்சென்றுகேட்பதும்பழுதென்
றுற்றதீவினைவழிச்செல்வாரொழித்தனர்செல்வார். (௨௩)

கொங்கலர்க்குழல்சரிந்திடக்குரத்தியர்பின்னு
மெங்கள்சொற்கொளாதேகுவீர்பரிபவமெய்தி
யுங்களுக்கிடையூறுவந்துறுமெனச்சபித்தா
ரங்கதற்குமஞ்சார்செல்வார்ழியுகாளேத்தார். (௨௪)

புட்களும்பலவிரிச்சியும்போகலென்றெதிரே
தட்கவுங்கடந்தேகுவார்தடங்கயலுகைப்பக்
கட்கவிழ்ந்தலர்கிடங்கர்சூழ்கடிநகர்ப்புறம்போ
யுட்குநெஞ்சராயாவருமோரிடத்திண்டி. (௨௫)

யாதுசூழ்ச்சியென்றெண்ணுவாரிறைவனைக்கண்ட
தோதிரமவனுமதியுறுதிகொண்டனைய
வேதிலாளனைவாதிலவ்வேறுமென்றிசைந்து
போதுவார்நகர்புகுந்துவேத்தவைக்களம்புகுவார். (௨௬)

ஆயபோதிளங்காலையிற்கவுணியராலவ
வாயர்சேவடிபணிந்துதம்மடத்தினிற்செல்லக்
காயுமாதவச்செல்வனைக்கண்குலஞ்சூழ்ந்தாங்
மாயவஞ்சகர்வந்திடைவழித்தலைமறித்தார். (௨௭)

மறித்தகையர்பின்செல்லமுன்மன்னவைகுறுகிக்
குறித்தவாளரித்தவிசின்மேற்கொச்சையர்பெருமா
னெறித்தசேயினம்பரிதியினேறிவீற்றிருந்தார்
பறித்தசீத்தலைப்புலையர்கள்பொருதிவைபகர்வார். (௨௮)

மழலையின்னமுந்தெளிகிலாமைந்தகன்மணியொன்
றழல்கருக்கொடியிருந்திடக்கனியுதிர்ந்தாங்குன்
சுழல்கொள்விஞ்சையினன்மையான்மன்னனைத்தொடுத்த
தழலவித்தனமென்றுநீதருக்குறத்தகுமோ. (௨௯

கந்தாருநீர்வண்டுசென்னடைவழியெழுத்தாய்
வந்துவீழினும்வீழுமவ்வழக்கினின்கையிற்
சிந்துசாம்பருஞ்சிறுசொலுமருந்துமந்திரம்போற்
சந்தருழ்மலையான்சுரந்தணிந்தனகண்டாய். (௩௦

உங்கண்மந்திரமேயொன்றிற்றீட்டுகவோரொட்
டெங்கண்மந்திரந்தன்னையுந்தீட்டுகவிரண்டு
மங்கிவாயிடின்வெந்ததுதோற்றதவ்வங்கி
துங்கிடாததுவென்றதென்றெட்டியேறவலா. (௩௧

செக்கரஞ்சடையானுறைபதிகளிற்செய்யத்
தக்கதன்றவனடுகிலைபிழைத்துநஞ்சார்வாய்
விக்குமெம்மனோர்க்கியற்றுவான்வேறொருதலத்திற்
புக்கமர்ந்துவாதஞ்செயப்போதுகமென்று. (௩௨)

வென்றிமாமுரசுறங்கிடாவியனகர்ப்புறம்போய்
மன்றல்வேம்பன்முன்கதழெரிமடுத்திடற்பிழைப்ப
தோன்றுவேவதொன்றீதுகொண்டுமர்களுமெமரு
மின்றுவெல்வதுந்தோற்பதுங்காண்டுமென்றெழுந்தார். (௩௩)

எழுசீரடியாசிரிய விருத்தம்.

ஈட்டுவஞ்சநெஞ்சரோயெழீஇநகர்ப்புறம்புபோய்க்
கீட்டிசைக்கணோரழற்கிடங்குதொட்டெழுந்துவா
னீட்டுகோடரங்குறைத்துநிறைபவிட்டுகெட்டெரி
மூட்டினார்தமாதரார்வயிற்றுமிட்டுமூட்டினார். (௩௪)

ஞானமுண்டமுனிவர்தம்மையெள்ளியெள்ளிகாயினு
மீனரங்கியைத்தடுத்திருப்பவெண்ணிராயிர
ரானதொண்டருடனெழுந்துசண்பைவேந்துமாசனு
மானனுருமந்திரக்கிழானும்வந்துவைகினார். (௩௫)

உள்ளவிழ்ந்தமுலைசுரந்தொழுக்குபாலருந்தியே
துள்ளியோடுகன்றுபின்றொடர்ந்துசெல்லுமானென
வெள்ளியம்பலத்துளாடும்வேதகீதர்காதல்கூர்
பிள்ளைபோனவாறுதம்பிராட்டியோடுமெய்தினார். (௩௬)

ஆறிரேழிரண்டடுத்தவாயிரஞ்சமணரும்
வேறுவேறுதாமுயன்றமந்திரங்கள்வேறுவே
றாறுநீர்சுரந்தவோலையிற்பொறித்தொருங்குபோய்ச்
சீறிவானிமிர்ந்தெழுந்ததீயின்வாய்கிரப்பினார். (௩௭)

அக்கிவாய்மடுத்தவேடனைத்துமக்கணத்தினே
யிக்குவாயுலர்ந்ததோடெனக்கரிந்துசாம்பரா
யுக்கவாறுகண்டுநீசருட்கிடந்துபொங்கவே
திக்குளார்கள்கண்டபேர்சிரித்துளார்களாயினார். (௩௮)

விரிந்தவேதநாவர்தாம்விரித்தவேதமெய்ப்பொருள்
வரைந்தபுத்தகத்தைவன்கயிற்றினால்வகிர்ந்துதா
மருந்தஞானவமுதளித்தவம்மைபேரகப்படத்
தெரிந்தவேடெடுத்தடுத்ததீயின்வாயிலிட்டனர். (௩௯)

மறைபுலப்படுத்தநூல்வரைந்தவேடனந்நரா
ளரைபுனற்கிடந்ததாமெனப்பசந்ததரசனு
நிறையமைச்சமரசியாருநின்றபேருமந்தணர்க்
கிறைவனைப்புகழ்ந்தனைப்பிலின்பவெள்ளமூழ்கினார். (௪௦)

வெந்தசிந்தையமணர்வாதுவெல்வதற்குவேறிடம்
புந்திசெய்துவந்தவப்பொதுத்தலம்பொதுக்கடிக்
தந்தனூளர்வாதுவென்றவன்றுதொட்டுஞானசம்
பந்தனென்றநாமமேபடைத்துயர்ந்ததின்றுமே. (௪௧)

அன்னவேடுமுறையிரேழிறுக்கியந்தணாளர்கோன்
மன்னைநோக்கவினையிரேடுபோயுடுத்தமாசர்தாஞ்
சொன்னசூள்புலப்படத்துணிந்தும்வாய்மைநாணரீஇக்
கன்னிநாடனவைசிரிக்கவாற்றலாதுகத்துவார். (௪௨)

ஏடனைத்துமெழுதியிட்டபச்சையேடனையிரம்
வீடவெந்தவைந்துவிட்டவோலையொன்றுமென்
வாடலின்றிநீரிலிட்டவண்ணமானதாலிதன்
பாடலஞ்செய்விஞ்சைகொண்டுபாவகற்பிணித்ததே. (௪௩)

உங்களேடுமெங்களேடுமும்பர்வானளாய்விளைவுப்
பொங்கியோடும்வையைநீரிலிடுகவிட்டபோதுதா
னங்குநீரொதிர்க்குமோலைவெல்லுமோலையன்றியே
தங்கவேலைசெல்லுமோலைதோற்குமோலையாவதே. (௪௪)

வென்றுவீறடைந்தவர்க்குவீறழிந்துதோற்றபே
ரென்றுமேவலடிமையாவதென்றிசைத்துநைகதவக்
குன்றுபோலுநின்றகுண்டர்கூறலோடுமீறிலா
மன்றுளாடுமடிகண்மைந்தர்வாய்மலர்ந்துபேசுவார். (௪௫)

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

அடியார்பதிணூறுயிரவருள்ளார்சிவனையவமதித்த
கொடியார்நீவிருமக்கேற்றதண்டமிதுவோகொன்றைமதி
முடியாருளாலுங்களைநாம்வென்றேமாயின்மூவிலைவேல்
வடிவாணிரைத்தகழுமுனையிலிடுவேமதுவேவழக்கென்றார். (௪௬)

ஊழின்வலியாலமணரதற்குடன்பட்டார்களஃதறிந்து
சூழியானைக்குலச்சிறையுந்தச்சர்பலரைத்தொகுவித்துக்
காழிநெடியபழுமரத்திற்குலவடிவாக்கழுநிறுவிப்
பாழிநெடியதோள்வேந்தன்முன்னேகொடுபோய்ப்பரப்பினார். (௪௭)

தேறலார்தமைக்காழிச்செம்மலுக்கிளிவம்மி
னீறுபூசிக்கண்டிகையும்பூண்டுதிருத்தொழுந்தைந்து
கூறவோதிப்பாசமொழித்துய்மினென்றுவறநோக்கிக்
கூறினார்மற்றதுகேட்டுக்குண்டரெரியிற்கொதித்துரைப்பார். (௪௮)

முன்புநீயில்வென்றனமேநீரில்யாதாய்முடியுமென
வன்புபேசியெமையிணக்கியகலிலைந்தாயல்லதைநீ
யின்புவாதுசெயத்துணியும்பெற்றியுரைத்தாயல்லைபுலா
லென்புபூணியடியடைந்தவேழாய்போதியெனமறுத்தார். (௪௯)

ஊகந்தவழும்பழுமரத்தையுதைத்துக்கரைமாறிடவொதுக்கிப்
பூகந்தடவிவேர்கீண்டுபொருப்பைப்பறித்துப்புடைபரப்பி
மாகந்துழாவிக்கடுகிவரும்வையைப்புனலைமந்திரத்தால்
வேகந்தணிவித்தேடெழுதிவிடுத்தார்முன்போல்வென்காதார். (௫0)

சிறையேய்ப்புனல்சூழ்வேணுபுரச்செல்வர்யாருந்தெளிவெய்த
மறையேவாய்மையுளயாகின்மறைகண்முழுதுந்துணிபொருடான்
பிறையேய்வேணிப்பிரானுஞ்செய்பெருநீறோதிரேசெல்கவென
முறையேபதிகமெடுத்தெழுதிவிட்டார்முழங்கிவருபுனலில். (௫௧)

தேசம்பரவுங்கவுணியர்கோன்விடுத்தவேடுசெழுமதுரை
யீசனருளாங்கயிறுபிணித்தீர்ப்பதிபோலெதிரேற
நாசஞ்செய்யும்பொறிவழியேநடக்குமுள்ளமெனச்சென்று
நீசரேடென்னுயிரமுகீத்தவழியேயொழுகியவால். (௫௨)

சிங்கமனையாரெழுதுமுறையெதிராற்றேறத்தெரிந்தமர [ர்
ரங்கணனும்பூமழைபொழிந்தாரறவோர்துகில்விண்ணெறிந்தார்த்தா
ரங்கையணிந்தார்திருத்தொண்டர்கண்ணீர்க்கடலிலழுந்தினார்
வெங்கணமணர்நடுங்கியுடல்வெயர்வைக்கடலிலழுந்தினார். (௫௩)

வேமேயென்பதறியாதேவெல்வேமென்றேகூளாட்டி
காமேயிட்டவேடெரியில்வேவக்கண்டுநகைக்கெதிரே
போமேயின்னம்வெல்வேமென்றிட்டவேடும்புனரிபுகத்
தாமேதம்மைச்சுடநாணிநின்றாரமணர்தலைதூக்கி. (௫௪)

பொருப்பேசிலையாப்புரங்கடந்தபுனிதனேயத்தேவர்க்கும்
விருப்பேபோகம்வீடுதருமேலாங்கடவுளெனநான்கு
மருப்பேய்களிற்றுன்முடிதகர்த்தான்மருமானறியக்குருமொழிபோ
னொருப்பேயன்றிவேதவதிகீரும்பின்னர்த்தேற்றியதால். (௫௫)

பொய்யின்மறையின்புறத்தமணர்புத்தர்க்கன்றிவாய்மையுரை
செய்யுமறைநூல்பலதெரிந்துஞ்சிவனேபரமென்றறியாதே
கையில்விளக்கினொடுங்கிடங்கில்வீழ்வார்போலக்கலங்கிமன
மையமடைந்தபேதையர்க்குமறிவித்ததுவேயதுவன்றே. (௫௬)

கண்டுகூடற்கோமகனுக்கற்புநிறைந்தபொற்புடைய
வண்டுகூடுந்தாரளகவளவன்மகளுமந்திரியுந்
தொண்டுகூடுமடியாருங்காழிக்கரசைத்தொழுதுதி
விண்டுகூடற்கரியமகிழ்வெள்ளத்தழுந்தியந்தனரால். (௫௭)

நன்றிதேறார்பின்புள்ளமானமிழந்தாணழிந்து
குன்றுபோலுந்தேசணிபுரக்கோமானெதிரேயாங்களுமக்
கின்றுதோற்றேமெம்மையீண்டுநீரேவென்றீரெனநேர்ந்து
நின்றுகூறக்கவுணியர்கோனவையாருய்யுநெறிநோக்கா. (௫௮)

இன்னமறத்தாறினிச்சக்கின்றேநீரோன்வாளாவிறக்கின்றீ
ரன்னையனையாளெம்மிறைவனலுக்காளாயுய்மின்க
ளென்னவேடசிறியாய்நீயெவ்வாறெங்கட்கடாதமொழி
சொன்னதென்றுமானமுளார்கழுவிலேறத்தொடங்கினார். (௫௯)

மேற்படி-வேறு.

மதத்தினின்மானமிக்கார்தாங்களேவலியவேறிப்
பதைத்திடவிருந்தாரேனைப்பறிதலையவரைச்சைவ
விதத்திறுலொழுக்கம்பூண்டவேடத்தார்பற்றிப்பற்றிச்
சிதைத்திடர்செய்தேயிட்டார்திரிதலைக்கழுக்கோறன்னில். (௬0)

வழிவழிவருமாணக்கர்சாத்துவருந்திசெஞ்ச
மழியவர்திருநீறிட்டாரதுவிட்டாதயர்வாரவி
ழிவில்கோமயத்தையள்ளிப்பூசினாரிதுவுங்கிட்டா
தொழிபவராவின்கன்றைத்தோளிலிட்டுயிரைப்பெற்றார். (௬௧)

கூறிட்டமூன்றுங்கிட்டாதயர்பவர்குற்றந்தீர
நீறிட்டார்நெற்றியோடுநிருமலகோமயத்தின்
சேறிட்டார்நெற்றியோடுநெற்றியைச்செறியத்தாக்கி
மாறிட்டபாசந்தன்னைமறித்திட்டுப்பிறப்பைவெல்வார். (௬௨)

மற்றிவர்தம்மையூற்றஞ்செய்திலர்மடிந்தோர்யாருஞ்
சுற்றியசேனங்காககரிகளாய்த்தொடர்ந்துகௌவிப்
பற்றிநின்றீர்த்துத்தின்னக்கிடந்தனர்பருமயானை
வெற்றிகொள்வேந்தன்காழிவேந்தனைத்தொழுதுநோக்கா. (௬௩)

இன்றுநீரிட்டவேடிங்கியாவருங்காணநேரோ
வென்றதேயெங்கேயென்றானதனையாஞ்செம்பொற்கூடன்
மன்றவரருளாலின்னேவருவிப்பமென்றுவாதி
வென்றவர்நதியின்மாடேமேற்றிசைநோக்கிச்செல்வார். (௬௪)

செல்லுநர்காணவோலைகாவதஞ்செல்வதப்பா
லொல்லையங்கொளித்தவோடம்வியர்த்வரொருங்குகூடிக்
கொல்லையான்மெய்த்துநின்றார்சிலர்தமைக்குறித்துநீரிவ்
வெல்லையுள்விசேடமுண்டோவிவண்கண்டதிசையினென்றார். (௬௫)

அவ்விடைச்சிறார்கள்யாங்களொன்றையுமறியேமென்ன
விவ்விடைவிசேடங்காணல்வேண்டுமெத்திறத்துமென்னாத்
தெவ்விடைவாதுசெய்யத்திருவுளக்கருணைசெய்த
வெவ்விடைக்கொடியினாரைப்பாடினார்வேதகாவார். (௬௬)

பாட்டின்மேற்கருணைவைத்தார்சயம்புவாய்ப்பராரைவில்லக்
காட்டினுளிருப்பநேரேகண்டுதாழ்ந்தெழுந்துசண்பை
நாட்டினார்வலங்கொண்டேத்தியெதிர்நின்றார்நகைத்தார்கிம்பத்
தோட்டினனதுகேட்டங்கேதோன்றினான்றுளையோகம். (௬௭)

அந்தமாவில்வகத்தீசனுயிரமதியங்கண்ட
முந்தைவேதியராய்த்தோன்றிமுத்தமிழ்க்கரசைநீயென்
மைந்தனுமினையோனொப்பாய்வருகெனநீறுசாத்திச்
சிந்தைநீளார்வங்கூரத்திருவருள்சுரந்துநின்றார். (௬௮)

நின்றவந்தணரையன்றுநிருமலஞானமீந்தா
ரொன்றுகண்டிறைஞ்சியையநீரில்யானிட்டவேடு
சென்றதிங்கெடுத்தீர்நீயஃதுநுஞ்செல்வர்க்கேற்ற
தன்றதைத்தருதியென்றாரறுமுகச்செம்மலன்னார். (௬௯)

இன்னமும்பன்னாளெம்மையிடந்தொறும்பாடியெஞ்சும்
புன்னெறியொழுகுவாரைவென்றுநம்புனிதவீடு
பின்னர்நீபெறுதியென்னாவேடுதந்தாசிபேசி
மின்னெனமறைந்துநின்றார்வேதியராயவேடர். (௭௦)

தாதையார்கவர்ந்துமீளத்தந்தவேடதனைவாங்கிப்
போதையார்ஞானமுண்டார்புரிசடைப்பிரானாரெனவி
யீதையாமிரந்துவேண்டத்தந்தனமென்றுகூறிக்
கோதையார்வேலினாற்குக்காட்டவக்கொற்கைவேந்தன். (௭௧)

கச்சனைவரவமார்த்தகருணையங்கடலிற்றோன்று
விச்சானஞானமுண்டாராற்றலின்விளைவுதேறு
தச்சானவலியானும்மையளந்தனனடியேனிந்தத்
துச்சானபிழைதீர்த்தாள்கென்றிறைஞ்சினன்றுணர்த்தார்வேம்பன்.

அந்நெடுமேருவாங்குமாடகச்சிலையினார்க்குப்
பொன்னெடுஞ்சிகரக்கோயின்மண்டபம்புயலைக்கீண்டு
மின்னெடுமதியஞ்சூடுங்கோபுரமேகந்தாவுங்
கன்னெடும்புரிசைவீதியாவையுங்களிப்பக்கண்டான். (௭௩)

அற்றைநாளாதியாகவேடகமென்னுநாமம்
பெற்றதாலேடகத்தின்மேவியபிரானைப்பாண்டிக்
கொற்றவன்சமணரோடுங்கூடியபாவமெல்லாம்
மற்றறப்பூசைசெய்துபாசமுங்கழியப்பெற்றான். (௭௪)

நறைகெழுதுழாயினானுஞ்சதுமுகனாகர்வேந்து
முறையினாலுங்கண்மூன்றும்பூசித்துமுடியாவின்ப
நிறையருள்பெற்றாரன்னநிராமயலிங்கந்தன்னை
யிறுதியாழுகத்திற்பாண்டியிறைமகன்பூசைசெய்தான். (௭௫)

அங்கண்மாநகர்கண்டாங்கோராண்டிறைகொண்டுகாழிப்
புங்கவரோடும்பின்னாட்பூழியர்பெருமான்மீண்டு
மங்கலமதுரைசேர்ந்துவைகுநாணிற்றுச்செல்வ
மெங்கணும்விளங்கச்சின்னாளிருந்துபின்ஞானச்செல்வர். (௭௬)

வடபுலத்துள்ள்வீசன்பதிகளும்வணங்கிப்பாடக்
கடவமென்றெழுந்துகூடற்கண்ணுதற்பெருமான்றன்னை
யிடனுறைகயற்கண்ணாளிறைஞ்சிப்பல்வரனும்பெற்று
விடைதொடுதமிழ்நாடெங்கும்பணிந்தனர்மீண்டுபோவார். (௭௭)

தன்பெருங்கற்பினாளுமமைச்சனுந்தமிழ்நர்கோனும்
பின்புமுனந்தண்காழிப்பிரானடிபிரிவாற்றா
யன்புதந்தவர்பானட்டவன்றுதொட்டானுக்கேண்மை
யின்பமுந்துன்பமாகவிணைந்துமுன்வீரப்பப்போனார். (௭௮)

சண்பையார்தலைவர்தாழுமனையராய்த்தம்பின்செல்லு
நண்புடையவரைநோக்கிநம்மிடத்தன்புநீங்காப்
பண்பினராகிநீருபாறுகாத்திசன்கீர்த்தி
மண்படவாழ்மினீதுமறுக்கன்மினின்மினென்றார். (௭௯)

ஆளுடைப்புகலிவேந்தாருண்மொழிமறுக்கவஞ்சித்
தாளுடைப்பதுமச்சென்தாடலைபுறப்பணிந்துமீண்டு
வாளுடைத்தானைத்தென்னன்மதுரையில்வந்தான்கஞ்சத்
தோளுடைச்சிங்கமன்னார்சோழர்கோளூடுபுக்கார். (௮௦)

ஞானமாமதநீர்சோரஞானசம்பந்தனென்னு
மானமாயானைவந்துகடம்பமாவனத்திற்றன்னு
மூனமாஞ்சமணரென்னுந்தருக்களையொடித்துவெண்ணீ
றுனமாப்பூழியள்ளித்தூற்றியதவனியெங்கும். (௮௧)

கலிநிலைத்துறை.

ஆதியாலயத்தடலைகொண்டாழிசூழ்காழிச்
சோதிவேதியர்பாண்டியன்சுரந்தணித்துடலிற்
பேதியாதகூனிமிர்த்தலாற்பிறங்குகற்பாதிப்
பூதியாவினுஞ்சிறந்ததவ்வட்டிலவாயப்பூதி. (௮௨)

சமணரைக்கழுவேற்றியபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் - ௬௩ - க்கு - திருவிருத்தம் - ௩௨௫௫.

அறுபத்துநான்காவது

வன்னியுங்கிணறும் இலிங்கமுமழைத்தபடலம்.

எழுசீரடியாசிரியவிருத்தம்.

சென்னிவெண்டிங்கள் மிலைச்சியமதுரைச் சிவனருளடைந்த சம்பந்தர், துன்னிருஞ்சமணைக் கழுமுனையேற்றித் துணித்தவாறி சைத்தனம்வணிகக், கன்னிதன்மன்றற் கரியினைமாற்றுள் காணவக் கண்ணுதலருளால், வன்னியுங்கிணறு மிலிங்கமுமாங்கு வந்தவாறெடுத்தினியுரைப்பாம். (௧)

பொன்மலர்க்கைதை வேலிசூழ்வேலைப் புறத்தொருபட்டினத் துள்ளான், மின்மணிக்கொடிமூ ணொருகுலவணிகன் வேறுவேறும் பலசெல்வத், தன்மையிற்சிறந்தோன் மகவிலனாகித் தன்மனக்கினிய தேர்காட்சி, நன்மனைக்கொடியோ டம்பலபுரிந்தோர் நகைமதிக் கொம்பையீன்றெடுத்தான். (௨)

அத்தனவணிகற்குரியனன்மருகனவன்முதற்கடிமணமுடித்தோன்
முத்தமிழ்மதுரைப்பதியுளானவற்கேமுறையினானேர்ந்தானபயந்த
வித்தகமயிலைக்கொடுப்பலென்றனையவியற்குலவணிகர்கோன்றன்னே
டொத்தபல்கிளைஞர்யாவருமறியவுணர்த்தினான்சிலபகலொழிய. (௩)

ஊழ்வினைவலியாலாருயிரிழந்தானுயிர்க்குடம்பனையதன்கற்பின்
சூழ்கதிர்மணிப்பூண்மனைவியுமிறப்பத்துணிந்தனளவரிருவோர்க்கு
மாழ்கடற்கிளைஞர்செயத்தகுகடன்களாற்றியச்செய்தியைமதுரை
வாழ்தருமருகற்குணர்த்துவானோலைவிடுத்தனர்மருமகன்வாங்கா. (௪)

தன்னருண்மாமன்றுஞ்சினன்கூடத்தாரமுந்துஞ்சினப்பா
லன்னவர்க்களவின்றாகியதனமுண்டவனனிகாண்மகவின்றிப்
பின்னொருபெண்ணைப்பெற்றனனவளைத்தனக்கெனப்பேசினனனைய
கன்னியைமணந்துசெல்கெனமூடங்கற்கழறியபாசுரந்தெரியா. (௫)

வீழ்ந்தனன்றரைமேற் புரண்டனனுயிர்ப்பு வீங்கினன்விழிப்புன ல்வெள்ளத், தாழ்ந்தனன்விம்முற் றம்மவோவென்றென் றரற்றின ன்கிளைஞர்கட்படைந்து, வாழ்ந்தவர்தழுவத் தழீஇத்தழீஇக்கரைந் தான் மற்றவர்தேற்றிடத்தெளிந்து, சூழ்ந்தவெந்துயர்நீத் தொருத லைமாமன் றென்னகர்க்கேகுவான்றுணிந்தான். (௬)

அங்குளவிளைஞர்சிலரொடுங்கூடியருங்கடிமதுரைநீத்தேகிப்
பொங்கிருங்கழிசூழ்பட்டினங்குறுகிப்புகுதுவான்வரவறிந்தங்குத்
தங்குதங்கிளைஞர்வினவுசேர்வாரைத்தழீஇத்தழீஇச்செலவிடுத்தேகிக்
கொங்கிவர்தளவத்தாரினான்மாமன்கோயில்புக்கிருந்தனனாக. (௭)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

நாள்சிலகழிந்தபின்னர்காய்கதோறனையானன்ன
வாள்புரைகண்ணிதனைமதுரையிற்கொடுபோயங்கென்
கேளிர்முன்வேட்பலென்றுகிளர்ந்துதன்மாமனீட்டு
நீள்பெரும்பொருள்கண்மற்றுங்கைக்கொண்டுநெறியிற்செல்வான். ()

வழிவிடவருவார்தம்மைநிறுத்திப்பின்மதுரைமூதூர்க்
கெழுதருசுற்றத்தாரைமுன்செனியென்றுபோக்கித்
தொழுபரிசனமுந்தானுந்தோகையும்வைகலொன்றிற்
கழிவழியளவைமேற்பெய்தகாவதமாகப்போவான். (௯)

வெங்கதிர்வேலைசெல்லும்வேலைவந்தணையுமுன்ன
யிங்கிருந்தொழிகமென்றுப்புறம்பியமூதூரெய்தி
யங்கிறைகோயின்முன்னிக்கூவனீராடியங்குத்
தங்கியவன்னிமாடேபோனகஞ்சமைத்துண்டெல்வாய். (௧0)

மலைவைத்தசிலையான்கோயின்மருங்கொருபடியினும்பர்த்
தலைவைத்துத்துயிலுமெல்லைவிதிவழிச்சாரவந்தோர்
கொலைவைத்தவிடவாய்நாகங்கடித்ததுகொதித்துநீண்ட
விலைவைத்தகொடும்பூணாய்கன்விடந்தலைக்கொண்டுமாய்ந்தான். (௧௧)

அங்குளபரிசனங்களாவலித்திரங்கிச்சூழக்
கொங்கைகள்புடைத்துச்சேடிக்குற்றிடைமகளிரோங்கச்
சிங்கவேறனையானைக்கண்டிடாதொதுங்கியோர்த
பங்கயமலர்க்கொம்பன்னாள்பாவைபோற்புறம்புகின்றாள். (௧௨)

கலிநிலைத்துறை.

ஆளியேறன்னவனரவின்வாய்ப்பட்டதுமவிந்தது
மீளிவேலுண்கணாள்கைக்குலைத்தழுவதும்விழுவதுங்
கேளிர்சூழ்ந்தயர்வதுஞ்சோர்வதுங்கண்டிளங்கிளியனாள்
வாளியேறுண்டதோர்*மயலின்வீழ்ந்துயங்கினாண்மயங்கினாள். ()

* மயிலின் எனவும் பாடாந்தரம்.

வடிக்கணாட்செருகினவருகினவுயிர்ப்பழல்வாய்ப்படுந்
தொடுத்தபூங்கோதைபோற்சோர்ந்ததாகங்கரஞ்சோர்ந்தன
வடித்தளிர்சோர்ந்தனகன்னியன்னப்பெடையன்னவ
ளிடிக்கெதிர்ப்பட்டுவீழ்ந்தாளெனக்கிடந்தனளென்செய்வாள். (௧௪)

சாயும்பூங்கொம்பரிற்சூழ்ந்திறந்தான்புறஞ்சார்ந்தழூஉ
மாயமென்மகளிர்மீண்டன்பனோடெடுக்கைதனாவியும்
போயதேகொல்லெனமடியுறக்கொடுக்கையாற்புறந்தழீஇத்
தூயதுசெறிந்திளைப்பாற்றினார்சிறிதுயிர்தோற்றவே. (௧௫)

மெய்கழிந்தின்னுயிர்மீண்டுதன்யாக்கையின்மெல்லவே
வைகலந்தாங்கிருகாலியங்குற்றனகண்களும்
பொய்கைநீலஞ்சிறிதவிழ்ந்தெனவலர்ந்தனபூண்வயை
மைகழிகாண்முதனான்குநால்வேலியாய்வளைந்தவே. (௧௬)

கைவெறியுங்குழற்கற்றைசோருந்திரிகாறுளி
நெய்யெனக்கண்புனல்கொங்கைமுற்றத்துகநெஞ்சுகும்
மையவாய்விடும்புறம்பார்க்குநாணொடுந்தளைப்படுஞ்சிறு
தெய்வந்தொட்டாளெனத்தேம்பிவிம்மாத்தொளிதேயுமால். (௧௭)

வணங்கில்செல்வந்தழீஇப்பிறந்தகாடொட்டொருவைகலு
மணங்கெனக்கனவிலுங்கண்டிலாளன்பன்மேலன்பெனு
மிணங்குதன்னுருவமாய்நிறைவரம்பிற்றெனவிருந்தோர்பெண்
ணணங்குவாய்விட்டழுதாலெனப்புலம்பலுற்றாளரோ. (௧௮)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

என்னையகனேயோவென்னிருகண்மணியேயோவென்னையீன்றான்
றன்னாவியன்னதனிமருகாவோமுருகாவோதாரார்முல்லை
மன்னுவேளவணிகர்குலமணியேயோவிடவரவின்வாய்ப்பட்டாயோ
வுன்னாகநிழலானவென்னைவிடுத்தெவ்வண்ணமொளிப்பதேயோ. ()

பொன்னாட்டின் மடவாரைப் புணர்வதற்கோ நம்மளகா புரத்
துவேந்த, னன்னாட்டின் மடவாரை மணப்பதற்கோ வுனைக்கடித்த
நாகர்வேந்தன், றன்னாட்டின் மடவாரைத் தழுவுதற்கோ வென்னா
வித் தலைவாவென்னை, யிக்காட்டி விருத்தியெனை வஞ்சித்துப்போ
யினவா றென்னேயென்னே. (௨0)

தென்னுலகிற்புகுத்தனையோபணித்தனையோமாதுலனைத்தேவியோடு
தன்னிருதோளுநவாரத்தழுவினனேரானுமுடன்சார்ந்தேனுங் [கு
லென்னுரியகுரவரையுங்கண்ணாரக்காணேனேவேளையீங்கிட்டாய்
பின்னுரியபரிசனமுங்கைவிட்டாய்தனிப்போயென்பெற்றாயையா. (

வரிசைமருமகனரவால்விளித்ததுகானறைபோயமணத்தோடிக்குப்
பரிவுறலுமெனைப்பயந்தார்சோற்றபயனன்றாகப்பலித்ததேயோ
பெரிதவரிக்கட்கலக்கக்காணுமுனிறந்தன்றேபிழைத்தாரந்தோ
வரியதிலுமரியபயனிதுவன்றேவெவர்பெற்றாரவர்போலம்மா. (௨௨)

உன்காதன்மாமனெனைப்பயந்தவன்றேயுறவறியவுனக்கேபேசிப்
பின்காதன்மனைவியொடுமுயிரிழந்தான்யானுமந்தப்பெற்றியாலே
யென்காதலுயிர்போகவெற்றுடம்போவிருக்குமுடனிறப்பேனென்று
தன்காதற்றுணையிழந்தவன்றிலெனவிருந்தழுதாடமியளானாள். [ல்

மேற்படி - வேறு.

நன்னகருறக்கநீங்கிநெக்குமுற்றழுங்கக்காழித்
தென்னகர்ஞானச்செல்வர்சிவனகர்தொறும்போய்ப்பாடி
யங்ககரடைந்தாரங்கோரணிமடத்திருந்தார்கேட்டீ
தென்னெனவாள்விட்டாய்த்துகோயிலினிடைவந்தெய்தி. (௨௪)

கன்னியீயாரையுற்றதென்னெனக்கன்னிதாழ்ந்து
தன்னருமரபுமீன்றார்தம்மையுமருகற்கென்றே
யுன்னினர்மன்றல்பேசியிறந்ததுமுயிரன்னானோ
டிங்கெறியடைந்திங்குற்றதிகழ்ச்சியுமெடுத்துச்சொன்னாள். (௨௫)

தந்தையுந்தாயுமன்னோர்தமியளாயிருக்கும்பேதைப்
பைந்தொடியாவிகாப்பான்பாம்புகோட்பட்டான்மாடே
வந்தவனுகமெல்லாமருந்துருவாகும்வண்ணஞ்
சிந்தைசெய்தருட்கண்வைத்தார்குறித்ததுநீலாயகஞ்சம். (௨௬)

எழுந்தனனுறங்கினான்போலிறந்தவன்யாருங்கண்டு
தொழுந்தகைஞானவேந்தைத்தொழுதனர்துதிசெய்தார்வத்
தழுந்தினர்கன்னியன்னமனையவளின்பத்தேன்
பொழிந்தொருபுறத்தேகஞ்சம்பூத்ததோர்கொம்பினின்றாள். (௨௭)

தலைவனையிறந்தபோதுந்தனியுயிர்பெற்றபோதுஞ்
சிலைநுதல்காதன்மாமன்செல்வியாயிருந்தாடீண்டா
நிலைமையுமன்புங்கற்பினீர்மையும்வியந்துநோக்கி
மலைமகன்ஞானமுண்டார்வணிகனைநோக்கிச்சொல்வார். (௨௮)

வருதிநின்மரபுக்கெல்லாமணியனுயுன்றன்மாமன்
றருதிருவனையாளின்பஞ்சாருநாடன்பம்வந்து
பெருகுநாளன்றியென்றுன்மெய்தொடப்பெறுவளீண்டே
திருமணமுடித்துக்கொண்டுபோகெனச்செப்பலோடும். (௨௯)

செங்கணேறனையானையன்றிருமொழிதலைமேற்கொண்டு
பங்கயன்படைத்தசாதிநான்கையும்பாதுகாப்பீ
ரொங்குலவணிகரின்றிக்கரிகளுமின்றியீங்கே
மங்கலமுடிக்குமவண்ணமியாதெனவணங்கிச்சொன்னான். (௩௦)

கன்னியையீன்றஞான்றேயுனக்கென்றன்காதன்மாம
னுன்னியதறவினுள்ளாரறிவரோயுனக்கீதன்றி
வன்னியுங்கிணறுமிந்தவிலிங்கமுங்கரிகண்மைந்தா
விந்நிலைவதுவைசெய்தியெம்முனாகடவாதென்றார். (௩௧)

மாசறுமனத்தான்காழிவள்ளலைப்பணிந்துநீரே
தேசிகர்குரவர்கட்டோர்தெய்வமுங்கிளையுமென்னாப்
பேசியவாறேவேள்விப்பெற்றியானிநீஇத்தான்வேட்ட
பாசிழையோடுந்தாழ்ந்துவிடைகொடுபரவிப்போனான். (௩௨)

ஏவல்செய்யாயத்தாருமடியருமீண்டவீண்டிக்
காவல்செய்மதுரைமூதூர்குறுகித்தன்காதன்மாமன்
பூவையைமணந்தவண்ணக்கேட்டக்குப்புடைசூழ்சுற்றம்
யாவருமுவப்பவின்புற்றிருந்தனனிளங்கோமன்னன். (௩௩)

தன்பெருந்தனமுமாமனீட்டியதனமுமீட்டி
மன்பெருநிதிக்கோனென்னவாணிகம்பெருக்கிநாய்க
னின்புறுகாதலார்களிருவருமின்றகாத
லன்பொருள்மகிழ்ச்சிசெய்யகலம்பெறவாழுநாளில். (௩௪)

மூத்தவள்சிறுவர்சாலமூர்க்கராயுள்ளாரேனை
மாத்தளிரியலினோட்கோர்மைந்தனுண்டிவனுமன்ன
நீத்தொழிலுகமன்னசிறார்களுமல்லறச்செல்வம்
பூத்தநீணியமத்தூடுபோய்விளையாடல்செய்வார். (௩௫)

முந்தியமனைட்டிமைந்தர்முகிழ்முலைவிளையபாளை
மைந்தனையொருநாட்சீறியடித்தனர்வருந்தியீன்ற
சுந்தணிமுலையாண்மாற்றாடகயனைவைதாளின்ற
பைந்தொடிதானுஞ்சீறியிளையனைப்பழித்துவைவாள். (௩௬)

வந்தவூரொத்தசாதியார்மகள்யாவர்காணச்
செந்தழல்சான்றுவெங்கோன்கடிமணஞ்செய்துவந்த
கொந்தவிழ்கோதைநீயென்கொழுநனுக்காசைப்பட்டு
வந்தவளானகாமக்கிழத்திக்கேன்வாயும்வீறும். (௩௭)

உரியவன்றீமுன்னாகவுன்னைவேட்டதற்குவேறு
கரியுளதாகிற்கூறிக்காட்டெனக்கழறலோடு
மெரிசுடவாடிச்சாய்ந்தவிணர்மலர்க்கொம்பிற்சாம்பித்
தெரியிழைநாணஞ்சாய்ப்பநின்றிதுசெய்யுகின்றாள். (௩௮)

அரவின்வாய்ப்பட்டவைகலாருயிரளித்தருணைப்
புரவலரருளாலெங்கோன்புறம்பியாதன்வன்னித்
தருவொடுகிணறுங்காணச்செய்தனன்சான்றமூன்று
கரிகளுமுள்ளவென்றாள்கற்பினாலொப்பிலாதாள். (௩௯)

மாற்றவணகைத்துநன்றுநன்றுநின்மன்றல்வேள்விக்
கேற்றனகரியேசொன்னாயிங்குமக்கரிகண்மூன்றுந்
தோற்றுமேலதுவுமெய்யேயென்றனடோகையோடும்
வேற்றுமையிலாதசாயலிளையவள்விழுமங்கூரா. (௪0)

வெவ்வுயிர்ப்பெறியவில்போய்மெல்விரனெரிக்குங்கையா
லவ்வயிறதுக்கும்வீழுங்கண்புனல்வெள்ளத்தாழுங்
கொவ்வைவாய்துடிக்குநாணந்தலைக்கொளுங்கூசுமன்றே
தெய்வமேயாவாவென்னுமென்செய்கேன்சிறியேனென்னும். (௪௧)

தாதைதாயிறந்தவன்றேதமியளாயிங்குப்போந்த
பேதையேற்காருண்டையபேதுறும்வணிதற்கன்று
மாதுலனாகிஞாதிவழக்கறுத்துரிமையீந்த
காதனேயேதிலாள்வாய்க்கவையினிற்காத்தியென்னா. (௪௨)

அன்றிரவுண்டியின்றித்துயிலின்றியழுங்கிப்பின்னாட்
பொன்றிணிகமலவாவிப்புண்ணியப்புனறோய்ந்தண்ட
நின்றிழிவிமானக்கோயினிரம்பியவழகர்முன்னாச்
சென்றிருதாளில்வீழ்ந்துதன்குறைசெப்பிவேண்டும். (௪௩)

அன்றெனைக்கணவன்வேட்டவிடத்தினிலதற்குச்சான்றாய்
நின்றவைத்தருவுங்கிணறுமங்கிலையேயிங்கு
யின்றுவந்தேதிலாள்வாய்க்கவைதுடைத்தெனைக்காவாயேற்
பொன்றுவலென்றாள்கற்பின்புகழினைநிறுத்தவந்தாள். (௪௪)

அல்லலுற்றழுங்கிநின்றாள்பரிவுகண்டந்தண்கூட
லெல்லையில்கருணைமூர்த்தியருளினாலெவருங்காணத்
தொல்லையின்படியேயன்னாள்சொல்லியகரிகண்மூன்று
மொல்லைவந்திறுத்தகோயிலுத்தரகுணபாலெல்லை. (௪௫)

அன்னபோதிளையாண்மூத்தாட்கொண்டுபோயாலவாயெம்
முன்னவன்றிருமுன்றாழ்ந்துகாட்டுவாண்முகிறோய்சென்னி
வன்னியீதிலிங்கமீதுகிணறிதென்மன்றற்சான்றாந்
துன்னியவென்றாள்கண்டாண்முடித்தலைதூக்கிநின்றாள். (௪௬)

அவ்விடைத்தருவுநீருமன்றுபோலின்றுசான்றா
யிவ்விடைப்பட்டவென்னவதிசயமெவர்க்குந்தேறத்
தெய்வமுமெளிவந்தங்கைக்கனியினித்திருவினன்னாள்
கைவசப்பட்டதென்றாற்கற்பினுக்கரிதேதம்ம. (௪௭)

மங்கைதன்கற்புமீசனிடத்தவள்வைத்தவன்பு
மங்கணனவட்குச்செய்தவருளையும்வியந்துநோக்கி
மங்கலநகரெல்லாமகிழ்ச்சியுளாழ்ந்தார்முல்லைத்
தொங்கலான்முதுமனாட்டியொருத்தியுந்துன்பத்தாழ்ந்தாள். (௪௮)

மேதகுவணிகர்மூத்தவினைக்கொடியாளைப்பொல்லாப்
பாதகியிவளாமென்றுபழித்தனர்படிறுபேசிக்
கோதறுகுணத்திளைக்குடிப்பழுதுளாத்தாய்நீயென்
காதலியாகாவென்றுகணவனுந்தள்ளிவிட்டான். (௪௯)

அந்நிலையிளையாள்கேள்வனடியில்வீழ்ந்திரப்பாளைய
வென்னதுகற்பையின்றுநிறுத்தினாளிவண்மாற்றான்
றன்னையிலாதேற்கன்னையாயினாளிவளும்யானு
மின்னுயிருடல்போல்வாழ்வேமெனத்தழீஇத்தம்மினட்டார். (௫0)

உடம்பிறப்பிரண்டேயன்றியுயிர்பொருளிரண்டற்றுள்ள
மடம்படமூழ்க்காதற்றுமைந்தருமனையராக
விடம்படுமையவாய்நாகம்விழுங்கிளையொத்துத்தம்மி
லிடம்படுமன்புற்றின்புற்றிருவருமிருந்தார்மன்னோ. (௫௧)

அருந்ததியனையாள்கேள்வற்காயுளுமாணச்செல்வப்
பெருந்தனநிறைவுஞ்சீருமொழுக்கமும்பீடும்பேறுந்
தருந்தவநெறியுங்குன்றாத்தருமமும்புகழும்பல்க
விருந்தனள்கமலச்செல்வியென்னவீற்றிருந்துமன்னோ. (௫௨)

பொன்னவிர்கமலம்பூத்தபொய்கைசூழாலவாயெம்
முன்னவன்விளையாட்டெல்லைகண்டியார்மொழியவல்லா
ரின்னமுமளவின்றென்பவென்குருநாதசாமி
சொன்னவாறுங்கட்கெண்ணெண்காதையுஞ்சொன்னேனம்ம. (ருங)

எழுசீரடியாசிரிய விருத்தம்.

என்றுதென்மலைமே விருந்தமாதவத்தோ னின்னருட்குருபரன்றனையு, மன்றவன்றிருவாய் மலர்ந்தவாசகமு மருள்கனிந்தொழுக வுள்ளடக்கித், தென்றமிழால வாய்த்தனிப்பதியைச் சென்னிமேற் பன்னிரண்டெம்ப, ரொன்றவைத்திமையா வங்கயற்கண்ணி யுடனுறையொருவனை நினைந்தான். (ருச)

பரவசமடைந்து வழிகவர்ந்துண்ணும் பழிப்புலவேடர்போயொளிப்ப, விருள்வெளிகடந்து திருவருள்வழிச்சென் றெண்ணிலாசசராசரமனைத்தும், புரைவறநிறைந்து காட்சிகள்காண்பான் புதையடத்தனித்தபூரணமா, யுரையுணர்விறந்த வுண்மையானந்த வுணர்வினையுணர்வற வுணர்ந்தான். (ருரு)

வன்னியுங்கிணறு மிலிங்கமுமழைத்தபடலம் முற்றிற்று.

ஆகப்படலம்-எகக்கு-திருவிருத்தம்-ஙஙகo.

அறுபத்தைந்தாவது

அருச்சனைப்படலம்.

எழுசீரடியாசிரியவிருத்தம்.

கன்னிதன்வதுவைக்கரிகளாயிலிங்கக்கடவுளுங்கவைக்கருங்கோட்டு
வன்னியும்படுநீர்க்கூவலும்வந்தவழியிதுமதுரைநாயகனைச்
சென்னியில்வைத்தமுனிவனைப்பூசைசெய்துமாதவரொருங்கெய்திப்
பன்னிறமலர்தூஉயாலவாயானைப்பரவியபரிசதுபகர்வாம். (க)

போதவானந்தத்தனிக்கடல்பருகும்புயல்புரைமுனிவனைவசிட்ட
மாதவனாதிமுனிவருமுலோபாமுத்திரைதன்னொடும்வரித்துப்
போதொடுசாந்தமான்மதந்தீபம்புகைமுதற்கருவிகைக்கொண்டு
மேதகுசிறப்பாலருச்சனைசெய்துபின்னுமோர்விறுவுளாசெய்வார். ()

கொச்சகக்கலிப்பா.

கோட்டஞ்சிலைகுனித்தகூடற்பிரானுடல்
கேட்டஞ்செவிபடைத்தபேறடைந்தேங்கேட்டபடி
நாட்டங்களிப்பநறுமலர்தூஉய்க்கண்டிறைஞ்சி
வேட்டங்கள்யாங்களெனவோதினார்மெய்த்தவரே. (ங)

என்றவறவோரெதிரேமுகமலர்ந்து
குன்றமடக்குங்குறுமுனிவன்கூறுவா
னன்றுமுனிகாளிதனைநானுள்ளத்தெண்ணியாய்
கொன்றமொழிக்கீதொன்றன்பின்னும்வியந்தோதுவான். (ச)

பண்ணுன்மறைமுடியுந்தேறுபரசிவனை
யெண்ணுளவிறந்தவெக்கலையாற்கண்டுமளக்
கண்ணுலப்பியாதார்வீட்டின்பங்காண்பரோ
மண்ணுதியாருறுநீத்ததனிமாதவரே. (ரு)

அஞ்செவியினூறுபடக்கேட்டபடியாலவாய்ப்
பஞ்சமுகச்சோதிப்பரனைப்போயர்ச்சித்து
நெஞ்சநெக்கக்கண்டுநினையாவழிநினைந்து
வஞ்சவினைவேர்களைவான்வம்மின்களென்றானே. (சு)

மங்கலவோரைவருதினத்திவ்வானிழிந்த
கங்கைபடிந்துலகநாயகனைக்கைதொழுது
புங்கவர்முன்சங்கற்பஞ்செய்துநுசைபூண்டொழுகி
யங்கவர்வாயாசிமொழிகேட்டமகிழ்ந்தே. (எ)

ஐம்புலனுங்கூடற்பெருமானடியொதுக்கி
நம்பனுருவைந்தெழுத்துநாவாடக்கைகூப்பித்
தம்புனிதசைவதவத்தெய்வத்தேர்மேற்கொண்
டும்பர்வழிநடக்கவுற்றார்கணற்றவரே. (அ)

செய்யசடையர்திருநீறுசண்ணித்த
மெய்யர்தவகோற்றினைத்தமேனியினுருட்புறம்புக்
காய்யரணிகண்டிகையர்தோளுமருங்குடைய
ரையதவத்துங்கனிகலம்போற்போதுவார். (கூ)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

புண்ணியந்தழைக்குந்தெய்வத்தலங்களும்புலன்கள்வென்றோர்
கண்ணியமனமுந்தீர்த்தநதிகளுந்தவத்தோர்நோற்கும்
வண்ணமுநோக்கிநேரேமலயமாமுனிவன்காட்டக்
கண்ணிணைகளிப்பநோக்கிக்கைதொழுதிறைஞ்சிச்செல்வார். (௧௦)

சீறுகொளிலங்கைவேந்தைச்செகுத்திடவிராமன்பூசித்
தாறணிவிருபக்கண்ணனருள்பெறுதலமீ * தும்ப
ரேறிவீழ்ந்திறந்தோர்முன்னமெண்ணியதெண்ணியாங்கே
மாறியபிறப்பினல்குமலையிதுகாண்மின்காண்மின். (௧௧)

* விருபாக்ஷம். திருப்பருப்பதம்.

சுரபிகீள்செவியிலிங்கச்சுடருருவாயினுன்ற
னிரவினிற்றிருத்தேர்மன்றனடக்குமூரிவ்வூர் * மேலை
யுரவுநீர்க்கரைத்தேண்மாதத்துயர்ந்தகார்த்திகையிற்றேரூர்க்
தரவுநீர்ச்சடையான்வெள்விடைக்குமூரவ்வூர்காண்மின். (௧௨)

* திருக்கோகர்ணம். திருவஞ்சைக்களம்.

விற்பயிறடக்கைவேடன்மென்றவூன்பாகம்பார்த்தோன்
பொற்புறுகிரியீ * தண்டம்புழைபடவிடத்தாணீட்டி
யற்புதன்காளிதோற்கவாடியதிது * மாசீழற்
கற்புடையொருத்திநோற்கும்பிலமிதுகாண்மின்காண்மின். (௧௩)

* திருக்காளத்தி. * திருவாலங்காடு. திருக்காஞ்சிபுரம்.

திருமறுமார்பன்காவற்செயல்பெறவரனைப்பூசித்
திருகரமுகிழ்த்துநேர்நின்றேத்திடமிதுவா * மோத்தி
னுரைவரம்பகன்றமுக்கணுத்தமன்சந்தைகூட்டி
யருமறையறவோர்க்கோதுவித்திடமதனைக்காண்மின். (௧௪)

* திருமாற்பேறு. திருவூத்தூர்.

அடிமுடிவிலங்கும்புள்ளுமளந்திடாதண்டங்கீண்டு
நெடுகியநெருப்புநின்றகிலையிது * முள்வாய்க்கங்க
வடிவெடுத்திருவர்நோற்குமலையிது * பலவேறூழி
யிடையுறமுன்னும்பின்னுமிருக்குமிக்குன்றைக்காண்மின். (௧௫)

* திருவண்ணாமலை. * திருக்கழுக்குன்றம். விருத்தாசலம்.

அவுணரிற்கள்வருளவந்தகற்காய்ந்துமூன்று
புவனமுங்கவலைதீர்த்தபுண்ணியன்புறமீதாகும் *
தவலரும்புரங்கண்மூன்றுந்தழறுதற்றிருக்கண்சாத்திய
பவமறுமூவரன்பிற்பட்டவன்பதியைக்காண்மின். (௧௬)

* திருக்கோவலூர். திருவதிகை.

சத்தியஞானந்தத்தத்துவமசைவற்று
நித்தியபரமானந்தநிறையருண்மன்றமீது *
முத்தியங்குதித்தோரெய்தும்பதியது * முதனூன்கும்
பத்தியிற்பூசித்தேத்தும்பதியிதுவாகும்பார்மின். (௧௭)

* சிதம்பரம். * திருவாரூர். திருமறைக்காடு.

பிரமன்மான்முதலாந்தேவர்பிரளயத்திறவாவண்ணம்
பரமனார்தோணியேற்றும்பன்னிருநாமம்பெற்ற
புரமிது * சடாயுசம்பாதிகள்பெரும்பூசைசெய்ய
வரமளித்திருநோய்தீர்க்குமருந்துறைபதியீதாகும். (௧௮)

* திருத்தோணிபுரம். புள்ளிருக்குவேளூர்.

மதிநுதலிமயச்செல்விமஞ்ஞையாய்வழிபட்டேத்து
மிதுதுலாப்பொன்வித்தான * மெம்மனோர்மூன்றுகோடி
மதிபெறுமுனிவர்வந்துவழிபடுமூரீ * திப்
பதியறக்கடவுள்பூசைபண்ணியதானங்காண்மின். (௧௯)

* மாயூரம். * திருக்கோடிகா. தருமபுரம்.

கோடுகொன்குடையவேழந்தாருகன்குறைந்தகோட்டைப்
பாடறநோற்றுப்பெற்றபதியிது * மாலைசாத்துந்
தாடகைமானங்காப்பான்றுழ்ந்துங்கசிட்டரக்கும்
பீடுறுகலையனம்பியிமியிர்த்தவெம்பிரானூரீதாம். (௨௦)

* திருவெண்காடு. திருப்பனந்தாள்.

கரிமுகத்தவுணற்காய்ந்துகரிமுகத்தண்ணல்பூசை
புரிசிவகரமீது * தாருகற்பொருதசெவ்வே
ளரனையர்ச்சித்த * தார்க்கீழ்மணற்குறியான்பாலாட்டிய
பரன்முடிமாலைகுடுஞ்சேய்வளம்பதியீதாகும். (௨௧)

* திருச்செங்காட்டங்குடி. திருச்சேய்ஞலூர்.

கறுவிழ்காலன்மார்பிற்சேவடிக்கமலஞ்சாத்திச்
சிறுவனுக்காயுளீந்தசேவகப்பெருமான்மேய
வறைபுனற்பழனமூதூரது * விதுவாலைதந்த
குறையுடற்போர்வைபோர்த்தகொற்றவன்கோயில்காண்மின். (உஉ)

* திருக்கடவூர். திருவழுவூர்.

பங்கயக்கடவுளீந்தபரிகலம்வாங்கிக்கொண்ட
வங்கணனிடமீ * தாடலனங்கனையமுதுசெய்த
செங்கணனிருக்கையீது * மேழகச்சென்னிதன்னை
மங்கலமாமற்கீந்தமருகனிருக்கைகாண்மின். (உங)

* திருக்கண்டியூர். * திருக்குறுக்கை. திருப்பறியலூர்.

இண்டிறலவுணன்றன்னைப்பெருவிரற்றீட்டுநேமி
யுண்டிடவிருந்தாக்கொண்டோனுறையதா * மொருத்திமன்றல்
கண்டிடுகேரியாய்க்கூவல்கண்ணுதலிலிங்கம்வன்னி
யெண்டிசையறியக்காட்டநின்றிடமிதனைக்காண்மின். (உச)

* திருவிற்குடி. திருப்புறம்பியம்.

சாமகண்டத்தன்றன்னைத்தானருச்சித்ததென்னர்
கோமகன்பிரமசாயைகுறைத்ததிப்பதியாம் * கங்கை
மாமகத்தோறும்வந்துவந்துதற்படிந்தோர்விட்டுப்
போமகம்போகமூழ்கும்புனிதநீர்ப்பதியைக்காண்மின். (உரு)

* திருவிடைமருதூர். கும்பகோணம்.

குருமொழிதந்தைக்கீந்தகுருவுறைமலையீது * எங்கோன்
கருமுகில்வண்ணத்தண்ணல்கண்ணிடந்தடியிற்சாத்தப்
பொருவிறலாழியீந்தபுரமிது * கந்தியெந்தை
திருவுருவடையகோற்றதலமிதுதெரிந்துகாண்மின். (உசு)

* சுவாமிமலை. * திருவீழிமிழலை. திருவையாறு.

மூட்டுகாற்சிலந்தியானைமலைமகண்முனரிகாட்டத்
தடங்கடல்வண்ணனேற்றதவநகரிது * முச்சென்னி
மடங்கலேறனையானுமவரையிது * குடைந்தோர்பாவ
மடங்கலும்பருகும்பொன்னியாறிதுகாண்மின்காண்மின். (உஎ)

* திருவானைக்காவல். * திரிசிரபுரம். காவேரியாறு.

இந்திவெண்முத்தாரமெனக்கிடந்திலங்குஞ்சென்னி
மன்னவனுடைதென்பதமிழறிவையைப்பேர்யா
றந்நிதுறக்கமண்மேல்வழுக்கிவீழ்ந்தாங்குத்தோற்றித்
தென்னவனுடுசேய்த்தாத்தெரிவதேகாண்மினென்றான். (உஅ)

பொங்கர்மென்புதல்களென்னப்பொருநதிசிறுகாலென்னக்
கொங்கலர்தடஞ்சிற்றூறற்குழியெனப்பழனஞ்சில்லி
தங்குமென்பாத்தியென்னத்தாழைதாழ்சிறுபுல்லென்னப்
பைங்குலைக்கதலிமஞ்சட்பாத்திபோற்றோற்றக்கண்டார். (உகூ)

பன்னிறமாடமாலையுபரிகைப்பந்திசெய்குன்
றன்னம்வெண்குருகுசெம்போத்தழகுபைங்கிள்ளைமஞ்ஞை
யின்னபுள்வேறுவேறுயொழுங்குபட்டிருப்பதொப்ப
மின்னுபூங்கொடியப்புட்கள்சிறகெனவிதிர்ப்பக்கண்டார். (கூ0)

மேற்படி வேறு.

கண்டொட்டுகர்வளங்கடந்துநடந்துகண்கள்விருந்
துண்டுமீள்வகல்விசும்பாரொழுகிவலமாவருமுனிவர்
விண்டுழாவுங்கொடுங்குன்றுந் * தளிப்புத்தூரும் * விரிபொழில்வாய்
வண்டுபாடன்மயிலாடல்பயிலாடானைவளநகரும். (கூக)

* கொடுங்குன்றம். * திருப்பத்தூர். திருவாடானை.

சரதவேதம்பரவுபுனவாயினகரும் * தவசித்தி
ரிரதவாதஞ்செய்துசிவனுருவங்கண்டவெழினகரும் *
வரதனுகியரனுறையுங்கானப்பேரும் * மலைமகளை
விரதயோகநெறிநின்றுமணந்தாசுழியல்வியனகரும். (கூஉ)

* திருப்புனவாயில். * திருப்பூவணம். * கானையார்கோயில்.
திருச்சுழியல்.

மறவர்ளிலங்கையிறைமகனைவதைத்தபழியான்மருண்டரியன்
றறவாணையியளித்தவனையர்ச்சித்தகன்றவணிநகரும் *
நிறவாண்முத்தும்வயிரமணியும்பொன்னும்விளைபொருனைத்
துறைவாய்ப்பிறவாக்கடவுள்வேய்வயிற்றிற்பிறந்ததொன்னகரும். ()

* திருவிராமேச்சுரம். திருநெல்வேலி.

துளபக்குன்றைக்கொன்றைமுடிக்குன்றமாக்குந்தொன்னகரும் *
அளகைப்பொறித்தவொடியிலையோன்மானேர்நோக்கினைமகள்
புளகக்குன்றைமணந்துமுதலிருந்தபொருப்பும் * போர்விசயன்
வளைவிற்றுக்கவடுக்கிடந்தமுடியோன்மேயவளநகரும். (கூச)

* திருக்குற்றாலம். * திருப்பரங்குன்றம். திருவேடகம்.

கொண்டல்படியுந்திருவாப்பனூருந்தொழுது * குளிர்திரைக்கை
வண்டுபடியுங்கமலமுகைவையைப்பிராட்டியெதிர்வணங்கிக்
கண்டுபணிந்துதிசையெட்டும்விழுங்கியண்டங்கடந்துலக
முண்டநெடியோனெனவுயர்கோபுரமுன்னிறைஞ்சியுள்புகுதா. ௩௫

* திருவாப்பனூர்.

மறுகுதோறும்பணிந்தெழுந்துவளைந்துவளைந்துபொற்கோயில்
குறுகிவிதியாற்பொற்கமலந்துடைந்துசெய்யுங்குறைநிறுவி
யுறுதிபெறவைத்தெழுந்தெண்ணிறூற்றுமதத்தாற்றடக்தோட்
சிறுகண்ணைவைங்கரத்துச்சித்தியானையடிவணங்கா. (௩௬)

மும்மையுலகுநான்மறையுமுறையாலீன்றவங்கயற்க
ணம்மையடிகண்முடியுறத்தாழ்ந்தன்புகொடுத்தின்னருள்வாங்கி
வெம்மையொளிகான்மணிக்கனகவியானத்தமர்ந்தவிச்சுடரின்
செம்மையடித்தாமரைவேணிச்சிரமேன்மலரப்பணிந்தேத்தா. (௩௭)

மேற்படிவேறு.

அன்றிருபோதுமூன்றுறந்திராவறுக்குந்தேவா
ளென்றெழுமூன்வீரர்டியதிக்ளியற்றிமைக்தும்
வென்றனத்தன்புயாயவிளமுழுமுதலைப்பார்மேன்
மின்றிரண்டென்னநின்றவிமானமீதிருப்பக்கண்டார். (௩௮)

வாசமஞ்சனக்தேன்கன்னற்பைங்கனிமறுவிலானேக்
தாசறும்முதமைக்துதென்மலையாரம்வாசம்
வீசுதண்பனிநீர்வெள்ளமான்மதக்கிளைமென்போது
தூசணிமணிப்பூணல்லசுவையமுதின்னதாங்கா. (௩௯)

சதவுருத்திரத்தாலாட்டிமட்டித்துச்சாத்திப்பூட்டிப்
பதமுறமனுவாலட்டயாலமுதருத்திபஞ்ச
விதமுறுவாசம்பாகுவெள்ளிலையுநீத்துப்போக
முதவுறுதூபதீபாதிகள்பலவுமப்பங்கா. (௪0)

ஐம்முகச்சைவச்செந்தீயகத்திறுக்துமிவையார்
மெய்ம்முகந்தருத்திப்பூசைநிரப்பிசால்வேதஞ்சொன்ன
மெய்ம்மனுநாற்றுப்பத்தான்மூவிலைவில்லநீலக்
கைம்மலரோந்திச்சாத்திக்கடவுளைபுவப்பச்செய்து. (௪௧)

வாசமஞ்சனநீரோமேந்திரமலர்கைக்கொண்டு
பூசையின்பயனைமுக்கட்புண்ணியன்கையினல்கி
நேசநெஞ்சுருக்கண்கணிறையநீருறிச்சோர
வீசனையிறைஞ்சியாருமஞ்சலித்தேத்தல்செய்வார். (௪௨)

எண்சீரடியாசிரியவிருத்தம்.

பழியொடுபாச மாறகெடவாசவன்செய் பணிகொண்ட வண்டசரணம், வழிபடுதொண்டர்கொண்ட நிலைகண்டுவெள்ளி மணிமன்றுளாடிசரணஞ், செழியன் விளிந்திடாத படிமாறியாட றெளிவித்தசோதிசரண, மெழுகடல் கூவி மாமியுடன்மாமனுட விசைவித்தவாதிசரணம். (௪௩)

வெங்கரியாவிசோரநரசிங்கவாளிவிடுவேட்டோறுசரணம்
புங்கவர்தேறவாதிமறையுட்கிடக்தபொருளோதுபோதசரணம்
வங்கமதேறிவேலைமகரம்பிடித்தவலையாண்மணாளசரணங்
கங்கணநாகம்வீசிநகரெல்லைகண்டகறைகொண்டகண்டசரணம். ()

மைந்தனிலாழிமேருமகவானகந்தைமடிவித்தநித்தசரணஞ்
சுந்தரநாமவாளிபணிகொண்டுகின்னரிதொலைவென்றவீரசரணம்
வெந்திறன்மாறன்முன்கலுருவானைகன்னன்மிசைவித்தசித்தசரண
முந்தியகல்லின்மாதர்பெறவட்டசித்திமுயல்வித்தயோகிசரணம். ()

திருமணிமைந்தன்மைந்தன்முடிசூடவிற்றதிருமன்குசெல்வசரண
மருமகனென்றுமாமனுருவாய்வழக்குவலிபேசமைந்தசரணங்
குருமொழிதந்துநாரைகுருவிக்குவீடுகுடிதந்தவெம்மைதசரணம்
வருபழியஞ்சிவேடமகனுக்கிரங்குமதுராபுரேசசரணம். (௪௬)

விருத்தகுமாரபாலவருண்மேனிகொண்டு விளையாடுமன்னல்சரணங்
குரத்தியைகச்சுபாவியுயிருண்டுசோரிகுடைவாளைவேலசரணங்
கருத்திசைபாணனுனிவிசைபாடிமாறுகளைவேதகீதசரண
கரித்திரன்மாவைடீளககரங்கலங்கரிசெய்தகம்பசரணம். (௪௭)

முற்பகலாறிரண்டுசிறுபன்றியுண்ணமுலைதந்தவன்னைசரணம்
பொற்புறுமாயவாவைபடலேறுகொண்டுபொருதட்டசிட்டசரணம்,
பற்பலஞாலமெங்குமடையப்பிரம்புபடுமெட்டமூர்த்திசரணங்
கற்பினெருத்திமன்றலறிவிக்கமூன்றுகரிதந்தவள்ளல்சரணம். (௪௮)

அளவைகளாலும்வேத முதனூல்களாலு மயன்மாயனாலு மளவீரக், களவையுனக்குநாம குணசின்னசாதி கதிசெய்தியில்லை யவையு, முளவெனயாமறிந்து துதிசெய்யவேகொ ளுலகஞ்செயன்பி னெளிதாய், விளையருண்மேனிகொண்டிவ் வறுபத்துநாலு விளையாடல், செய்தபடியே. (௪௧)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

எனத்துதித்த வசிட்டாதி யிருடிகளைக் குறுமுனியை யெறிதேனீப, வனத்துறையுஞ் சிவபெருமா னிலிங்கத்தின் மூர்த்தியாய்வந் துநோக்கிச், சினத்தினைவென் றகந்தெளிந்தீர் நீர்செய்த பூசைதுதி தெய்வத்தான, மனத்தினுக்கு மனைத்துயிர்க்கு நிறைந்துநமக்கானந்தமாயிற்றென்றான். (௫௰)

சிறந்தவருள்சுரந்துகுறு முனியைவரு கென்றுகரஞ் சிரமேல்வைத்துப், புறந்தடவி யெமையொப்பாய் நீயேநின்கற்புடைய பெண்ணலங்கொம்பன்னாள், ளறந்தழையு முமையொப்பா ளாதலினா லும்மையொப்பா ரகிலத்தியாரே, நிறைந்ததவம் புரிந்தோறுந் தவத்துறுதி பெற்றோனு நீயேயன்றோ. (௫௧)

உனக்கரியவரமினியாந் தருவதெவ னுனக்கரிதா லொன்றுங்காணே, மெனக்கருணை செய்திலிங்கத் திடையிச்சை வடிவாய்ச்சென்றிருந்தானாகத், தனக்கரியவரால்குஞ் சிவலிங்கந்தன்பெயரால் மூர்த்தான்றன், னினக்கருணை வசிட்டாதி முனிவர்களுந் தம்பெயரா லிலிங்கங்கண்டார். (௫௨)

ஏத்தியருச் சனைசெய்து கிளைவிலரி தாயன்பி லெளியவட்ட மூர்த்தியையங் கயற்கண்ணி யன்பனைமுப் போதும்போய் முடிதாழ்ந்தின்பம், பூத்தமனத்தினராகிக் கருவித்தேன் பொதிந்தசிறு புட்போலக்த, மாத்தலனில்வசிட்டாதி முனிவர்தபோ வனஞ்செய்து வதிந்தார்மன்னோ. (௫௩)

அருச்சனைப்படலம் முற்றிற்று.

ஆகப்படலம் - ௭௪ - க்கு - திருவிருத்தம் - ௩௩௬௩.

திருவிளையாடற்புராணம்

முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவாலவாய்த்தேவாரம்.*

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

திருவிருக்குக்குறள்.

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நீலமாமிடற் - றாலவாயிலான்
பாலதாயினார் - ஞாலமாள்வரே. (௧)

ஞாலமேழுமா - மாலவாயிலார்
சீலமேசொலீர் - காலன்வீடவே. (௨)

ஆலநீழலா - ராலவாயிலார்
காலகாலனார் - பாலதாமினே. (௩)

அந்தமில்புக - ழெந்தையாலவாய்
பந்தியார்கழல் - சிந்தைசெய்ம்மினே. (௪)

ஆடலேற்றினான் - கூடலாலவாய்
பாடியேமன - நாடிவாழ்மினே. (௫)

அண்ணலாலவாய் - நண்ணினான்றனை
யெண்ணியேதொழத் - திண்ணமின்பமே. (௬)

அம்பொனாலவாய் - நம்பனார்கழல்
நம்பிவாழ்பவர் - துன்பம்வீடுமே. (௭)

அரக்கனார்வலி - நெருக்கனாலவா
யுரைக்குமுள்ளத்தார்க் - கிரக்கமுண்மையே. (௮)

* திருவாலவாய் என்பது மதுரை.

அருவனாலவாய் - மருவினான்றனை
யிருவரேத்தநின் - றுருவமோங்குமே. (கூ)

ஆரநாகமாஞ் - சீரனாலவாய்த்
தேரமண்செற்ற - வீரனென்பரே. (க௰)

அடிகளாலவாய்ப் - படிகொள்சம்பந்தன்
முடிவிலின்றமிழ் - செடிகணீக்குமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநீற்றுப்பதிகம்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மந்திரமாவதுநீறுவானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறுதுதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறுசமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன்திருவாலவாயான்திருநீறே. (க)

வேதத்திலுள்ளதுநீறுவெந்துயர்தீர்ப்பதுநீறு
போதந்தருவதுநீறுபுன்மைதவிர்ப்பதுநீறு
வோதத்தகுவதுநீறுவுண்மையிலுள்ளதுநீறு
சீதப்புனல்வயல்சூழ்ந்ததிருவாலவாயான்திருநீறே. (உ)

முத்திதருவதுநீறுமுனிவரணிவதுநீறு
சத்தியமாவதுநீறுதக்கோர்புகழ்வதுநீறு
பத்திதருவதுநீறுபரவவினியதுநீறு
சித்திதருவதுநீறுதிருவாலவாயான்திருநீறே. (ங)

காணவினியதுநீறுகவினைத்தருவதுநீறு
பேணியணிபவர்க்கெல்லாம்பெருமைகொடுப்பதுநீறு
மாணந்தகைவதுநீறுமதியைத்தருவதுநீறு
சேணந்தருவதுநீறுதிருவாலவாயான்திருநீறே. (ச)

பூசவினியதுநீறுபுண்ணியமாவதுநீறு
பேசவினியதுநீறுபெருந்தவத்தோர்களுக்கெல்லா
மாசைகெடுப்பதுநீறுவந்தமதாவதுநீறு
தேசம்புகழ்வதுநீறுதிருவாலவாயான்திருநீறே. (ரு)

அருத்தமதாவதுநீறுவலமறுப்பதுநீறு
வருத்தந்தணிப்பதுநீறுவானமளிப்பதுநீறு
பொருத்தமதாவதுநீறுபுண்ணியர்பூசும்வெண்ணீறு
திருத்தகுமாளிகைசூழ்ந்ததிருவாலவாயான்திருநீறே. (சு)

எயிலதுவட்டதுநீறுவிருமைக்குமுள்ளதுநீறு
பயிலப்படுவதுநீறுபாக்கியமாவதுநீறு
துயிலைத்தடுப்பதுநீறுசுத்தமதாவதுநீறு
வயிலைப்பொலிதருசூலத்தாலவாயான்திருநீறே. (எ)

இராவணன்மேலதுநீறுவெண்ணத்தகுவதுநீறு
பராவணமாவதுநீறுபாவமறுப்பதுநீறு
தராவணமாவதுநீறுதத்துவமாவதுநீறு
வராவணங்குந்திருமேனியாலவாயான்திருநீறே. (அ)

மாலொடயனறியாதவண்ணமுமுள்ளதுநீறு
மேலுறைதேவர்கடங்கண்மெய்யதுவெண்பொடிநீறு
வேலவுடம்பிடர்தீர்க்குமின்பந்தருவதுநீறு
வாலமதுண்டமிடற்றெம்மாலவாயான்திருநீறே. (கூ)

குண்டிகைக்கையர்களோடுசாக்கியர்கூட்டமுங் * கூடக்
கண்டிகைப்பிப்பதுநீறுகருதவினியதுநீறு
வெண்டிசைப்பட்டபொருளாரேத்துந்தகையதுநீறு
வண்டத்தவர்பணிந்தேத்துமாலவாயான்திருநீறே. (க௰)

ஆற்றலடல்விடையேறுமாலவாயான்திருநீற்றைப்
போற்றிப்புகலிநிலாவும்பூசுரன்ஞானசம்பந்தன்
தேற்றித்தென்னனுடலுற்றதீப்பிணியாயினதீரச்
சாற்றியபாடல்கள்பத்தும்வல்லவர்நல்லவர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

* "கூடாக்" என்றும்பாடம்.

பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

மானினேர்விழிமாதராய்வழுதிக்குமாபெருந்தேவிகேள்
பானல்வாயொருபாலனீங்கிவனென்றுநீபரிவெய்திடே
லானைமாமலையாதியாயவிடங்களிற்பலவல்லல்சே
ரீனர்கட்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௧)

ஆகமத்தொடுமந்திரங்களமைந்தசங்கதபங்கமாப்
பாகதத்தொடிரைத்துரைத்தசனங்கள்வெட்குறுபக்கமா
மாகதக்கரிபோற்றிரிந்துபுரிந்துநின்றுணுமாசுசே
ராகதர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௨)

அத்தகுபொருளுண்டுமில்லையுமென்றுநின்றவர்க்கச்சமா
வொத்தொவ்வாமைமொழிந்துவாதிலழிந்தெழுந்தகவிப்பெயர்ச்
சத்திரத்தின்மடிந்தொடிந்துசனங்கள்வெட்குறநக்கமே
சித்திரர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௩)

சந்துசேனனுமிந்துசேனனுந்தருமசேனனுங்கருமைசேர்
கந்துசேனனுங்கனகசேனனுமுதலதாகியபெயர்கொளா
மந்திபோற்றிரிந்தாரியத்தொடுசெந்தமிழ்ப்பயனறிகிலா
வந்தகர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௪)

கூட்டினார்கிளியின்விருத்தமுரைத்ததோரொலியின்றொழிற்
பாட்டுமெய்சொலிப்பக்கமேசெலுமெக்கர்தங்களைப்பல்லறக்
காட்டியேவருமாடெலாங்கவர்கையரைக்கசிவொன்றிலாச்
சேட்டைகட்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௫)

கனகநந்தியும்புட்பநந்தியும்பவணநந்தியுங்குமணமா
சுனகநந்தியுங்குனகநந்தியுந்திவணநந்தியுமொழிகொளா
வனகநந்தியர்மதுவொழிந்தவமேதவம்புரிவோமெனுஞ்
சினகருக்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௬)

பந்தணம்மவையொன்றிலம்பரிவொன்றிலம்மெனவாசக
மந்தணம்பலபேசிமாசறுசீர்மையின்றியநாயமே
யந்தணம்மருகந்தணம்மதுபுத்தணம்மதுசித்தணச்
சித்தணர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௭)

மேலெனக்கெதிரில்லையென்றவரக்கனார்மிகைசெற்றதீப்
போலியைப்பணியக்கிலாதொருபொய்த்தவங்கொடுகுண்டிகை
பீலிகைக்கொடுபாயிடுக்கிநடுக்கியேபிறர்பின்செலுஞ்
சீலிகட்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (அ)

பூமகற்குமரிக்குமோர்வருபுண்ணியன்னடிபோற்றிலார்
சாமவத்தையினார்கள்போறலையைப்பறித்தொருபொய்த்தவம்
வேமவத்தைசெலுத்திமெய்ப்பொடியட்டிவாய்சகதிக்குநே
ராமவர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௯)

தங்களுக்குமசாக்கியர்க்குந்தரிப்பொணாதநற்சேவடி
யெங்கணாயகனேத்தொழிந்திடுக்கேமடுத்தொருபொய்த்தவம்
பொங்குநூல்வழியன்றியேபுலவோர்களைப்பழிக்கும்பொலா
வங்கதர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௧௦)

எக்கராமமண்கையருக்கெளியேனலேன்றிருவாலவாய்ச்
சொக்கனென்னுளிருக்கவேதுளங்குமுடித்தென்னன்முன்னிவை
தக்கசீர்ப்புகலிக்குமன்றமிழ்நாதன்ஞானசம்பந்தன்வா
யொக்கவேயுரைசெய்தபத்துமுரைப்பவர்க்கிடரில்லையே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

காட்டுமாவதுரித்துரிபோர்த்துட
னாட்டமூன்றுடையாயுரைசெய்வனான்
வேட்டுவேள்விசெய்யாவமண்கையரை
யோட்டிவாதுசெயத்திருவுள்ளமே. (௧)

மத்தயானையினீருரிமூடிய
வத்தனேயணியாலவாயாய்பணி
பொய்த்தவன்றவவேடத்தராஞ்சமண
சித்தரையழிக்கத்திருவுள்ளமே. (௨)

மண்ணகத்திலும்வானிலுமெங்குமாந்
திண்ணகத்திருவாலவாயாயருள்
பெண்ணகத்தெழிற்சாக்கியப்பேயமண்
டெண்ணர்கற்பழிக்கத்திருவுள்ளமே. (௩)

ஓதியோத்தறியாவமணாதரை
வாதில்வென்றழிக்கத்திருவுள்ளமே
யாதியேதிருவாலவாயண்ணலே
நீதியாகநினைந்தருள்செய்திடே. (௪)

வையமார்புகழாயடியார்தொழுஞ்
செய்கையார்திருவாலவாயாய்செப்பாய்
கையிலுண்டுழலுமமண்கையரைப்
பையவாதுசெயத்திருவுள்ளமே. (௫)

நாறுசேர்வயற்றண்டலைமிண்டிய
தேறலார்திருவாலவாயாய்செப்பாய்
வீறிலாத்தவமோட்டமண்வேடரைச்
சீறிவாதுசெயத்திருவுள்ளமே. (௬)

பண்டடித்தவத்தார்பயில்வாற்றொழுந்
தொண்டருக்கெளியாய்திருவாலவா
யண்டனேயமண்கையரைவாதினிற்
செண்டடித்துளறத்திருவுள்ளமே. (௭)

அரக்கன்றன்கிரியேற்றவன்றன்முடிச்
செருக்கினைத்தவிர்த்தாய்திருவாலவாய்ப்
பரக்குமாண்புடையாயமண்பாவரைக்
கரக்கவாதுசெயத்திருவுள்ளமே. (௮)

மாலுநான்முகனும்மறியாநெறி
யாலவாயுறையுமண்ணலேபணி
மேலைவீடுணராவெற்றரையரைச்
சாலவாதுசெயத்திருவுள்ளமே. (௯)

கழிக்கரைப்படுமீன்கவர்வாரம
ணழிப்பரையழிக்கத்திருவுள்ளமே
தெழிக்கும்பூம்புனல்சூழ்திருவாலவாய்
மழுப்படையுடைமைந்தனேநல்கிடே. (௧௦)

செந்தெனாமுரலுந்திருவாலவாய்
மைந்தனேயென்றுவல்லமணாசறச்
சந்தமார்தமிழ்கேட்டமெய்ஞ்ஞானசம்
பந்தன்சொற்பகரும்பழிநீங்கவே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண் — கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

செய்யனேதிருவாலவாய்மேவிய
வையனேயஞ்சலென்றருள்செய்யெனைப்
பொய்யராமமணர்கொளுவுஞ்சுடர்
பையவேசென்றுபாண்டியற்காகவே. (௧)

சித்தனேதிருவாலவாய்மேவிய
வத்தனேயஞ்சலென்றருள்செய்யெனை
யெத்தராமமணர்கொளுவுஞ்சுடர்ப்
பத்திமன்றென்னன்பாண்டியற்காகவே. (௨)

தக்கன்வேள்விதகர்த்தருளாலவாய்ச்
சொக்கனேயஞ்சலென்றருள்செய்யெனை
யெக்கராமமணர்கொளுவுஞ்சுடர்
பக்கமேசென்றுபாண்டியற்காகவே. (௩)

சிட்டனேதிருவாலவாய்மேவிய
வட்டமூர்த்தியனேயஞ்சலென்றரு
டுட்டராமமணர்கொளுவுஞ்சுடர்
பட்டிமன்றென்னன்பாண்டியற்காகவே. (௪)

நண்ணலார்புரமூன்றெரியாலவா
யண்ணலேயஞ்சலென்றருள்செய்யெனை
யெண்ணிலாவமணர்கொளுவுஞ்சுடர்
பண்ணியற்றமிழ்ப்பாண்டியற்காகவே. (௫)

தஞ்சமென்றுன்சரண்புகுந்தேனையு
மஞ்சலென்றருளாலவாயண்ணலே
வஞ்சஞ்செய்தமணர்கொளுவுஞ்சுடர்
பஞ்சவன்றென்னன்பாண்டியற்காகவே. (௬)

செங்கண்வெள்விடையாய்திருவாலவா
யங்கணாவஞ்சலென்றருள்செய்யெனைக்
கங்குலாரமண்கையரிடுங்கனல்
பங்கமில்றென்னன்பாண்டியற்காகவே. (௭)

ஆர்த்தன்வீரக்தொலைத்தருளாலவா
யாத்தனேயஞ்சலென்றருள்செய்யெனை
யேத்திலாவமணர்கொளுவுஞ்சுடர்
பார்த்திவன்றென்னன்பாண்டியற்காகவே. (௮)

தாவினானயன்றானறியாவகை
மேவினாய்திருவாலவாயாயரு
ளேவிலாவமணர்கொளுவுஞ்சுடர்
பாவினான்றென்னன்பாண்டியற்காகவே. (௯)

எண்டிசைக்கெழிலாலவாய்மேவிய
வண்டனேயஞ்சலென்றருள்செய்யெனைக்
குண்டராமமணர்கொளுவுஞ்சுடர்
பண்டிமன்றென்னன்பாண்டியற்காகவே. (௧௦)

அப்பனாலவாயாதியருளினால்
வெப்பந்தென்னவன்மேலுறமேதினிக்
கொப்பஞானசம்பந்தனுரைபத்துஞ்
செப்பவல்லவர்தீதிலாச்செல்வரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம்.

பண். - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

வீடலாலவாயிலாய்விழுமியார்கணின்கழற்
பாடலாலவாயிலாய்பரவநின்றபண்பனே
காடலாலவாயிலாய்கபாலிநீள்கடிம்மதிற்
கூடலாலவாயிலாய்குலாயதென்னகொள்கையே. (௧)

பட்டிசைத்தவல்குலாள்பாவையாளோர்பாகமா
வொட்டிசைத்ததன்றியும்முச்சியானொருத்தியாக்
கொட்டிசைத்தவாடலாய்கூடலாலவாயிலா
யெட்டிசைக்குமூர்த்தியாயிருந்தவாறதென்னையே. (௨)

குற்றநீகுணங்கணீகூடலாலவாயிலாய்
சுற்றநீபிரானுநீதொடர்ந்திலங்குசோதிநீ
கற்றநூற்கருத்துநீயருத்தமின்பமென்றிவை
முற்றுநீபுகழ்ந்துமுன்னுரைப்பதென்முகம்மனே. (௩)

முதிருநீர்ச்சடைமுடிமுதல்வநீமுழங்கழ
லதிரவீசியாடுவாயழகநீபுயங்கநீ
மதுரநீமணாளநீமதுரையாலவாயிலாய்
சதுரநீசதுமுகன்கபாலமேந்துசம்புவே. (௪)

கோலமாயநீண்மதிற்கூடலாலவாயிலாய்
பாலனாயதொண்டுசெய்துபண்டுமின்றுமுன்னையே
நீலமாயகண்டனேநின்னையன்றிநித்தலுஞ்
சீலமாயசிந்தையிற்றேர்வதில்லைதேவரே. (௫)

பொன்றயங்கிலங்கொளிநலங்குளிர்ந்தபுன்சடை
பின்றயங்கவாடுவாய்பிஞ்ஞகாபிறப்பிலீ
கொன்றையம்முடியினாய்கூடலாலவாயிலாய்
நின்றயங்கியாடலேநினைப்பதேநியமமே. (௬)

ஆதியந்தமாயினாயாலவாயிலண்ணலே
சோதியந்தமாயினாய்சோதியுள்ளொர்சோதியாய்
கீதம்வந்தவாய்மையாற்கிளர்தருக்கினார்க்கலா
லோதிவந்தவாய்மையாலுணர்த்துனைக்கலாகுமே. (௭)

கறையிலங்குகண்டனேகருத்திலாக்கருங்கடற்
றுறையிலங்கைமன்னனைத்தோளடரவூன்றினாய்
மறையிலங்குபாடலாய்மதுரையாலவாயிலாய்
நிறையிலங்குநெஞ்சினானினைப்பதேநியமமே. (௮)

தாவணவ்விடையினாய்தலைமையாகநாடொறுங்
கோவணவ்வுடையினாய்கூடலாலவாயிலாய்
தீவணம்மலர்மிசைத்திசைமுகனுமாலுநின்
றூவணமளக்கிலார்துளக்கமெய்துவார்களே. (௯)

தேற்றமில்வினைத்தொழிற்றேரருஞ்சமணரும்
போற்றிசைத்துநின்கழற்புகழ்ந்துபுண்ணியங்கொளார்
கூற்றுதைத்ததாளினாய்கூடலாலவாயிலாய்
நாற்றிசைக்குமூர்த்தியாகிநின்றதென்னதன்மையே. (௧௦)

போயநீர்வளங்கொளும்பொருபுனற்புகலியான்
பாயகேள்விஞானசம்பந்தனல்லபண்பினு
லாயசொல்லின்மாலைகொண்டாலவாயிலண்ணலைத்
நியநீரவென்னுவார்கள்சிந்தையாவர்தேவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நாலடிமேல்வைப்பு.

திருச்சிற்றம்பலம்.

வேதவேள்வியைநிந்தனைசெய்துழ
லாதமில்லியமணொடுதேரரை
வாதில்வென்றழிக்கத்திருவுள்ளமே
பாதிமாதுடனாயபரமனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
னாலவாயிலுறையுமெம்மாதியே. (க)

வைதிகத்தின்வழியொழுகாதவக்
கைதவமுடைக்காரமண்டேரரை
யெய்திவாதுசெயத்திருவுள்ளமே
மைதிகழ்தருமாமணிகண்டனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
னாலவாயிலுறையுமெம்மாதியே. (உ)

மறைவழக்கமிலாதமாபாவிகள்
பறிதலைக்கையர்பாயுடுப்பார்களை
முறியவாதுசெயத்திருவுள்ளமே
மறியுலாங்கையின்மாமழுவாளனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
னாலவாயிலுறையுமெம்மாதியே. (ங)

அறுத்தவங்கமாறாயினநீர்மையைக்
கறுத்தவாழமண்கையர்கடம்மொடுஞ்
செறுத்தவாதுசெயத்திருவுள்ளமே
முறித்தவாண்மதிக்கண்ணிமுதல்வனே

ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
னாலவாயிலுறையுமெம்மாதியே. (ச)

அந்தணாளர்புரியுமருமறை
சிந்தைசெய்யாவருகர்திறங்களைச்
சிந்தவாதுசெயத்திருவுள்ளமே
வெந்தநீறதணியும்விகிர்தனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
னாலவாயிலுறையுமெம்மாதியே. (ரு)

வேட்டுவேள்விசெயும்பொருளைவிளி
மூட்டுசிந்தைமுருட்டமண்குண்டரை
யோட்டிவாதுசெயத்திருவுள்ளமே
காட்டிலானையுரித்தவெங்கள்வனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
னாலவாயிலுறையுமெம்மாதியே. (சு)

அழலதோம்புமருமறையோர்திறம்
விழலதென்னுமருகர்திறத்திறங்
கழலவாதுசெயத்திருவுள்ளமே
தழலிலங்குதிருவுருச்சைவனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
னாலவாயிலுறையுமெம்மாதியே. (எ)

நீற்றுமேனியராயினர்மேலுற்ற
காற்றுக்கொள்ளவுமில்லாவமணரைத்
தேற்றிவாதுசெயத்திருவுள்ளமே
யாற்றவானரக்கர்க்குமருளினாய்
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
னாலவாயிலுறையுமெம்மாதியே. (அ)

நீலமேனியமணர்திறத்துநின்
சீலம்வாதுசெயத்திருவுள்ளமே
மாலுநான்முகனுங்காண்பரியதோர்
கோலமேனியதாகியகுன்றமே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
னாலவாயிலுறையுமெம்மாதியே. (கூ)

அன்றுமுப்புரஞ்செற்றவழகநின்
றுன்றுபொற்கழல்பேணவருகனாத்
தென்றவாதுசெயத்திருவுள்ளமே
கன்றுசாக்கியர்காணத்தலைவனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
னாலவாயிலுறையுமெம்மாதியே. (க0)

கூடலாலவாய்க்கோனைவிடைகொண்டு
வாடன்மேனியமணரைவாட்டிட
மாடக்காழிச்சம்பந்தன்மதித்தவிப்
பாடல்வல்லவர்பாக்கியவாளரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவியமகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆலநீழலுகந்ததிருக்கையேயானபாடலுகந்ததிருக்கையே
பாலினேர்மொழியாளொருபங்கனேபாதமோதலர்சேர்புரபங்கனே
கோலநீறணிமேதகுபூதனேகோதிலார்மனமேவியபூதனே
யாலநஞ்சமுதுண்டகளத்தனேயாலவாயுறையண்டர்களத்தனே. (க)

பாதியாளுடன் கொண்டதுமாலையே பாம்புதார்மலர்க் கொன்றை நன்மாலையே, கோதின்மாது பூசிடுமாகனே கொண்டகற்கையின் மானிடமாகனே, நாதனுமொரு மாடுவதாலையே காடியன்புரி செய்தசமாலையே, வேதநூல்பயில் கின்றதுவாயிலே விமர்தனூர்திரு வாலவாயிலே. (உ)

காடுநீடுறப்பலகத்தனேகாதலாலினைவார்தமகத்தனே
பாடுபேயொடுபூதமசிக்கவேயல்பிணத்ததசைகாடியசிக்கவே
நீடுமாநடமாடவிருப்பனேநின்னடித்தொழநாளுமிருப்பனே
யாடவின்சடைமேவியவப்பனேயாலவாயினின்மேவியவப்பனே. (ங)

பண்டயன்றலையொன்றுமறுத்தியேபாதமோதினர்பாவமறுத்தியே
துண்டவெண்பிறைசென்னியிருத்தியேதூயவெள்ளெருதேறியிருத்தி
கண்டுகாமனைவேவவிழித்தியேகாதலில்லவர்தம்மையிழித்தியே* [யே
யண்டநாயகனேமிருகண்டனேயாலவாயினின்மேவியகண்டனே. (ச)

* "விழித்தியே" என்றும்பாடம்.

சென்றுதாதை யுகுத்தனன்பாலையே சீறியன்பு செகுத்தனன்பாலையே, வென்றிசேர்மழுக் கொண்டுமுன்காலையே வீடவெட்டிடக் கண்டுமுன்காலையே, நின்றமாணியை யோடினகங்கையா னிலைமலி தியுதித்தன கங்கையா, லன்றுநின்றுரு வாகத்தடவியே யாலவாயர னகத்தடவியே. (ரு)

நக்கமேகுவர் நாடுமோரூருமே நாதன்மேனியின் மாசுணமூருமே, தக்கபூமனைச்சுற்றக் கருளொடேதாரமுய்த்ததுபாணற் கருளொடே, மிக்கதென்னவன் றேவிக்கணியையே மெல்லநல்கிய தொண்டர்க்கணியையே, யக்கினாரமு துண்கலனோடுமே யாலவாயர னாண்மையோடுமே. (சு)

வெய்யவன்பல் லுகுத்ததுகுட்டியே வெங்கண்மாசுணங் கையதுகுட்டியே, மையனையன லொடியமெய்யனே யன்பினானினை வார்க்கருண்மெய்யனே, வையமுய்யவன் றுண்டதுகாளமே வள்ளல்கையது மேவுகங்காளமே, மையமேறப் துரைப்பதுவீணையே யாலவாயரன் கையதுவீணையே. (எ)

தோள்கள்பத்தொடு பத்துமயக்கியே தொக்கதேவர் செருக்கை மயக்கியே, வாளரக்கனிலத்துக் களித்துமே வந்தமால்வரை கண்டு களித்துமே, நீள்பொருப்பை யெடுத்தவுன்மத்தனே நின்விரற்றலை யான்மதமத்தனே, யாருமாதி முறித்ததுமெய்கொலோ வாலவாயர னுய்த்ததுமெய்கொலோ. (அ)

பங்கயத்துளநான்முகன்மாலொடேபாதநீண்முடிசேடமாலொடே
துங்கநற்றழலின்னுருவாயுமேதூயபாடல்பயின்றதுவாயுமே [யே
செங்கயற்கணிநாரிடுபிச்சையேசென்றுகொண்டுழல்செய்வதுபிச்சை
யங்கிகைத்திகழ்வீப்பதிடக்கையேயாலவாயரனாரதிடக்கையே. (கூ)

தேரரோடமணர்க்கு நல்காளையே தேவர்நாடொறுஞ் சேர்வதுகாளையே, கோரமட்டது புண்டரிகத்தையே கொண்டநீள்கழல் புண்டரிகத்தையே, சேரினார்க ளழித்ததுகாகமே நீள்சடைத்திகழ் கின்றதுநாகமே, யாரமாக வுகந்ததுமென்பதே யாலவாயரனாரிடமென்பதே. (க0)

ஈனஞானிகடம்மொடுவிரகனேயேறுபல்பொருண்முத்தமிழ்விரகனே
யானகாழியுண்ஞானசம்பந்தனேயாலவாயினின்மேயசம்பந்தனே
யானவானவர்வாயினுளத்தனேயன்பரானவர்வாயினுளத்தனே
நானுரைத்தனசெந்தமிழ்பத்துமேவல்லவர்க்கிவைநற்றமிழ்பத்துமே.

திருச்சிற்றம்பலம்.

பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

மங்கையர்க்கரசிவளவர்கோன்பாவைவரிவளைக்கைமடமானி
பங்கயச்செல்விபாண்டிமாதேவிபணிசெய்துநாடொறும்பரவப்
பொங்கழலுருவன்பூதநாயகனால்வேதமும்பொருள்களுமருளி
யங்கயற்கண்ணிதன்னொடுமமர்ந்தவாலவாயாவதுமிதுவே. (௧)

வெற்றவேயடியாரடிமிசைவீழும்விருப்பினன்வெள்ளைநீறணியுங்
கொற்றவன்றனக்குமந்திரியாயகுலச்சிறைகுலாவிநின்றேத்த [ந்தி
ஒற்றைவெள்விடையனும்பரார்தலைவனுலகினிலியற்கையையொழி
டற்றவர்க்கற்றசிவனுறைகின்றவாலவாயாவதுமிதுவே. (௨)

செந்துவர்வாயாள்சேலனகண்ணாள்சிவன்றிருநீற்றினைவளர்க்கும்
பந்தணைவிரலாள்பாண்டிமாதேவிபணிசெயப்பாரிடைநிலவுஞ்
சந்தமார்தரளம்பாம்புநீர்மத்தந்தண்ணெருக்கம்மலர்வன்னி
யந்திவான்மதிசேர்சடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. (௩)

கணங்களாய்வரினுந்தமியராய்வரினுமடியவர்தங்களைக்கண்டாற் [ன்
குணங்கொடுபணியுங்குலச்சிறைகுலாவுங்கோபுரஞ்சூழ்மணிக்கோயி
மணங்கமழ்கொன்றைவாளராமதியம்வன்னிவண்கூவிளமாலை
யணங்குவீற்றிருந்தசடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. (௪)

செய்யதாமரைமேலன்னமேயனையசேயிழைதிருநுதற்செல்வி
பையரவல்குற்பாண்டிமாதேவிநாடொறும்பணிந்தினிதேத்த
வெய்யவேற்சூலம்பாசமங்குசமான்விரிகதிர்மழுவுடன்றரித்த
வையனாருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. (௫)

நலமிலராகநலமதுண்டாகநாடவர்நாடறிகின்ற
குலமிலராகக்குலமதுண்டாகத்தவம்பணிகுலச்சிறைபரவுங்
கலைமலிகரத்தன்மூவிலைவேலன்கரியுரிமூடியகண்ட
னலைமலிபுனல்சேர்சடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. (௬)

முத்தின்றாழ்வடமுஞ்சந்தனக்குழம்புநீறுந்தன்மார்பினின்முயங்கப்
பத்தியார்கின்றபாண்டிமாதேவிபாங்கொடுபணிசெயநின்ற
சுத்தமார்பளிங்கின்பெருமலையுடனேசுடர்மரகதமடுத்தாற்போ
லத்தனாருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. (௭)

ாவணங்கியல்பாமஞ்செழுத்தோதிநல்லராய்நல்லியல்பாகுங்
காவணம்பூதிசாதனங்கண்டாற்றொழுதெழுகுலச்சிறைபோற்ற
வணங்கியல்பாமிராவணன்றிண்டோளிருபதுநெரிதரவூன்றி
ாவணங்கொண்டசடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. (௮)

ண்ணெலாநிகழமன்னனாய்மன்னுமணிமுடிச்சோழன்றன்மகளாம்
ண்ணினேர்மொழியாள்பாண்டிமாதேவி பாங்கினாற்பணிசெய்துப
ிண்ணுளாரிருவர்கீழொடுமேலுமளப்பரிதாம்வகைநின்ற [ரவ
ண்ணலாருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. (௯)

தொண்டராயுள்ளார் திசைதிசைதோறுந்தொழுதுதன்குணத்
தினைக் குலாவக், கண்டுநாடோறு மின்புறுகின்ற குலச்சிறை கருதி
ின்றேத்தக், குண்டராயுள்ளார் சாக்கியர்தங்கள் குறியின்கணெறி
ிடைவாரா, வண்டநாயகன் றானமர்ந்துவீற்றிருந்த வாலவாயாவது
ிதுவே. (௧௦)

ன்னலம்புணரும்பாண்டிமாதேவிகுலச்சிறையெனுமிவர்பணியு
ந்நலம்பெறுசீராலவாயீசன்றிருவடியாங்கவைபோற்றிக்
ன்னலம்பெரியகாழியுண்ஞானசம்பந்தன்செந்தமிழிவைகொண்
டின்னலம்பாடவல்லவரிமையோரேத்தவீற்றிருப்பவரினிதே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

வதியாவேதகீதாவிண்ணவரண்ணாவென்றென்
ோதியேமலர்கடூவியொருங்குநின்கழல்கள்காணப்
ாதியோர்பெண்ணைவைத்தாய்படர்சடைமதியஞ்சூடு
ாதியேயாலவாயிலப்பனேயருள்செயாயே. (௧)

ம்பனேநான்முகத்தாய்நாதனேஞானமூர்த்தி
யன்பொனேயீசாவென்றென்றேத்திநானேசற்றென்றும்
ன்பினேதிரிந்தநாயேன்பேர்த்தினிப்பிறவாவண்ண
ன்பனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. (௨)

ஒருமருந்தாகியுள்ளாயும்பரோடுலகுக்கெல்லாம்
பெருமருந்தாகிநின்றாய்பேரமுதின்சுவையாய்க்
கருமருந்தாகியுள்ளாயாளும்வல்வினைகடீர்க்கு
அருமருந்தாலவாயிலப்பனேயருள்செயாயே. (௩)

செய்யநின்கமலபாதஞ்சேருமாதேவர்தேவே
மையணிகண்டத்தானேமான்மறிமழுவொன்றேந்துஞ்
சைவனேசாலஞானங்கற்றறிவிலாதநாயே
னையனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. (௪)

வெண்டலைக்கையிலேந்திமிகவுமூர்பலிகொண்டென்று
முண்டதுமில்லைசொல்லியுண்டதுநஞ்சுதன்னைப்
பண்டுநின்னினையமாட்டாப்பளகனேனுளமதார
வண்டனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. (௫)

எஞ்சலில்புகலிதென்றென்றேத்திநானேசற்றென்றும்
வஞ்சகமொன்றுமின்றிமலரடிகாணும்வண்ணம்
நஞ்சினையிடற்றில்வைத்தகற்பொருட்பதமேகாயேற்
கஞ்சலென்றாலவாயிலப்பனேயருள்செயாயே. (௬)

வழுவிலாதுன்னைவாழ்த்திவழிபடுந்தொண்டனேனுன்
செழுமலர்ப்பாதங்காணத்தெண்டிரைநஞ்சமுண்ட
குழகனேகோலவில்லீகூத்தனேமாத்தாயுள்ள
வழகனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. (௭)

நறுமலர்நீருங்கொண்டுநாடொறுமேத்திவாழ்த்திச்
செறிவனசித்தம்வைத்துத்திருவடிசேரும்வண்ணம்
மறிகடல்வண்ணன்பாகாமாமறையங்கமாறு
மறிவனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. (௮)

நலந்திகழ்வாயினூலாற்சருகிலைப்பந்தர்செய்த
சிலந்தியையரசதாளவருளினையென்றுதிண்ணங்
கலந்துடன்வந்துநின்றன்கருணைகாண்பதாக
வலந்தனனாலவாயிலப்பனேயருள்செயாயே. (௯)

பொடிக்கொடுபூசிப்பொல்லாக்குரம்பையிற்புக்கியொன்றிப்
பிடித்துநின்றுள்ளென்றும்பித்தனாயிருக்கமாட்டே
னெடுப்பனென்றிலங்கைக்கோன்வந்தெடுத்தலுமிருபதுதோ
ளடர்த்தனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

முளைத்தானையெல்லார்க்குமுன்னேதோன்றி
முதிருஞ்சடைமுடிமேன்முகிழ்வெண்டிங்கள்
வளைத்தானைவல்லசுரர்புரங்கண்மூன்றும்
வரைசிலையாவாசுகிமாநாணாக்கோத்துத்
துளைத்தானைச்சுடுசரத்தாற்றுவளநீறாத்
தூமுத்தவெண்முறுவலுமையோடாடித்
திளைத்தானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௧)

விண்ணுலகின்மேலார்கண்மேலான்றன்னை
மேலாயபுரமூன்றும்பொடிசெய்தானைப்
பண்ணிலவுபைம்பொழில்சூழ்பழனத்தானைப்
பசும்பொன்னினிறத்தானைப்பானீற்றானைப்
புண்ணிலவுசடைக்கற்றைக்கங்கையாளைக்
கரந்துமையோடுடனாகியிருந்தான்றன்னைத்
தெண்ணிலவுதென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௨)

நீர்த்திரளைநீள்சடைமேனிறைவித்தானை
நிலமருவிநீரோடக்கண்டான்றன்னைப்
பாற்றிரளைப்பயின்றாடவல்லான்றன்னைப்
பதைத்தெழுந்தவெங்கூற்றைப்பாய்ந்தான்றன்னைக்
காற்றிரளாய்மேகத்தினுள்ளேநின்று
கடுங்குரலாயிடிப்பானைக்கண்ணார்நெற்றித்
தீத்திரளைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௩)

வானமிதுவெல்லாமுடையான்றன்னை
வரியரவக்கச்சானைவன்பேய்சூழக்
கானமதினடமாடவல்லான்றன்னைக்
கடைக்கண்ணான்மங்கையுமைநோக்காவென்மே
லூனமதுவெல்லாமொழித்தான்றன்னைப்
புணர்வாகியடியேனதுள்ளேநின்ற

தேனமுதைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௪)

ஊரானையுலகேழாய்நின்றான்றன்னை
யொற்றைவெண்பிறையானையுமையோடென்றும்
பேரானைப்பிறர்க்கென்றுமரியான்றன்னைப்
பிணக்காட்டினடமாடல்பேயோடென்று
மாரானையமரர்களுக்கமுதீந்தானை
யருமறையானான்முகனுமாலும்போற்றுஞ்
சீரானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே (௫)

மூவனைமூர்த்தியைமூவாமேனி
யுடையானைமூவுலகுந்தானேயெங்கும்
பாவனைப்பாவமறுப்பான்றன்னைப்
படியெழுதலாகாதமங்கையோடு
மேவனைவிண்ணோர்நடுங்கக்கண்டு
விரிகடலினஞ்சுண்டமுதமீந்த
தேவனைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௬)

துறந்தார்க்குத்தூநெறியாய்நின்றான்றன்னைத்
துன்பந்துடைத்தாளவல்லான்றன்னை
யிறந்தார்களென்பேயணிந்தான்றன்னை
யெல்லிநடமாடவல்லான்றன்னை
மறந்தார்மதின்மூன்றுமாய்த்தான்றன்னை
மற்றொருபற்றில்லாவடியேற்கென்றுஞ்
சிறந்தானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௭)

வாயானைமனத்தானைமனத்துணின்ற
கருத்தானைக்கருத்தறிந்துமுடிப்பான்றன்னைத்
தூயானைத்தூவெள்ளையேற்றான்றன்னைச்
சுடர்த்திங்கட்சடையானைத்தொடர்ந்துநின்ற
தாயானைத்தவமாயதன்மையானைத்
தலையாயதேவாதிதேவர்க்கென்றுஞ்

சேயானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௮)

பகைச்சுடராய்ப்பாவமறுப்பான்றன்னைப்
பழியிலியாய்நஞ்சமுண்டமிர்தீந்தானை
வகைச்சுடராய்வல்லசுரர்புரமட்டானை
வளைவிலியாயெல்லார்க்குமருள்செய்வானை
மிகைச்சுடரைவிண்ணவர்கண்மேலப்பாலை
மேலாயதேவாதிதேவர்க்கென்றுந்
திகைச்சுடரைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௯)

மலையானைமாமேருமன்னினானை
வளர்புன்சடையானைவானோர்தங்க
டலையானையென்றலையினுச்சியென்றுந்
தாபித்திருந்தானைத்தானேயெங்குந்
துலையாகவொருவரையுமில்லாதானைத்
தோன்றாதார்மதின்மூன்றுந்துவளவெய்த
சிலையானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௰)

ஆர்த்தவனைத்தோண்முடிபத்திறுத்தான்றன்னைத்
தொன்னரம்பினின்னிசைகேட்டருள்செய்தானைப்
பார்த்தனைப்பணிகண்டுபரிந்தான்றன்னைப்
பரிந்தவற்குப்பாசுபதமீந்தான்றன்னை
யார்த்தனையடியேனுக்கன்பன்றன்னை
யளவிலாப்பல்லூழிகண்டுநின்ற
தீர்த்தனைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

பரிசோதன பத்திரம்.

படலம்.	பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
காட்டுப்படலம்... ...	கசு.	ருங.	ங.	ஞாங்கா.	ஞாங்கர்.
இந்திரன் பழிதீர்த்த படலம்.	ருக.	உக.	ங.	னடி.	நடி.
மலையத்துவசனை யழைத்தபடலம்.	கஉகூ.	அ.	ச.	நாகி.	நாயகி.
உக்கிர பாண்டியன் திருவவதாரப் படலம்.	கஙசு.	உகூ.	ங.	யானல.	யரலை.
உக்கிர குமாரனுக்கு வேல்வளை செண்டுகொடுத்த படலம்.	கச0.	எ.	உ.	கப்ப.	[illegible]
இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம்.	கரு அ.	ருசு.	உ.	தொடங்கி.	[illegible]
யானையெய்தபடலம்...	கக அ.	ஆஉ.	க.	உருவிக்கு	உருமுக்கு
அங்கம் வெட்டினபடலம்.	உஉசு.	[illegible]	ங.	தேஹ.	தேரு.
திருவாலவாயான படலம்.	ஙஉஎ.	உக.	ச.	னந்த.	ரந்த.
சுந்தரப் பேரம்பெய்த படலம்.	ஙஙக.	கஎ.	க.	வாரி.	வாளி.
சங்கப்பலகை தந்த படலம்.	ஙடக.	ஙக.	ச.	கிடநத.	கிடக்த.
தருமிக்குப் பொற்கிழியளித்த படலம்.	ஙசஎ.	ருஅ.	உ.	பிடிபொடு.	பிடியொடு
கரிபரியாக்கியபடலம்...	ஙகூ.	அ0.	ச.	தவசின்.	தவிசின்.